இந்துமதி

# என் வீட்டு ரோஜா உன் வீட்டு ஜன்னலில்



பூஞ்சோலை

# என் வீட்டு ரோஜா உன் வீட்டு ஜன்னலில்

இந்துமதி

32353350

பூஞ்சோலைப் பதிப்பகம்
58, டி. பி கோயில் தெரு
திருவல்லிக்கேணி : : சென்னை-600005

என் வீட்டு ரோஜா உன் வீட்டு ஜன்னலில் (சமூக நாவல்)
முதற் பதிப்பு : நவம்பர், 1993
விலை ரூ : 32-00

EN VEETU ROJA UN VEETU JANNALIL
tamil social novel by
Mrs. INDHUMATHI
© Indhumathi
First edition : novamber, 93
228 pages
10 pt . letters
10.5 Kg White Printing
box board binding
POONCHOLAI PATHIPPAGAM
58, T. P. Koil street
Triplicane : : Madras-600005
Price Rs 32-00

20214
3235350

அச்சிட்டோர் :
சின்னநிலா அச்சகம்
சென்னை-4

20214
3235350

# என் வீட்டு ரோஜா உன் வீட்டு ஜன்னலில்

## 1

டிசம்பர் மாதத்து வானம். லேசாகத் தூவுகிற மழை. சிலுசிலுவென்ற காற்று கல்லூரிக்கு எதிரில் தெரிந்த கடல் வழியெங்கும் மண்தரை மறைத்து இறைந்து கிடந்த சரக்கொன்றைப் பூக்கள். மஞ்சள் பட்டில் சிவப்புப் பூக்கள் பதித்த மாதிரி இடையிடையே குல்மொஹர்கள் அற்புதமான காட்சியாகத் தெரிந்தது ஷைலஜாவிற்கு. மணிரத்தினத்தின் படத்தில் பார்க்கிற மாதிரி இருந்தது. பாரதிராஜாவின் கதாநாயகி ஆடுகிற மாதிரி ஸ்லோமோஷனில் ஓட வேண்டும் போலிருந்தது. பின்னால் வெள்ளை உடையில் தேவதைகளாகத் துணை நடிகைகள் துரத்திக் கொண்டு வர வேண்டும். தன்தனனம் தனனம் பாட வேண்டும்—

அவளுக்கு அந்தக் கல்லூரியிலேயே பிடித்தமான விஷயம் சரக்கொன்றையும், குல்மொஹரும்தான். கல்லூரிக்குள் நுழைகிற பக்கத்து வழிப் பாதையில் கல்லூரிக் கட்டிடம் வரை இறைந்து கிடக்கும். பஸ்ஸிலிருந்து இறங்கின உடனே எல்லோரும் நுழைகிற மாதிரி கல்லூரிக்குள் நுழைந்து விடமாட்டாள் அவள். அந்தப் பக்கத்து வழி கேட் அருகிலேயே சிறிது நேரம் நிற்பாள். வழியெங்கும் பட்டு விரித்திருந்த சரக்கொன்றையைப் பார்ப்பாள். பின்னால் திரும்பி வானத்தை முத்தமிடுகிற கடலைப் பார்ப்பாள், அப்படியே பார்த்துக் கொண்டு அங்கேயே நிற்க வேண்டும் போலிருக்கும். நாள் முழுதும் நின்று கொண்டிருக்கத் தோன்றும். ஆனால் லெக்சரர்களும், புரொபசர்களும் விடமாட்டார்கள்.

''என்ன ஷைலு...வகுப்புக்கு வரலை...?'' என்று கேள்விகளாலேயே கொக்கி மாட்டி இழுத்துக் கொண்டு போய் விடுவார்கள். அப்படியே அவர்கள் விட்டாலும் அவளது தோழி சித்ரா விடமாட்டாள்.

''ஏய் போறும்டி—எத்தனை நேரம்தான் இந்த மஞ்சனைப் பார்த்துக்கிட்டு நிற்பே...பி பிராக்டிகல் ஐ ஸே... நீ நிஜத்தை விட்டு அடிக்கடி நழுவிப் போற...விலகிப் போற—இதுதான் உன்கிட்ட இருக்கிற மிகப் பெரிய மைனஸ் பாயிண்ட்...'' என்பாள். அதோடு நிற்கமாட்டாள். தரதரவென்று கையைப் பிடித்து இழுத்துக் கொண்டும் போவாள்.

மிஸ் மாத்யூஸின் 'ஸோனட்'டைக் கேட்டுக் கொண்டே இவள் உட்கார்ந்திருப்பாள், பார்வை இடது புற ஜன்னல் வழியாகத் திரும்பிக் கடலுக்குப் போகும். அல்லது குல்மொஹர், சரக் கொன்றையில் கிடக்கும். இவை இரண்டும் இல்லையென்றால் மனம் மதுசூதனனிடம் லயித்திருக்கும்.

மது...

'இப்போது என்ன செய்து கொண்டிருப்பான்...? நான் நினைக்கிற மாதிரி அவனும் என்னை நினைத்துக் கொண்டிருப்பான்? அல்லது கட்டிட மேஸ்திரியிடம் விளக்கிக் கொண்டிருப்பான்...? இல்லாவிட்டால் புதிதான ஓர் கட்டிடத்திற்கு வரைபடம் வரைந்து கொண்டிருப்பான்...?

மது...

அந்தப் பெயரில் இருக்கிற இனிமை அவனிடம் உண்டு. நல்ல எதிர்காலம் உண்டு. பெற்றோருக்கு ஒரே பையனாகப் பிறந்த அதிர்ஷ்டம் உண்டு. பணம் உண்டு.

இவள் மதுவை சந்தித்ததே அவன் கட்டிடம் கட்டுகிற ஸைட் ஒன்றில் தான். இவளது வீட்டுத் தெருக் கோடியில் பிரபலமான அலுவலகம் ஒன்றின் ஆபீஸ் கட்டிடம். பெரிய



நான்கு மாடிக் கட்டிடம். மதுதான் அதன் இன்ஜினீயர். இவள் கல்லூரிக்குக் கிளம்பும் முன் கட்டிடத்தை மேற்பார்வை பார்க்க வருவான். அப்படியே இவளையும் பார்ப்பான். கிட்டத்தட்ட ஒரு மாதம் பார்த்த பின் இவளைப் பார்ப்பதற்கென்றே கட்டிடத்திற்கு வர ஆரம்பித்தான்.

வெள்ளையாய், உயரமாய் பளிச்சென்று கண்ணில் அடிக்கிற உருவமாய், அழகாய், முன்நெற்றியில் மயிர் புரள நின்று கொண்டிருந்தவன் மீது இவளது பார்வையும் படரலாயிற்று. பார்வை புன்சிரிப்பாக மாறி, பின்னர் மெல்ல விரிந்து, விகசித்துப் பேச்சாக வெளிவந்து, கொஞ்சம் கொஞ்சமாகக் காதலாக உருவெடுத்து இப்போது கசிந்துருகத் துவங்கிற்று...அவனைப் பைத்தியமாக அடிக்கத் தொடங்கிற்று. நாள் முழுதும் மதுவின் நினைவில் அமிழலாயிற்று. பார்க்கும் இடத்திலெல்லாம் அவனைப்போல் ஒரு உருவம் தெரியலாயிற்று.

அவனைக் கடந்து ஒரு சிவப்பு மாருதி போய்விடக் கூடாது. போனால் நிற்பாள்.

''என்ன ஷைலு?'' சித்ரா கேட்பாள்.

''இல்ல... அந்த ரெட் கலர் மாருதியில் போனது மது மாதிரி இல்ல...?''

''உனக்கென்ன பைத்தியமா ஷைலு?''

''ஏண்டி...?''

''தெருவில் ஒரு ரெட்கலர் மாருதி போக விட மாட்டாய் போலிருக்கிறதே?''

''இல்ல சித்ரு...ரெட் கலர் மாருதியைப் பார்க்கிற போதெல்லாம் அவர் நினைவு வர்றது.''

''வர்றதா...? அப்படியானால் எங்கேயாவது போயிருந்ததா...?''

''எது?''

''நினைவு வர்றதன்னு சொன்னாயே...எங்கேயாவது போயிருந்தால்தானே வர முடியும்...மறந்தால் தானே நினைக்க முடியும்...?''

''ஆமாண்டி...யு ஆர் ரைட்...இருபத்திநாலு மணி நேரமும் மது என் நினைவில் இருக்கிறப்போ புதுசாக எப்படி வர முடியும்...?''

''முட்டாள்...'' என்று திட்டினாள் சித்ரா.

''ஏண்டி...''

''யாரும் யாரையும் இருபத்து நான்கு மணி நேரமும் நினைச்சிட்டிருக்க முடியாது. அப்படி நினைச்சுக்கிட்டிருந்தால் மற்ற வேலைகளைச் செய்ய முடியாது...''

''என்ன சித்ரா அப்படிச் சொல்ற...அப்படியானால் நான் மதுவை நினைக்கலேன்னு சொல்றியா?''

''இல்ல... அப்படிச் சொல்லல...நீ மதுவை நினைச்சுக்கிட்டிருக்கிறது எனக்குத் தெரியும். உன் மனசுல அவர் இருக்கிறது தெரியும். ஆனால் ஒரு நாள் பூராவும் ஒருத்தர் நினைவிலேயே இருக்கிறது கஷ்டம்னு சொல்ல வறேன், சாத்தியமற்ற விஷயம்ன்றதைத் தெளிவு படுத்தறேன்...''

ஷைலஜாவிற்கு சுறுசுறுவென்று கோபம் வந்தது. நல்ல மடம், ஜடம் என்று திட்டிக் கொண்டாள்.

'காதல்னா என்ன என்று தெரியுமா இவளுக்கு...? லீஸ்ட் பிட் ரொமாண்டிக் பர்ஸன் எதையும் நிஜமாக மட்டுமே பார்க்கத் தெரிந்த மரக்கட்டை ஜன்மம்...எப்படித்தான் எனக்குச் சிநேகிதியாக வந்து வாய்த்ததோ... எப்படி தான் ஆங்கில இலக்கியம் படிக்கிறதோ...? ஒரு கற்பனை வேண்டாம்....கவிதை நயம் வேண்டாம்... உணர்ச்சி வசப்படல் வேண்டாம்...? எதுவுமே இல்லாமல் வெறும்

5 மட்டுமே நினைத்துக் கொண்டு...?



எப்படி முடிகிறது இவளால்...?

கற்பனை சுகம், கனவு சுகம். நிஜத்தை விட்டு விலகுவது சுகம். சிறிது நேர சுகம். சின்னச் சின்ன சுகம். இந்தச் சின்னச்சின்ன சுகங்களும், ஆசைகளும் தான் வெறும் வெள்ளையாகக் கிடக்கின்ற வாழ்க்கைக்கு வர்ணமேற்றுகின்றன. வானவில்லைக் காட்டி மறைக்கின்றன. சிறிது நேரமானாலும் வானவில் நிஜம்தானே... அழகுதானே.... ரம்மியமானதுதானே... இந்த அழகு ரம்மியமற்று எப்படி இருக்க முடியும்? கற்பனையற்றிருக்க முடியும்?

சொன்னால் புரியாது. சித்ரா சண்டைக்கு வருவாள்.

''கற்பனைவாதிகள் வாழ்க்கையில் கஷ்டப்படுவார்கள்'' என்பாள்.

''நிழலைத் துரத்திக்கொண்டு போகிற ஏமாளிகள்'' என்பாள்.

அதனால் சித்ராவுடன் இந்தச் சண்டை போடுவதை விட்டு விட்டாள் ஷைலஜா... எல்லாவற்றிலும் ஒத்துப் போகிற அவர்களால் ஒன்றாக இருக்கிற அவர்களால் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் ஒத்துப் போக முடிவதில்லை. சண்டை வருகிறது. முகம் சிணுங்குகிறது. வெறும் அபிப்பிராயப் பேதங்கள்தான். ஆனால் அதுகூட நல்ல நட்பில் கீறல் விழ வைக்கிறது என்பதால் இரண்டு பேருமே அதைப் பற்றிப் பேசுவதைக் கை விட்டிருந்தார்கள். நிழல், நிஜம் பற்றின விவாதத்தை ஒதுக்கி வைத்திருந்தார்கள்....

அப்போதும் கல்லூரி வாசலில் நின்று சரக்கொன்றையைப் பார்த்த போது ஷைலஜாவிற்கு சித்ராவின் ஞாபகம் தான் வந்தது. 'இன்றைக்காவது கல்லூரிக்கு வருவாளா மாட்டாளா...?'' என்று தோன்றியது. மாமா பெண்ணிற்குக் கல்யாணம் என்று சித்ரா மதுரைக்குப் போயிருந்தாள். மூன்று நாட்களாகக் கல்லூரிக்கு வரவில்லை. அந்த மூன்று

நாட்களும் இவள் தோழமை இன்றி தவித்துப் போனாள். மதுவிடம் பேசினதையெல்லாம் சொல்ல ஆளின்றி துவண்டு போனாள். இதற்கு மேலும் சித்ரா வராது போனால் தாங்க முடியாது என்று தோன்ற அவள் நின்று கொண்டிருந்த போதே தோளின் மீது ஒரு கை விழுந்தது. ஸ்பரிசத்திலிருந்தே அவளுக்குப் புரிந்து விட்டது.

''ஹாய் சித்ரு...'' என்று திரும்பினாள்.

வெள்ளையில் சிகப்புப் பூ போட்ட சுடிதாரில் சித்ரா நின்று கொண்டிருந்தாள். தன்னைவிட உயரமாய், வெள்ளையாய், அழகாய் சித்ராவைப் பார்த்தபோது சந்தோஷமாக இருந்தது. கூடவே மெலிதாய் கோடு மாதிரி ஒரு பொறாமையும் எட்டிப் பார்த்தது.

''ஹாய்...'' சொன்ன சித்ரா சிரித்தாள்.

''என்னப்பா சிரிக்கற....?''

''இல்ல...வழக்கப்படி பூவைப் பார்த்துண்டு நிற்க ஆரம்பிச்சுட்டியான்னு நினைச்சேன். சிரிப்பு வந்தது...''

''உன் கண்ணுல இந்த மஞ்சள் பெட்ஷீட் படலையா...''

''என் கண்ணுக்கு பெட்ஷீட் எல்லாம் ராத்திரிதான் படும். குளிர்றபோதுதான் படும்...''

''ஜடம்...ஜடம்....சரியான ஜடம்...''

''ஏம்ப்பா மடத்தை விட்டுட்ட....!''

''அடுத்த தரம் சொல்றேன்...ஆமாம்...எப்போ வந்த...?''

''இன்னிக்கிக் காலைல...''

''ஏன் எனக்கு போன் பண்ணல...''

''பண்ணினேன், நீ குளிச்சிட்டிருக்கிறதா சொன்னாங்க....''



''யாரு...?''

''உங்கம்மா....''

''என் கிட்ட சொல்லவே இல்லையே....?''

''மறந்திருப்பாங்க....விடு...''

''ஏம்பா திருப்பி பண்ணலை...?''

''நேரமில்லை...ஊருக்குக் கொண்டுபோன துணியெல்லாம் துவைக்கப் போட்டுட்டு குளிச்சு, டிரஸ் பண்ணிக்கவே சரியாக இருந்தது. அதான் காலேஜ்ல பார்க்கப் போறோமேன்னு விட்டுட்டேன்...''

''எப்படித்தான் அப்படி விடறியோ...என்னால முடியாதுப்பா...நானாக இருந்தால் துணி, குளியல் எல்லாம் இரண்டாம் பட்சம்தான். முதல்ல உன்கிட்ட பேசிட்டுத்தான் மறுவேலை...''

''பொய் சொல்ற...''

''பொய்யா? எதுக்குப்பா...?''

''முதல்ல என்கிட்ட பேசமாட்ட...''

''ஏன்...''

''முதல் கால் மதுவுக்கு, இரண்டாம் கால்தானே எனக்குப் போட்டிருப்ப...?''

ஷைலஜா சிரிக்க இருவரும் கல்லூரிக்குள் நடக்க ஆரம்பித்தனர். இருவரும் மஞ்சள் சரக்கொன்றை விரிப்பில் நடந்து போவது அழகாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள் ஷைலஜா. பாலு மகேந்திராவின் காமிராவில் பார்க்கிற மாதிரி இருக்கும். இல்லாவிட்டால் தளபதி காமிராமேன் சிவன். அதுவுமில்லாவிட்டால் பி. ஸி. ஸ்ரீராம்.

அதைச் சொன்ன போது சித்ரா மீண்டும் சிரித்தாள். சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''ஆரம்பிச்சுட்டியா...? இந்த மாதிரி வானத்துல பறக்கிறதை, மேகத்துல மிதக்கிறதையெல்லாம் குறைச்சுக் கிட்டால் நல்லா இருக்கும்...''

''நீயும் இந்த மாதிரி பேசறதைக் கை விட்டால் எனக்கும் நல்லா இருக்கும்.''

''சரி...மூணு நாளைக்கப்புறம் பார்க்கிறோம். சண்டை போட வேணாம். வேற ஏதாவது பேசுவோம். என்ன...?''

''சரி...''

''மது வந்தாரா...பேசினாயா...?''

''ம்...அதைப் பற்றித்தான் சொல்லணும்னு நினைச்சுக் கிட்டே இருந்தேன்...''

''சொல்லு...''

''ஒரு நாளைக்கு மகாபலிபுரம் போகலாம்னு சொல் றார் மது. கெஸ்ட்ஹவுஸ் புக் பண்றாராம். வரச் சொல்லி கூப்பிட றார்...?'' பேசாதிருந்தாள் சித்ரா.

''என்ன சித்ரா பேசாமல் இருக்கே...?''

''நீ மகாபலிபுரம் போக வேணாம், கெஸ்ட்ஹவுஸ் எல்லாம் தங்க வேணாம்னு தோணறது...''

''ஏன் சித்ரா...?''

''அந்த அளவு மதுவை நம்ப வேணாம்னு தோணறது...''

''எந்த அளவு மதுவை நம்ப வேணாம்னு சொல்ற...?''

''அவரை மட்டுமல்ல...எந்த ஆம்பிளையானாலும் நம்ப வேணாம்னு தான் சொல்லுவேன், எல்லா ஆம்பிளை களும் இந்த விஷயத்துல ஒண்ணாகத்தான் இருப் பாங்க...''

''ஒண்ணுன்னா...எதைச் சொல்ற...?''



''தங்கள் தேவை எதுவோ அதை அடைந்தப்புறம் மனசு மாறிடுவாங்க...சில ஆண்கள் தேவைக்கு முன்னால் இன்னொரு அழகான பெண்ணைப் பார்த்தாலே மனசுமாறி அவள் பின்னால் போக ஆரம்பிச்சுடுவாங்க...''

''மது கூடவா?''

''இந்த விஷயத்துல உன் மது மட்டும் விதிவிலக்கா என்ன...? அவரும் ஆம்பிளைதானே...? எல்லா ஆண் களும் சபலப் புத்திக்காரங்கதான்...''

''இல்லை...நிச்சயமாக என் மது அப்படி இல்லை...''

குழந்தையைப் பார்க்கிற மாதிரி ஷைலஜாவைப் பார்த்துச் சிரித்தாள் சித்ரா.

''என்ன சிரிக்கற...?''

''இன்னும் உலகம் புரியாமல் குழந்தையாகவே இருக்கி யேன்னு சிரிக்கறேன்...''

''எனக்கு உலகம் புரியாத இருக்கலாம். ஆனால் மதுவைப் புரிஞ்சுண்டிருக்கிறேன்...''

''முட்டாள்...''

''ஏன் சித்ரா...?''

''மது ஆம்பிளை! ஆம்பிளைகளுக்கே ஸ்திரபுத்தி கிடையாது. சலனப் புத்திக்காரங்கதான்...''

''இல்லை. மது அப்படி இல்லை. இருக்கவும் மாட் டார். ஒருபோதும் என்னைத்தவிர வேறு ஒரு பொண்ணை ஏறிட்டுப் பார்க்க மாட்டார்.''

''உன் அபிப்பிராயம் தப்புன்னு நிருபிச்சுக் காட் டட்டுமா...? இந்தச் சலனப்புத்தி விஷயத்துல எல்லா ஆண்களும் ஒண்ணுதான்னு உன் மூளைக்கு எட்ட வைக்கட்டுமா...?''

''எப்படி...?''

''ஒரு சின்ன எக்ஸ்பிரிமெண்டாகச் செய்து பார்க்கலாமா...? நிஜமாக இல்லை....விளையாட்டாகவாவது உன் மதுவை என் பக்கம் திருப்பிக் காட்டட்டுமா?''

ஷைலஜா யோசித்தாள். சற்று முன் தானே பொறாமைப்பட்ட சித்ராவின் அழகு பயமுறுத்தியது.

''என்ன பேசாமல் இருக்க...?''

''இல்ல சித்ரா...என் மது அப்படி இல்ல....''

''திருப்பித்திருப்பி அதையே சொல்லாத...அப்படி ஒரு நம்பிக்கை அசையாமல் இருக்கும்னால் ஏன் தயங்கின...? ஏன் பேசாமல் இருந்த...அந்த ஒரு நிமிட மௌனம் உன் அவநம்பிக்கையைத் தானே காட்றது...''

''நோ...என் மதுவை நான் நம்பறேன், பரிபூரணமாக நம்பறேன்...''

''அந்த நம்பிக்கை தப்புன்னு நிரூபிச்சுக் காட்டறேன்னு தான் நான் சொல்றேன். ஜெயிக்கப்போறது நீயா, நானான்னு பார்த்துடலாமே...இந்தச் சாலஞ்ஜுக்கு சரி சொல்லேன்....''

அவள் மீண்டும் தயங்க சித்ரா பேசினாள்.

''உன் தயக்கத்தையே நான் என் வெற்றியாக எடுத்துக் கட்டுமா...?

''நீ தோற்றுப்போய் விட்டதாக ஒப்புக் கொள் கிறாயா...?''

''நோ...ஐயம் ரெடி டு ஃபேஸ் தி சாலஞ்ஜ்...நான் ஜெயிச்சால் என்ன தருவ...?''

''உங்க வீட்ல சொல்லி மதுவை உனக்குக் கல்யாணம் பண்ணித்தரேன்...ஓ. கே...?''

''ஓ கே...''

''ஒரு வேளை நான் ஜெயிச்சுட்டால் நீ என்ன எனக்குத் தருவாய்...?''



''ம்...?'' என்று யோசித்த ஷைலஜா கண்களை மூடி மனம் விம்ம நெஞ்சில் ஓர் உறுதியை ஏற்படுத்திக் கொண்டு அழுத்தமான குரலில் சொன்னாள்.

''அப்படி அவர் உன் பக்கம் திரும்பினார்னால் அவரை நீயே கல்யாணம் பண்ணிக்க...''

அந்தப் பதிலில் அரண்டு போய் பளீரென்று திரும்பி அவளைப் பார்த்தாள் சித்ரா...

## 2

ஒரு விநாடி சித்ராவிற்குப் பேச்சு வரவில்லை. மனத்திற்குள் நிறைய வார்த்தைகள் ஓடி ஒன்றும் வெளியில் வராமல் போயிற்று. நெஞ்சு விம்மித் தணிந்தது. 'என்ன சொல்கிறாள் இவள்...?' என்ற கேள்வியில் நிறைய சந்தேகங்கள் தோன்றின.

'அப்படி அவர் உன் பக்கம் திரும்பினால் அவரை நீயே கல்யாணம் பண்ணிக்க...!'

'இதற்கு என்ன அர்த்தம்...? கோபத்தில் வந்த பேச்சா...? இல்லாவிட்டால் வருத்தமா? எதற்காகக் கோபமும், வருத்தமும் பட வேண்டும்? மது மீது நம்பிக்கை இருக்கிற பட்சத்தில் இந்தக் கோபத்திற்கும், வருத்தத்திற்கும் அவசியமே இல்லையே...உள்ளுக்குள் பயப்படுகிறாள். தன்நம்பிக்கை இல்லாத தனத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் இப்படிச் சொல்கிறாள். ஆக மொத்தத்தில் இவளும் ஆண்களை நம்பவில்லை. மதுவை நம்பவில்லை. அதைச் சொல்லி ஒப்புக் கொண்டு விட்டால் இந்தப் பந்தயமே தேவை இல்லை.'

சித்ரா யோசித்துக் கொண்டிருந்த போதே ஷைலஜா கேட்டாள்.

''என்ன சித்ரு...அப்படிப் பார்க்கற....?''

''ஒண்ணுமில்லை....நீ தோற்றுப் போய்விட்டதாக ஒத்துக்க. நான் பந்தயத்தைக் கைவிட்டுடறேன்.''

''இல்ல....வேண்டாம். ஐயம் ஃபார்தி கேம்...''

''இப்படிச் சொல்லிவிட்டு மனசுக்குள் வருத்தப்படக் கூடாது. சோகமாக, இழப்பாகவெல்லாம் ஃபீல் பண்ணக் கூடாது...''

''ஏய்... கமான்... நான் பந்தயத்துல தோற்றுப் போனால்தானே சோகம், இழப்பு எல்லாம் எட்டிப் பார்க்கிறதுக்கு....?''

''வெற்றி தோல்வி இல்ல பேச்சு. ஒரு நிருபணம். அதுல வெற்றி ஏற்பட்டாலும் தோற்றுப் போனாலும் சமமாக எடுத்துக்கணும். மனசு சந்தோஷப் படவோ, சங்கடப்படவோ கூடாது.''

''என்ன கீதோபதேசமா...?''

''இல்ல...சித்ரோபதேசம்...''

''சரி....வா கிளாசுக்குப் போகலாம்.''

''இரு...ஆரம்பிச்சதை முடிக்காமல் அரைகுறையாக விட்டுட்டுப் போகக்கூடாது.''

''என்ன செய்யணும்னு சொல்ற...?''

''நீ கஷ்டப்படுவாயானால் மனசு சங்கடப்படும்னால் இந்தப் போட்டி, பந்தயம் ரெண்டையும் விட்டுடலாம். என் அபிப்பிராயம் உன் கிட்டன்னு போயிடலாம்.''

''இல்ல வேணாம்.''

''எது வேணாம்னு சொல்ற...?''

''போட்டியை ஆரம்பிச்சாச்சு. முடிவு என்னன்னு பார்த்துடலாம்.''

''அசட்டுத் தைரியத்துல சொல்லாதே. ஈகோவுல பேசாத...''



''இது ஈகோவா, அசட்டுத் தைரியமா இல்லைன்னா மது என்னன்னு பார்க்கிற ஆசையான்னு தெரியல. ஆனால் நான் பந்தயத்துக்குத் தயார்.''

''ஓ.கே. அப்படியானால் நானும் தயார். ஒரு விளையாட்டு வீரன் மாதிரி நாம இதை எடுத்துக்கணும். கர்மயோகம்னு நினைச்சுக்கணும். என்ன சரியா....?''

''சரி...''

''நான் என் வெற்றிக்கு எனக்குத் தோணின வழிகளையெல்லாம் பிரயோகிப்பேன். நீ தப்பாக நினைச்சுக்கக் கூடாது.''

இல்லை...அதே மாதிரி உன் வழிகளையெல்லாம் அடைக்க நானும் பிரயத்தனப்படுவேன். அதை நீயும் தப்பாக எடுத்துக்கக் கூடாது.''

''ஓ கே...டன்...''

''டன்...''

இருவரும் கட்டை விரலை உயர்த்தி முகத்திற்கு எதிராக நீட்டிச் சவாலை ஒப்புக் கொண்டார்கள். பின்னர் வகுப்பை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

முதல் வகுப்பு. வஷலஜாவிற்கு மிகவும் பிடித்தமான ஷேக்ஸ்பியர். அதிலும் அவளது மனம் கவர்ந்த பேராசிரியை மிஸ் மாத்யூஸ் வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தார். கிங்லீயர்.

மற்ற நாட்களாக இருந்தால் மிஸ் மாத்யூஸின் முகத்தை வைத்த கண்களை எடுக்காமல் பார்ப்பாள். வரி விடாமல் கவனிப்பாள். மனதிற்குள் பதிய வைத்துக் கொள்வாள். உருகுவாள். வார்த்தைகளின் அழகில் மாய்ந்து போவாள். உள்ளுக்குள்ளேயே ஹா... ஹா.... என்று அரற்றுவாள்.

ஆனால் இன்று...? முடியவில்லை. எதுவும் மனதில் பதியவில்லை. நெஞ்சில் நிற்கவில்லை. மிஸ் மாத்யூஸின்

முகம் தெரியவில்லை. குரல் மட்டும் கேட்டதே தவிர ஒரு வரி உள்ளுக்குள் அச்சாகவில்லை. ஜன்னல் வழியாகத் தெரிந்த கடலும், வானமும் வெறும் காட்சிகளாக மாறின. சாதாரண ஓவியன் வரைந்த படமாகப்பட்டன. பார்வை வெறுமனே பார்த்துக் கொண்டிருந்ததே தவிர எதற்கும் அர்த்தமில்லாமல் போயிற்று. சரக்கொன்றை, மஞ்சள் விரிப்பு, குல்மொஹர், தொடுவானம், நீலத்தடாகக் கடல்....

ஊஹூம்...எல்லாம் வெறுமை. வெற்றுத் தோற்றங்கள். மனது சங்கடப்படும்போது, அல்லது வேறொரு விஷயத்தில் லயித்திருக்கும்போது கண் எதிரில் தெரிகின்ற எந்த அழகும் இப்படி வெறுமையாகி விடுமோ...? ஒன்றுமில்லாததாகப் போகுமோ? இந்த அழகுகள் கண்ணில் படாத மாதிரி கவனிக்காமல் போகிறார்களே...அது எப்படி என்று நினைத்திருக்கிறோமே...இப்படித்தானோ...? அவர்களின் மனங்கள் எல்லாம் வேறொரு விஷயத்தில் அழுந்தியிருக்குமோ? திசை திரும்பியிருக்குமோ?

அப்படித்தான் இருக்க வேண்டும். அதனால்தான் கண்ணெதிரில் காணுகின்ற அழகில் 'என்னைப் பார் என்னைப் பார்' என கூப்பிடுகின்ற இயற்கைக் காட்சிகளில் லயிக்காமல் போய்விடுகிறது. அவர்களைச் சொல்லி தப்பில்லை என்று நினைத்துக் கொண்டவள் மீண்டும் தன் பிரச்சினைக்குத் திரும்பினாள். மனது வண்டலாகக் கலங்கிப் பாரமாகக் கிடந்தது. சித்ராவின் அந்தப் போட்டிக்கு ஒப்புக் கொண்டிருக்க வேண்டாமெனத் தோன்றிற்று. வலியப்போய் வம்பை விலைக்கு வாங்குகிற விவகாரமாகப் பட்டது.

''ஒரு வேளை மது நிஜமாகவே மனம் மாறிவிட்டால்...? சித்ரா அழகி. கல்லூரி நாடகங்களில் அழகான எந்த வேடத்திற்கும் சித்ராவைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். கல்லூரியில் மட்டுமல்ல, பள்ளியிலேயே அப்படித்தான். சிண்ட்ரில்லா, ஸ்நோவொயிட் எல்லா வேடங்களும்



சித்ராவிற்குத்தான். அதே மாதிரி சீதை, தமயந்தி, சகுந்தலை என தமிழ் நாடகக் கதாநாயகிகளானாலும் 'போடு சித்ராவை' எனப் போடுவார்கள்.

அது மட்டுமின்றி சித்ரா பெரிய இடத்துப் பெண். பரம்பரைப் பணம். இன்று என் இ 118-ல் வந்தாளாகில் மறுநாள் காண்ட்டஸாவில் வருவாள். அதற்கு மறுநாள் மாருதி. அப்புறம் பியட் என வகைக்கு ஒரு காரில் கல்லூரிக்கு வருபவள். அரண்மனை மாதிரி அடையாறு போட் கிளப் ரோடில் வீடு. சித்ராவின் அறையைப் பெருக்க மட்டும் தனியாக ஒரு வேலைக்காரி...

சித்ராவோடு ஒப்பிட்டால் தான் ஒன்றுமே இல்லை என்பதை உணர்ந்திருந்தாள். இத்தனை வருடங்களாகச் சித்ராவோடு பழகினபோதெல்லாம் ஏற்படாத தாழ்வு மனப்பான்மை திடீரென்று இப்போது தோன்றியது. மைலாப்பூர் குளத்தங்கரைக்கு எதிரில் இருக்கும் தன் பிளாட்டை நினைத்துப் பார்த்தாள். பெட்டி பெட்டியாக இரண்டே படுக்கை அறைகள், சின்னதாக ஒரு ஹால், வரவேற்பறை, சாப்பாட்டு அறை. அதில் ஒயர்களால் பின்னப்பட்ட வெகு சாதாரண சோபாக்கள். சாதாரணக் காட்டுமர சாப்பாட்டு மேஜை. தம்பிக்கும், தனக்குமாகச் சேர்ந்து ஒரே படுக்கை அறை. இருவருக்கும் புத்தகங்கள் வைப்பதில் இருந்து, படிப்பது வரை சண்டை வரும்.

• ''கத்திப் படிக்காதடா...இதே ரூம்லதான் நானும் படிச்சாகணும்,'' என்பாள் இவள்.

அவன் விடமாட்டான். படிக்கிற ஆறாம் வகுப்பை ஐ.ஏ.எஸ். ஆக நினைத்து அரற்றுவான்.

''நீ போய் ஹால்ல படி...'' என்பான்.

''ஹால்ல அம்மாவும், அப்பாவும் டி.வி. பார்த்துக்கிட்டிருக்காங்க. அங்க போய் எப்படிடா படிக்க முடியும்...?' இவள் திருப்பிக் கேட்பாள்.

''அதைப்பற்றி எனக்கென்ன கவலை...? நீ படிச்சாப் படி...இல்லைன்னால், விடு. நாளைக்கு எனக்கு டெஸ்ட் இருக்கு நான் படிக்கணும்...''

சொல்லிவிட்டுப் பிடிவாதமாக இன்னும் உரத்த குரலில் ஆரம்பிப்பான்.

தாங்க முடியாத கோபம் வரும். எழுந்து போய் நாலு அறை விடலாம் போலத் தோன்றும். ஆனால் அவனை அடித்தால் அம்மாவும் அப்பாவும் பரிந்து கொண்டு வருவார்கள்.

''ஆம்பிளைப் பையனைக் கை நீட்டி அடிக்கிறதாவது...?'' என்று சண்டை போடுவார்கள்.

''ஆம்பிளைப் பையன் மட்டும் என்னைப் படிக்க விடாமல் செய்யலாமா...?'' என்றால், பதில் வராது.

''பொம்மனாட்டிகள் கொஞ்சம் அடங்கித்தான் போகணும்'' என்பாள் அம்மா. சம்பந்தமே இல்லாமல் பெண்கள் அடங்க வேண்டும் என்பாள். அடங்கி அடங்கிப் பழக்கப் பட்டு விட்டது. விட்டுக் கொடுத்து வழக்கமாகி விட்டது. குனிவது சகஜமாகி விட்டது. அதனால் அதுவே நியாயம் போல் பேசுகிறார்கள் என்று கோபம் வரும். ''இருபத்தோராம் நூற்றாண்டை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிற இந்தக் காலத்திலும் இப்படிப் பேசுகிறீர்களே...!'' என்று பெண் உரிமைக்காகக் குரல் கொடுக்க வேண்டும் போலிருக்கும். ஆனால் பேசாமல் இருப்பாள். 'என்ன சொன்னாலும் இந்த அம்மாவை மாற்ற முடியாது' என்றிருப்பாள்.

''ஏய் ஷைலு...நீ போய் எங்க ரூம்ல உட்கார்ந்து படி....'' என்பதற்குச் செவி சாய்ப்பாள். தன் புத்தகங்களை எடுத்துக் கொண்டு பக்கத்துப் படுக்கையறைக்குப் போவாள்.



அதெல்லாம் நினைவிற்கு வந்ததும் இவளுக்குப் பகீரென்றது. பனிரெண்டு வயதுச் சிறுவனான தன் தம்பிக்கே இத்தனைப் பிடிவாதம் இருக்கிறபோது...என்ற கேள்வி எழுந்தது. தனக்குத் தேவையானதைச் சாதித்துக்கொள்கிறானே...அம்மாவும், அப்பாவும் கூட 'ஆம்பிளைப் பையன்' என மதிப்புக் கொடுக்கிறார்களே.... அவன் எண்ணங்களுக்கு செவி சாய்க்கிறார்களே...ஒருவேளை இது ஆண்களின் உலகமா...? அவர்களின் வசதிக்காகப் படைக்கப்பட்டவர்கள்தான் பெண்களா....? எது, ஒன்றையும் ஆண்கள் செய்யும்போது ஏற்றுக்கொள்கிற உலகம், அதையே ஒரு பெண் செய்தால் ஏன் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்கிறது...?''

யோசித்துக் கொண்டிருந்தபோதே முதல் வகுப்பு முடிந்து போயிற்று. அடுத்த வகுப்பிற்காகக் கலைந்தபோது தான் அவளுக்குச் சுய உணர்வு வந்தது. எங்கு ஆரம்பித்து எங்கு போயிருக்கிறோம் எனத் தன் எண்ணங்களைப் பார்த்துத் தானே பிரமித்துக் கொண்டாள். படிக்கிற அறைக்கே சண்டை பிடித்துக் கொள்கிற தன் வீட்டு நிலைமைக்கும், கேட்டால் தனி வீடே கட்டித் தந்து விடுகிற நிலையில் இருக்கிற சித்ராவையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தபோதே தோளில் சித்ராவின் கை விழத் திரும்பினாள்.

''கிளாஸ் முடிஞ்சு இத்தனை நேரமாச்சு...என்ன யோசனை...''

''ஒண்ணுமில்லை...''

''சரி...நான் ஒண்ணு சொல்றேன். கேட்கறியா....?''

''சொல்லு...''

''மது மகாபலிபுரம் போகலாம்னு சொன்னாரில்லே.... நீ இத்துக்க...''

சடாரென்று தலை உயர்த்தி ஷைலஜா கண்ணால் அவளைப் பார்த்தபோது சித்ரா அமைதியான குரலில் முகம் மாறாமல் சொன்னாள்.

"நானும் கூட வரேன். என் கார்லயே போயிடலாம்..."

## 3

தொலைபேசி ஒலித்தது. அதுவரை அதன் பக்கத்தில் காத்துக் கொண்டிருந்த ஷைலஜா, படிக்கிற பாவனையில் இருந்த ஷைலஜா, ஒரு வினாடிக்கு முன்தான் பாத்ரூமிற்குள் நுழைந்தாள். கதவை மூடப் போனபோது தொலைபேசி ஒலிக்க ஆரம்பித்தது. பாதி மூடிய கதவை அப்படியே விட்டு விட்டு அவள் ஓடி வந்தபோது அம்மா எடுத்து விட்டாள். ஆனால் அம்மாவின் ஹலோவிற்குப் பதில் இல்லை. தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது: அம்மா ரிஸீவரை வைத்துவிட்டு இரண்டடிகள் நகர்ந்திருக்க மாட்டாள். மீண்டும் ஒலித்தது. மறுபடியும் அம்மாவே எடுத்தாள். ஷைலஜாவிற்கு மனசு துடித்தது.

"அம்மா...நீ போயேன். சமையல் கட்டில் வேலை ஏதாவது இருந்தால் பாரேன். இந்த டெலிபோன் விவகாரத்தை நான் கவனித்துக் கொள்கிறேனே...!" என்று கெஞ்ச வேண்டும் போலிருந்தது.

ஆனால் கெஞ்சவில்லை. அம்மா சந்தேகப்பட ஆரம்பித்து விடுவாள் என்று தோன்ற பேசாமல் இருந்தாள்.

அந்த முறையும் யாரும் பேசாது தொடர்பு துண்டிக்கப் பட்டதில் அம்மாவிற்குக் கோபம் வந்தது. வாய் விட்டுத் திட்ட ஆரம்பித்தாள்.

"கடன்காரக் கட்டைல போறவங்க எந்த வீட்ல வயசுப் பொண்ணுங்க இருக்காங்கன்னு அலையறாங்க.



டெலிபோன் இருக்கிற வீட்ல காலேஜ் போற பொண்ணு ஒன்னு இருந்துடக் கூடாது. உடனே நம்பர் கண்டுபிடிச்சு போன் பண்ண வேண்டியது. டெலிபோன் காலுக்கு எத்தனைப் பணம் ஏறினால் என்ன...? இவன்களா சம்பாதிக்கிறான்கள்...? அப்பன்காரங்க கஷ்டப்பட்டு சம்பாதிச்சுக்கிட்டு வந்தால் பிள்ளைங்க இப்படி டெலிபோன் நம்பரைச் சுழற்றியே காசைக் கரியாக்கறாங்க. இவங்க காசைக் கரியாக்கட்டும். எங்க நேரத்தையுமில்ல வீணாக்கறாங்க..."

அம்மா சுறு சுறுவென்று காந்தத் தொடங்கியதில் ஷைலஜாவிற்கு சிரிப்பு வந்தது. அதைப் பார்த்த அவளது அம்மா இன்னமும் கோபப்பட்டாள்.

"நீ ஏண்டி சிரிக்கிறே...?"

"ஏம்மா...இது ராங்காலாக இருக்கலாம். கனெக்ஷன் சரியாகக் கிடைக்காமல் இருக்கலாம். எதையோ நினைச்சுண்டு ஏம்மா திட்ற...?"

"ஆமாண்டி...ராங்கால்னால் நம்பர் கேட்க மாட்டாங்களா? கனெக்ஷன் சரியாகக் கிடைக்கலேன்னால் அங்கே டி.வி.யோ வீடியோவோ போட்டிருக்காங்களே...அந்த சத்தம் நமக்குக் கேட்குமா....? எலெக்ட்ரானிக் எக்ஸ்சேஞ்ஜ் தப்புன்னால் இதெல்லாம் மட்டும் சரியா தெளிவா கேட்கும், டெலிபோன் பண்ணின ஆளோட குரல் மட்டும் கேட்காது இல்ல....?"

முந்தைய தலைமுறை அம்மாக்களைப் போல் இன்றி இன்றைய தலைமுறை அம்மாக்களும் புத்திசாலிகளாக இருப்பதைத் தன் அம்மாவின் மூலம் உணர்ந்த ஷைலஜா கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள். நாளை மதுவை சந்திக்கிற போது தொலைக்காட்சிப் பெட்டியை நிறுத்தி விட்டுப் போன் செய்யச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டபோதே மூன்றாம் முறையாகத் தொலை பேசி ஒலிக்கத் துவங்கிற்று.

''எடுக்காத ஷைலஜா. அதே கடன்காரக் கட்டைல போறவனாகத்தான் இருக்கும்,'' என்றாள் அம்மா.

ஷைலஜாவிற்குக் கஷ்டமாக இருந்தது. மறுனை அம்மா கடன்காரக் கட்டைல போறவன் என்றது வருத்தத்தை ஏற்படுத்தியது. அதைவிட டெலிபோனை எடுக்க முடியாதது இன்னமும் சங்கடப்படுத்தியது. தொலைபேசியும் நிற்காமல் ஒலிக்கவே அம்மாவின் எரிச்சல் அதிகமாயிற்று.

''எடுத்துத் தொலையேண்டி அதை.''

''ஏம்மா...எடுக்காதன்ற. எடுன்ற... எதைம்மா கேட்கிறது...?''

''முதல்ல எடுத்து யாருன்னு கேளு...?''

எடுத்தாள். ஹலோ என்றாள்.

''ஹாய் ஷைலு...''

ஷைலஜாவின் இதயம் ஒரு வினாடி துடிப்பதை நிறுத்தியது. ஆனாலும் அம்மா எதிரில் இருப்பது நினைவிற்கு வர தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சொன்னாள்.

''ஸாரி. ராங்நம்பர் ப்ளீஸ்...''

ரிஸீவரை வைத்துக் கொண்டே அம்மாவின் முகத்தை ஏறிட்டாள்.

''பார்த்தியாம்மா... ஏதேதோ பேசினாயே... கடன்காரக் கட்டைல போறவன் என்றெல்லாம் சொன்னாயே... கடைசியில் பாவம் ராங்நம்பர்...''

இன்னமும் நம்பிக்கை ஏற்படாத மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு அம்மா பேசினாள்.

''என்ன ராங் நம்பரா போ...ராங் நம்பர்காரனுக்குக் கூட என் குரல் தெரியறது போல இருக்கு...''

ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டு விஸிலடித்த குக்கரை நிறுத்த அம்மா சமையலறைக்குள் நுழைந்த மறு வினாடி அவள் ரிஸீவரை எடுத்து எண்களைச் சுழற்றிய



போது அம்மா சமையலறையில் இருந்தவாறே எட்டிப் பார்த்துக் கேட்டாள்.

''யாருக்கு போன் பண்ற...''

அந்தக் கேள்வி ஷைலஜாவிற்கு அநாகரீகமாகப்பட்டது. தேவையில்லாமல் அம்மா கேள்வி கேட்பதாகத் தோன்றியது. அனாவஸ்யமாகத் தன் சுதந்திரத்தில் நுழைகிற எரிச்சல் வந்தது. அம்மா இப்படித்தான் அடிக்கடி கேள்விகள் கேட்பாள். தொலைபேசியில் பேசினால் யார் என்பாள். ஏதாவது கடிதம் வந்தால் யாரிடமிருந்து என்பாள். 'பிரெண்ட் வீட்டுக்குப் போறேம்மா...' என்றால் ''எந்த பிரெண்ட்...வீடு எங்கே இருக்கு. டெலிபோன் இருந்தால் நம்பரை எழுதி வச்சிட்டுப்போ'' என்றெல்லாம் குறுக்கு விசாரணை செய்வாள்.

இதெல்லாம் ஷைலஜாவிற்குப் பிடிக்காது. முக்கியமாகத் தொலைபேசியில் பேசுகிற போதோ, பேசின பின்னரோ கேட்கப்படுகிற ''யாருடி அது...?'' மிகுந்த எரிச்சலைத் தரும். கோபம் வரும். 'யாருன்னு சொன்னால் உனக்குப் புரியும்...?' என்று கேட்கலாம் போலிருக்கும். 'இப்படிக் கேட்பது அநாகரீகமானது' என்று எடுத்துச் சொல்லத் தோன்றும்.

ஆனால் சொல்ல மாட்டாள். சொல்லவும் முடியாது. சொன்னால் அவ்வளவுதான். அம்மா பிலு பிலுவென்று பிடித்துக் கொள்வாள். அவள் வயதில், தான் எத்தனை அடக்க ஒடுக்கமாக இருந்தாள் என்பதில் ஆரம்பித்து அப்பாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு வந்து மாமியார், நாத்தனார்களிடம் பட்ட கஷ்டத்தில் கொண்டு வந்து முடிப்பாள். இருபத்தைந்து வருடங்கள் பின்னோக்கிப் போகச் சொல்வாள். இந்த இருபத்தைந்து வருடங்களில் உலகம் எவ்வளவு முன்னேறியிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள மாட்டாள்.

ஆகவே அவை அத்தனையும் தவிர்க்க ஷைலஜா ஒரு வார்த்தை பதிலாகச் சொல்வாள்.

''சித்ராவுக்கு...''

சித்ரா என்கிற பெயரில் அம்மா அடங்கிப் போவதை ஷைலஜா புரிந்து கொண்டிருந்தாள். சித்ராவின் பணம் பண்ணுகிற வேலை அது என்பதைத் தெரிந்து கொண்டிருந்தாள். பணம் மட்டுமில்லை, சித்ராவின் பேச்சு, பழக்கம் எல்லாமே அம்மாவை வெகுவாகக் கவர்ந்திருப்பதை உணர்ந்து கொண்டிருந்தாள்.

''எத்தனைப் பெரிய இடத்துப் பொண்ணு. ஆனால் துளிக்கூட கர்வமோ, பணக்காரத்திமிரோ இல்லாமல் எப்படிப் பழகுகிறது பாரு....'' என்று சொல்லக்கூடச் செய்வாள். தேன்குழல், முறுக்கு, தட்டை என்று எது செய்தாலும் தனியாக எடுத்து ஒரு டப்பாவில் போட்டு வைப்பாள்.

''யாருக்கும்மா...?'' என்று கேட்டால்,

''சித்ராவுக்கு...'' என்கிற பதில் வரும்.

''ஏம்மா...சித்ரா இதையெல்லாமா சாப்பிடப் போறா...அவள் வீட்ல கேக், புட்டிங், பாதாம் அல்வான்னு சாப்பிடறவ...'' என்றால் அதற்கும் பதில் தயாராக வைத்திருப்பாள்.

''சாப்பிடட்டுமேடி... அதெல்லாம் சாப்பிட்டால் இதைச் சாப்பிடக் கூடாதுன்னு எழுதியா வச்சிருக்கு....? கிருஷ்ணபரமாத்மா குலேசர் கொண்டு போன அவலைத் தான் ருசிச்சு சாப்பிட்டார் தெரியுமா...?''

அதே போல சித்ராவும் மிக சகஜமாகச் சமையலறை வரை வருவாள்.

''இன்னிக்கு என்ன மாமி சமைச்சிருக்கீங்க...?'' என்று கேட்பாள்.



''வெறும் வத்தக்குழம்பும் சுட்ட அப்பளமும் தாம்மா....'' என்றதும் உதட்டைக் குவித்து நாக்கினால் சர்ரென்று இழுப்பாள்.

''உங்க வத்தக் குழம்புக்குத் தனி ருசி மாமி, தட்டு போடுங்க. ஒரு பிடி பிடிக்கலாம்...'' என்று தரையில் உட்கார்ந்து விடுவாள். அம்மா போடும் சாதத்தையும், வற்றல் குழம்பையும் கலந்து ருசித்துச் சாப்பிடுவாள்.

''ரொம்ப ஜோராக இருக்கு மாமி. எக்ஸலண்ட். இந்த மாதிரி வத்தக் குழம்புக்கு உங்ககிட்ட ஃபைவ் ஸ்டார் ஓட்டல் சமையற்காரங்கள்லாம் பிச்சை வாங்கணும்...'' என மனமார, வாயாரப் புகழ்வாள். அதில் அம்மா உச்சி குளிருவாள். சித்ரா போவதும் வார்த்தைகளால் அவளைக் குளிப்பாட்டுவாள்.

''எப்படிப்பட்ட கோடீஸ்வரன் வீட்டுப் பொண்ணு. துளிக்கூட அலட்டிக்காமல் தரையில் உட்கார்ந்து வெறும் வத்தல் குழம்பை ருசிச்சு சாப்பிட்டுப் போறது பாரு... அவள் நிலைமைக்கு வேற ஒரு பெண்ணானால் இத்தனை நேரம் தலை இடறிப் போயிருக்கும். ஆனால் இந்தப் பொண்ணு என்னமாப் பழகறது....எத்தனை நல்ல பொண்ணு...''

''போறும்மா சித்ரா புராணம்...'' இவள் வேண்டுமென்றே சலித்துக்கொள்கிற குரலில் சொல்வாள். அதற்கும் அம்மாவிற்குக் கோபம் வரும்.

''உனக்கேண்டி எரிச்சல் வர்றது....? நீயும் என் கை சமையலைத் தினமும் சாப்பிடறியே....ஒரு நாளாவது வாயார இந்த மாதிரி சொல்லியிருக்கியா?'' என்று ஆரம்பிப்பாள்.

ஆக மொத்தத்தில் சித்ரா என்கிற மூன்றெழுத்து மந்திரம் அம்மாவின் வாயை அடைக்க உதவுகிற அஸ்திரமாகப் பயன்பட்டது. ஷைலஜாவிற்கு சவுகரியமாக இருந்தது. எதைச் செய்தாலும் சித்ராவின் பெயரைச்

சொல்லித் தப்பிக்க முடிந்தது. அதுவும் மதுவின் பரிச்சயம் கிடைத்த பின்பு, அவனைக் காதலிக்க ஆரம்பித்த பின்பு சித்ராவைவிட, அவன் பெயர் மிகவும் உபயோகப் பட்டது.

ஆறு மணியாகி விளக்கு வைத்த பின்னர் வெளியில் கிளம்பினால் அம்மா கேட்கிற "எங்க கிளம்பிட்ட...?" விற்குப் பதில்,

"சித்ரா வீடு"

கல்லூரியிலிருந்து மதுவுடன் பீச்சில் போய் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டு நேரம் கழித்து வீட்டிற்கு வரும் நாட்களில்,

"ஏண்டி லேட்டு...?"

"சித்ராவோட பேசிக்கிட்டிருந்தேம்மா...?"

தொலைபேசியில் மதுவுடன் மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருக்கும்போது,

"யார் கிட்டடி இத்தனை நேரம் பேசற...?"

"சித்ராகிட்டேம்மா..."

அந்த பொய்யைத்தான் அப்போதும் சொன்னாள்.

"சித்ராவுக்கு."

சொல்லிக்கொண்டே மதுவின் எண்களைச் சுழற்றினாள். அவள் கூப்பிடுவாள் என்றே காத்திருந்த மது ரிஸீவரை எடுத்து 'ஹாய்' சொன்னான்.

"சித்ரு—நான் ஷைலு பேசறேன்..." என்றாள்.

"அம்மா இருக்காங்களா...?" திருப்பி கேட்டான் அவன்.

"ஆமாம்ப்பா..."

"பேச முடியாதா...?"



"சொல்லுப்பா...?"

"மகாபலிபுரம் போகலாமான்னு கேட்டேனே... நீ பதிலே சொல்லலையே...?"

"ம்...போகலாம்" என்றவள் மெல்ல எட்டி சமையல் அறைக்குள் பார்த்தாள். அம்மாவின் கவனம் தன்மீது இல்லை என்பதைப் புரிந்து கொண்டு குரலைத் தாழ்த்திச் சொன்னாள்.

சித்ரா கூட வரேன்னு சொல்லியிருக்கா..."

"சித்ராவா...?"

"ம்...என் பிரெண்டு, எப்பவும் என் கூட இருப்பாளே... அவள்...?

"வெள்ளையா, உயரமா, அழகா இருப்பாளே அவளா..."

மது சாதாரணமாகத்தான் கேட்டான். ஆனால் அந்த வெள்ளை, உயரம், அழகு எல்லாமே இவளது நெஞ்சில் சரேலென்று இறங்கின. குரல் மெதுவாக வழுக்கத் தொடங்கிற்று.

"அவளேதான்..."

"ஆர்.கே. இண்டஸ்ட்ரீஸோட பொண்ணு...!"

"எஸ்...அவள்தான்."

"அவ எதுக்கு...?"

மதுவின் அந்தக் கடைசிக் கேள்வியில் வாடிப் போயிருந்த அவளது முகம் பளீரென்று தன் சுயப்பிரகாசத்திற்கு வந்தது.

"நேர்ல சொல்றேன்..." என்றாள்.

"எப்போ...?"

"இன்னும் அரை மணி நேரத்துல..."

"எங்கே?"

"வழக்கமான இடத்துல."

## 4

அம்மா நான் சித்ரா வீட்டுக்குப் போயிட்டு வரேம்மா...''

''இத்தனை நேரத்துக்காடி...? விளக்கு வைக்கிற நேரமாச்சே...?''

''ஆமாம்மா, சித்ராவுக்கு இன்னிக்கு மிஸ். மாத்யூஸ் நடத்தின பாடத்துல எதுவுமே புரியலையாம். 'வந்து கொஞ்சம் சொல்லித்தாடீன்னு' கூப்பிடறா...''

''ஏன்... அவ இங்கே வரக்கூடாதா...?

அவளுக்குக் கார் இருக்கு. டிரைவர் இருக்கான்...''

''ஆனால் இங்கே படிக்க வசதியாகத் தனிரூம் இல்லையேம்மா. ஏர்கண்டிஷன் இல்லையே...

அமைதியான சூழ்நிலை இல்லையே...பிளாட் குழந்தைங்க இரைச்சலும், சத்தலும் எனக்குப் பழகிப்போச்சு. ஆனால் அவளுக்கு இந்த சத்தத்தில் படிச்சுப் பழக்கமில்லையே...''

''அப்படின்னால் அவளைக் கார் அனுப்பச் சொல்றது தானே...?''

''வேணாம்மா. அங்கிருந்து கார் வந்து அப்புறம் நான் போறதுன்னால் நேரமாயிடும். திரும்பி வர்றதுக்கு லேட்டாகும். சும்மா டைம்தான் வேஸ்ட் ஆகும். அதனால் நானே வர்றதா சொல்லிட்டேன்.''

''சரி. எப்படிப் போகப் போற...?''

''ஒரு ஆட்டோ பிடிச்சுப் போயிடுவேன்.''

''ஆட்டோவுக்குப் பத்து ரூபாய் ஆகாதாடீ....?''

''ஆகும்.''

''எதுக்கு வேஸ்ட் பண்ற...? அந்தப் பத்து ரூபாய் இருந்தால் நான் இரண்டு நாள் கறிகாய் செலவைத் தள்ளுவேன்...''



''ஆட்டோவுக்கு நானாம்மா பணம் தரப் போறேன். அதையும் சித்ராதாம்மா தருவாள்.''

''அப்படின்னால் சரி. ரகுவை அனுப்பி ஆட்டோ கூட்டிண்டு வரச் சொல்லட்டுமா...''

''வேணாம்மா. நானே தெருக்கோடிக்குப் போய் ஆட்டோ பிடிச்சுப்பேன்.''

''தனியாகப் போக வேணாம்டி. ரகுவைத் துணைக்கு அழைச்சுண்டு போயேன்...?''

பகீரென்றது ஷைலஜாவிற்கு. 'ரகுவைத் துணைக்கு அழைத்துக் கொண்டு போனால் மதுவை எவ்வாறு சந்திக்க முடியும் என்று தோன்ற அவசரமாக மறுத்தாள்.

''வேணாம்மா...நானும் சித்ராவும் படிப்போம். அவனுக்குப் போர் அடிக்கும். வீட்டுக்குப் போகலாம்னு நச்சரிப்பான். எங்களைப் படிக்க விடாமல் செய்வான்...'' என்றவள் அதற்கு மேல் அம்மாவைப் பேசவிடாமல் மடமடவென்று உடை மாற்றிக் கொண்டாள். மதுவிற்கு மிகவும் பிடித்தமான ரோஜா வர்ணப் புடவை உடுத்துக் கொண்டாள். முகத்திற்கு சந்தனப் பவுடர் பூசி உதடுகளுக்கு இயற்கை வர்ண லிப்ஸ்டிக் தடவி, தலையை அப்படியே வாரி சரி செய்துக் கொண்டு கிளம்பியபோது அம்மா சொன்னாள்.

''சீக்கிரம் வந்துடு ஷைலஜா, இல்லைன்னால் அப்பா திட்ட ஆரம்பிச்சுடுவார்....''

அப்பா திட்டுவார். நேரமானால் திட்டுவார். தொலைபேசியில் சிரித்துப் பேசினால் திட்டுவார். அம்மா 'யார் கிட்டேயிருந்து போன்...?' என்று கேட்பாள். சந்தேகமாகப் பார்ப்பாள். இந்த சந்தேகம், திட்டு, கேள்விகள் இவையெல்லாம் நடுத்தர வர்க்கத்திற்கு மட்டுமே சொந்தமான விஷயங்கள். மேல் வர்க்கத்திற்கு இந்தக் கேள்விகள் இல்லை. சந்தேகங்கள் இல்லை. பயங்கள் இல்லை. அதே

போல் கீழ் வர்க்கத்திற்கும் இல்லை. அனாவஸ்யமான கட்டுப்பாடுகளும், சமூகம் பற்றின பயங்களும் இல்லை. எப்போதும் எல்லாவற்றிற்கும் தயாராக இருப்பதனால் நிறைய சங்கடங்களும், கஷ்டங்களும் இல்லை. அன்றைய வயிற்றுப்பாடு மட்டுமே பிரச்சினையாக இருப்பதால் மற்ற பிரச்சினைகள் அவர்களை அணுகுவதில்லை. பெரிதாகத் தெரிவதில்லை. எல்லா பிரச்சினைகளும் பாதிப்பது மத்திய தர வர்க்கத்தைத்தான். காய்கறி விலைஉயர்வா...கவலைப் படுவது மத்தியத்தர வர்க்கம். சமையல் செய்கிற கியாஸ் சிலிண்டர் விலை உயர்வா...பாதிப்பது மத்தியதரவர்க்கம். தங்கம் விலை உயர்வா...அதற்கும் கவலைப்படுவது அவர் கள்தான். விலைவாசி உயர்விலிருந்து சமூகத்தின் வாய் வரை பயப்படுவது மத்தியதர வர்க்கத்தினர் தான். அதில் பிறப்பது போன்ற பாவம் வேறு ஒன்றுமில்லை. ஒன்று சித்ரா மாதிரி பெரிய பணக்காரியாகப் பிறக்க வேண்டும். அல்லது அஞ்சலை மாதிரி குப்பத்திலாவது பிறந்திருக்க வேண்டும் இரண்டுமில்லாது இப்படி இரண்டும் கெட்டான் குடும்பத்தில் பிறந்து எல்லாவற்றிற்கும் பயந்து, பதில் சொல்லி....

வெறுத்துப் போய்விட்டது ஷைலஜாவிற்கு. சிநேகிதி வீட்டிற்குப் படிக்கப் போனால் கூட திட்டுகிற அம்மாவும், அப்பாவும் சலித்துப் போனார்கள். அதற்கே திட்டுகிறவர் கள் தான் மதுவைக் காதலிப்பது தெரிந்தால் என்ன சொல் வார்களோ...என்பதை பயத்துடன் நினைத்துக் கொண்டே ஆட்டோவிலிருந்து இறங்கினாள்.

''எவ்வளவுப்பா...?'' என்று கேட்டு மீட்டரைப் பார்த்துப் பணம் கொடுத்துக் கொண்டிருந்த போதே மது அவனது சிவப்பு மாருதியை அருகில் கொண்டுவந்து நிறுத்தி விட்டு ஹாரன் சொன்னான். ஆட்டோக்காரரிடமிருந்து மீதச் சில்லறை வாங்கிக் கொள்வதைக் கூடத் தவிர்த்து விட்டு யார் கண்ணிலாவது பட்டுவிடப் போகிற பயத்தில் பரபரப்புடன் முன் கதவைத் திறந்து அவன் பக்கத்தில் ஏறி



உட்கார்ந்து கொண்டாள் ஷைலஜா. அவளையும் மீறின விடுதலை உணர்வில் 'அப்பாடா...' என்று பெருமூச்சு விட்டாள்.

''என்ன ஷைலு இப்படிப் பெருமூச்சு விடற...?''

''ஆயிரம் பொய் சொல்லிவிட்டு ஓடி வர்றதுக்குள்ள நான் படற அவஸ்தை எனக்குத்தானே தெரியும்.''

''எதுக்குப் பொய் சொல்லணும்....?''

''உங்க வீடு மாதிரி எங்க வீட்ல சுதந்திரம்னு நினைப்பா...? விளக்கு வச்சு வெளியில் போனாலே அம்மா அப்பா ரெண்டு பேர் கிட்டேயிருந்தும் முணுமுணுப்பு வரும்...''

''அப்படின்னால் இப்போ என்ன சொல்லிட்டு வந்த....?''

வழக்கமான பொய்தான்.

''என்ன பொய்...?''

''ஆபத்பாந்தவி, அனாதரட்சகி இருக்காளே... அவ வீட்டுக்குப் போறேன்ற பொய்...''

''அது யார் அந்த ஆபத்பாந்தவி, அனாதரட்சகி...?''

''வேற யார்...சித்ரா தான்.''

''எப்போ பார்த்தாலும் சித்ரா சித்ரா சித்ராதானா...? அவளை நினைக்கிறதில் கால்வாசிகூட நீ என்னை நினைக்க மாட்டே போல இருக்கு ஷைலு...''

மது ஒருவித நிஜமான வருத்தத்தில் சொல்ல அதைக் கேட்ட ஷைலஜா உருகிப் போனாள்.

ஸ்டியரிங் மீதிருந்த அவன் கை மீது கை வைத்துச் சொன்னாள்.

''அப்படியில்ல மது. அவள் நமக்கு உதவி செய்யறா... அவளை விட அவளது பெயர் நமக்கு நிறைய உதவி செய்

றது. அவன் பெயரைச் சொல்லிவிட்டு வெளியில் வர வசதியாக இருக்கு. அதனால்தான்...''

''ஏதோ சொல்று. சரி, நாம் இப்போ எங்கே போறோம்...?''

''நேரா பீச் ரோடு வழியாக ஒரு டிரைவ் போகலாம்.''

''எங்கேயாவது டின்னர் சாப்பிடலாமே....உன்கூட சாப்பிட்டு ரொம்ப நாளாச்சே...?''

''நேரமானால், வீட்டுக்கு சாப்பிடப் போகலைன்னால் உதை விழும்...''

''குழந்தை மாதிரி பீச்ரோடு வழியாக ஒரு ரவுண்ட் போகவா வந்த...?''

''ம்ஹூம். அதுக்கு வரலை. உங்களைப் பார்க்க வந்தேன். பாராமல் ஒருநாளும் இருக்க வேணாம்னு நீங்க தானே சொன்னீங்க...?''

அதைக் கேட்டு உருகிப் போன மது ஒரு கையால் ஸ்டியரிங்கைப் பிடித்துக் கொண்டு மறு கையால் அவள் தோள் மீது போட்டு அணைத்தவாறே சொன்னான்.

''தாங்க்யு ஷைலு...ஆமாம், மகாபலிபுரம் போகலாம்னு சொன்னாயே...எப்போ...?''

''நீங்க எப்போ சொல்றீங்களோ அப்போ...''

இந்த வீக் எண்ட் போகலாமா...? சனிக்கிழமை காலையில் கிளம்பிப் போய் ஞாயிற்றுக்கிழமை சாயந்திரம் வந்துடலாமா?...

''ஓவர் நைட் ஸ்டேவா...கொன்னுடுவாங்க வீட்ல.... அப்படியே போ வீட்டுக்குள்ள வராதன்னு அனுப்பிடுவாங்க..''

''வந்துடு....நேரா எங்க வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய் எங்க அம்மா அப்பாவுக்கு அறிமுகப்படுத்தி விட்லயே வச்சுண்டுடறேன்...''



''ஆ....ஆசையைப் பாரு...அதைவிட அம்மா அப்பா கிட்ட சொல்லிப் பெண் கேட்க அனுப்பி கல்யாணம் பண்ணிக்கலாமில்ல...?''

''இப்ப சொல்று. நாளைக்கே பெண் கேட்டு வீட்டுக்கு வரேன்...''

''ஐயயோ... வேணாம்ப்பா. படிப்பு முடியட்டும். அப்புறம் பார்த்துக்கலாம்.''

''பின்ன... எனக்கென்னவோ தைரியமில்லாத மாதிரி பேசறியே...?''

ஷைலஜா பேசாதிருந்தாள். அவன் கடற்கரைக்குள் காரைத் திருப்பி மணலை ஒட்டிய சாலையில் ஓட்டிய வாறு பேச ஆரம்பித்தான்.

''சரி. முதல்ல நாம் மகாபலிபுரம் புரோகிராமிற்கு வருவோம். ராத்திரி தங்கலாம். அதுவும் பௌர்ணமி ராத்திரியாகப் பார்த்து போகலாம். கடலும் மணலும் நிலா வெளிச்சத்தில் தகதகன்னு ஜொலிக்கும். ரொம்ப அழகாக இருக்கும். நமக்கு ரொமாண்டிக் மூட் அதிகமாகும்னு சொன்னால் நீதான் பயப்படறியே...என்கூட பௌர்ணமி நிலவில் மகாபலிபுரக் கடற்கரையில் கைகோர்த்துண்டு நடக்கணும்னு தோணலை உனக்கு...? ஆசையாக இல்லை...?''

''தோணறது. ஆசையாக இருக்கு. ஆனால் அதே சமயம் பயமாகவும் இருக்கே...''

''எதுக்கு பயம்...?''

''யாராவது நம்மைப் பார்த்துட்டு அம்மா, அப்பா கிட்டே போய் சொல்லிடப் போறாங்களேன்ற பயம்.''

''சொல்லட்டுமே... எப்படியும் தெரியப் போகிற விஷயம்தானே....?''

''தெரியப்போகிற விஷயம்தான். ஆனால் இப்போ தெரிய வேணாமேன்னு நினைக்கிறேன்.''

''பின்ன...எப்போ தெரியணும்...?''

''படிப்பு முடிஞ்சப்புறம் தெரியட்டும்...''

''சரி... அப்படின்னா எப்படி மகாபலிபுரத்துக்கு வரப் போற....?''

''அதான் சித்ரா வரேன்னு சொல்லியிருக்காளே...அவ கூடப் போறதா சொல்லிட்டு வருவேன்...''

''நாம ரெண்டு பேரும் சந்தோஷமாகப் போகலாம் ஷைலு. சித்ராவெல்லாம் வேணாம்...''

''சித்ரா இல்லைன்னால் என்னால் எப்படி வர முடியும்?''

''இப்போ எப்படி வந்த...?''

''இப்போ கூட பொய் சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன்....''

''அதே மாதிரி பொய் சொல்லிட்டு வா. இல்லைன்னால் காலைல காலேஜுக்கு வர்ற மாதிரி வா, சாயந்திரம் காலேஜ்லேருந்து திரும்பிப் போற மாதிரி போயிடலாம்...''

''மகாபலிபுரத்துலேர்ந்து அத்தனை சீக்கிரம் வர முடியுமா என்ன?''

ஏன் முடியாது...? மகாபலிபுரம் என்ன அத்தனை தூரத்திலா இருக்கு...? ரெண்டு மணி நேர டிரைவ். அவ்வளவுதானே...?''

''ஆனால் சித்ராவை விட்டுட்டு வர முடியாதே. அவ வரேன்னு சொல்லியிருக்காளே...என் கார்லயே போயிடலாம்னு வேற சொல்லியிருக்காளே...?''

''ஏன் நம்ம கிட்ட கார் இல்லையா...?''

''இருக்கு. ஆனால் அவள் வரேன்னு சொல்லியிருக்கிற போது எப்படி விட்டுட்டுப் போக முடியும்...?''



''உன்னை யார் அவகிட்ட போய் மகாபலிபுர ப்ரோகிராமைப் பத்தி சொல்லச் சொன்னது...?''

''ஐயோ...அவகிட்ட சொல்லாமல் வந்தால் எப்படி...? எங்கம்மா போன் பண்ணிக் கேட்டால் ஷைலஜா இன்னிக்குக் காலேஜுக்கு வரலைன்னு சொல்லிட மாட்டளோ...?''

''அதுக்காக அவளைக் கூட்டிண்டு போகணுமா...? எனக்குப் பிடிக்கலை...''

''வேற வழி இல்லை மது. அவள் நமக்குத் தொந்தரவாக இருக்க மாட்டா...''

''சரி. என்னவோ செய். எப்போ போகலாம்னு மட்டும் சொல்லு....''

''இந்த சனிக்கிழமை...''

''என் காரா இல்லை அவள் கார்ல போறமா....?''

''அவள் கார்லயே போயிடலாமே....''

''எங்க மீட் பண்றோம்...?''

''காலேஜ் வாசல்ல. சரியா ஒன்பது மணிக்கு. ஓ.கே...?''

''ஓ. கே...''

## 5

அன்று காலை ஆறு மணிக்கெல்லாம் எழுந்து கீழே இறங்கி வந்த மதுவைப் பார்த்து மிகவும் ஆச்சரியப் பட்டாள் ருக்மிணியம்மாள். அவன் அத்தனை சீக்கிரம் எழுந்து அந்த அம்மாள் பார்த்ததே இல்லை. தினமும் அவனை எழுப்புவதற்கு சிரமப்படுவாள். மாடிப்படியருகில் நின்று குரல் கொடுத்து சலித்துப் போவாள்.

''மது...மணி ஏழாச்சுப்பா...''

''எட்டரையாகப் போறது. எழுந்திரப்பா...'' என்று அரை மணி நேரத்திற்கு ஒரு முறை கத்தி ஓய்ந்துபோவாள். மாடியேற முடியாததால் அவனை எழுப்புவது பெரும் பாடாகப் போகும். அவனும் அத்தனை சுலபத்தில் எழுந்துவிடமாட்டான்.

''இதோம்மா...'' என்பான்.

''இன்னும் ஐந்தே நிமிஷத்தில் எழுந்துடறேம்மா...''

இப்படிக் கெஞ்சி ஒன்பது மணி வரை தூங்கி அதன் பின் பரபரத்து அவசரமாகக் குளித்து, அவசரமாக சாப்பிட்டு, அவசரமாக ஓடுவான்.

அப்படிப்பட்டவன் ஆறு மணிக்கெல்லாம் எழுந்து, அதுவும் யாரும் எழுப்பாமல் எழுந்து கீழே இறங்கி வந்தது அவளை ஆச்சரியப்படுத்திற்று. தன் ஆச்சரியத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் கேட்டும் விட்டாள்.

''என்னப்பா...இன்னிக்குப் புதுக் கட்டிடம் எதுக்காவது பூஜை போடறியா என்ன...? இத்தனை சீக்கிரம் எழுந்துட்ட?'' என்றவள் தனக்குள் சொல்லிக்கொள்கிற மாதிரி தொடர்ந்தாள்.

''இருக்காதே...இன்னிக்கு சனிக்கிழமையாச்சே...அதுவும் மார்கழி மாசம். பூமி பூஜை எதுவும் செய்ய மாட்டாயே...''

''பூஜையெல்லாம் ஒண்ணுமில்லேம்மா....நான் மகாபலிபுரம் போறேன்.''

''என்னப்பா விசேஷம்? அங்க ஏதாவது நிலம் வாங்கறியா?''

''ம்ஹூம். இல்லம்மா...'' என்றவன் ஒரு வினாடி யோசித்தான். அம்மாவிடம் எல்லாவற்றையும் சொல்லி விடலாமா என்று நினைத்தான். ஷைலஜாவைப் பற்றி, அவளது வீட்டைப் பற்றி, அவளைக் காதலிப்பது பற்றி...



அம்மாவிற்கு நிச்சயமாக ஷைலஜாவைப் பிடிக்கும். அவளது அமைதியான, அடக்கமான அழகு பிடிக்கும். எளிமை பிடிக்கும். மென்மையான பேச்சு பிடிக்கும். மருண்ட பார்வை பிடிக்கும். வெள்ளை வெளேர் என்று பளிங்குச் சிலை போன்ற கவர்ச்சிகரமான பெண்ணில்லை ஷைலஜா. கதைகளில் வருகின்ற கதாநாயகிகளைப் போன்று தந்த பொம்மையில்லை. மருட்டுகிற அழகில்லை. மாநிறமான அழகு. அமைதியான, அடக்கமான அழகு. குடும்பத்திற்கு ஏற்ற அழகு. அதனால் அவளை ஏற்றுக் கொள்வதில் அம்மாவிற்கு எந்தவிதத் தயக்கமும் இருக்காது. சங்கடம் இருக்காது.

''என்ன மது பேசாமல் இருக்க...? நிஜமாகவே நிலம் தான் வாங்கப் போறியா?'' சட்டென்று அவனைக் கலைத்தாள் அம்மா.

''இல்லம்மா...'' என்று மீண்டும் தலையாட்டியவன் ஷைலஜாவைப் பற்றி அப்போது சொல்ல வேண்டாம் என்கிற முடிவிற்கு வந்தான். சொன்னால் நேரமாகும். அம்மா கேள்வி மேல் கேள்வி கேட்பாள். ஆதி முதல் விவரம் கேட்பாள். அப்போதே அவளைப் பார்க்க வேண்டுமென்பாள். அது ஷைலஜாவிற்குத் தொந்தரவாக முடியும். அவள் சொன்ன மாதிரி அவளது படிப்பு முடிகிற வரை காத்திருக்க வேண்டியதுதான். வேறு வழி இல்லை.

அந்த முடிவில் மெல்ல நிமிர்ந்து அம்மாவைப் பார்த்தான்.

''நிலம் வாங்கப் போகலைம்மா. கொஞ்சம் ரிலாக்ஸ்ஸாக இருக்கலாம்னு ஒரு பிரெண்ட் கூடப் போறேன்.''

''பிரெண்டுன்னா...ஆணா, பெண்ணா?'' அம்மா சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''பிரெண்டுன்னா பிரெண்டுதாம்மா...'' என்று அவனும் சிரித்தான்.

''காபி தாம்மா. குடிச்சிட்டு, குளிச்சு டிரஸ் பண்ணிட்டு கிளம்பனும். ஒன்பது மணிக்கெல்லாம் காலேஜ் வாசல்ல இருக்கணும்.''

''காலேஜ் வாசலா...?''

''...ஆ...அது வந்து ஸ்டெல்லா மாரிஸ் வாசலம்மா. அவன் அண்ணா நகர்லேருந்து வரணும். இங்கே வந்து இங்கிருந்து திரும்பிப் போய் நேரமாகும்னு ஸ்டெல்லா மாரீஸ் வாசல்ல நிக்கறதாகச் சொல்லியிருக்கேன். அவன் என்னை பிக் அப் பண்ணிக்குவான்.''

''அப்படின்னா உன் கார்ல போகலையா?''

''ம்ஹூம். என் காரை சோழா ஓட்டல்ல விட்டு பூட்டிட்டுப் போகப்போறேன்.''

பேசிக்கொண்டே காப்பி குடித்து முடித்தான். மீண்டும் மாடிக்கு ஓடினான். ஷைலஜாவுடன் மகாபலி புரம்! மனது துள்ளியது. சொல்ல முடியாத சந்தோஷத்தில் மிதந்தது. ஷேவ் பண்ணி, குளித்து, தலைவாரிக் கொண்ட போதெல்லாம் ஷைலஜா.... ஷைலஜா... ஷைலஜா...

அலமாரியைத் திறந்து எந்த டிரஸ் போட்டுக் கொள்ளலாமென்று ஒரு வினாடி யோசித்தான். இன்று முழுவதும் அவளுக்குப் பிடித்த அத்தனையும் செய்துவிடுகிற முடிவில் இருந்தான். அடிக்கடி போட்டுக்கொள்கிற அவளுக்கு மிகப் பிடித்தமான சாக்லெட் நிறத்தில் மெலிதாய் சந்தன வர்ண கோடுகள் போட்ட சட்டையும், அதே சாக்லெட் நிற பாண்டும் தேர்ந்தெடுத்தான். 'எம்' என்று காப்பிப் பொடி வர்ணத்தில் எம்ப்ராய்டரி செய்த ஸோடியாக் கைக்குட்டையை எடுத்துக் கொண்டான். இனிமேல் 'எஸ்' என்று எம்ப்ராய்டரி செய்த கைக்குட்டை வாங்க வேண்டுமென்று நிலனத்துக் கொண்டான். ஜோவான் செண்ட்டை முகம், மார்பு, காதுகளின் பின்புறம் என்று தெளித்துக் கொண்டான்.



ஜோவான் ஷைலஜாவிற்கு மிகவும் பிடித்தமான செண்ட். அவனிடமிருந்த எட்டு செண்டுகளில் அவளுக்கு ஜோவான்தான் பிடிக்கும். காரில் உட்கார்ந்து கடல் அலைகளை ரசிக்கும் போது கழுத்திற்குக் கீழே முகத்தைக் கொண்டு வந்து ஷைலஜா 'தம்' பிடிப்பாள்.

''அப்பா...என்ன வாசனை...'' என்று மறுபடியும் மூச்சை உள்ளுக்கு இழுப்பாள்.

''காதுகளுக்குப் பின்னாலும் இதே வாசனை தானா?'' என்று கேட்பாள்.

'ஆமாம். மார்புலகூட போட்டுண்டிருக்கேன். முகர்ந்து பாரேன்...' என்று குறும்பாகக் கேட்பான் அவன். அவளது கழுத்தை வளைத்துத் தன் மார்பிற்காக முகத்தை இழுப்பான்.

''சீ...என்ன நீங்க...பொது இடம். பப்ளிக் பிளேஸ்... பக்கத்துக் கால இருக்கிறவங்கள்ளாம் பார்க்கமாட்டாங்க? என்ன அவசரம்? கல்யாணம் வரை காத்திருக்கக் கூடாதா? ஷைலஜா பயத்திலும், கோபத்திலும் முகம் சிவப்பாள்.

''ஷைலு டியர்...கல்யாணம் வரை நான்தான் காத்துண்டிருப்பேன். இந்த செண்ட் வாசனை காத்துண்டிருக்காது. என் கிட்ட இருக்கிற பாட்டில் கூட காலியாகிவிடும். அதனால் இன்னிக்கே முகர்ந்து பார்த்துடு...'' என்பான்.

''ஐய... வேணாம்...'' வெட்கத்தோடு சிணுங்குவாள் அவள்.

''சரி...வேணாம். முகத்தை என் மார்புல வச்சிக்கக் கஷ்டமாக இருந்தால் கையையாவது வச்சிக்க. தடவிக் கொடு...'' என்று அவளது கையை இழுத்துத் தன் மார்பில் பதித்துக் கொள்வான்.

அவள் அவனது மார்பின் ரோமங்களில் விரல்களைப் படர விட்டு மெல்ல வருடி, தடவிக் கொடுக்கிற போது

பெண் ஸ்பரிசம் பட்டதில் உடல் குறுகுறுத்து காது மடல்கள் சிவக்கும். இதயம் படபடக்கும். இன்னும் கொஞ்சம் தடவிக் கொடுக்கமாட்டாளா, கை மெல்ல கீழே இறங்காதா என்று உணர்வுகள் தவிக்கும்.

அதையெல்லாம் நினைத்துக் கொண்டே மார்பில் ஜோவானை அள்ளித் தெளித்துக் கொண்டான். இன்று அவளோடு கொஞ்சம் விளையாடிப் பார்க்க வேண்டும். கொஞ்சம் என்ன நிறையவே விளையாட வேண்டும் என்று அவனது குறும்பு மனம் எண்ணியது. காதுக்குக் கீழே ஒரு செண்ட், கை மணிக்கட்டுகளில் இன்னொரு செண்ட், கழுத்துக்குப் பின்னால் வேறொரு செண்ட் என்று எட்டு வகை செண்டுகளையும் வெவ்வேறு இடங்களில் தடவிக் கொண்டான்.

'இன்று ஷைலஜாவை அஷ்டாவதானியாக்க வேண்டும். அத்தனை இடங்களையும் அவள் ஸ்பரிசிக்க வேண்டும். அவளது ஸ்பரிசம் பட்டு தன் உடம்பு குறுகுறுக்க வேண்டும். மனது இன்னும் இன்னும் என்று ஏங்க வேண்டும். இன்று அவளது கை இல்லை. முகத்தை இழுத்து ஒவ்வொரு இடமாக முகரச் செய்ய வேண்டும். கன்னங்கள் மார்பில் உராய, உதடுகள் வண்டியின் வேகத்தில் உடம்போடு உரசினால்... அது போனஸ். இலவச இதழ் இணைப்பு...'

அந்த இலவச இதழுக்காக மனம் பரபரத்ததில் அவனும் பரபரத்தான். மாடியிலிருந்தே படி வரை வந்து கீழே குனிந்து ஹாலை எட்டிப் பார்த்துக் கத்தினான்.

''அம்மா...டிபன் ரெடியா...?''

''இதோ....ஒரே நிமிஷப்பா...இட்லி ரெடி. சமோஸாவும் ரெடியாயிடும்.''

ஜல்லிக் கரண்டியால் எண்ணெயில் மிதந்து கொண்டிருந்த சமோஸாவை வெளியில் எடுத்து சம்புடத்தில் போட்ட ருக்மிணியம்மாள் நினைத்துக் கொண்டாள்.



அதன் பொன்னிறம் மதுவுக்குப் பிடிக்கும். ஆர்ட்டிஸ்டிக் ஆனதால் அவனுக்கு எல்லாமே அழகாக இருக்க வேண்டும். அழகாகத் தெரிய வேண்டும். சாப்பாட்டில்கூட ருசியைவிட பார்வைக்கு அழகைத்தான் அவன் முதலில் பார்ப்பான்.

''இந்த காரட் சிவலின் ஆரஞ்சு கலரும் கிரையின் வெளிர் பச்சையும் ரொம்ப நல்ல காம்பினேஷன் இல்லம்மா...?''

அதை நினைத்துக் கொண்டே அந்த அம்மாள் மேஜை மீது கொண்டு வந்து வைத்தபோது ரேபான் கூலிங்கிளாஸும், மைனர் சங்கிலியும், அவன் நிறத்திற்குப் பொருத்தமான சாக்லெட் வர்ண பாண்ட்டும், ஷர்ட்டுமாக இந்த சினிமாக் கதாநாயகர்களைப் போன்று அவன் இறங்கி வருவதைப் பார்த்து அம்மா அயர்ந்து போனாள்.

''ஏம்ப்பா...நீ மகாபலிபுரம் போறியா இல்லைன்னால் பொண்ணு பார்க்கப் போறியா?'' என்று விளையாட்டாகக் கண் சிமிட்டினாள்.

''பொண்ணெல்லாம் பார்த்தாச்சம்மா...'' என்று அவனும் விளையாட்டு மாதிரி சொல்லிச் சிரித்தான்.

''ஓஹோ...அம்மாவுக்குக் கஷ்டம் வேணாம்னு நீயே பார்த்துட்டியா...யாரு பொண்ணு?''

''வந்து சொல்றேன். இப்போ முதல்ல டிபன் கொடும்மா. எட்டே முக்காலுக்காவது கிளம்பினால்தான் அங்கே ஒன்பதுக்கு இருக்க முடியும். ஏற்கெனவே மணி எட்டரை ஆயிடுத்து.''

மடமடவென்று சாப்பிட்டு முடித்து, அத்தனை அவசரத்திலும் சமோசாவின் அழகையும், வர்ணத்தையும் புகழ்ந்து விட்டு திடீர்னு ஞாபகத்திற்கு வந்தவனாக மீண்டும் மாடிக்கு ஓடினான்.

''என்னப்பா...?''.

"ஸ்விம்மிங் ஸூட்டை மறந்துட்டேம்மா. மகாபலிபுரம் போய் கடல்ல ஸ்விம் பண்ணலேன்னால் எப்படி...?"

கேட்டுக்கொண்டே ஒரு பையில் டவலையும், நீச்சல் உடையையும் போட்டு தோளில் மாட்டிக் கொண்டு கீழே இறங்கினான். மணி எட்டே முக்கால் ஆகியிருந்தது.

"வரேம்மா..."

அந்த நிமிடம் அசாத்திய வேகம் பிடித்து அவனது சிவப்பு மாருதி பீச்ரோட் நோக்கிப் பறந்தது.

ஷைலஜா போனபோது மணி எட்டே கால். அப்போதுதான் சித்ரா குளித்துவிட்டு வந்திருந்தாள். ரொம்ப நிதானமாக அவளைப் பார்த்து ஹாய் சொன்னாள்.

"என்னப்பா இது...இப்பதான் குளிச்சுட்டே வரியா?" கேட்டபோதே ஷைலஜாவிற்குக் குரல் அடைக்கத் தொடங்கிற்று.

'இவள் எப்போது டிரஸ் பண்ணி எப்போது புறப்படுவது...மது காத்துக் கொண்டிருப்பாரே...' மனது பரபரக்கத் துவங்கிற்று. உடல் நரம்புகளில் புது ரத்தம் பாய்ந்தது.

ஆனால் மிக நிதானமாகக் கட்டிலில் எடுத்துப் போட்டிருந்த பத்துப் பனிரெண்டு புடவைகளில் எதை எடுத்துக் கொள்ளலாம் என்கிற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த சித்ரா சொன்னாள்.

"பி...கூல் யார்...என்ன ஆயிடுச்சுன்னு இப்போ இப்படி அவசரப்படற?"

"ஏய்...என்னடி இது...மணி எட்டு இருபதுடி. ஒன்பது மணிக்கெல்லாம் மது காலேஜ் வாசல்ல காத்துண்டிருப்பார்டி..."

"இருக்கட்டும். கொஞ்ச நேரம் காத்துக்கிட்டிருந்தால் ஒண்ணும் குடி முழுகிப் போயிடாது."



சித்ரா புடவைகளை ஒதுக்கி சுடிதார், சல்வார் கம்மீஸ்களில் தேட ஷைலஜா கெஞ்ச ஆரம்பித்தாள்.

"ப்ளீஸ் வேணாம்டி. அவருக்குக் கார்கூட இல்லைடி. நம்ம கார்னு சொன்னதால் அவர் கார்ல வந்திருக்க மாட்டார்டி. ஆட்டோவில் வந்து இறங்கிக் கால்கடுக்க நிக்கணும்டி..."

"நிக்கட்டும். காதல்னா சும்மாவா...? கல்லும், முள்ளும், கரடு முரடும் நிறைஞ்சதுதான் காதல் பாதைன்னு நீ படிச்சதில்லையா...?"

ஷைலஜாவிற்கு அப்படியே அவள் கழுத்தை நெறிக்க வேண்டும் என்று தோன்றியது. அவளது முகத்தில் தெறித்த ஆத்திரத்தைப் பார்த்த சித்ரா சொன்னாள்.

"டேக் இட் ஈஸி ஷைலு...உனக்கு சைக்காலஜி தெரியலை. ஆம்பிளைன்றது யாருன்னு புரியலை. அவங்க இழுக்கிற இழுப்புக்கெல்லாம் போகக் கூடாதுடி. ஒன்பது மணின்னு சொன்னால் காக்கவச்சு, அவங்க இதயத் துடிப்பை அதிகமாக்கி, ஏங்கவச்சு நாம் ஒன்பதரைக்கு நிதானமாகப் போகணும்."

"ஏய் வேணாம்டி...மதுவுக்குக் காத்திருக்கப் பிடிக்காதுடி...கோவிச்சுண்டு போனாலும் போயிடுவார்டி..."

"போகட்டும். அப்படிப் போனால் யாருக்கு நஷ்டம்னு நாமும் திரும்பி வந்துடலாம்..." என்றவள் மஜந்தா நிற உடை ஒன்றைத் தேர்ந்தெடுத்து அணிந்து கொண்டாள். தலைவாரி, சென்ட் அடித்து, முகத்திற்குப் பவுடர் பூசி கண்ணாடி பார்த்துக் கொண்டே விரல் நகங்களைக் கடித்துக் கொண்டிருந்த ஷைலஜாவின் பக்கம் திரும்பினாள்.

"என்ன பொட்டு வச்சுக்கலாம் ஷைலு...மஜந்தா கலர் ஸ்டிக்கர் பொட்டே வச்சுக்கட்டுமா?"

''மண்ணாங்கட்டி. பொட்டு வச்சுக்கிறது ஒரு பெரிய பிரச்சினையாடி...? வேணும்னே இதை அயோத்யா பிரச்சினையாக்கற நீ...இந்த நேரத்துல ஏண்டி எல்.கே. அத்வானியா மாறற...? நான் நரசிம்மராவ் மாதிரி தவிக்கிறது புரியல...?''

''நரசிம்மராவ் மாதிரி அமைதியா விஷயங்களை எடுத்துக்க உனக்குத் தெரியலை....ஏண்டி இப்படி தவிக்கிற? எத்தனை நாள் மதுவுக்காக நீ பஸ் ஸ்டாப்பிலும், பீச்சுலயும் காத்துக்கிட்டு நிற்கலை. இன்னிக்கு ஒரு நாள் அவரைக் காக்க வச்சால் ஒண்ணும் குடி முழுகிப் போயிடாது. வா...டிபன் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பலாம்...''

ஒரு வழியாக அலங்காரத்தை முடித்து டிபன் சாப்பிட்டுவிட்டு சித்ரா கிளம்பியபோது மணி ஒன்பதரை. அதற்குள் ஷைலஜாவின் பாதி விரல்கள் அழகாய் அருமையாய் வளர்ந்திருந்த நகங்களில் கொஞ்சம் இழந்தன.

ஒன்பதரை வரை காத்திருந்த மது பொறுமையிழந்து, வியர்வையில் சட்டை நனைவதில் எரிச்சலடைந்து காரை ஸ்டார்ட் செய்தான்.

'என்ன ஆயிற்று இவளுக்கு...? ஏன் இன்னும் வரவில்லை...? ஒருவேளை வீட்டில் விட மறுத்து விட்டார்களோ?'

என்ன செய்வதென்று புரியாமல் கடைசியாக ஒருமுறை ரிவர்ஸ் மிர்ரரில் பார்த்தபோது அவன் காருக்குப் பின்னால் கருத்த சாம்பல் வர்ண மாருதி 1000 ஒன்று வந்து நின்றது.

## 6

பளீரென்று மஜந்தா நிற சல்வார்கமீஸுடன் காரிலிருந்து இறங்கிய சித்ராவைத்தான் முதலில் பார்த்தான் மதுசூதனன். 'யார் இந்தப் பெண்...இவ்வளவு அழகாக இருக்கிறாளே....' என்று நினைத்துக் கொண்டான். கூடவே



பின்னால் இறங்கிய ஷைலஜா கண்ணில் பட்டதும்தான் அவள் சித்ரா என்பது புரிந்தது. ஒரு வினாடி மனசு வாடிற்று. அதுவரை சித்ராகூட வரப்போவதைப் பற்றி மறந்திருந்தான். 'ஷைலஜாவுடன் மகாபலிபுரம்' என்பதைத் தவிர வேறு நினைவின்றி இருந்தான். அந்த நாள் முழுதும் ஷைலஜாவுடன் எப்படி இருக்க வேண்டும், அவளை எவ்வாறு சந்தோஷப்படுத்த வேண்டும் என்பதில் கவனம் போயிற்றே தவிர சித்ரா என்பவள் உடன் வரப் போகிற எண்ணமே ஏற்படவில்லை.

அப்போது அவளைப் பார்த்த பின்புதான் 'ஐயோ.... இவளும்கூட வருகிறாளே...அதை மறந்து போனோமே...' என்று தோன்றிற்று. சட்டென்று உள்ளுக்குள் பொங்கிய வேகம், சந்தோஷம் எல்லாம் வடிந்து போயிற்று. ஒருவித ஏமாற்றமும், சலிப்பும் தோன்றிற்று. ஆனாலும் அதை வெளிப்படுத்திக் கொள்வது நாகரீகமில்லை என்று நினைத்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன் காரை விட்டுக் கீழே இறங்கினான்.

''சீ...இந்த ஷைலு தனியாக வந்திருக்கக்கூடாது.'

சிரிப்பை வரவழைத்துக் கொண்டே ஷைலஜாவைப் பார்த்து 'ஹலோ' சொன்னான்.

அவசரமாக அவனை நெருங்கிய ஷைலஜா, ''ரொம்ப நேரமாகக் காத்துக்கிட்டிருக்கீங்களா...?'' என்று வருத்தம் தொனிக்கக் கேட்டாள்.

''உனக்கேன் இத்தனை பயம் ஷைலு...?''

''நாம் இரண்டு பேர் மட்டும் தனியாகப் போனால் எவ்வளவு நன்றாக இருக்கும்...!''

மீண்டும் ஓர் புன்னகையை வரவழைத்துக் கொண்டு மென்மையான குரலில் பதிலளித்தான்.

''ம்ஹூம். அதிக நேரமில்லை. நாற்பத்தைந்து நிமிஷம்தான் காத்துக்கிட்டிருந்தேன்...''

''சாரி மது...நான் எட்டு மணிக்கெல்லாம் இவ வீட்டுக்கு வந்துட்டேன்...''

'நீ ஏன் இவள் வீட்டிற்கெல்லாம் போய் கஷ்டப் படணும்...? ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் நானே உன் வீட்டிற்கு வந்து உன்னைக் கூட்டிக்கொண்டு வந்திருப் பேனே...மகாராணி மாதிரி அழைத்துக் கொண்டு போயிருப் பேனே...'

''ஐயம் ஸாரி மிஸ்டர் மதுசூதனன், என் பெயர் சித்ரா. ஷைலஜாவோட பெஸ்ட் பிரெண்ட்...''

''தெரியும், ஷைலஜா சொல்லியிருக்கிறாள்.''

''அவளுடன் என்னைப் பார்த்துகூட இருப்பீங்க...''

மது சிரித்தான். தற்போது நிஜமாகவே சிரித்தான்.

சித்ரா கேட்டாள்.

''ஏன் சிரிக்கறீங்க....?''

''இல்ல...ஷைலஜாவைத் தவிர என் பார்வைல வேற யார் பட்டிருக்காங்க...?''

அதைக்கேட்டு ஷைலஜாவின் முகம் பளீரிட்டது. ஆனால் சித்ராவின் முகம் சட்டென்று வாடி மறு வினாடி பளிச்சிட்டது.

''அப்கோர்ஸ்...'' என்று சிரித்தாள் சித்ரா. உங்களைப் பார்த்ததும் அவதான் என்னை நைஸா கழட்டி விட்டுடு வாளே...''

''ஏய்....ஏண்டி பொய்சொல்ற....? நீயா கழண்டுண்டு என்மேல தப்பு சொல்ற பார்த்தியா...?''

''ஷி ஈஸ் ரைட். காதலிக்கப் போறபோது உங்களை மாதிரி ஒரு அழகான பெண்ணைக் கூடக் கூட்டிட்டுப் போக முடியுமா...?'' என்று மது மறுபடியும் சிரித்தபோது ஷைலஜாவிற்கு உள்ளுக்குள் பற்றிக்கொண்டு வந்தது.



'அழகா... இவளா... வெள்ளைத் தோல் என்றாலே நீங்கள்ளாம் மயங்கிடுவீங்களே....'

இந்த முறை சித்ராவின் கண்கள் விளக்கேற்றிக் கொண்டன. 'மெல்ல ராஜாவை நோக்கி ஒரு அடி எடுத்து வைத்தாயிற்று...' என்று நினைத்துக் கொண்டு ரகசியமாக ஷைலஜாவைப் பார்த்தாள். அந்தக் கண்களின் பளபளப்பை ஷைலஜா புரிந்து கொண்டாள். 'பார்த் தாயா...உன் ஆள் என் அழகைப் புகழுறாரு....'

இப்போது ஒரு அடி போதும். அப்புறம் வாமனா வதாரம் எடுத்துக் கொள்ளலாம் என்கிற முடிவில் சித்ரா பேச்சைத் திசை திருப்பினாள்.

''ஐயம் வெரி ஸாரி மிஸ்டர் மது. ஏற்கனவே ரொம்ப நேரமாயிடுத்து. பேசிண்டே நின்னுட்டிருந்தால் இன்னும் நேரமாயிடும்....''

''ஓ...கிளம்பலாமே...'' என்ற மது ஷைலஜாவைப் பார்த்தான்.

''போகலாமா ஷைலு...?''

''ம்...'' என்று முனகினாள் அவள்.

''இப்போ உங்க காரை என்ன பண்ணப் போறீங்க மது...?'' வேண்டுமென்றே மிஸ்டரைத் தவிர்த்தாள் சித்ரா.

''சோழா ஓட்டலில் விட்டு விட்டுப் போகலாமா...?''

கால் வினாடி யோசித்த சித்ரா சட்டென்று ஒரு முடிவிற்கு வந்தவளாகச் சொன்னாள்.

''வேண்டாம், உங்களுக்கு டிரைவிங் தெரியும். எனக்கும் தெரியும். அதனால் நாமே ஓட்டிண்டு போயிட லாம். உங்க வண்டியை டிரைவரை எடுத்துக் கொண்டு போய் எங்க வீட்ல விடச் சொல்றேன்!''

''உங்க வீட்லயா...?'' அரண்டு போனான் மது.

''ஆமாம். ஏன்...?''

''உங்க வீட்ல திட்ட மாட்டாங்களா...?''

''எதுக்குத் திட்டணும்....?''

''என் வண்டின்னு தெரிஞ்சால்....?''

''தெரிஞ்சால் என்ன...?''

''ஒரு ஆம்பிளை வண்டி. அதுவும் என்னை மாதிரி இளைஞனின் வண்டி...''

''ஓ...கமான்...'' என்று சிரித்தாள் சித்ரா. ''எங்க வீட்டை ஷைலஜா வீடுன்னு நினைச்சிங்களா...? எங்க அம்மா அப்பாவைப் பற்றி என்ன நினைக்கறீங்க...? தே ஆர் நாட் கன்சர்வேடிவ் லைக் ஷைலஜாஸ பேரண்ட்ஸ், ரொம்ப நாகரீகம் தெரிஞ்சவங்க. ரொம்ப மாடர்ன். எனக்கு நிறைய சுதந்திரமும் செல்லமும் கொடுத்திருப்ப வங்க. வருஷத்துல மூணுதரம் அமெரிக்கா போறவர் எங்க அப்பா. ஆண் பெண்ணுன்ற வித்தியாசமெல்லாம் சிநேகத் தக்குக் கிடையாதுன்னு தெரிஞ்சுண்டிருக்கிறவர். ஸோ அந்தக் கவலையெல்லாம் பட வேண்டாம்...''

அவன் பெருமூச்சு விட்டான்.

''அந்த மாதிரி ஷைலஜாவோட அம்மா அப்பாவும் இருந்திருந்தால்...?''

அதற்குள் டிரைவரை அருகில் கூப்பிட்டாள் சித்ரா.

''இதப்பாரு பழனி, இவருடைய வண்டியை எடுத்துக் கிட்டுப் போய் வீட்ல விட்டுடு. நான் இவர்கூட நம் வண்டியில் மகாபலிபுரம் போயிருக்கிறதா அம்மாகிட்ட சொல்லு. ஷைலஜா வீட்லேருந்து போன் பண்ணிக் கேட் டாங்கன்னால் அவ என்கூட மகாபலிபுரம் போயிருக்கிறதா சொல்லச் சொல்லி வேலைக்காரங்க கிட்ட தெரிவிச்சுடு'' என்றவள் பழனி சிவப்பு மாருதியை எடுத்துக்கொண்டு போகிறவரை காத்திருந்தாள். பின்னர் ஷைலஜாவின் பக்கம் திரும்பி கேட்டாள்,



20214
3235350

''போகலாமாடீ...''

அதுவரை அவர்கள் பேச்சில் தலையிடாமல் ஒருவித எரிச்சலுடன் காத்திருந்த ஷைலஜா சித்ராவை ஏறிட்டாள்.

''யார் முதல்ல காரை ஓட்டப் போறது...?''

''லேடீஸ் பர்ஸ்ட். அதனால் நானே முதல்ல ஓட்ட றேன். திரும்பி வர்றபோது நீங்க ஓட்டலாம். என்ன மது...?''

'மதுவாம் மது...பெற்றுப் பேர் வச்சவ மாதிரி கூப்பிட றாளே...'

ஷைலஜாவின் அடிவயிற்றில் லேசாக எரிச்சல் கண்டது. சித்ரா மீண்டும் பேசினாள்.

''டிரைவர் மாதிரி நான் ஓட்டிண்டு போறேன். நீங்க ரெண்டு பேரும் பின்னால் ஜாலியாக உட்கார்ந்துண்டு வாங்க. சின்னச் சின்னதா விஷமம் பண்ணுங்க. நான் ரீவர்ஸ் வ்யூ மிர்ரரில் பார்க்க மாட்டேன்...''

'எத்தனை ஸ்போர்ட்டிவ் ஆகப் பேசுகிறாள் இவள்...' என்று நினைத்துக் கொண்ட மது சொன்னான்.

''நோ....நோ....அது மரியாதை இல்லை; ஷைலு நீ உன் பிரெண்ட் பக்கத்துல முன் ஸீட்டுல உட்கார்ந்துக்கோ. நான் பின் ஸீட்ல உட்கார்ந்துண்டு வரேன்...''

வண்டி போன லாகவத்திலும், அழகிலும் ஈர்க்கப்பட்ட மது மீண்டும் சித்ராவிடம் பேச்சைத் தொடர்ந்தான்.

''எத்தனை நாளாக நீங்க வண்டி ஓட்டறீங்க...?''

''ஏன் கேட்கறீங்க...?''

''இல்ல...இத்தனை அழகா ஓட்டறீங்களேன்னு கேட் டேன்...''

''பிறந்த மறுநாள்லேர்ந்து ஓட்றா... போறுமா...?''— சட்டென்று சொன்னாள் ஷைலஜா. அதற்குமேல் தாங்க முடியாதவளாக முகம் சிவந்தாள்.

சடாரென்று அவளைத் திரும்பிப் பார்த்த சித்ராவின் முகத்திலும், புன்னகையிலும் ஒருவித வெற்றிப் பெருமிதம் இருந்தது. ஷைலஜாவின் எரிச்சலையும் கோபத்தையும் கேலியாக, விளையாட்டாக மாாற்றப் பார்த்தாள்.

''ஏய்...ஜோக் அடிக்கறியாடி....? கர்ணன் கவச குண்டலத்தோட பிறந்த மாதிரி நான் கார் ஸ்டியரிங்கோடப் பிறந்தேன்னு அவர் நினைச்சுக்கப் போறார்...''

'அவராம்...அவர்...அறிமுகமாகி அரை மணி நேரமாகலை...அதற்குள் எத்தனை உரிமை...''

ஷைலஜாவும் பதிலுக்குச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டாள். உள்ளுக்குள் வெறுப்பும், உதட்டில் சிரிப்புமாக இருப்பது கஷ்டமாகத்தான் இருந்தது. வராத கலை என்று தோன்றிற்று. 'ஏய் சித்ரு...நீ எப்படிடீ நடிக்கற...?' என்று கத்தத் தோன்றியது. ஆனாலும் கத்தாமல் இருந்தாள்.

''போறும்டி...ஸ்டியரிங்கோடு பிறந்தேன்னு நீ சொன்னாலும் அவர் நம்பவா போறார்...?''

''என்ன மது...நான் சொன்னால் நம்ப மாட்டீங்களா...?'' என்று கொஞ்சலாய் திரும்பி முகத்தைக் குழந்தை மாதிரி வைத்துக் கொண்டு சித்ரா கேட்டதும் நிஜமாகவே அவன் பதில் சொல்ல முடியாமல் தவித்துப் போனான். 'நம்ப மாட்டேன்' என்று சொல்லி அவளைக் கஷ்டப் படுத்தவும் 'நம்புவேன்' என்று சொல்லி ஷைலஜாவைத் திருப்திப் படுத்தவும் முடியாமல் சங்கடப்பட்டான்.

''அந்தக் கால் வினாடி அமைதியைத் தாங்கிக் கொள்ள முடியாதவளாகப் படீரென்று திருப்பிய ஷைலஜா அவனை முறைத்தாள்.

''என்ன...எந்தப் பக்கம் கோல் போடப் போறீங்க...?''

''முதல்ல ரோடைப் பார்த்து அவங்க காரை ஓட்டட்டும் ஷைலு...மகாபலிபுரம் போய் இந்த விளையாட்டையெல்லாம் வச்சுக்கலாம்.''



மெதுவாகப் பேச்சை அவன் திசை திருப்பியது ஷைலஜாவிற்குப் பிடிக்கவில்லை. தன் பக்கம் பேசாதது பெருத்த ஏமாற்றமாக இருந்தது. இந்தப் போட்டியில் சித்ரா வெற்றி பெற்று விடுவாளோ என்கிற பயம் தோன்றியது. என் வெற்றிக்கு நான் எனக்குத் தோன்றிய வழிகளையெல்லாம் பிரயோகிப்பேன். நீ தப்பாக எடுத்துக்கக் கூடாது' என்றது நினைவிற்கு வந்தது.

பதிலுக்குத் தானும் 'உன் வழிகளையெல்லாம் முறியடிக்க நானும் எனக்குத் தெரிந்த அத்தனையும் பிரயோகிப்பேன். நீயும் தப்பாக எடுத்துக்கக்கூடாது...' என்று சொன்னதும் ஞாபகத்தில் வந்தது.

இப்போது முறியடிக்கும் தருணம் வந்துவிட்டது. பிரயோகிக்கும் சமயம் வந்துவிட்டது. போட்டி துவங்கி விட்டது. 'சபாஷ் சரியான போட்டி...' என்று பாராட்ட பி.எஸ். வீரப்பா இல்லை. வேறு யாராலும் பாராட்டவும் முடியாது. இந்த ஒப்பந்தம் வேறு யாருக்கும் தெரியவும் தெரியாது. இனி சித்ரா தடுக்கில் நுழைந்தாளானால்தான் கோலத்தில் நுழைய வேண்டும். நுழைய கற்றுக்கொள்ள வேண்டும். அதைவிட்டு இப்படி வருத்தமும், பொறாமையும் படுவதில் அர்த்தமில்லை. தானும் அழகாய், தைரியமாய் சமாளிக்க வேண்டும். எப்படியாவது வெற்றி பெற்று சித்ராவின் முகத்தில் கரி பூச வேண்டும்...

அதற்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் தோற்றுப் போகக்கூடாது என்கிற முடிவில் தன்நம்பிக்கை வரப் பெற்றவளாகத் தலை நிமிர்ந்தாள் ஷைலஜா...

## 7

மகாபலிபுரம் எல்லையைத் தொட்டதும் காரின் வேகத்தைக் குறைத்த சித்ரா, மதுவைத் திரும்பிப் பார்த்துக் கேட்டாள்.

''இப்போ எங்கே போகப் போறாம்...?''

தனியார் கெஸ்ட் ஹவுஸ் ஒன்றின் பெயரைச் சொன்னான் மது.

''அங்கேயா புக் பண்ணியிருக்கீங்க...?''

சித்ராவின் கண் விரிப்பையும், ஆச்சரியத்தையும் பார்த்த மது சற்று தயங்கினான்.

''ஏன் கேட்கறீங்க? அந்த கெஸ்ட் ஹவுஸ் வேணாமா...?''

''நோ...நோ...இதுவரை நான் அந்த கெஸ்ட் ஹவுஸுக்குப் போனதே இல்லை. ரொம்ப அழகாக இருக்கும். ரொம்பப் பெரிய பணக்காரங்க, அதாவது கோடீஸ்வரங்க வந்து தங்கற இடம். ஒருநாள் வாடகையே மூவாயிரம் ரூபாய்ன்னெல்லாம் கேள்விப்பட்டிருக்கேன்.''

''இதையெல்லாம் யார் உனக்குச் சொன்னாங்க சித்ரா...?'' ஷைலஜா கேட்டாள்.

''எங்க அப்பா. அவர் அடிக்கடி போவார். அவருக்கு கமலான்னு ஒரு கேர்ள் பிரெண்ட். அவகூட கிளம்பி வீக் எண்ட்டிற்குப் போய் அங்கதான் தங்கிவிட்டு வருவார்.''

''என்னது...! உங்க அப்பாவிற்கு கேர்ள் பிரெண்டா....!'' அதிர்ந்து போனாள் ஷைலஜா.

''அதுக்கு ஏண்டி இப்படி அலர்ற...?'' அமைதியாகவே கேட்டாள் சித்ரா,

அதுவரை அவர்கள் பேச்சில் தலையிடாமல் இருந்த மது மெதுவாகக் குறுக்கிட்டான்.

''ஏன் கேர்ள் பிரெண்ட்டுன்னு சொல்றீங்க...பிரெண்டுன்னு அழகாகச் சொல்லலாம் இல்ல...?''

''நோ. கேர்ள் பிரெண்ட்தான். வெறும் பிரெண்டாக இருந்தால் கமலான்னு ஒரு பிரெண்டுன்னு சொல்லியிருக்க மாட்டேனா மது...? பிரெண்ட்டுன்னு சொல்றதுக்கும் கேர்ள் பிரெண்ட்டுன்னு சொல்றதுக்கும் உள்ள வித்தியாசம் உங்களுக்குப் புரியும்னு நினைக்கிறேன்.''



''எனக்கும் புரியறதுடீ...புரியாமல் இல்லை. ஆனால் இத்தனை சர்வ சாதாரணமாக அப்பாவோட கேர்ள் பிரெண்ட்டுன்னு சொல்ற...? அதுதான் ஆச்சரியமா இருக்கு...?''

''சாதாரணமாகச் சொல்லாமல் அசாதாரணமாகச் சொல்ல என்ன இருக்கு? சாதாரணமாகிப் போன விஷயத்தைச் சாதாரணமாகத்தானே சொல்லணும்...?''

''உங்க வீட்ல எல்லாருக்கும் தெரியுமா?''

''ஓ.எஸ். எங்க வீட்டு நாய்க்குட்டிக்குக் கூடத் தெரியும். கமலா வந்தால் அது மேல விழுந்து புரண்டு செல்லம் கொஞ்சும்.''

'உங்கப்பா மாதிரியா...?' என்று குறும்பாகக் கேட்க நினைத்து, கேட்காமல் சிரித்துக் கொண்டான் மது.

அவனது சிரிப்பை ரிவர்ஸ் வியூ மிரரில் பார்த்த சித்ராவும் புன்னகையோடு கேட்டாள். ''என்ன மது சிரிக்கிறீங்க...? எங்கப்பாவும் நாய்க்குட்டியும் ஒண்ணுதான்னு நினைச்சுக்கிட்டீங்களா...?''

தூக்கி வாரிப் போட்டது அவனுக்கு. 'யம்மாடி... இந்தப் பெண் ஷைலஜா மாதிரி சாது அல்லை. சுறுசுறு வர்த்தி. மனசுக்குள்ள இருப்பதையெல்லாம் கொக்கி போட்டு வெளியில் கொண்டு வந்துவிடுகிறது; எக்ஸ்ரே கூட இல்லை. அதைவிட இன்னும் ஒருபடி மேலே போய் ஸ்கான் பண்ணிப் பார்த்து விடுகிறது. இதனிடம் ஜாக்கிரதையாகப் பழக வேண்டும்...'

மதுசூதனன் நினைத்துக் கொண்டிருக்கும்போதே சித்ரா மீண்டும் கேட்டாள்.

''என்ன பேசாமல் இருக்கீங்க...? நான் நினைச்சது சரிதானா...?''

''உங்க புத்திசாலித்தனம் என்னைப் பயமுறுத்தறது...''

"ஐயோ...பயப்படற ஆளைப் பாரு..." என்று வாய் விட்டுச் சிரித்ததும் ஷைலஜா குறுக்கிட்டாள்.

"ஏய்...நாம் இப்போ ஸீரியஸாகப் பேசிக்கிட்டிருக்கோம்டி...இது நடுவுல சிரிப்பு எதுக்கு...?"

"அப்படி என்ன நாம் ஸீரியஸாகப் பேசிக்கிட்டிருந்தோம்? ஓ...எங்க அப்பாவோட கேர்ள் ஃபிரெண்ட் பத்தியா? அதுல ஸீரியஸ்நெஸ் என்ன இருக்கு ஷைலு? எங்கப்பா பெரிய பிஸினஸ் மேன். நல்ல இண்டலெக்சுவல். ஹையர் சர்க்கிளோட பழகறவர். அடிக்கடி அமெரிக்கா, ஜிலண்ட், ஜெர்மனி, லண்டன்னு போறவர். அவரோட லெவல் லெண்த்துக்கு எங்கம்மா சரிப்பட்டு வரலை. அவருடைய லெவல் ஆஃப் திங்கிங் வேற. எங்கம்மாவுடையது வேற. அதனால் அப்பாவுக்கு அவருடைய எண்ணங்களையும், கருத்துக்களையும் பகிர்ந்துக்க ஒரு ஆள் தேவைப் பட்டது. துணை தேவைப்பட்டது. எப்போதுமே ஆப்போஸிட் செக்ஸுக்கு அட்ராக்ஷன் அதிகம். ஆணுக்குப் பெண்கிட்டேயும், பெண்ணுக்கு ஆண்கிட்டேயும் ஏற்படுகிற ஈர்ப்பு அதிகம். இண்டலெக்சுவல் லெவல்லகூட இந்த ஈர்ப்பு ஜெயிக்கிறதைப் பார்க்கலாம். பாலசந்தர் ஒரு படம் எடுத்தாரே சிந்து பைரவின்னு. அதனுடைய சக்ஸஸுக்கு எது காரணம்னு நினைக்கிற? மனுஷனுடைய அடிமனசு. உள்ளுக்குள் ஆழத்தில் கிடக்கிற உணர்வுகள். உதாரணத்துக்கு ஒண்ணு சொல்லட்டுமா...? மது இப்போ உன்னைக் காதலிக்கிறார். உயிருக்கு உயிராக நேசிக்கிறார். கல்யாணமும் பண்ணிக்கப் போறார். இதெல்லாம் நிஜம். வாஸ்தவம். ஆனால் அதே சமயத்துல இவர் இன்னொரு பெண்ணை சந்திக்கிறார்னு வச்சிக்க. அவளும் ஒரு சிவில் என்ஜினியர். ஆர்க்கிடெக்ட். இல்லைன்னால் அது சம்பந்தமாக ஆர்வம் உள்ளவள். அதுவும் இல்லைன்னால் பொதுவாக இவருடைய ரசனையும் அவளுடைய ரசனையும் இவருடைய இண்ட்ரஸ்ட்டும், அவளுடைய இண்ட்ரஸ்ட்டும் ஒண்ணாக இருக்குன்னு வச்சிக்க. அவளும் இவரை மாதிரி



வெள்ளை வெளேர்னு பார்க்க அழகா, புத்திசாலியா இவருடைய அழகுக்கு ஏத்த மாதிரி இருக்கான்னு வச்சிக்க. இவர் அவளால் ஈர்க்கப்படுவாரா மாட்டாரா...? இவருடைய மனசு கொஞ்சம் கொஞ்சமா அவள் பக்கம் திரும்புமா திரும்பாதா?"

"ஏய்...என்னடி சொல்ற...?" என்று கோபமும் தவிப்புமாக ஷைலஜா பதற பதட்டமோ, தவிப்போ, கோபமோ இன்றி புன்னகையோடு குறுக்கிட்டான் மது.

"நாம் பேசிக்கிட்டிருந்தது உங்க அப்பாவைப் பற்றி. அதுக்கு நடுவுல என்னை ஏன் இழுக்கறீங்க...?"

"வெல், எங்க அப்பாவோட கேர்ள் ஃபிரெண்டைப் பற்றி பேச நாம் இங்க வரல. சந்தோஷமாக இருக்க வந்தோம். இந்த நாளை அழகாக என்ஜாய் பண்ண வந்தோம். அதை விட்டுட்டு எதுக்காக இந்தப் பேச்செல்லாம் ஸோ லெட் அஸ் என்ஜாய் இட். அந்த கெஸ்ட் ஹவுஸுக்கு எப்படி போகணும் சொல்லுங்க மது...?"

'ஓ.கே' என்றவாறு வழிகாட்டினான் மது.

அதற்குப் பின் காருக்குள் யாரும் பேசாத ஓர் அசாதாரண அமைதி நிலவிற்று. தனித்தனியாக மூன்று பேருமே மூன்று வித எண்ணங்களில் அமிழ்ந்தனர்.

**ஷைலஜா :-** 'ஏய் சித்ரு...நீ எதுக்காக அதெல்லாம் பேசினேன்னு தெரியுது. எங்க வர்றேன்னு எனக்குப் புரியுது. மெதுவாகத் தூண்டில் வீசிப் பார்க்கற உன் தூண்டில்ல மாட்டிக்கிறதுக்கு அவர் ஒண்ணும் வாயைத் திறந்து வச்சிட்டிருக்கிற மீன் இல்லை...'

**மதுசூதனன் :-** 'இந்த சித்ரா எத்தனை வித்தியாசமான பெண்ணாக இருக்கிறாள். பரந்த மனதுடன் ஆழமாகச் சிந்திக்கிறாள். எவ்வளவு பெரிய விஷயத்தையும் அதன் போக்கில் சுலபமாக எடுத்துக்கொள்கிறாள். பெரிய குடும்பத்துப் பெண்ணாக இருக்க வேண்டும். பரம்பரைப்

பணக்காரர்களாக இருக்க வேண்டும். அதிகம் படித்தவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட குடும்பத்திலிருந்து வந்த காரணத்தினால்தான் இந்தப் பெண்ணிற்கு இப்படிப்பட்ட மனது வந்திருக்கிறது. இத்தனைத் தெளிவான எண்ணங்களும், புரிந்துகொள்ளும் தன்மையும் இருக்கிறது. ஒரு சாதாரண நடுத்தர வர்க்கத்துப் பெண்ணாக இருந்தால் இந்த மாதிரி இருந்திருக்கமாட்டாள். பொறாமை, பயம், இயலாமை, துணிவின்மை இத்தனையாலும் அமுத்தப்பட்டிருப்பாள். ஷைலஜா மாதிரி நான்கு பேரின் எட்டு கண்களுக்கும், நாக்கிற்கும் பயந்து செத்துக் கொண்டிருப்பாள். அப்பா, அம்மா, கூடப்பிறந்தவர்கள், வீடு, சுற்றம், தெரு எல்லாருக்கும் அடங்கி. எல்லாவற்றிற்கும் அடங்கி, மனது கூட சின்னதாகி குறுகிப் போயிருக்கும். சுதந்திரமான ஒரு பெண்ணால்தான், ஆண்களிடம் சகஜமாகத் தோழமை உணர்வுடன் பழக முடிந்த பெண்ணால் தான் இந்த மாதிரி யோசிக்க முடியும். அப்பாவின் கேர்ள்பிரெண்ட் பற்றி வெளியில் சொல்ல முடியும். விவாதிக்க முடியும்.

இல்லாவிட்டால் அப்பாவைப் பற்றி குறை சொல்லியிருக்கும். குற்றம் பேசியிருக்கும். அந்தப் பெண்ணைத் தூற்றியிருக்கும். தரக்குறைவாகப் பேசியிருக்கும். அழுது மற்றவர்களின் அனுதாபத்தைப் பெற முயற்சித்திருக்கும் ஒரு சாதாரண குடும்பத்துப் பெண் இதைதான் செய்வாள். ஒரு ஆணோ அல்லது பெண்ணோ குடும்பம், வளர்கின்ற சூழ்நிலை, பழகுகின்ற மனிதர்கள், படிக்கின்ற படிப்பு இவற்றினால்தான் உருவாகிறார்களே தவிர வேறு எதனாலும் இல்லை....'

சித்ரா:- 'இந்த மது எத்தனை நல்லவராக இருக்கிறார் மென்மையாக இதமாகப் பேசுகிறார். இந்திப் பட ஹீரோ மாதிரி நல்ல நிறமாக அழகாக இருக்கிறார். புடவைக்கு அப்பால் பார்க்கிற பார்வை இல்லாமல் கண்ணியமான மனிதராகத் தெரிகிறார். நிஜமாகவே ஷைலஜா கொடுத்து வைத்தவள்தான்.'



கடைசியாக அவள் ஆழமாகப் பெருமூச்சு விட்டபோது மது சொன்னான்,

''இதுதான் கெஸ்ட் ஹவுஸ். உள்ளே போங்கள்...''

## 8

அந்தத் தனியார் விருந்தினர் மாளிகையின், மர நிழலில் காரை நிறுத்தினாள் சித்ரா. 'அப்பாடா...' என்று கீழே இறங்கினாள். ஒரு முறை கைகளை மடக்கி தலைக்கு நேராக உயர்த்தி குனிந்து பாதம் தொட்டாள். அதைப் பார்த்த மது மென்மையான குரலில் கேட்டான்.

''அவ்வளவு தூரம் காரை ஓட்டிக்கிட்டு வந்தது கஷ்டமாக இருக்கு இல்ல... அதுக்குத்தான் நான் ஓட்றேன்னு சொன்னேன்...''

அவனது அந்தக் கரிசனத்தைத் தாங்க முடியாத ஷைலஜா படபடத்தாள்.

''அவதானே பிடிவாதம் பிடிச்சு ஓட்டிக்கிட்டு வந்தா. அப்போ பட வேண்டியதுதான்.''

சித்ரா சிரித்தாள்.

''நான் இப்போ கஷ்டம்னே சொல்லலையே. எனக்காக நீங்க ரெண்டு பேரும் ஏன் சண்டை போட்டுக்கறீங்க...?''

''நாங்க ஒண்ணும் சண்டை போடலை. போடவும் மாட்டோம்.''

அவர்கள் பேச்சில் கலந்து கொள்ளாமல் சுற்றிலும் தெரிந்த மோனமான அழகில் பார்வை பதிய நின்றிருந்த மது திரும்பி அவர்களைப் பார்த்தான். புருவங்கள் மெலிதாகச் சுருங்கின.

''நீங்க ரெண்டு பேரும் உயிர்த் தோழிகள்னு சொல்லிக்கறீங்க. ஆனால் எப்போ பார்த்தாலும் எதுக்காக இப்படி எலியும் பூனையுமாக சண்டை போட்டுக்கறீங்க...?''

'உங்களுக்காகத்தான் என்று சொல்ல நினைத்ததை இருவருமே நுனி நாக்கோடு நிறுத்திக் கொண்டனர். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஓ...சமான். என்ன விஷயம்...?''

''ஒண்ணுமில்லை மிஸ்டர் மது. பிரெண்ட்ஸ்னா இப்படித்தான். சில சமயம் எலி, பூனையாக நிற்போம். மறு நிமிஷமே தோள் மேல கை போட்டுக்குவோம். இதெல்லாம் நல்ல நட்புக்கு சகஜம். சரி வாங்க. உள்ள போவோம். இங்கேயே நின்னு ஏன் பேசிக்கிட்டிருக்கணும்...?''

''ஓ. கே...' என்று நகர முற்பட்ட மதுவை ஷைலஜாவின் குரல் நிறுத்தியது.

''ஒரு நிமிஷம் மது. உள்ளே போறதுக்கு முன்னால் சித்ராவோட அப்பாவும், அவருடைய கேர்ள் பிரெண்ட் கமலாவும் இருக்காங்களான்னு பார்த்துட்டு வந்துடுங்க. தட் வில் பி பெட்டர்.''

சடாரென்று ஷைலஜாவை ஏறிட்ட மதுவின் முகத்தில் கோபம் தெரிந்தது. இங்கிதமற்ற பேச்சா அல்லது விஷமத்தனமான பேச்சா என்பது புரியாமல் தடுமாறினான். 'என்ன ஷைலு இது...? ஏன் அனாவஸ்யமாக அந்தப் பெண்ணின் மனசை நோக அடிக்கிறாய்....?' என்று கேட்க வேண்டும் போலிருந்தது. கேட்டால் ஒரு வேளை ஷைலஜா இன்னமும் சித்ராவின் மனது நோகும்படி பேசக் கூடும்' என்கிற பயத்தில் பேசாமல் இருந்தான். ஆனாலும் அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. சித்ராவின் முகத்தைப் பார்க்கத் தயக்கமாக இருந்தது. மிக மெதுவாகத் திரும்பி அவளைப் பார்த்தபோது அவனது எதிர்பார்ப்பிற்கு மாறாக அவள் முகம் புன்சிரிப்போடு இருந்தது.

''ரொம்ப கரெக்ட். ஆனால் நீ போயிடாதே ஷைலு. அப்புறம் அவர் கமலாவை விட்டுட்டு உன்னைப் பிடிச்சுண்டுடுவார். 'ஹி ஈஸ் ய டேன்ஜ்ஜரஸ் ஓல்டு மேன். உன்னை மாதிரி அழகா, இளமையா, தகதகன்னு தேஜஸா இருந்தாப்



போதும். மகாபலிபுரமோ, மன்ஹாட்டனோ மன்மதன் கிட்டே லீஸ் எடுத்துடுவார்.''

சித்ராவின் சரளமும் இறுக்கத்தைக் குறைத்த விதமும் மதுவின் மனதைத் தொட்டது. 'என்ன பெண் இவள்!' என்கிற ஆச்சரியத்தோடு அவளைப் பார்த்தான். ஒரு வினாடி பார்த்துக் கொண்டே இருந்த போது முகத்தில் ஏதோ ஊறுகிற மாதிரி தோன்ற திரும்பினான். ஷைலஜாவின் கண்கள் அவனது முக பாவத்தை மிகத் துல்லியமாகக் கவனித்துக் கொண்டிருந்தது. சட்டென்று சித்ராவின் மீதிருந்த எண்ணத்தைத் திருப்பியவனாகச் சொன்னான்.

''டோண்ட் ஒர்ரி.... கெஸ்ட் ஹவுஸின் ரூம் சாவி என் கிட்டதான் இருக்கு. அதனால் தைரியமாக உள்ளே போகலாம் வாங்க...''

அறைக் கதவைத் திறந்ததும் குப்பென்று லெமன் ஸ்ப்ரே வாசனை அவர்களை அணைத்தது. கண்களுக்கு இதமான இளம் வைலட் வர்ண கம்பள விரிப்பு பாதங்களை முத்தமிட்டது. ஏதோ ஒரு தேவதை தன் உள்ளங்கைகளை விரித்து அதில் அவர்களின் பாதங்களை ஏந்திக் கொள்வது போன்ற பிரமை ஏற்பட்டது.

'பூமியில் இருக்கும்போதே விண்ணில் பறக்க வேண்டுமென்றால் இங்கே வர வேண்டும். அதுவும் மதுவோடு வர வேண்டும்' ஷைலஜா நினைத்துக் கொண்டாள்.

''வாடி, கெஸ்ட் ஹவுஸ் முழுசையும் சுற்றி பார்க்கலாம். ''வாங்க மிஸ்டர் மது...''

கலங்கரை விளக்கின் வெளிச்சமாக அவர்களின் பார்வை அறையை வட்டமிட்டன. பனிச்சென்ற படுக்கை விரிப்பு. அதில் பூத்திருந்த சின்னச் சின்ன இளம் சிவப்பு ரோஜாக்கள். நிஜமான ரோஜாக்களை முழுசாகத் தூவின மாதிரி. முட்கள் குத்துமா எனத் தொட்டுப் பார்க்க வைத்தன. அதற்கும் உள்ளே போனால் அதே இளம் சிவப்பு குளியல் அறை. இளம் சிவப்பு குளிக்கும் தொட்டி.

இளம் சிவப்பு சலவைக் கற்கள். இளம் சிவப்பு வாஷ்பேஸின். கண்ணாடி ஓர சட்டம், மிதியடி, குளியல் தொட்டியை மறைக்கும் பிளாஸ்டிக் ஸ்க்ரீன், ஸ்க்ரீனின் வளையங்கள் எல்லாமே இளம் சிவப்பு. பவுடர் டப்பா, சோப்பு, டவல் கூட ரோஜா வர்ணம். ஒவ்வொன்றாகப் பார்க்கப் பார்க்க கண்கள் அந்த அழகின் இதத்திலும், மென்மையிலும் விரிந்தன. நெஞ்சை நீவின மாதிரி சுகத்தைத் தந்தது.

''இந்த பாத்ரூமை கட்டியது யார் தெரியுமா ஷைலு...?''—மது கேட்டான்.

''இது என்ன தாஜ்மஹாலா...? ஷாஜஹான்னு சொல்ல....யாரோ ஒரு மேஸ்திரி கட்டியிருப்பார்'' ஷைலஜாவிற்கு பதிலாக சித்ரா பதில் சொன்னாள்.

''இவள் சரியான ஜடம். ரசனையற்ற மடம். காலேஜ் வாசல்ல குல்மொஹரும் சரக்கொன்றையும் பெட்ஷீட் விரித்திருக்கும். நான் பார்த்துக்கிட்டு நின்றால் இவள் சிரிப்பாள், பூவை பார்த்துண்டு நிற்க ஆரம்பிச்சுட்டியான்னு அலட்சியமாகப் பேசுவாள். 'உன் கண்ணுல இந்த மஞ்சள் பெட்ஷீட் படலையான்னு' கேட்டால் 'என் கண்ணுக்கு பெட்ஷீட் எல்லாம் ராத்திரிதான் படும். குளிர்கிற போதுதான் படும்னுவாள். அவ்வளவு ரசனை, இவகிட்ட போய் கேட்டால் இந்த பதில் வராமல் வேற என்ன வரும்...?''

''ஷைலஜா நிஜம் சொன்னாலும் அந்த நேரத்திற்கு அது சற்று மிகைப்படுத்தப்பட்ட நிஜமாக தொனித்தது. எதற்கும் லட்சியம் பண்ணாத சித்ராவின் மனதில் கூட சுருக்கென்று தைத்தது. சிரிப்பும், கிண்டலும், கேலியுமாக இருந்த முகம் வாடிற்று. பேச்சு முதல் முறையாகத் தழைந்து வந்தது.

''ஏய்...இல்லடி...அது தினமும் பார்த்துப் பார்த்து பழக்கப்பட்ட அழகுன்றதால் அதுல மனசு பதியலை. இது அப்படி இல்லைடி....''



''ஓஹோ... அப்படின்னால் புது அழகு... புதுசாகப் பார்க்கிற விஷயம்னால் மனசு பதியும். ரசிக்க முடியும்னு சொல்ல வரியா...?''

''எக்ஸாட்லி... நாலும் ரசிக்க ஆரம்பிச்சிருக்கிறதை நினைச்சு சந்தோஷப்படேன்...''

''குட்...அப்படின்னால் இந்த பாத்ரூமைக் கட்டியது யாராக இருக்கும்னு சொல்லுங்க பார்க்கலாம்'' பேச்சை மெல்ல திசை திருப்பினான் மது.

''நீங்களா...? ஷைலஜா கேட்டாள்.

''ம்ஹூம். கொஞ்சம் யோசிச்சுப் பாரேன்...''

''நான் சொல்லட்டுமா...?''

''சொல்லுங்க...''

''மணிரத்னம், சரியா...?''

''ரொம்ப கரெக்ட். இதைக் கட்டினவர் நினைவெல்லாம் ரோஜா மலர்ந்திருக்கணும் இல்லையா....?''

''அறுவை... ஜோக்குனு எண்ணமா... இல்ல புத்திசாலிங்கிற நினைப்பா...பினாடை இந்த பாத்ரூமிலேயே வச்சிட்டு வாங்க ரெண்டு பேரும். நான் மாடிக்குப் போறேன்.''

இரண்டிரண்டு படிகளாகத் தாவி ஏறினாள் ஷைலஜா. சித்ராவும், மதுவும் கூடப் போனார்கள். மாடியிலும் விசாலமான படுக்கை அறை. அதை ஒட்டி அழகான அழகான பால்கனி.

அங்கு போய் நின்றார்கள். தூரத்துக் கடலும், அலைகளின் சுருளலும், தொடுவானமும், மணற்பரப்பும், சவுக்கு மரங்களும் அவற்றைத் தொட்ட காற்றின் சங்கீதமும் ரம்மியமாக இருந்தன. இயற்கையின் அந்த மோனம், தவம் எதையும் கலைக்கப் பிடிக்காதவர்களாக சிறிது நேரம் பேசாமல் நின்று கொண்டிருந்தார்கள். பின்னர் அந்த

மௌனத்தைக் கலைத்து மதுவைப் பார்த்துக் கேட்டாள் சித்ரா.

"அங்கே போய் கடல்ல குளிக்கலாமா...?"

"ஓ.எஸ். கடல்ல நீந்தணும்னுதான் நான் என் ஸ்விம்மிங் சூட்டைக் கொண்டு வந்திருக்கேன். உங்களுக்கு நீச்சல் தெரியுமா...?"

"ம்ஹூம். தெரியாது."

"இவ்வளவு மார்டனாக இருக்கிற நீங்க ஏன் நீந்தக் கற்றுக்கலை...?"

"நீங்க கற்றுத் தரீங்களா... கற்றுக்கறேன்."

"ஐ டோன்ட் மைண்ட். ஆனால் இங்கேயா கடல்லயா...?"

"ஒய் நாட்...? இன்னிக்கே இங்கேயே ஆரம்பிக்கலாமே...?"

"ஸ்விம்மிங் டிரஸ் வேண்டாமா...?"

"நல்ல காலம். புடவை கட்டாமல் சுடிதார் போட்டுட்டு வந்திருக்கேன். இது போறாதா...?"

"லெட் அஸ் ட்ரை... நீயும் கற்றுக்கறியா ஷைலு....?"

"அது ஒண்ணுதான் பாக்கி...." என்று வெடித்தாள் ஷைலஜா.

"வேணாம். நீ கத்துக்க வேணாம். கரையில் நின்னு வேடிக்கை பாரு..."

"இல்ல. நானும் கூட வரேன்..." என்று புறப்பட்டாள் ஷைலஜா.

'நீச்சல் கத்துக்கணுமாம் நீச்சல்...அதுக்கு மது தானா கிடைச்சார். கற்றுத்தர ஆளில்லை... தூண்டில்... வீசிப் பார்க்கறா.... மது ஜாக்கிரதையாக இருங்க. மாட்டிக் காதீங்க..."



மது நீச்சல் உடைக்கு மாறினான். நைலான் அரை நிக்கர். வெற்று மார்பு. வெள்ளைவெளேறென்ற உடம்பு. கால்களிலும், மார்பிலும் கருகருவென்ற ரோமங்கள். ரோமானியர்களை நினைவு படுத்தினான்.

"போகலாமா....?"?

மூவரும் விருந்தினர் மாளிகையை விட்டு கடலுக்குப் போனார்கள். ஓடி வருகின்ற அலைகளுக்கடியில் மணலில் பாதங்களைப் புதைத்துக் கொண்டு நின்ற போது நிஜமாகவே தங்களை மறந்தார்கள். குழந்தைகளாக மாறிப் போனார்கள். பெரிய அலை சீறிக் கொண்டு வந்த போது சித்ராவும், ஷைலஜாவும் கரையை நோக்கி ஓடினார்கள். சீற்றம் குறைந்து திரும்பும் அலைகளுடன் கடலுக்குள் திரும்பினார்கள்.

அதைப் பார்த்த மது சிரித்தான்.

"ஐயோ இவ்வளவுதானா உங்க தைரியம்...? ஏன் சித்ரா... ஷைலஜாதான் பயந்தாங்கொள்ளி. நீங்க கூடவா...?"

"சீ! சீ... எனக்கென்ன பயம்...? அவள் தனியாக இருப்பாளேன்னு கூடப் போனேன். நானா பயப்படற ஆள்... இப்போ பாருங்க..."

நல்ல பாம்பு படம் எடுக்கிற மாதிரி, ஐந்து தலை நாகம் மாதிரி பெரிதான அலை ஒன்று சீறி ஆர்ப்பரித்துக் கொண்டு வர அதில் தன் தைரியத்தைக் காட்டிக் கொள்ள நின்றாள் சித்ரா. அலை அவளது மார்பைத் தாக்கி முகத்தை நெருங்கினதும் தாங்க இயலாதவளாகத் "மதூ..." என்று கத்தினாள். கால்களைக் கட்டி இழுத்துக் கொண்டு போகிறமாதிரி உணர்ந்தாள்.

அவள் நிலை தடுமாறி சரிவதை உணர்ந்த மது வினாடி நேரத்தில் ஓடி வந்து அவளைக் காப்பாற்றும் பொருட்டு இறுகக் கட்டிக் கொண்டான்.

மார்பு மார்பில் பதிய, முகம் தோளில் சரிய, இடுப்பை வளைத்திருந்த கைகளில் குபீரென்று சூடு பரவ—

மனம் தடுமாறினான் மது. ஒரு பெண்ணின் முழு ஸ்பரிசத்தை முதல் முறையாக அறிந்த அவனது உடல் கடலின் அத்தனைக் குளிர்ச்சியிலும் வெப்பம் கண்டது. அந்த வெப்பம் மனம் முழுதும் பரவத் தொடங்க, அவனையும் மீறி அவனது கைகள் சித்ராவின் இடுப்பை இறுக்கியது.

அவனது உடலோடு மேலும் ஒட்டிக் கொண்ட சித்ரா மெலிதான குரலில் சொன்னாள்.

''மது...மது...ஐ—ஐ லவ் யு...''

அலைகளுக்கிடையில் நடந்த அந்த மாற்றத்தை அறியாத ஷைலஜா கரையில் இருந்தவாறு குரல் கொடுத்தாள்.

''என்ன ஆச்சு...?''

அதற்கு பதில் சொல்கிற வகையில் சித்ராவைத் தோளில் சரித்து மது தூக்கிக் கொண்டு வர மனம் பதறினாள் ஷைலஜா.

''மீன் தூண்டிலில் மாட்டிக் கொண்டு விட்டதா...?'' கேள்விக்கு பதில் தெரியாமல் திண்டாடினான்.

## 9

சித்ராவை மணலில் படுக்கவைக்க மனமில்லை, மதுவிற்கு. கெஸ்ட் ஹவுஸ் வரை தூக்கிக்கொண்டு போய் விடலாம் என்றுதான் நினைத்தான். அவனது உடலை அழுத்திய பெண்மையின் சுகத்திலிருந்து விடுபட மனது மறுத்தது. இதுவரை அறிந்திராத அனுபவித்திராத சுகமாகப்பட்டது.



ஷைலஜாவிடம் சின்னச் சின்னதாய் விஷமங்கள் செய்திருக்கிறான். கைகளால் விளையாடி இருக்கிறான். அதிக பட்சமாய் முத்தமிட்டிருக்கிறானே தவிர, இப்படி உடலோடு உடல் அழுத்தினதில்லை...தோளில் சரிந்து ஒட்டிக் கொண்டதில்லை. காதருகில் உதடுகள் வருட, குரல் குழைந்து உருக, 'ஐ லவ் யு' சொன்னதில்லை.

இதில் புது சுகம். புதுமையான அனுபவம். புது வகையான இன்பம். இதைத்தான் கோவலன், மாதவியிடம் பெற்றிருப்பானோ...? கண்ணகியையும் புறக்கணித்து விட்டு ஓடினதற்கு இதுதான் காரணமோ...? அதெல்லாம் கிடக்கட்டும். தான் இப்போது கோவலனா? அப்படியானால், ஷைலஜா கண்ணகி, சித்ரா மாதவியா? கண்ணகி மாதிரி ஷைலஜாவிற்கு விட்டுக்கொடுக்கிற மனசு வருமா?

ஷைலஜா விட்டுக் கொடுப்பது இருக்கட்டும். முதலில் தான் கோவலனாக மாறிவிட்டோமா...? ஷைலஜாவை நினைத்து இத்தனை நாள் உருகியவன், சடாரென்று இப்போது சித்ராவை நினைப்பது ஏன்? அதுவும் இந்த மாதிரியெல்லாம் தோன்றுவது ஏன்...? ஒருவேளை தான் சித்ராவையும் காதலிக்கத் தொடங்கியிருக்கிறோமோ...? என்ன இது...நம் மனசு நமக்கே பிடிபடாததாக, கட்டுக்கு அடங்காததாக இருக்கிறதே!

அவன் யோசித்துக் கொண்டிருந்தபோதே, ஷைலஜா தன் அழுத்தமான குரலில் அவனைக் கலைத்தாள்.

''இன்னும் எத்தனை நேரம் அவளை இப்படி சுமந்துக் கிட்டே நிற்கப் போறீங்க? சுகமான சுமைன்னு நினைப்பா?''

சட்டென்று தன் நினைவுகளிலிருந்து விடுபட்டு, அவளை ஏறிட்டான்.

''இல்ல ஷைலு—டிரஸ் ஈரமாக இருக்கே. மணல்ல படுக்க வைத்தால், ஈரத்துல மண் ஒட்டிக்குமேன்னு தயங்கறேன்...''

''மண் ஒட்டிக்குமேன்னு தயங்கறீங்களா...? இல்லை, மனசு ஒட்டிக்குமேன்னு தயங்கறீங்களா?''

''ஷை...லா...'' என்றவன், சடாரென்று அவளைத் திரும்பிப் பார்த்தான்.

'பெண்களுக்கு இந்த விஷயத்தில் நிறைய புத்திசாலித் தனத்தைத் தந்திருப்பதாகத் தோன்றியது. ஒரு சாதாரண, அதிக புத்திசாலித்தனமற்ற பெண்கூட கணவனை அல்லது காதலனை மோப்பம் பிடிக்கிறபோது, அதி புத்திசாலியாகி விடுகிறாள். ஆல்ஃப்ரெட் ஹிட்ச்சாக் மாதிரி துப்பறிவதில இறங்குகிறாள். ஜேம்ஸ்பாண்ட் மாதிரி புது விதத்தில் சிந்திக்கிறாள். ஆராய்கிறாள். இந்தத் திறமையை எங்கிருந்துதான் அவர்கள் பெறுகிறார்களோ?'

''என்ன...இன்னும் கூட கீழே இறக்க மனசு வரலியா? பெரிய ஆபத்திலிருந்து அவளைக் காப்பாற்றின நினைப்பா....? எம்.ஜி.ஆர்ன்னு எண்ணம்மா?''

''இல்ல ஷைலு...கெஸ்ட் ஹவுஸுக்குப் போய்...''

''அதுவரை இவளை இப்படியே தூக்கிக்கிட்டு வரப் போறீங்களா....?''

''அவளுக்கு இன்னும் மயக்கம் தெளியலை''

''அவளுக்கா...உங்களுக்கா?''

''நீ ரொம்ப அதிகம் பேசற ஷைலஜா''

''நீங்க அதிகமா நடந்துக்கிட்டதால் தானே நான் அதிகம் பேசவேண்டிவருது...''

அதற்கு மேல் மயங்கின மாதிரி நடிக்க சித்ராவால் முடியவில்லை. கஷ்டமாக இருந்தது. அதனால், மெல்ல கண்களைத் திறந்தாள். கனவிலிருந்து விழித்துக் கொண்ட மாதிரி ஷைலஜாவைப் பார்த்தாள்.

''நான் எங்கே இருக்கேன் ஷைலு...?''



''ம்...அவர் தோள்மேல! எங்கத் தெருவுக்கு, ஒரு குரங்காட்டி வருவான். அவன் இப்படித்தான் தன் குரங்கைத் தூக்கிக்கிட்டு வருவான்...''

அப்போதுதான் மதுவின் தோள் மீது கிடப்பதை உணர்ந்த மாதிரி கீழே இறங்குகிறாள். அதுவும் தன் உடல் முழுவதும் அவன்மீது படுகிற மாதிரி வழுக்கிக்கொண்டு தரையில் இறங்குகிறாள்.

குழந்தை மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு, மதுவைப் பார்த்தாள்.

''ஐயம் ஸாரி மது... என்ன ஆச்சு எனக்கு?''

''ஒண்ணும் ஆகலை. பெரிசாக ஒரு அலை வந்தது....''

''அடிச்சுக்கிட்டுப் போயிட்டேனா?''

''அடிச்சுக்கிட்டுப் போறவளைப் பாரு... ஐந்தடி நாலங்குல உயரம், எழுபது கிலோ வெயிட். நீயா அடிச்சுக்கிட்டுப் போவ...?''

''பின்ன... மது ஏன் என்னைத் தூக்கிக்கிட்டு நின்றார்?''

''சின்னக்குழந்தை பாரு...அலைக்கு பயந்து மயக்கம் போட்டுட்ட. அதனால உன்னைக் கரை சேர்க்க தூக்கிக்கிட்டு வந்தார்.''

''தாங்க்யூ மது... எங்க அம்மாவுக்கும் அப்பாவுக்கும் தெரிந்தால், உங்களை இன்னும் தாங்க்ஸ் பண்ணுவாங்க.''

''ஒரு டமாரம் வாங்கித் தரேன். அடிச்சு ஊர் முழுசும் சொல்லு என்ன...''

''அதுக்கு ஏன் ஷைலு இப்படிக் கோவிச்சுக்கற...?''

''கோபமுமில்லை...ஒண்ணுமில்லை. வாங்க, கெஸ்ட் ஹவுஸிற்குப் போகலாம். இன்னிக்குக் காலைல கிளம்பினக் நேரமே சரியில்லை போல இருக்கு...''

''எல்லாம் சரியாகத்தான் இருக்கு. எதுக்கு ஷைலு கவலைப்படற? நான் தான் சரியாயிட்டேன் இல்ல...?''

''சரி போகலாமா?'' என அவர்களின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான் மது.

மூவரும் நடந்து கெஸ்ட் ஹவுஸிற்குத் திரும்பினார்கள். பேச்சே இல்லாத மவுனத்தில் வந்து சேர்ந்தார்கள். அறைக்குள் நுழைந்ததும் சித்ரா, மதுவிடம் சொன்னாள்.

''நீங்க ரெண்டு பேரும் பேசிக்கிட்டு இருங்க. நான் ஒரே நிமிஷத்தில் குளிச்சு, டிரஸ் மாத்திக்கிட்டு வந்துடறேன். அப்புறம் நீங்க குளிக்கப் போகலாம்...''

அவள் போனதும், ஷைலஜா சடாரென்று திரும்பி மதுவை முறைத்தாள்.

''என்ன ஷைலு, அப்படிப் பார்க்கற?''

''நீங்க செய்தது உங்களுக்கே நல்லா இருக்கா...?''

''நல்லா இல்லாத அளவு நான் என்ன தப்பு செய்துட்டேன் ஷைலு?''

''அவள் என்ன குழந்தையா...தூக்கித் தோள்ல சுமக்கிறதுக்கு?''

மது மென்மையாகப் புன்னகைத்தான்.

''என்ன சிரிப்பு வேண்டிக் கிடக்கிறது...ஒருவேளை அந்தக் காட்சியின் லயிப்பில் சிரிப்பு வருதோ?''

''டோண்ட் பிலிவ்மி ஷைலஜா. நீ சொல்றதைக் கேட்கிறபோது இரண்டு சந்யாசிகள் ஆற்றைக் கடந்த கதைதான் நினைவுக்கு வருது...''

''அது என்ன புதுக் கதை?''



''புதுக் கதை இல்லை. பழைய கதை புத்த சந்யாசிகள் கதை. சொல்றேன் கேளேன்...''

''வேணாம். கதை கேட்கிற மூடில் நான் இல்லை.''

''ம்ஹூம்... நீ அவசியம் தெரிஞ்சுக்கணும். இரண்டு சந்யாசிகள் ஆற்றங்கரைக்கு வந்தார்களாம். ஆற்றின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் போக வேறு மார்க்கம் இல்லாததால், நீந்திக் கடக்க முடிவு செய்தார்களாம். அப்போது ஆற்றின் கரையில் நின்று கொண்டிருந்த ஒரு பெண், மூத்த சந்யாசியிடம், தன்னையும் மறு கரையில் சேர்த்துவிடச் சொல்லி கெஞ்சினாளாம். அந்த சந்யாசியும் அவளைத் தோளில் தூக்கிச் சென்று, மறுகரையில் விட்டுவிட்டு, தன் வழியில் நடக்க ஆரம்பித்தாராம். அப்போது கூட வந்த இளம் சந்யாசி மூத்த சந்யாசியிடம், ''எப்படி ஒரு பெண்ணைத் தொட்டுத் தூக்கலாம்?'' என்று சண்டை போட ஆரம்பித்தாராம். அதற்கு அந்த மூத்த சந்யாசி சொன்னாராம்.

''அப்பனே...நான் அப்போதே அவளைக் கரையில் இறக்கி விட்டு மறந்து போய்விட்டேன். நீதான் இன்னமும் சுமந்து கொண்டு வருகிறாய்...'' என்றாராம். அப்படி இருக்கிறது நீ சொல்வது! நான் அவளை அப்போதே இறக்கிவிட்டு வந்துவிட்டேன். நீதான் இன்னமும் நினைவால் சுமந்து கொண்டிருக்கிறாய்!''

அதற்குப் பின்னரே ஷைலஜாவிற்குள் ஒரு நிம்மதி ஏற்பட்டது. முகம் லேசாக மலர ஆரம்பித்தது. உதட்டோரம் சிரிப்பு ஓடிற்று.

''விட்டு விட்டால் சரி...'' என்று அவனை எல்லையற்ற காதலுடன் ஏறிட்டபோது, பாத்ருமிலிருந்து வெளியில் வந்தாள் சித்ரா. முட்டி தொட்ட, மிடியில் கால்கள் மழமழவென்று மின்ன, தலையைத் துவட்டிக் கொண்டே கேட்டாள்.

''யாரை விட்டுட்டால் சரின்னு சொல்ற ஷைலு... என்னையா? அதுதான் நடக்காது. நீங்க விட்டாலும், நான் உங்களை விடறதாக இல்லையே!'' என்று சிரித்தாள்.

'என்ன பெண் இவள்! எல்லாவற்றிற்கும் சிரிப்புதானா? கோபிக்கவே தெரியாதா இவளுக்கு'

மது நினைத்துக் கொண்டபோதே அவளை ஏறிட்டான்.

''நான் பாட்டிலில் இருந்து வெளிப்பட்ட பூதம் மாதிரி, அத்தனை சுலபமாக உள்ளே போக மாட்டேன். தெரியுதா...அதனால் என்னை உதறலாம்ன்ற நினைப்பில் நேரத்தை வீணாக்காமல், சீக்கிரம் குளிச்சிட்டு வாங்க. கொஞ்ச நேரம் சீட்டு விளையாடலாம் என்ன....''

அவன் குளித்து, உடை மாற்றிக் கொண்டு வெளியில் வந்ததும், சித்ரா கண்ணகலப் பார்த்தாள்.

''என்ன பார்க்கறீங்க....?''

''காலை டிரஸ்ஸைவிட இந்த டிரஸ் உங்களுக்கு ரொம்ப ஜோராப் பொருந்தி இருக்கு. வெள்ளையாக இருக்கிறவங்க லைட் கலர்ல டிரஸ் பண்ணினால் அழகாகத் தான் இருக்கு...''

''தாங்க் யூ...''

''உங்களைப் பார்க்கிறபோது, எனக்கு இந்தி நடிகர் சஞ்சீவ்குமார் ஞாபகம் வருது. அந்த மாதிரி இருக்கீங்க!''

''வயசானவனாகவா?''

''இல்லை, அழகானவனாக...''

இரண்டு பேர் சிரித்ததும், ஷைலஜாவின் வயிற்றில் பெட்ரோல் கொட்டின மாதிரி இறங்கிற்று. இன்னும் இந்த மாதிரி பேசினார்களானால், தீக்குச்சி கிழித்த மாதிரி பற்றிக் கொள்ளும் என்று தோன்ற, பேச்சை மாற்றினாள்.

''சீட்டு விளையாடலாம்னு சொன்னாயே சித்ரா....''



''என்ன விளையாடறது... பிரிட்ஜ் விளையாடணும்னால் நாலுபேர் வேணுமே?''

''எனக்கு சீட்டே விளையாடத் தெரியாது. ஸ்பேடுக்கும் கிளாவருக்கும் வித்தியாசம் தெரியாது...''

''பின்ன எப்படி விளையாடறது? நானும், மதுவும் மட்டுமா?''

''விளையாடுங்க. நான் பார்த்துக்கிட்டிருக்கேன்''

''ம்ஹூம்....நீ வரலேன்னால் விளையாட வேணாம்.'' என்ற சித்ரா, கால் வினாடி யோசித்துக் கேட்டாள்.

''அப்படின்னால் லஞ்ச் சாப்பிடறதுக்கு முன்னால் கொஞ்சம் ஜொய்னகன் குடிக்கலாமா?''

''ஜொய்னகன்னால்...?'' ஷைலஜா புருவம் சுருக்கினாள்,

''பியர். டின்ல வர்ற பியர்...''

''ஐயயோ...நீ பியர்லாம் குடிப்பியா?''

''பியர் தண்ணி மாதிரிடி. பிரான்ஸுக்குப் போனால் தண்ணி வாங்கிக் குடிக்கிறதைவிட பியர் வாங்கிக் குடிக்கிறது இன்னும் சீப்னு எல்லாரும் பியர்தான் குடிப்பாங்க.''

''நீ குடிச்சிருக்கியா சித்ரா?''

''வெறும் பியருக்கே இப்படிப் பதற்ற? பிளாக் லேபிள் விஸ்கிகூட எடுத்துட்டிருக்கேன். வீட்ல பார்ட்டி நடக்கிற போது இதெல்லாம் சகஜம்...''

ஷைலஜா அவளை அருவருப்பாகப் பார்க்க, மது ஆச்சரியமாகப் பார்த்தான்.

## 10

"என்ன மது பார்க்கறீங்க...? நீங்க கூட வெறும் பியருக்கு அலத்துறெ பிறவிதானா...?" சித்ரா கேட்டாள்.

"நோ...நோ...அப்படியில்லை..." என்று தயங்கினான் மது.

"பின்ன என்ன தயக்கம்...? நான் போய் காரிலேருந்து பியர் டின்களைக் கொண்டு வரட்டுமா....?"

மது மெதுவாகத் திரும்பி ஷைலஜாவைப் பார்த்தான். அவளது முகத்தில் தெரிந்த மிரட்சி அவனை உடனே பதில் சொல்லவிடவில்லை.

"என்ன அவளைப் பார்க்கறீங்க...? அவ அனுமதிச்சால்தான் சரி சொல்லுவீங்களா...?"

"இல்லை...அதுக்கில்லை...ஷைலஜாவுக்கு அதெல்லாம் பிடிக்காது. அவளை விட்டுவிட்டு நாம் மட்டும் சாப்பிடறது சரியில்லை. அதனால் யோசிக்கிறேன்."

"என்னை விட்டுட்டு நீங்க மட்டும் சமுத்திரத்துல நீந்தப் போகலையா...? நான் தனியாகக் கரையில் நின்னு உங்களை வேடிக்கை பார்க்கலையா...? அந்த மாதிரி இப்பவும் வேடிக்கை பார்க்கிறேன். அவ்வளவு தானே...?"

ஷைலஜாவின் குரலில் வருத்தமும், வேதனையும் இழையோடின. அது தெரிந்தும் தெரியாத மாதிரி பேசினாள் சித்ரா.

"ஷைலுவே பச்சைக் கொடி காட்டியாச்சு....இன்னும் கூட என்ன தயக்கம் மது...?"

ஆனாலும் மது யோசித்தான். காலையில் மகாபலிபுரம் கிளம்பினதிலிருந்து ஷைலுவை வருத்தப்படுத்துகிற



விஷயமாக நிறைய செய்தாயிற்று. பாவம் ஷைலு. இதற்கு மேலும் அவளை வருத்தப்படுத்தக் கூடாது. மேலும் சித்ராவின் உடம்பு இன்னமும் தோளைவிட்டு இறங்காமல் இருக்கிற பாவனையிலேயே மனம் லயித்துக் கிடக்கிறது. ஷைலஜாவிடம் சந்யாசிக் கதையை உதாரணம் சொல்லிவிட்டானே தவிர சீடனைப்போல் மனசுக்குள் இன்னமும் அவளைச் சுமந்து கொண்டுதான் இருக்கிறான். கள்ளத்தனமாக உணர்வுகள் அதை ரசித்துக் கொண்டுதான் இருக்கிறது. உள் மனது அதிலிருந்து விடுபட மறுக்கிறது. மேல் மனது உள் மனதைக் காட்டிக் கொடுக்காமல் போர்வை போர்த்தி மறைத்திருக்கிறது. இந்த உள் மனது திருட்டுத்தனமாக எட்டி எட்டிப் பார்க்கிறது. இந்த நிலையில் ஏற்கெனவே குரங்காக அலைபாய்கிறபோது கொஞ்சம் சாராயத்தையும் ஊற்றிக் கொடுத்த மாதிரி ஆகிவிடப் போகிறதே என்று பயந்தான். வெறும் பியர்தான் என்றாலும் வேண்டாமென மறுப்பதுதான் உசிதம் என்று தோன்ற வேண்டாமென்று தலையாட்டினான்.

"இல்லை சித்ரா...வேண்டாம். பியர் குடிக்கிறதை இன்னொரு நாள் வச்சுக்கலாம்."

"இன்னொரு நாள்னால் எப்போ...?"

"இந்த மாதிரி மறுபடியும் வரமாட்டோமா என்ன...?"

"நாம் இரண்டு பேர் மட்டும் தனியாகவா?"

அந்தத் தைரியம் துணிச்சல் இரண்டிலும் அயர்ந்து போனான் மது.

'என்ன கேட்கிறாள் இவள்...?'

"என்ன மது அப்படிப் பார்க்கறீங்க...? நான் எதையோ தப்பாகக் கேட்டுட்ட மாதிரியில்ல இருக்கு உங்க பார்வை?"

''பின்ன....நீ கேட்டது தப்பு இல்லாமல், ரொம்ப சரியா...?'' குமுறி முகம் சிவக்கக் கோபத்தில் தடுமாறினாள் ஷைலஜா.

''இதுல என்ன தப்பு இருக்கு? நீ குடிக்கமாட்டேன்ற... உன்னை விட்டுட்டு நாங்க மட்டும் குடிச்சால் சரியாக இருக்காதுன்றது மதுவோட அபிப்பிராயம். இன்னொரு நாளைக்கு வச்சுக்கலாம்னால் அப்போதும் இதே நிலைமை தான். உன்னை விட முடியாது. அதனால்தான் கேட்டேன். நாம் தனியாக வரப்போறோமான்னு...இதுல தப்பு எங்கிருந்து வந்தது?''

''ஓ.கே. இப்போ இதை விடுவோம். வேற ஏதாவது பேசலாம். நான் கெஸ்ட் ஹவுஸ் பையனைக் கூப்பிட்டு மூணு லிம்காவோ, தம்ஸ் அப்போ கொண்டு வரச் சொல்றேன். லெட் அஸ் ஷேர் இட்.''

''இல்லை. வேணாம். நீங்க ரெண்டு பேரும் தம்ஸ் அப் குடியுங்க. லெட் மி ஹேவ் மை ஹொாய்னகன்.'' என்று கார் சாவியை எடுத்துக் கொண்டு வெளியில் போனாள் சித்ரா.

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்த ஷைலஜா, தலையில் அடித்துக் கொண்டாள். அது பிடிக்காத மதுசூதனன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''என்ன ஷைலு...?''

''இதெல்லாம் ஒரு பெண் ஜென்மமா...?''

''நோ ஷைலஜா...இந்த மாதிரியெல்லாம் கமெண்ட் அடிக்கக்கூடாது. அது தப்பு. அதுவும் முதுகுக்குப் பின்னால் குற்றம் குறை சொல்றதை ஏற்றுக்கவே முடியாது. இதுல என்ன தப்பு சொல்லு. உனக்குப் பிடிச்சதை நீ செய்யற மாதிரி அவளுக்குப் பிடிச்சதை அவ செய்யறா... நம்மால் செய்ய முடியாததை, இயலாததை தப்புன்னு சொல்லிடறதா? குறை கண்டுபிடிச்சுடறதா...?''



''நான் அவளைச் சொன்னால் உங்களுக்கு ஏன் பொத்துக்கிட்டு வருது?''

''அவ இல்லை. யாரை நீ இப்படிச் சொல்லியிருந்தாலும் நான் தப்புன்னுதான் சொல்லியிருப்பேன்.''

''பொய். நானும் காலையிலிருந்து பார்த்துக்கிட்டுத் தான் வரேன், அவ பக்கம் பரியறீங்க. அவளுக்காகப் பேசறீங்க. என்னைவிட அவ உங்களுக்கு உசத்தியாகத் தெரியறா...அவளைத் தூக்கித் தோளில் போட்டுக்கிட்டு இறக்க மனசு வராமல் தவிக்கறீங்க. என்ன ஆச்சு உங்களுக்கு...? என்னைவிட அவளைப் பிடிச்சுப் போச்சா...? அவளைக் காதலிச்சிருக்கலாம்னு தோணுறதா...?''

ஒரு விநாடி அயர்ந்து போனான் மது. அவளது பேச்சிலிருந்த நிஜம் நெஞ்சைத் தொட மெதுவாகத் தலை நிமிர்ந்து பார்த்து எதையோ சொல்ல வாயெடுத்தபோது ஒரு பிளாஸ்டிக் பை நிறைய நாலைந்து ஹொாய்னகன் பியர் டப்பாக்களுடன் உள்ளே நுழைந்தாள் சித்ரா.

''ஹியர்...'' என்று அந்தப் பையை டீபாய் மீது வைத்தாள்.

''உங்க தம்ஸ்அப் இன்னும் வரலையா...?'' என்று கேட்டாள்.

''எனக்கும் ஒரு தம்ஸ்அப் ஆர்டர் பண்ணிடுங்க மது. பியர் சில்லுன்னு இல்லை. வந்த உடனே அதை பிரிஃஜ்ஜுல வச்சிருந்தால் இப்போ சாப்பிட சரியாக இருந்திருக்கும். அதைச் செய்யாததால் இப்போ சாப்பிட முடியாது. அதனால் நீங்க சொன்ன மாதிரி இன்னொரு நாள் வச்சுக்கலாம். இப்போ தம்ஸ்அப் குடிக்கலாம்...''

மூன்று குளிர்பானங்கள் வரவழைத்து மூன்று பேரும் குடித்து முடித்தார்கள். மணி பன்னிரெண்டுகூட ஆகாததால் சாப்பிடும் வரை என்ன செய்யலாம் என்று யோசித்தார்கள். செஸ் விளையாடலாம் என்றால் இரண்டு பேர் தான் விளையாட முடியும். சீட்டு விளையாட நான்கு பேர் வேண்டும்.

''பேசாமல் ஓடிப் பிடிச்சு விளையாடலாம்'' என்றாள் சித்ரா.

''குழந்தை மாதிரி தோளில் தூக்கி வச்சிண்டால்'' குழந்தைத்தனமான ஐடியாஸ்தான் வரும்.''

''சரி. நீ சொல்லு என்ன செய்யலாம்னு. பாட்டித் தனமான ஐடியாஸ் வருதா பார்ப்போம்.''

''ப்ளீஸ் ஸ்டாப் இட்'' என்று சலித்துக் கொண்டான் மது.

''ஒரு நாள் சந்தோஷமாக இருந்துட்டுப் போகலாம்னால் எப்போ பார்த்தாலும் ஏன் இப்படி சண்டை போட்டுக்கறீங்க...? நீங்க ரெண்டு பேரும் பிரெண்ட்ஸா, எனிமீஸான்னே தெரியலை... இன்னும் கொஞ்ச நேரம் ஒண்ணா இருக்கப் போறோம். அதுக்குள்ள ஏன் கசந்துக்கணும்...?''

''ஸாரி மது...'' என்று நிஜமாக வருத்தப்பட்டாள் சித்ரா.

''ஏதோ விளையாட்டுக்குப் பேசறதாக நினைச்சுப் பேசிட்டேனே தவிர ஐ டிண்ட் மீன் எனிதிங். அது இவ்வளவு தூரம் உங்களை வருத்தப்படுத்தும்னு நினைக்கலை. ஐயம் ஸாரி.''

இதிலும் மிகத் திறமையாக சித்ரா முந்திக் கொண்டு விட்டதை உணராத ஷைலஜா பேசாமல் இருந்தாள். இன்னதென்று சொல்லத் தெரியாமல் மனதை பாரமாக அழுத்திக் கொண்டிருப்பதை இறக்கி வைக்கத் தெரியாமல் தவித்தாள்.

'எவ்வளவு பெருந்தன்மையாகப் பேசுகிறாள் இவள். மன்னிப்பு கேட்கிறாள். வருத்தப்படுகிறாள். ஆனால் ஷைலஜா வாயைக்கூடத் திறக்காமல் எவ்வளவு அழுத்தமாக இருக்கிறாள்' என்று யோசித்த மது சித்ராவை ஏறிட்டான்.



''எதுவும் விளையாட வேண்டாம். ஆளுக்கு ஒரு பாட்டு பாடலாம்.''

''தட் ஈஸ் எ வெரிகுட் ஐடியா. யார் முதல்ல ஆரம்பிக்கிறது...?''

''லேடீஸ் ஃபர்ஸ்ட். அதனால் உங்க ரெண்டு பேர்ல யாராவது ஆரம்பியுங்க....''

''ஷைலு....நீ பாடேன்...''

''என்ன பாடறது...எனக்கு இப்போ பாடற மூடே இல்லை.''

''என்னைப் பாடச் சொன்னால் என்னப் பாடத் தோணும்னு பாடு.''

''சினிமாப் பாட்டா...?''

''வேணாம்னால் உனக்குத் தெரிஞ்ச கர்நாடக சங்கீதமே பாடு...''

''ம்ஹூம். இவருக்குக் கர்நாடக சங்கீதம் பிடிக்காது.''

''அவருக்குப் பிடிக்கலேன்னால் என்ன ஷைலு. உனக்கு பிடிச்சுத்தானே நீ கத்துண்டிருக்க. பாடேன்.''

''எனக்கும் பிடிச்சிருக்குன்னு கத்துக்கலை. அம்மாவும், அப்பாவும் வற்புறுத்தி கத்துக்க வச்சாங்க. அதனால் கத்துக்கறேன்.''

''சரி. எதுவானாலும், கத்துக்கறே இல்லை...? கத்துக்கிறதே பாடறதுக்குத் தானே...? பாடு.''

''சரி...'' என்ற ஷைலஜா சோபாவை விட்டுக் கீழே இறங்கி தரையில் சப்பணமிட்டு உட்கார்ந்து கொண்டாள். தொண்டையை சரி செய்து கொண்டாள். பின்னர் தொடையில் தாளமிட்டவாறு 'ராமநன்னுப்ரோவரா....' பாட ஆரம்பித்தாள்.

ஆரம்பத்தில் பாட்டில் ஈடுபடாத மனது பின்னர் மெல்ல மெல்ல குழைந்து உருகத் தொடங்கிற்று. குரல்

கரைந்தது. அவளையும் அறியாமல் கண்களில் கண்ணீர் பெருகிற்று. பாட்டு முடிந்தபோது தன்னையும் மீறி குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

''ஏய்...வாட் ஈஸ் திஸ்...'' என்று எழுந்து அருகில் ஓடினான் மது. அவளது தோளில் கை வைத்து உலுக்கினான்.

''என்ன ஷைலு குழந்தை மாதிரி...ஏன் இப்படி அழற...? ம்...?''

அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. உள் மனது வேதனை படத் துவங்கிற்று. 'ஷைலு...ஐ லவ் யு' என்று கத்த வேண்டும் போலிருந்தது. அத்தனையும் பார்வையில் சேர்த்து அவளது முகத்தை நிமிர்த்தினான்.

''என்ன ஷைலு... எதுக்கு இப்போ இந்த அழுகை...?''

''ஒண்ணுமில்லை...'' அவள் அவசரமாக கண்களைத் துடைத்துக் கொண்டபோது சித்ரா எழுந்து வந்தாள்.

'நீ என்கிட்டே வராதே...எனக்கு உன்னைப் பிடிக்கலை...' என்று அடம்பிடிக்கிற குழந்தை மாதிரி கத்தத் தோன்றியது ஷைலஜாவிற்கு. அவளைப் பார்ப்பதைத் தவிர்த்து முகத்தைத் தழைத்துக் கொண்டாள்.

''என்ன திடீர்னு எமோஷனலாயிட்ட ஷைலு...?''

''ஒண்ணுமில்லை. எனக்குப் பிடிக்கலை. இந்த ட்ரிப், மகாபலிபுரம், கெஸ்ட் ஹவுஸ் எதுவுமே பிடிக்கலை. நாம் போகலாம், திரும்பிப் போயிடலாம்.''

''ஓ.கே. வேணாம்னால் போயிடலாம். அதுக்கு ஏன் இப்படி அழற....?''

''நான் அழுவேன். அது என் இஷ்டம். அதைப் பற்றி கேட்க நீ யார்...?''



''மது...கொஞ்சம் போய் கெஸ்ட் ஹவுஸ் பையனைக் கூப்பிட்டு சூடாக ஒரு கப் காபி வரச் சொல்லுங்க. அதைக் குடிச்சால் ஷி வில் பி ஆல்ரைட்''

மது பையனைத் தேடிக்கொண்டு போனதும், சித்ரா தீவிர முகபாவத்துடன் ஷைலஜாவை ஏறிட்டாள்.

''லுக் ஷைலு... பந்தயத்துல நீ தோற்றுப் போயிட்டதா ஒத்துக்க. நான் உன் மது பக்கம்கூட திரும்பலை. என்ன சொல்ற...?''

கண்களைத் துடைத்துக் கொண்டு சடாரென்று நிமிர்ந்த ஷைலஜா.மெதுவான குரலில் கேட்டாள்.

''அப்படியானால் நீ பேசினது, செய்தது எல்லாம் பந்தயத்துக்காகத்தானா?''

''நமக்குள் ஏற்பட்ட ஒப்பந்தத்தையே நீ மறந்துட்டியா?''

''மறக்கலை.''

''பின்ன....அதுக்காக நான் எந்த வழியையும் பிரயோகிப்பேன்னு சொல்லலையா?''

''சொன்ன...''

''இப்போ ஏன் இப்படி அழற...? தோற்றுப் போயிட்டதா ஒத்துக்கறியா?''

''நோ. அது எப்படி முடியும்? மது உன்கிட்ட பேசறார் பழகறார். அலைலை அடிச்சுக்கிட்டுப் போயிடப் போறியேன்னு தூக்கிக் கொண்டு வந்தாரே தவிர வேற என்ன செய்தார்...?''

''போடி பைத்தியம். வேற ஒண்ணும் செய்யலையில்ல. பின்ன எதுக்கு அழற?''

''தெரியலை. அழுகை வர்றது.''

''ஏன் வர்றதுன்னு உன்னை நீயே கேட்டுப் பாரு. எதுக்காக என் மேல கோபப்படற, ஏன் என்னைத் திடீர்னு வெறுக்க ஆரம்பிக்கறேன்னு யோசி.''

''ஏ...ஏ! என்ன சொல்ற...? உன்னை எப்படி என்னால் வெறுக்க முடியும்?''

''பொய் சொல்லாதே. நான் பியர் டின் கொண்டு வரப் போனபோது நீ என்னைத் திட்டலை?''

''நீ கேட்டியா...?''

''ஆமாம்.''

''கோபத்துல எதுவோ சொன்னேன்.''

''ஏன் கோபம் வருது...?''

''அதான் தெரியலைன்னு சொன்னேனில்லை.''

''மது என் பக்கம் திரும்பிடப் போறாரேன்ற பயம். இப்பவே திரும்ப ஆரம்பிச்சுட்டாரோன்னு நீ சந்தேகப் படற..''

''இல்லை. நிச்சயமா இல்லை.''

''அந்த நம்பிக்கை இருக்கு இல்ல. அப்போ ஏன் அழுது அமர்க்களப்படுத்தற. நாம் ரெண்டு பேரும் மனசு ஒப்பத் தானே பந்தயம் வச்சுண்டோம்.. ஒண்ணு நீ தோற்றுப் போயிட்டேன்னு சொல்லணும். இல்ல நான் சொல்லணும். அது வரை மோதித்தானே ஆகணும்?''

''...............''

''என்ன பேசாமல் இருக்கே...? தோற்றுப் போயிட் டேன்னு சொல்லிடு. பேசாமல் பந்தயத்தைக் கைவிட்டு இந்த மகாபலிபுரத்தை விட்டுக் கிளம்பிடலாம், அதுக்கப் புறம் நான் உன் மதுவைப் பார்க்கக்கூட மாட்டேன்.''

''நோ. நீதான் தோற்றுப் போனதா ' ஒத்துக் கோயேன்.''

''ஸாரிம்மா. இதுவரை தோல்வியே காணாதவம்மா நான்.''

''அப்போ நானும் ஒத்துக்கத் தயார் இல்லை.''

''சரி. அப்படின்னா கடைசி வரை பார்த்துடலாம்.''



''பார்க்கலாம்.''

''குட். இந்த மாதிரி அழறதையெல்லாம் நிறுத்திட்டு எழுந்திரு. பீ ஸ்போர்ட்டிவ் ஐலே... எல்லாத்தையும் சிரிச்சுக்கிட்டு சமாளிக்கக் கத்துக்கணும். கோபம், அழுகை இதெல்லாம் யாருக்கு வரும் தெரியுமா? சுயபலம் இல்லாத வங்களுக்கு, தன்னம்பிக்கை இல்லாதவங்களுக்கு, தாழ்வு மனப்பான்மை உள்ளவங்கதான் தங்கள் பலவீனத்தை அழுகையா, கோபமா வெளிப்படுத்துவாங்க. நீ அப்படியா...?''

''இல்லை. எனக்கு பரிபூரண நம்பிக்கை இருக்கு. தைரியம் இருக்கு.''

''அப்படின்னா அழுகை, கோபம், வெறுப்பு எல்லாத் தையும் விட்டுட்டு சாதாரணமாக என்னை எதிர்த்துப் போராடு.''

அதன் பின் மது கொண்டு வந்த காபி குடித்து முகம் கழுவி பளிச்சென்று வெளியில் வந்தாள். மதுவைப் பார்த்து பளீரென்று சிரித்தாள்.

''ஐ'ம் ஆல்ரைட் நௌ...''

அவன் அவள் முகத்தையே பார்த்தானே தவிர, ஒன்றும் சொல்லவில்லை, அதன் பின்னர் சாப்பிட்டு, கடற்கரை வரை ஒரு முறை போய் வந்து, காபி குடித்து கிளம்பிய போது மது கார் ஓட்டினான். ஷைலஜாவைப் பக்கத்தில் உட்காரச் சொன்ன சித்ரா பின் ஸீட்டில் உட்கார்ந்து கொண்டாள். சிறிது தூரம் போனதும் கேட்டாள்.

''ஷைலுவைத் தவிர வேற யாரும் பாடலையே மது.... நான் இப்போது பாடட்டுமா...?''

''ஓ. எஸ். வித் பிளெஷர்....''

''நிஜமாகவே பாடிடுவேன். அப்புறம் நீங்க பயந்துக்கக் கூடாது.''

வாய்விட்டு சிரித்தான் அவன்.

"இல்லை. தைரியமாகப் பாடலாம் சித்ரா. ஷைலஜா வின் பாட்டுக்கே பயப்படாதவன் நான். அதனால் நீங்க பாடலாம்."

"என்னை 'ங்க'ல்லாம் போட்டுக் கூப்பிட்டால் பாட மாட்டேன்.

"சரி, பாடு."

பாட ஆரம்பித்தாள் சித்ரா.

'உன்னை நான் சந்தித்தேன்—நீ
ஆயிரத்தில் ஒருவன்
என்னை நான் கொடுத்தேன்—என்
ஆலயத்தின் இறைவன்'

சடாரென்று தன்னையும் மீறி காரை பிரேக் போட்டு நிறுத்தினான் மது.

பாட்டை நிறுத்திவிட்டு சித்ரா கேட்டாள்.

"என்ன மது....?"

"ஒண்ணுமில்லை, நாய் ஒண்ணு குறுக்கே ஓடித்து. அவ்வளவுதான். நீ பாடு..."

மீண்டும் வண்டி ஓட, சித்ரா பாட துவங்க எந்த நாயும் குறுக்கே ஓடலை. உண்மை ஷைலஜா மனதில் உறைக்க ஷைலஜா கண்களை மூடி கடவுளை மனதில் நிறுத்தினாள்.

'எதற்கு இந்த வீண் பிடிவாதமும், வேண்டாத போட்டியும்...? பேசாமல் விட்டுவிடலாமா?'

## 11

தொலைபேசியைப் பார்த்ததும் கை குறுகுறுத்தது சித்ராவிற்கு. யாருடனாவது பேசு பேசு என்றது. வழக்க மாக இருந்தால் ஷைலஜாவிற்கு போன் பண்ணியிருப்பாள். இருவரும் மணிக்கணக்கில் அறுத்திருப்பார்கள். மகாபலி புரம் போய் வந்ததிலிருந்து இருவருமே அதிகம் பேசுவது



குறைந்து போயிற்று. கலகலப்பாகப் பழகினது நின்று போயிற்று. இணை பிரியாமல் இருந்தது விலகிப் போயிற்று. கல்லூரியில் பார்த்தால்கூட ஹாய் சொல்லிப் பிரிந்தார்கள். பேசப் பிடிக்காமல் நகர்ந்தார்கள். அவர் களது வகுப்பிலிருந்த அத்தனை பேரும் ஆச்சரியப்பட்டார் கள். என்ன விஷயம் என்பதைத் தெரிந்து கொள்கிற ஆர்வத்தில் நுழைந்து பார்க்க முற்பட்டார்கள். முதலில் அவர்கள் ஷைலஜாவிடம் கேட்டிருந்தால் வெகுளித்தன மாக உளறியிருக்கக் கூடும். ஆனால் நல்லகாலமாக சித்ரா இருந்த போது கேட்டதால் பளிச்சென்று பதில் சொன் னாள். மீண்டும் கேட்க இயலாத வகையில் வாயில் அடித்தாள்.

"என்னப்பா...நகமும் சதையும் மாதிரி இருந்தீங்க. உங்களுக்குள் என்ன ஆச்சு...?"

"நாங்க எங்களுக்குள் ஏதோ பெட் வச்சுண்டிருக் கோம். அது எங்க பர்ஸனல் மேட்டர். அதுல யாரும் தலையிட அனுமதி இல்லை. அந்த பெட் முடிகிற வரை இப்படித்தான் இருப்போம். யூ பீப்பிள் ஹேவ் எனி அப்ஜெக்ஷன்?"

கேட்டவர்கள் முற்றுப் புள்ளி வைத்துக் கொண்டார் கள். அதனால் அப்போது ஷைலஜாவிடம் பேச முடியாது என்பதால் வேறு யாரிடம் பேசலாம் என யோசித்தாள். மதுவின் நினைவு வர டைரக்டரி புரட்டி தொலைபேசி எண்களைச் சுழற்றினாள். மறு பக்கம் எடுக்கப்பட்டது.

"ஹலோ...மது இருக்காரா....?"

"நீங்க யார் பேசறது?"

"சித்ரா."

"சித்ரான்னு சொன்னால் தெரியுமா?"

"தெரியும். ரொம்ப நன்னாத் தெரியும்."

"அப்படியா?"

''ஆமாம். நீங்க யாருன்னு நான் தெரிஞ்சுக்க லாமா?''

''மதுவோட அம்மா?''

சட்டென்று குரலைத் தழைத்துக் கொண்டாள் சித்ரா. பவ்வியமாக்கிக் கொண்டாள்.

'''அம்மா நீங்களா...? மன்னிக்கணும். நான் யாரோன்னு நினைச்சு கேள்வி கேட்டுட்டேன்.''

''நீ எங்கேம்மா கேள்வி கேட்ட...? நான்தானே கேட்டேன்...''

''இல்லம்மா...வந்து...''

''உன் பேர் என்ன சொன்ன?''

''சித்ரா.''

''சித்ரா நேர்ல வரியாம்மா?''

''எங்கம்மா?''

''எங்க வீட்டுக்கு.''

''உங்க வீட்டுக்கா...?''

''ஆமாம். நான் கார் அனுப்பி கூட்டுக்கட்டுமா?''

''வேணாம்மா. இங்கேயே கார் இருக்கு.''

''அப்படின்னா கிளம்பி வாயேன்.''

''எதுக்கும்மா...?''

''உன்னை நேராப் பார்க்கிறதுக்குத்தான்.''

''என்னையா?''

''உன்னைப் பத்தி அவன் என்கிட்ட பேசி யிருக்கான்.''

''எப்போம்மா?''

''நீதானே அவன் கூட மகாபலிபுரம் போனது?''



''நானும் என் பிரெண்டும்.''

''அன்னிக்குக் காலைலதான் இதைப் பத்தி பேசி னான். வந்து விவரமா சொல்றேன்னான். இன்னிவரை உட்கார்ந்து பேச நேரம் இல்லை. ஓடிட்டிருக்கான்.''

''அப்படியா...?''

''நீ நேர்ல வாயேன். எல்லாம் பேசிக்கலாம்.''

சித்ரா தயங்கினாள்.

''என்னம்மா தயங்கற...? வீட்ல நான் மட்டும்தாம்மா இருக்கேன்...''

''அவர் இல்லையாம்மா...?''

''யாரைக் கேட்கற...? என் வீட்டுக்காரரையா?''

''இல்லைம்மா...மது...''

''ஓ...உன் வீட்டுக்காரனைக் கேட்கறியா? இல்லை. வெளில போயிருக்கான்.''

அதிர்ந்து போனாள் சித்ரா.

''என்ன பேசாமல் இருக்க? நாளைக்கு வீட்டுக்கார னாகப் போறவன்தானே...?''

''அதில்லைம்மா...வந்து—''

''அதான் வரச் சொல்றேன். நேர்ல வா பேசிக்க லாம்ன்றேன்.''

''சரிம்மா. வரேன்.''

''இப்பவே வரியா?''

''இன்னும் அரைமணி நேரத்துல வரேன்.''

''அரை மணியா? எதுக்கு? நீ எங்க இருக்க?''

''இன்னிக்கு சனிக்கிழமை. காலேஜ் லீவுன்றதால நான் இன்னும் குளிக்கலை. குளிச்சு டிரஸ் பண்ணிண்டு வந்துடறேன்.''

''இங்க சாப்பிடற மாதிரி வா.''

''சரிம்மா.''

யோசித்தவாறே குளிக்கப் போனாள் சித்ரா. மது ஷைலஜாவைப் பற்றி பேச்செடுத்திருக்கிறான். அந்தம்மாள் அதுதான் தான் என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பது புரிந்தது. ஷைலஜாவையும் கூட அழைத்துக் கொண்டு போனால் என்ன என்று தோன்றிற்று. உடனே கார்ட்லெஸ் தொலைபேசியை எடுத்து ஷைலஜாவைக் கூப்பிட்டாள்.

''என்னம்மா சித்ரா எப்படி இருக்க? என்ன உன்னை இந்தப் பக்கம் காணோம்?''

''கொஞ்சம் பிஸியா இருந்துட்டேன். ஷைலு இருக்காளா மாமி...?''

''இருக்கா...குளிச்சுண்டிருக்கா...''

''அட! நான் கூட குளிச்சுண்டுதான் இருக்கேன், என்ன ஒற்றுமை பார்த்தீங்களா எங்களுக்குள்ள...?''

''குளிச்சுண்டிருக்கேன்ற. பின்ன எப்படி டெலிபோன் பேசற?''

''கார்ட்லெஸ் டெலிபோன் மாமி.''

''என்ன?''

''ஒண்ணுமில்ல மாமி. பாத்ரூம்லயும் டெலிபோன் இருக்கு.''

''உனக்கென்ன சொல்லு...? எங்க வேணா டெலி போன் வச்சுக்கலாம்.''

''ஏதோ கடவுள் புண்ணியம் மாமி. சரி நான் இப்போ அங்கே புறப்பட்டு வரேன். ஷைலு கிட்ட சொல்லுங்க.''

''சாப்பிட வரியா?''

''ம்ஹூம், சாப்பாட்டுக்கு அவனையே வெளில கூட்டிட்டுப் போகலாம்னு இருக்கேன்.''



''எங்க?''

''ஒரு பிரெண்டு வீட்டுக்கு.''

''சரி, சொல்றேன்.''

''பத்து நிமிஷத்துல வந்துடறேன். ஷைலஜாவை ரெடியா இருக்கச் சொல்லுங்க.''

''சரி,''

தொலைபேசித் தொடர்பைத் துண்டித்து அவசர மாகக் குளித்து விட்டு வந்தாள். எப்போதும் சுடிதாரிலும் மிடியிலும் இருப்பவள் பதவிசாகப் புடவை உடுத்துக் கொண்டாள். தலை வாரி ரப்பர் வளையமிட்டு நெற்றி யில் கனிசமாகப் பொட்டு வைத்துக் கொண்டாள். அலமாரி திறந்து கையில் ஆறு தங்க வளையல்கள், கழுத்துச் சங்கிலி, காதுத் தோடு எனப் போட்டுக் கொண் டாள். கண்ணாடியில் பார்த்த போது திருப்திகரமாக உணர்ந்தாள். பெண் பார்க்க வந்தால் செய்து கொள்கிற அலங்காரம் மாதிரி இருக்கிறதோ எனவும் கேட்டுக் கொண் டாள். நான் இப்போ ஆண் பார்க்கப் போகிறேனா...? பெண் பார்க்கிற வழக்கத்தை நிறுத்தி விட்டு ஆண் பார்க்கிற வழக்கம் ஏற்பட்டால் எப்படி இருக்கும் என்று தோன்றிற்று. போய் பஜ்ஜி சொஜ்ஜியெல்லாம் சாப்பிட்டு போய் லெட்டர் போடறோம்னு சொல்லி விட்டு வரலாம். கடிதம் எழுதாமலே இருக்கலாம். இவன் கறுப்பு அவன் குள்ளம், இவனுக்குப் பல் எடுப்பாக இருக்கிறது. கொஞ்சம் குண்டாக இருக்கிறான், தொப்பை விழுந்திருக்கிறது. தலை வழுக்கை என்றெல்லாம் சொல்லி தட்டிக் கழிக்க லாம். பழைய காலத்தில் அந்த முறைதானே இருந்தது. சுயம்வரம்ன்ற பேர்லதானே நடந்தது...? இடையில் எப்போது அது மாறிற்று? யார் மாற்றினார்கள்?

யார் மாற்றியிருந்தால் என்ன? மாறிப் போயிருப்பது நிஜம். அந்த நிஜத்தைச் சற்று மாற்றினால் என்ன? மது

ஷைலஜாவைப் பெண் பார்க்க வருவதற்கு பதிலாக அவளைக் கூட்டிக் கொண்டு போய் காட்டலாம்.

தீர்மானித்துக் கொண்டு கீழே இறங்கி வந்தாள். காரை தானே ஓட்டிக் கொண்டு ஷைலஜாவின் வீட்டிற்குப் போனாள். ஷைலஜா குளித்து வெறும் ஹவுஸ் கோட்டில் இருப்பதைப் பார்த்து மெலிதாகக் கோபப்பட்டாள்.

''ஏய்...என்னடி இது...? இப்படி ஹவுஸ் கோட்டில் உட்கார்ந்துட்டிருக்க? அம்மா சொல்லலை...''

''என்ன...?''

''நான் வந்து வெளில கூட்டிட்டுப் போகப் போறேன் தயாரா இருக்கச் சொல்லுங்கன்னு சொன்னேனே...! சொல்லலை...?''

''சொன்னாங்க.''

''பின்ன ஏன் தயாரா இல்லை?''

''நான் வரலை.''

''ஏன்?''

''எனக்குப் பிடிக்கலை.''

''எது பிடிக்கலை? வெளில போறதா? இல்ல என் கூட வர்றதா?''

ஷைலஜா பேசாமலிருந்தாள்.

''சொல்லு எது பிடிக்கலை.''

''.........''

''என்னைப் பிடிக்கலைன்னு நான் எடுத்துக்கலாமா?''

''.........''

''மௌனம் சம்மதத்துக்கு அறிகுறியா?''

''.........''



''என்னைப் பிடிக்காமல் போக நான் என்ன தப்பு செய்திட்டேன்?''

''.........''

''சரி. நீ பேசலைன்னால் உங்க அம்மாவைக் கூப்பிட்டு எல்லாம் சொல்றேன். மதுவைப் பற்றி, நமக்குள் ஏற்பட்ட பந்தயம் பற்றி, நாம் மகாபலிபுரம் போனது பற்றி, நான் நடந்துக்கிட்டது பற்றி எல்லாம் சொல்றேன்.''

''ஏய்...என்ன பிளாக்மெயில் பண்றியா?''

''அதெல்லாம் நிஜம்தானே? பொய் இல்லையே?''

''பிளாக்மெயில் பண்றவன் கூட நிஜத்தை வச்சுத்தான் பண்ணுவான். பொய்யை வச்சு பண்ண முடியாது. பண்ணி னாலும் யாரும் கவலைப்பட மாட்டாங்க.''

''குட். சமயத்துல நீ கூட அழகாப் பேசற...''

''உண்மைக்கு இருக்கிற அழகு என் பேச்சுல வர்றது.''

''சரி போறும்டி விதண்டாவாதம். எழுந்து மட மடன்னு டிரஸ் பண்ணிக்க...அழகா பண்ணிக்க...''

ஷைலஜாவின் கையைப் பற்றி இழுத்தாள் சித்ரா. சடேரென்று கையை உதறிக் கொண்டாள் ஷைலஜா. சித்ராவின் கை அந்த வேகத்தில் மேஜை மீது மோத 'அம்மா...' என்று அலறினாள். அதைக் கேட்ட ஷைலஜா வின் அம்மா அறைக்குள் ஓடி வந்தாள்.

''என்னம்மா...என்ன?''

''ஒண்ணுமில்லம்மா. மேஜைல இடிச்சுகண்டுட் டேன்.''

''எங்க காட்டு? நீவி விடறேன்.''

''அதெல்லாம் வேணாம். ஷைலஜாவை முதல்ல கிளம்பச் சொல்லுங்க. வெளில வர மாட்டேன்னு அடம் பிடிக்கறா...''

''ஏய்...என்னடீ இது...கிளம்பல...''

''ம்ஹும், வேணாம்மா. எனக்குப் பிடிக்கலை.''

''நீ கூப்பிடற போதெல்லாம் உனக்காகக் காரைப் போட்டுண்டு அவ ஓடி வரணும். ஆனால் அவ கூப்பிட்டால் நீ போக மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிறதா? எழுந்து புடவை கட்டிண்டு கிளம்பு. நாறு மனுஷா வேணும்ன்ற எண்ணமே இந்தக் காலத்துப் பசங்களுக்கு இல்லை...''

''எம்மா—இப்போ வெளில வரலைன்னால் மனுஷா வேணாம்னா அர்த்தம்?''

''ப்ரு...கம்மா பேசிண்டே இருக்காதே. சீக்கிரம் கிளம்பற வழியைப் பாரு.''

ஷைலஜா முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு சாதாரண வாயில் புடவையைக் கட்டிக் கொண்டாள்.

''இந்தப் புடவை வேணாம் ஷைலு. நல்லதா ஏதாவது கட்டிக்க...''—சித்ரா சொன்னாள்.

''புடவை கூட உன் இஷ்டத்துக்குத்தான் நான் கட்டிக் கணுமா?''

''உன் நல்லதுக்குத்தான் நான் சொல்றேன்.''

''தெரியுமே. எனக்கு நீ எவ்வளவு நல்லது செய்வேன்னு தெரியும்.''

''சொன்னால் கேளு ஷைலு. பளிச்சுனு அழகா வாடி. இந்த மாதிரி அழுது வடியற புடவை வேணாம்டி—''

''அது என் இஷ்டம். நான் இப்படித்தான் வருவேன். இப்படியே கூட்டிட்டுப் போறதானால் சரி. இல்லைன்னால் விட்டுடு.''

''சரியான வேதாளம்டி நீ. சமயத்துல முருங்கை மரம் ஏறிடற. சரி வா.''

''நாங்க வரோம்மா—''



''எப்போ திரும்பி வருவீங்க?''

''மூணு மணிக்குள்ள வந்துடுவோம். ரொம்ப தாங்ஸ் உங்களுக்கு.''

''எதுக்கு?''

''ஷைலுவைக் கிளப்பி அனுப்பினதற்கு.''

''இதுக்கு என்ன தாங்ஸ். சாப்பிட வர மாட்டீங்களா?''

''ம்ஹூம் மாட்டோம். வரோம்.''

காரில் போனபோது சித்ரா சொன்னாள்,

''நாம் இப்போ எங்கே போறோம் தெரியுமா ஷைலு?''

அவள் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல் வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்த ஷைலஜா கேட்டாள்.

''எங்கே?''

''மதுவின் வீட்டிற்கு.''

''என்ன...?''—பளீரென்று திரும்பினாள் ஷைலஜா.

## 12

அத்தனை சந்தோஷமாக ருக்மிணியம்மாள் இருந்ததே இல்லை. தரையில் கால் பாவாமல் நடந்த தில்லை. நினைவுகள் நிலைகொள்ளாமல் அலைந்த தில்லை. சமையலறைக்கும் வாசலுக்கும் ஓடினதில்லை-செய்கின்ற காரியங்களில், கவனமற்றுப் போனதில்லை.

'அவருக்குத் தெரியப்படுத்தலாமா...?' தொலை பேசி ரிஸீவரை எடுத்து காதில் வைத்துக் கொண்டு யோசித்தாள்.

'இல்லை, வேண்டாம். முதலில் நாம் பார்க்கலாம். நம் மனசுக்குப் பிடித்தபின், கணவரிடம் சொல்லலாம்!' ரிஸீவரை வைத்தாள்.

'நம் மனசுக்குப் பிடிப்பதென்ன...? அதான் மதுவிற்குப் பிடித்தாகி விட்டதே....'

உடனே அவனுக்குச் சொல்ல நினைத்து, அவன் இருக்கக்கூடிய அத்தனை இடங்களுக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டாள். மது கிடைக்கவில்லை. அவன் வருகிறபோது வரட்டும் என்று ரிஸீவரை வைத்தாள். காய்கறி எடுக்க குளிர்சாதனப் பெட்டியைத் திறந்தபோது, 'அந்தப் பெண்ணிற்கு என்ன பிடிக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளாமல் போய்விட்டோமே' என்கிற ஆதங்கம் எழுந்தது. போன் பண்ணிக் கேட்கலாமென்றால், அவளது தொலைபேசி எண்களைக் கேட்டுக் கொள்ளாதது நினைவிற்கு வந்தது. சில சமயம் முன்யோசனை இன்றி நடந்து கொள்வதை உணர்ந்து தன்னைத்தானே கடிந்து கொண்டபோது, வேலைக்காரப் பெண் உள்ளே வந்தது, அவளை ஆச்சரியமாகப் பார்த்துக்கேட்டது.

''என்னம்மா...இன்னிக்கு ஓரே சந்தோஷமாக இருக்கீங்க? மருமக வரப் போறாங்களா என்ன...?''

ஒரு வினாடி அதிர்ந்து போனாள் ருக்மிணியம்மாள்° 'என்ன இந்தப் பெண், குறி சொல்கிற மாதிரி சொல்கிறது...?'

''என்னம்மா அப்படிப் பார்க்கறீங்க?''

''சர்க்கரை டப்பா கொண்டாடி''

''எதுக்குமா...?''

''உன் வாய்க்கு சர்க்கரை அள்ளிப் போடணும்''

''ஏம்மா...?''

''அத்தனை சரியாச் சொல்லிட்ட!''

''நிஜமாகவே பொண்ணு பார்க்கப் போறீங்களாம்மா...?''



''ம்ஹூம்...போகலை. பொண்ணு வீட்டைத் தேடி வருது''

''என்னம்மா சொல்றீங்க!''

''நம்ம சின்னய்யா, ஒரு பொண்ணு மேல ஆசைப் படறாரு. அந்தப் பொண்ணும் இவருமேல் ஆசைப்படுது. அது, இன்னிக்கு இப்போ இங்கே வரேன்னு போன் பண்ணி சொல்லியிருக்கு...''

''அப்படியா! நானும் இருந்து பார்க்கறேம்மா''

''நீ இருந்துதான் ஆகணும். ஏன்னா சாப்பிடக் கூப்பிட்டேன், வரேன்னு சம்மதிச்சிடுத்து. நான் சமைக்கணும், கூட ஒத்தாசைக்கு நீ வேணும்.''

''தாராளமா இருக்கேம்மா...சந்தோஷமா இருக்கேன். முதல்ல பாயசம் வைங்க...''

''என்ன பாயசம்டி வைக்கலாம்?''

''பால் பாயசம் வைங்களேன்''

''சரி, வச்சுடலாம். மேல என்ன செய்யறது?''

''அந்தப் பொண்ணுக்கு என்ன பிடிக்குமோ?''

''அதைக் கேட்டுக்க மறந்துட்டேன்னுதான் நினைச்சுகிட்டிருக்கேன்...''

''பிரிஜ்ல என்ன காய் இருக்குன்னு பாருங்களேம்மா... அதுக்குத் தகுந்த மாதிரி சமைக்கலாம்''

''கோஸ் இருக்கு, வெண்டைக்காய் இருக்கு. உள்ள சின்ன வெங்காயம் இருக்குதில்ல...?''

''வெங்காயச் சாம்பார் வச்சிடலாம்மா?''

''மேல...''

''கோஸ கூட்டும், வெண்டைக்காய் கறியும் செய்யுங்க...''

''சரி, நீ காய் அரிஞ்சுத் தா, நான் போய் குக்கர் வைக்கறேன்''

''எம்மா பொண்ணு பேர் என்ன சொன்னீங்க...''

''சித்ரா''

சமைத்து முடித்து, குளித்து உடை மாற்றி, பூஜை யறையில் குத்து விளக்கேற்றி வைத்து, 'என்னப்பா முருகா...இந்தக் கல்யாணம் என் பிள்ளை மனசுபோல நல்லபடியா நடக்கணும்ப்பா...' என்று வேண்டி நமஸ்கரித்து, வெளியில் வந்தபோது, சித்ராவின் கார் வந்து நின்றது. கார் சத்தம் கேட்டு, அந்தம்மாள் வாசலுக்கு வந்தாள். காரைவிட்டு இறங்கிய சித்ராவைத்தான் முதலில் பார்த்தாள். அவளது உயரமும், நிறமும், முகத்தில் தெரிந்த 'பெரிய இடத்துப் பெண்ணும்' பளீரென்று கண்ணில் அடித்தன. மனசு நிறைந்தது. 'மதுவுக்கேற்ற உயரமும், நிறமுமாக எத்தனை அழகாக இருக்கிறாள்!'

''வாம்மா...'' வாய் நிறைய அழைத்தாள். உதட்டில் திருப்திகரமான புன்னகை ஒடிற்று.

''வணக்கம்மா...'' கைகுவித்த சித்ரா, காரைவிட்டு இறங்காத ஷைலஜாவைப் பார்த்து அதட்டினாள். ''ஏய்...இறங்குடி....''

இன்னமும் அதிர்ச்சியும், பிரமையும் நீங்காதிருந்த ஷைலஜா, சட்டென்று கதவைத் திறந்துகொண்டு வெளி யில் வந்தாள். தன் புடவையையும் காதிலும் கழுத்திலும் ஒன்றும் போட்டுக் கொள்ளாமல் வந்துவிட்ட கோலத் திலும் மனசு சங்கடப்பட்டது.

'கடன்காரி. வீட்டிலேயே மதுவின் வீட்டிற்குப் போகப் போகிறோம் என்றிருந்தால், நன்றாக டிரஸ் பண்ணிக் கொண்டு வந்திருக்கலாம் இல்ல...?'

'அவ சொன்னா....இடத்தைச் சொல்லலையே தவிர, நல்லா டிரஸ் பண்ணிட்டு வரச் சொன்னா...நாம் தான் கேட்கலை'



'ஆனாலும் இந்த சித்ரா, வேணும்னேதான் இப்படிச் செய்திருக்கா. தான் மட்டும் பளிச்சுனு ரொம்ப அழகா டிரஸ் பண்ணிக்கிட்டு, நம்மை ஒரு வேலைக்காரி மாதிரி கூட வரவழைச்சிருக்கா.... அந்தம்மா என்ன நினைச்சுப் பாங்க...ஏதோ ஒரு பொண்ணு கூட வந்திருக்குன்னு இல்ல நினைச்சுப்பாங்க!'

அவள் பயந்த மாதிரிதான் ஆயிற்று, ருக்மிணியம்மாள் ஷைலஜா பக்கம் திரும்பக்கூட இல்லை. பார்வை முழுதும் சித்ராவின் மீதே இருந்தது. அங்கம் அங்கமாய் கவனித்தது. கண், காது, மூக்கு, முகவாய், தலைமுடி, கை, பாதங்கள் என கவனித்தது. ஒரு குறை இல்லை. குரல், பேச்சு எல்லாம் ஸ்பஷ்டமாக வந்ததில் மனசு பரிபூரணமாக நிறைந்து கிடந்தது.

'என் நெஞ்சுல பால் வார்த்தாயப்பா முருகா. இவ்வளவு லட்சணமான பெண்ணாகத் தேடிக் கொடுத் திட்ட. இப்படி இல்லாமல், இந்தக் காலத்துப் பொண் ணுங்க மாதிரி அரைகுறை டிரஸ்ஸும் ஆடம்பரமும், அலட்டலுமாக வந்து நின்றால், என்ன செய்திருக்க முடியும்....? நிதானமும், பணிவும், அழகும், அடக்கமுமாக எப்படி இருக்கிறது இந்தப் பெண்...''

ஓடிப்போய் கணவருக்கு டெலிபோன் செய்து வர வழைக்க வேண்டும்போல் இருந்தது. 'பார்த்தீங்களா நம்ம மதுவோட சாமர்த்தியத்தை...? எத்தனை லட்சணமான பெண்ணாகத் தேடிப் பிடிச்சிருக்கான்....' பெருமை பட்டுக் கொள்ள வேண்டும் போலிருந்தது. ஆனால், தன்னை அடக்கிக் கொண்டாள். மனதின் மகிழ்ச்சியை புன்னகையும், முகமலர்ச்சியுமாக வெளிக்காட்டியவளாகக் கூப்பிட் டாள்.

''வாம்மா....உள்ளே வா...உன் பேர் என்ன சொன்ன? சித்ரா தானே! 'ரொம்ப சந்தோஷம்மா, நீ வந்தது''

''உங்களை சந்திச்சதில் எனக்கும் சந்தோஷம்மா. ஏய் வாடி....'' ஷைலஜாவின் கையைப் பிடித்து இழுத்தான்.

''இவ என் சிநேகிதிம்மா. கிளாஸ் மேட். பேரு ஷைலஜா.''

''அப்படியா...?'' அதிக சுவாரஸ்யமின்றி அவள் முகத்தை ஏறிட்ட ருக்மிணியம்மாள் நினைத்துக் கொண்டாள்.

'இந்தப் பெண்ணும் நன்றாகத்தான் இருக்கிறது. கொஞ்சம் நிறம் மட்டு. என்றாலும், கண்ணும் மூக்கும் நல்ல தீர்மை. இன்னொரு பையன் இருந்திருந்தால், அவனுக்கு இந்தப் பெண்ணை முடித்திருக்கலாம்!''

அதோடு ஷைலஜா. பக்கம் அதிகம் திரும்பவில்லை, சித்ராவைக் கூப்பிட்டு பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு வாஞ்சையாகத் தலை தடவி, வேலைக்காரப் பெண்ணை அழைத்து.

''கிருஷ்ணவேணி, நான் சொல்லலை...அந்தச் சித்ரா இவதான்''

''வணக்கம்மா'' பணிவாய் கை குவித்தது. வாய் நிறையச் சிரித்தது.

''நீ இங்க வேலை செய்யறியா கிருஷ்ணவேணி?''

ஆமாம்மா''

''வீட்டோட இருக்கியா...?''

''ம்ஹூம்....வீட்டுக்குப் போயிடுவேன்.''

''அப்படியா...? இவ என் பிரெண்டு ஷைலஜான்னு பேரு. ரெண்டு பேரும் ஒண்ணா படிக்கிறோம்''

''அப்படிங்களா?''

கிருஷ்ணவேணியின் பார்வை ஷைலஜா பக்கம் திரும்பக் கூட இல்லை. சித்ராவின் முகத்திலேயே பதிந்து கிடந்தது. இமைக்க மறந்த மாதிரி இருந்தது.

''ஏய், என்னடி அப்படிப் பார்க்கற...? போய் ஜூஸ் கொண்டு வாடி.''



ருக்மணியம்மாளின் அதட்டலில் உணர்வு பெற்ற கிருஷ்ணவேணி கேட்டாள்.

''என்ன ஜூஸ்மா சாப்பிடறீங்க? எலுமிச்சையா, தக்காளியா, திராட்சையா?''

''ஜூஸ் எல்லாம் வேணாம். ஒரு டம்ளர் தண்ணி கொடு; போறும். இப்போதான் சாப்பிடப் போறோமில்ல....''

'ஜூஸ் வேணாம். பீயர் கொண்டு வந்து தா. குடிப்பா....'

ஷைலஜா, நாக்கு நுனிவரை வந்து விட்ட வார்த்தைகளை அடக்கிக் கொண்டாள். அதற்குமேல் அங்கு இருக்கப் பிடிக்கவில்லை. எழுந்து ஓடிப் போய்விடலாம் போலிருந்தது. தன்னை அந்த அம்மாவோ கிருஷ்ணவேணியோ ஒரு பொருட்டாக மதிக்காதது தெரிந்தது. பார்வை கூட தன் பக்கம் திரும்பாததைப் புரிந்து கொண்டாள். மனசு சங்கடப்பட்டது. அந்த வேலைக்காரப் பெண்ணைவிட, தான் தாழ்ந்து போய் நிற்பதாக நினைத்தாள்.

'இப்படி என்று தெரிந்திருந்தால், வந்திருக்க வேண்டாம். வரமாட்டேன் என்றவளை, வலுக்கட்டாயமாக அழைத்துக் கொண்டு வந்தாளே...இங்கு என்பது தெரிந்திருந்தால் அழகாக டிரஸ் பண்ணிக்கொண்டு வந்திருக்கலாம். தான் மட்டும் நன்றாக வந்து விட்டு என்னை இப்படிக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறாளே... வழக்கமாகப் போடும் ஜீன்ஸூம் டாப்ஸூம், சுடிதாரும் இன்றி புடவை கட்டி கழுத்திலும் காதுகளிலும் நகைகள் போட்டு, தலையை வாரி, ரப்பர் வளையமிட்டு ஒரு சுற்று பெரிதாகப் பொட்டு வைத்துக் கொண்டு...வேணுமென்றே திட்டமிட்டுச் செய்திருக்கிறாள்.

மதுவிடம் மட்டுமின்றி, அவருடைய அம்மா மனதிலும் இடம் பிடிக்கப் பார்க்கிறாள். கூடாது. அதற்கு இடம்

கொடுக்கக் கூடாது. இங்கு நாம் ஜெயித்தாக வேண்டும். நம்மை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும். மதுவின் அம்மாவின் கவனம், நம் பக்கம் திரும்பும்படி செய்ய வேண்டும் என்ன செய்யலாம்...?''

அவள் யோசித்துக் கொண்டிருந்த போதே, சாத்துக்குடி பழச் சாறு வந்தது. தன் கண்ணாடி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு ஷைலஜா திரும்பிய போது, டீபாயில் இடித்து, கையிலிருந்து நழுவிய டம்ளர் தரையில் விழுந்து, 'சிலிங்' என தெறித்தது. சாத்துக்குடி சாறு தரையில் ஓடத் துவங்கிற்று.

''ஐயயோ...'' என்று ஒரு வினாடி அரண்டு போனாள் ஷைலஜா. ருக்மணியம்மாளின் முகம் மாறியது. மனதிற்குள் வேசாகக் கேறல் விழுந்தது.

'என்ன இது...? இந்தப் பெண் ஏன் கூட வந்தது. சகுனத்தடை மாதிரி கண்ணாடி டம்ளரைப் போட்டு உடைத்திருக்கிறதே... ஒரு பெண்ணுக்கு கவனம் வேண்டாம்...? அந்நிய இடம் என்கிற எண்ணம் வேண்டாம்...? பெயரைப் பாரு, ஷைலஜாவாம் ஷைலஜா... நல்ல பேரு. நல்ல பொண்ணு... பூனைக் குட்டியை மடியில் கட்டிண்ட மாதிரி இதை ஏன் கூட்டிக் கிட்டு வந்திருக்கா சித்ரா...?'

அந்த அம்மாளின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத ஷைலஜா தயங்கித் தயங்கி எழுந்து நின்று சொன்னாள்.

''மன்னிக்கணும்மா...கை தவறிப் போச்சு. டீபாயில் இடிச்சதில நழுவிடுத்து...''

பதில் வரவில்லை. ருக்மிணியம்மாளிடமிருந்து அவள் பக்கம் திரும்பக் கூட இல்லை. சட்டென்று நிலைமையைச் சமாளித்தாள் சித்ரா.

''அதனால் என்ன ஷைலு...? இதுக்கு ஏன் இப்படி ஃபீல் பண்ற...? கண்ணாடி டம்ளரும் ஜாஸ்தாமே...



போனால் போகட்டும். நான் டீபாயில் இடிச்சிருந்தால்கூட இப்படித்தான் உடைஞ்சு போயிருக்கும் இல்லம்மா...?''

''அது சரி.' என்ற ருக்மிணியம்மாளின் வாயிலிருந்து சடாரென்று வார்த்தைகள் வந்துவிட்டன.

''நீ இடிச்சிருக்க மாட்ட சித்ரா. கவனமா இருந்திருப்ப...அதுதான் வித்தியாசம்'' என்றவள், ''கிருஷ்ண வேணி, இந்த இடத்தை சுத்தம் பண்ணு. நாங்க போய் சாப்பாட்டு ரூம்ல உட்கார்றோம். வா, சித்ரா'' என்று எழுந்து கொண்டாள்.

ஷைலஜாவின் கண்கள் கலங்கின. துக்கம் தொண்டையை அடைத்தது. உள்ளே போகாமல், அப்படியே திரும்பிப் போய் விடலாமா என்று நினைத்த போது வாசலில் கார் ஹாரன் சத்தம் கேட்டது. சிவப்பு நிற மாருதி உள்ளே நுழைவது தெரிய, அப்படியே நின்றாள் அவள்!

## 13

வாசல் போர்டிகோவில் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கினான் மது. உற்சாகமாக உதடுகள் குவித்து நுனி நாக்கு மடித்து 'சின்னச் சின்ன ஆசை' பாடலை சீட்டி யடித்துக் கொண்டே உள்ளே நுழைந்தான். வரவேற்பறையில் ஷைலஜாவைப் பார்த்ததும் சடாரென்று அவன் கால்கள் நின்றன. 'இவள் எப்படி இங்கே வந்தாள்...?' என்ற கேள்வியில் கண்கள் அகன்றன. எதிர்பாராமல் அவளை சந்திக்க நேர்ந்த சந்தோஷத்தில் முகம் பளீரிட்டது. மனதிற்குள் சந்தோஷம் எட்டிப் பார்த்தது. அந்த சந்தோஷம் குரலோடும் ஒட்டிக் கொண்டது.

''ஹாய் ஷைலு...நீ எப்படி இங்க வந்த...?''

ஷைலஜா பதில் சொல்லும் முன் ருக்மிணியம்மாள் சாப்பாட்டு அறையிலிருந்து வெளியில் வந்தாள். 'ஏய்

திருடா...இன்றைக்கு நீ கையும்களவுமாக மாட்டிக்கிட்டாய் பார்...' என்கிற முகபாவத்தோடு மகனைப் பார்த்து புன்னகைத்தாள். குறும்பும், கிண்டலும் இழையோட கொக்கி மாட்டி இழுக்கிற மாதிரி கேள்வி கேட்டாள்.

''என்ன மது...இன்னிக்கு சீக்கிரம் வந்துட்ட...?''

அம்மாவைப் பார்த்த மது ஒன்றும் புரியாமல் தடுமாறி னான். 'என்ன நடக்கிறது இந்த வீட்டில்...? திடீரென்று ஷைலஜா நடுக்கூடத்தில் நிற்கிறாள். உள்ளேயிருந்து வருகிற அம்மா கிண்டலும் கேலியுமாகச் சிரிக்கிறாள்... என்ன இதெல்லாம்...? ஒரு வேளை ஷைலஜாவைக் காதலிக்கிற விஷயம் அம்மாவிற்குத் தெரிந்து போயிருக் குமோ...? ஷைலஜாவே சொல்லியிருப்பாளோ...?

ஏதேதோ ஊகித்தவனாக மெதுவாக அம்மாவை ஏறிட்டான்.

''இல்லையேம்மா...தினமும் வர்ற அதே நேரத்துக்குத் தானே வந்திருக்கேன்...''

''ஒரு வேளை சித்ரா வந்திருக்கிறது தெரிஞ்சுத்தான் வந்திருக்கியோன்னு நினைச்சேன்...''

''சித்ராவா...? இவ பேர் சித்ரா இல்லைம்மா, ஷைலஜா.''

''இவளைச் சொல்லலை நான்'' என்று திரும்பிய ருக்மிணியம்மாள் சாப்பாட்டு அறை நோக்கி குரல் கொடுத்தாள்.

''சித்ரா...இங்க வாம்மா...மது வந்திருக்கான் பாரு...''

''இதோ வந்துட்டேம்மா...'' என குரலோடு கூடவே வெளிப்பட்டாள் சித்ரா. மதுவைப் பார்த்து மிக அழகாகத் தலை சாய்த்துப் புன்னகைத்தாள்.

''ஹலோ...''

இன்னமும் ஆச்சரியப்பட்டுப்போன மது கண்ணகலக் கேட்டான்.



''ஹலோ...என்ன இது...முதல்ல பார்த்தால் ஷைலு நிற்கிறா. பின்னாலேயே நீங்க உள்ளே இருந்து வரீங்க. எனக்கு ஒரு சின்ன சந்தேகம்...?''

''என்ன?''

''ஜூனியர் சர்க்கார் நம்ம வீட்டுக்கு வந்திருக் காரா...?''

''இல்லை. சித்ராதான் வந்திருக்கேன்.''

''நீங்களும் சர்க்கார்கிட்ட மேஜிக் கத்துண்டீங்களா?''

''நான்தான் சர்க்காருக்கே சொல்லிக் கொடுத் தேன்.''

''நடக்கிறதையெல்லாம் பார்த்தால் அப்படியும் இருக்கலாம்னு தோணுது. ஆமாம், எப்போ வந்தீங்க...?''

''இப்போதான். கால் மணியாச்சு.''

''எப்படி வந்தீங்க?''

''கார்ல...''

''நான் அதைக் கேட்கல.''

''பின்ன?''

''வீடு எப்படித் தெரிஞ்சுது?''

''அது ஒரு கஷ்டமா...?''

''உங்களுக்கு எதுதான் கஷ்டம்? . பிசி. சர்க்காருக்கே மேஜிக் கத்துக் கொடுத்தவங்களுக்கு என் வீட்டைக் கண்டு பிடிக்கிறதா ஒரு கஷ்டம்?''

''தெரியுறதில்ல. அப்புறம் என்ன கேள்வி?''

''வாபஸ் வாங்கிக்கட்டுமா?''

''எதை?''

''என் கேள்வியை...''

20214
3235350

சித்ரா பதில் சொல்லும் முன் ருக்மிணியம்மாள் குறுக்கிட்டாள்.

''போறும்ப்பா...சீக்கிரம் டிரஸ் மாற்றிக்கிட்டு வா. உனக்காக அவங்க சாப்பிடக் காத்துக்கிட்டிருக்காங்க.''

''யாரும்மா...?''

''என்னப்பா விளையாடற...? சித்ராவும், இந்தப் பொண்ணும்தான்.''

''அவங்க இங்க சாப்பிடப் போறாங்களா?''

''நான் தான் கூப்பிட்டேன்.''

''எப்படிம்மா...?''

''டெலிபோன்ல...''

''டெலிபோன்லயா...உனக்கு எப்படிம்மா அவங்க நம்பர் தெரியும்?''

''உனக்குத் தெரிஞ்சதை நானும் தெரிஞ்சுக்க வேண்டியதுதானே...?''

தான் கோலத்தில் நுழைந்தால் அம்மா தடுக்கினுள் நுழைகிற சாமர்த்தியத்தை ரசித்தவாறு ஷைலஜாவைப் பார்த்தான். முகம் தொய்ந்து போய் தரையைப் பார்த்துக் கொண்டு அவள் நின்றிருப்பதைக் கவனித்தான். அப்போது தான் ஒரு சாதாரணப் புடவையில் மிகவும் சாதாரணமாக அவள் வந்திருப்பது கண்களிற் பட்டது.

'இவள் ஏன் இப்படி வந்திருக்கிறாள்...? வழக்கமாக நன்றாக டிரஸ் பண்ணிக் கொண்டு வருபவள் இன்று ஏன் ஒரு கசங்கிப் போன வாயில் புடவையுடன் வந்து நிற்கிறாள்...? இங்கு வருவது தெரிந்துமா இப்படி வந்திருக்கிறாள்...?

காதும் கழுத்தும் மூளியாய், முகம் கூடப் பளிச்சின்றி... ஏன் இத்தனை சோகமாக அழுது வடிந்து கொண்டு நிற்கிறாள். அம்மா என்ன நினைத்துக் கொள்வாள்...? அம்மாவும் சித்ராவிடம் சகஜமாகப் பேசுகிற மாதிரி



இவளிடம் ஏன் பேசவில்லை...? அதெல்லாம் கிடக்கட்டும். இவளும் சித்ராவும் எப்படி இங்கு வந்தார்கள்...? ஷைலஜாவாக வந்திருக்க மாட்டாள். அத்தனைத் தைரியம் கிடையாது அவளுக்கு. சித்ராதான் அழைத்துக் கொண்டு வந்திருக்க வேண்டும். எப்படி...?''

அதை அறிந்து கொள்கிற ஆர்வத்தில் மடமடவென்று உடைமாற்றிக் கொண்டான். வெள்ளையில் மெலிதான சிவப்புக் கோடுகள் போட்ட பைஜாமாவும் ஜிப்பாவும் மாற்றினான். முகம் கழுவித் துடைத்து வாசனைக்காக செண்ட் அடித்துக் கொண்டான். லேசாகப் பவுடர் பூசி, கண்ணாடியில் பார்த்துக் கொண்ட போது திருப்திகரமாக உணர்ந்தான். பின்னர் படியிறங்கிக் கீழே வந்த போது ஹால் சோபாவில் ஷைலஜா மட்டும் தனியாக உட்கார்ந்திருப்பதைக் கவனித்தான்.

'ஏன் இவள் மட்டும் தனியாக இருக்கிறாள். அம்மாவும், சித்ராவும் எங்கே...?'

ஷைலஜாவை நெருங்கித் தழைந்த குரலில் விசாரித்தான்.

''என்ன ஷைலு நீ மட்டும் இங்கே தனியாக உட்கார்ந்துட்டிருக்க? அவங்க எங்கே?''

ஷைலஜா பதில் சொல்லாமல் கைநீட்டி ஆள்காட்டி விரலால் சாப்பாட்டு அறையைக் காட்டினாள்.

''நீயும் போறதுதானே...?''

' இல்ல...நான் போகல...''

''நான் வரணும்னு காத்துக்கிட்டிருந்தியா...?''

''இல்ல...''

''பின்ன...?''

''நான் கிளம்பறேன்.''

''எங்கே?''

''வீட்டுக்கு?''

"என்ன ஷைலு விளையாடற... அம்மா சாப்பிடக் கூப்பிட்டிருக்காங்க..."

"என்னைக் கூப்பிடலை..."

"கூப்பிடாமல் எப்படி வந்த...?"

"அதனால்தான் போறேன்றேன்..."

"ஐயோ..." என்று தலையில் அடித்துக் கொண்டான் அவன்.

அதைப் பார்த்த அவள் கண்களில் மீண்டும் குபீரென்று நீர் நிறைந்தது. அவர்களோடு சேர்ந்து மதுவும் தன்னை அவமதிப்பதாகத் தோன்ற உடைந்து போய் வாய்விட்டு அழ ஆரம்பித்தாள் அவள். அதைச் சிறிதும் எதிர்பார்க்காத மது அவள் கையைப் பற்றி குரல் தழையக் கேட்டான்.

"ஏய்... என்ன ஷைலு இது...ம்... எதுக்கு இப்போ அழற...?"

அவள் முகத்தை நிமிர்த்தி கண்ணீரைத் துடைக்க மனம் பரபரத்தபோது ருக்மிணியம்மாள் குரல் கொடுத்துக் கொண்டே வரவேற்பறைக்குள் நுழைந்தாள். சட்டென்று ஷைலஜாவின் கையை விட்டு சற்று நகர்ந்து கொண்டான் மது.

"என்னப்பா... என்ன இங்கே... சாப்பிட நேரமாகலை...?"

"இதோ வரேம்மா..." என்றவன் ஷைலஜாவிடம் சொன்னான்.

"வா...ங்...க ஷைலஜா சாப்பிடப் போகலாம்."

அதற்குள் கண்களைத் துடைத்துக் கொண்டு சுதாரித்த ஷைலஜா மெதுவாகப் புன்னகையை வரவழைக்க முயன்றவளாகச் சொன்னாள்.

"நீங்க போய் சாப்பிடுங்க. நான் வீட்டுக்குப் போறேன். அம்மா எனக்காகக் காத்துக்கிட்டிருப்பாங்க..."



"என்ன ஷைலஜா இது...?" சாப்பிடாமலா போறது...?"

ஷைலஜாவை முந்திக்கொண்டு ருக்மிணியம்மாளின் பதில் வந்தது.

"போறேன்னால் விடு மது. வற்புறுத்தாதே. வந்ததிலிருந்தே அந்தப் பொண்ணு சரியாக இல்லை."

நறுக்கென்று பட்டு கத்தரிக்கிற தொனியில் சொல்லி விட்டு ருக்மிணியம்மாள் நகர அதிர்ந்து போய் அப்படியே நின்றுவிட்டான் மதுசூதனன்.

'என்ன இது...? பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கு பிடித்த கதையாக முடிந்து விடப் போகிறது."

வருத்தமும், கவலையுமாக அவன் தலைநிமிர்ந்தபோது விசும்பலும் கேவலுமாக புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு வாசலை நோக்கி ஷைலா ஓடினாள்.

"ஷைலா...நில்லு...ப்ளீஸ் போகாதே..."

அவன் குரலை லட்சியம் செய்யாமல் அவள் வெளியேறியது அவனுக்குள் ஒருவித கோபத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தியது.

'சீ! என்ன பெண் இவள். இப்போது அவளைப் பின் தொடர்வதா, அல்லது சாப்பிடப் போவதா...?"

யோசித்தான் அவன்.

## 14

"என்ன மது...நீங்க சாப்பிட வரப் போறதில்லையா...? எனக்கு ரொம்பப் பசிக்குது..." என்றவாறு வெளியில் வந்த சித்ரா, வரவேற்பறையில் மது மட்டும் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தாள். அவன் முகம்

என்னவோ போலிருப்பதையும் கவனித்தவளாகக் கேட்டாள்.

''ஏன் என்னவோ மாதிரி இருக்கீங்க... ஷைலஜா எங்கே...?''

தன் சிந்தனைகளிலிருந்து விடுபட்டு, அவள் முகத்தை ஏறிட்டான் மது. ஷைலஜா பற்றி அவளிடம் சொல்லலாமா, வேண்டாமா-என்று யோசித்தான். ஆனால், சித்ரா விடுவதாக இல்லை.

''உங்க பிரெண்டைப் பற்றி உங்களுக்குத்தான் தெரிஞ்சிருக்கணும்'' என்றான், சற்றே வெறுப்பு தட்டிய குரலில்.

''எனக்கு வெறும் பிரெண்ட்தான். உங்களுக்குத்தான் பிரெண்டுக்கு மேல. அதனால் உங்களுக்குத்தான் அதிகம் தெரிஞ்சிருக்கணும்.''

''ப்சு...என்னவோ போங்க. என்னால் அவளைப் புரிஞ்சுக்கவே முடியலை.''

''சரி, அப்புறமா அவளைப் புரிஞ்சுக்க முயற்சி செய்யலாம். இப்போ முதல்ல சாப்பிடப் போகலாம். எனக்கு ரொம்பப் பசிக்குது. காலை பிரேக்ஃபாஸ்ட் கூட சாப்பிடலை. இப்போ அவ எங்க சொல்லுங்க...''

''போயிட்டா...''

''எங்க...?''

''வீட்டுக்கு''

''யார் வீட்டுக்கு?''

''அவ வீட்டுக்குத்தான்''

''என்ன மது இது...?''

''என்னன்னு என்னைக் கேட்டால்...? வர வர அவ போக்கே புரியலை எனக்கு''



''சாப்பிடக் கூப்பிட்ட அம்மா என்ன நினைப்பாங்க இப்போ....?''

''அதைப்பற்றி அவள் கவலைப்பட்டதாகத் தெரியலையே...?''

''சரி, எப்படிப் போனா?''

''நடந்து....''

''நடந்தா...? என்ன மது...ரொம்ப தூரம் போயிருக்க மாட்டா...வாங்க போய் கூட்டிக்கிட்டு வரலாம்.''

''அம்மாகிட்ட சொல்லிட்டு வாங்க...''

''என்னப்பா சொல்லணும் என்கிட்ட?'' என்று கேட்டுக்கொண்டே வந்த ருக்மிணியம்மாள், மதுவைப் பார்த்தாள்.

''சாப்பிட்டுக்கிட்டே பேசலாம், வாயேம்ப்பா... நேரமாகலை...?''

''இல்லைம்மா...வந்து....ஷைலஜா...''

''என்ன அந்தப் பொண்ணுக்கு?''

''வீட்டுக்குப் போயிட்டாம்மா...''

''போனாப் போகட்டும், விடு. நீங்க ரெண்டு பேரும் சாப்பிட வாங்க''

''இல்லைம்மா...'' என்று இடையில் குறுக்கிட்டாள் சித்ரா.

''அது அவ்வளவு நல்லா இருக்காதும்மா.... அவளையும் சாப்பிடவான்னு அழைச்சிட்டு வந்திட்டு, நாம் மட்டும் சாப்பிடறது சரியாக இருக்காதும்மா...''

''நாமா சாப்பிட வேணாம், போன்னு அனுப்பினோம்...? அவளாகப் போனால், அதுக்கு நாம என்னம்மா செய்ய முடியும்...? வந்ததுலேர்ந்து அந்தப் பொண்ணு சரியாக நடந்துக்கலை.''

''என்னம்மா செய்தா...?'' மனம் பதறக் கேட்டான் மது.

''அவ ஒண்ணும் செய்யலை மது. டீபாய் இடிச்சு, ஜூஸ் டம்ளர் கீழே விழுந்து உடைஞ்சுடுத்து. அதுல அம்மா அப்செட் ஆகியிருக்காங்க...சென்ட்டி மெண்ட்டலா அஃபெக்ட் ஆகி இருக்காங்க...''

''நல்லா சொன்ன சித்ரா நீ....டீபாய் தானாக நகர்ந்து வந்தா டம்ளர் மேல இடிச்சுது....? வந்த இடத்துல எப்படி நடந்துக்கணும்னு ஒரு பொண்ணுக்குத் தெரியவேணாம்...? நிதானமும், அடக்கமும் வேணாம்...?''

'ரொம்ப அடக்கமான பொண்ணும்மா அவ...' சொல்ல வாயெடுத்து, நிறுத்திக் கொண்டான். அப்போதைய அம்மாவின் மனநிலையில் ஷைலஜாவைப் பற்றி எதைச் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள மாட்டாள் என்பது புரிந்து பேசாமல் இருந்தான்.

ஷைலஜாவை நினைக்க அவனுக்குப் பாவமாக இருந்தது. அதனால் தான் அப்படித் தனியாக நின்று அழுது கொண்டிருந்திருக்கிறாள் என்பது தெரிய வர, வருத்தம் ஏற்பட்டது. அவள் நிலையில் தான் இருந்திருந்தாலும், அதே மாதிரிதான் நடந்து கொண்டிருப்போம் என்பது பிடிபட, மனது சங்கடப்பட்டது. எப்படி அந்த நிலைமையைச் சரி செய்வது என்பது தெரியாமல் மெதுவாக சித்ராவைத் திரும்பிப் பார்த்தான்.

''இப்போ என்ன செய்யலாம் சித்ரா...?''

''வாங்க, போய் அவளைக் கூட்டிக்கிட்டு வரலாம்.''

''ஒண்ணும் வேணாம்'' என்று இடையில் குறுக்கிட்டாள், ருக்மிணியம்மாள்.

''பெரியவன்ற மதிப்பு இல்லாமல், என்கிட்ட சொல்லிக்கிட்டுப் போகணும்ன்ற மரியாதைகூட இல்லாமல் போனவளைப் போய் கூட்டிக்கிட்டு வந்து சாப்பாடு போடணும்ன்ற அவசியம் இல்லை,



நறுக்குத் தெறித்த மாதிரி சொன்ன அம்மாவை சமாதானப்படுத்துகிற வழி தெரியாமல் நின்றான் அவன். அனாவசியமாக அம்மாவிற்கும், ஷைலஜாவிற்கும் இடையில் கசப்பும், வெறுப்பும் ஏற்பட்டு விட்டதற்கு வருத்தமும், வேதனையும் அடைந்தான். எதற்காக ஷைலஜா இன்று இங்கு வந்தாள்? என்று தோன்றிற்று. வராமல் இருந்திருந்தால், மகாபலிபுரம் போவதற்கு முன் அம்மாவிடம் சொன்ன மாதிரி தானே அழைத்து வந்து அழகாக அறிமுகப்படுத்தியிருக்கலாம்...என்னைக் கேட்காமல் யார் இவளை வரச் சொன்னது?...மகாபலிபுரம் கிளம்பியதிலிருந்து ஏன் எல்லாம் தப்பாகப் போகிறது? எதனால் இது? இப்படியொன்று ஒவ்வொன்றும் தவறாகப் போக யார் காரணம்...? அல்லது எது காரணம்...?

''என்னப்பா...இன்னும் எத்தனை நேரம் இப்படியே நின்னுக்கிட்டிருக்கப் போறே...?''

அவன் திரும்பி, மீண்டும் சித்ராவைப் பார்த்தான். 'தயவு செய்து உதவி செய்யேன்' என்று கண்களால் கெஞ்சினான். அதைப் புரிந்துகொண்ட சித்ரா, மெல்ல ருக்மிணியம்மாளை சமாதானப்படுத்துகிற விதமாகப் பேச்சைத் துவக்கினாள்,

''அம்மா...நீங்க பெரியவங்க. வயசுல மட்டுமில்லாமல், அறிவு, அனுபவம் எல்லாவற்றிலும் பெரியவங்க. மன்னிக்கிற மனப்பக்குவமும், பெரிய மனசும் உள்ளவங்க. ஆனால் சின்னவங்க நாங்க செய்யற எல்லாத் தப்பையும் நீங்கதான் மன்னிக்கணும், மறக்கணும்''

தணிந்த மெல்லிய குரலில், உருக்கமாக சித்ரா சொன்னது, அந்த அம்மாளின் மனதைத் தொட்டிருக்க வேண்டும். சட்டென்று தழைந்து போனாள்.

''ஐயோ....நீ என்னம்மா தப்பு செய்த, மன்னிப்புக் கேட்கிறதுக்கு...?''

''நான் செய்தால் என்ன...என் சினேகிதி செய்தால் என்ன...? அவளுக்காக நான் மன்னிப்பு கேட்டுக்கறேன். தயவுசெய்து மன்னிச்சுடுங்க''

''சரி, நான் இப்போ என்ன செய்யணும் சொல்லு...?''

''நாங்க போய் ஷைலஜாவைக் கூட்டிக்கிட்டு வர எங்களை அனுமதிக்கணும்''

''எனக்கு விருப்பமில்லை. அந்தப் பொண்ணை எனக்குக் கொஞ்சம்கூட பிடிக்கலை''

''அம்மா, நீங்க அப்படி சொல்லக் கூடாது. அவ ரொம்ப நல்லப் பொண்ணும்மா. என்னைவிட நல்லவ....''

''நீ அப்படிச் சொல்றது, உன் பெரிய மனசைக் காட்றது''

''சரி, அப்படின்னே வச்சுக்கோங்க. நீங்க தப்பா நினைக்கலேன்னா, நான் ஒன்னு சொல்லலாமா...?''

''நான் உன்னை ஒருபோதும் தப்பாக நினைக்க மாட்டேம்மா. எது வேணும்னாலும் நீ சொல்லலாம்''

''இந்த விஷயத்துல நீங்க, ஷைலஜாவை மன்னிச்சு உங்க பெரிய மனசுக்கு ஏற்ற மாதிரி, கொஞ்சம் விட்டுக் கொடுக்கக் கூடாதாம்மா...?''

சட்டென்று அந்த அம்மாளின் உதட்டில் புன்னகை ஓடிற்று. 'எமகாதகப் பொண்ணும்மா நீ! புத்திசாலிப் பொண்ணு. யார்கிட்ட என்ன பேசணும்னு தெரிஞ்சு வச்சுகட்டிருக்கிற சாமர்த்தியசாலிப் பொண்ணு...' என்கிற மாதிரி சிரித்தாள். பின்னர் அவளருகில் வந்து, தோழமையாய், வாஞ்சையாய் கை பற்றி சொன்னாள்,

''இப்போ உனக்கு என்ன வேணும்...? போய் உன் சினேகிதியைக் கூட்டிக்கிட்டு வரணும், அவ்வளவு தானே...?''

''ஆமாம்மா....''



''சரி, போய் சீக்கிரம் கூட்டிக்கிட்டு வா. காலையி லேயே ஒண்ணும் சாப்பிடலை பசிக்குதுன்னு சொன்ன... செய்து வச்சதெல்லாம் ஆறிப் போகுது. கிருஷ்ணவேணி கிட்ட சொல்லித் திரும்ப சூடு பண்ணி வைக்கச் சொல் றேன். போனேன் வந்தேன்னு வந்து சேரு...''

''ரொம்ப தாங்க்ஸ்மா....'' என்று சந்தோஷம் தாங்காமல், அந்தம்மாளைக் கட்டிக் கொண்டு, கன்னத்தில் முத்தமிட்டாள்.

''வாங்க மது. போகலாம்...'' என்று அவனை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தபோது, மதுசூதனன் பிரமித்துப் போனான். அவளை நினைக்க நினைக்க அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவ்வளவு இறுக்க மான சூழ்நிலையை, அவள் விநாடி நேரத்தில் தளர்த்தின ஆச்சரியம்...நயமாகப் பேசி, அம்மாவின் பிடிவாதத்தை மாற்றின ஆச்சரியம்...மிக இயல்பாக அம்மாவிடம் ஒட்டிக் கொண்டு, அவளை அணைத்து முத்தமிடுகிற அளவிற்கு சர்வ சாதாரணமாக நெருங்கிவிட்ட ஆச்சரியம்...சடா ரென்று இறங்கி பணிந்து பவ்யமாகப் போன ஆச்சரியம்....

அவனிடமிருந்து ஒரு ஆழமான பெருமூச்சு வந்தது.

''இவையெல்லாம் ஷைலஜாவிடம் இருந்திருந்தால், எத்தனை நன்றாக இருக்கும்...''

''உங்க கார்லயே போகலாம் மது...''

அவன் பதில் பேசாமல், தன் சிவப்பு மாருதியை எடுத் தான். ஷைலஜா, கண்களில் படுகிறாளா என்று பார்த்துக் கொண்டே ஓட்டினான். பஸ் ஸ்டாப் வந்தபோது, வேகம் குறைத்தான். சிறிது கூட நிழல் அற்ற அந்த வெறிச்சோடிய தனிமையில், ஷைலஜா பஸ்ஸுக்குக் காத்துக் கொண்டு நிற்பது தெரிய அருகில் போய் காரை நிறுத்தினான்.

முதலில் கீழே இறங்கியது சித்ராதான். அவளைப் பார்த்ததும், முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ஷைலஜா.

அதைப் பொருட்படுத்தாதவளாக அருகில் போய் பேசினாள் சித்ரா.

''ஏய்...என்ன இப்படி சொல்லாமல் வந்துட்ட...?''

ஷைலஜா பேசாமல் இருந்தாள். மது அருகில் வந்தநும், அவனைக்கூட ஏறிடாமல் தலை கவிழ்ந்து நின்றிருந்தாள்.

''என்னடி கோபம் உனக்கு...?''

அதற்கும் அவளிடமிருந்து பதிலில்லை.

''வாடி போகலாம்''

சடாரென்று முகம் உயர்த்தினாள் ஷைலஜா. கண்களில் வெறுப்பும், கோபமும், அழுகையும், ஏமாற்றமும் எட்டிப் பார்த்தன. குரல் கர கரத்தது.

''எங்கே...?''

''மதுவோட வீட்டுக்குத்தான். நீ பாட்டுக்கு சொல்லாமல் வந்திட்ட. அவருடைய அம்மா, சமைச்சு வச்சிட்டு காத்துக்கிட்டிருக்காங்க வா, போகலாம்''

''ம்ஹூம்...நான் வரலை''

''டோண்ட் பி ஸில்லி ஷைலஜா, அம்மா கூட இன்னும் சாப்பிடலை வா, போகலாம்''

அவளை ஒரு வினாடி கூர்மையாய் தீர்க்கமாய் பார்த்த ஷைலஜா, அழுத்தமான குரலில் பிடிவாதம் கலந்து சொன்னாள்.

''நான் வரலைன்னால் வரலைதான்''

''என்ன ஷைலு இது....உனக்காக அம்மா காத்துக் கிட்டிருக்காங்கன்றேன்...''

''ப்ளீஸ் என்னை விட்டுடுங்க. நான் இப்போ அங்க வந்து சாப்பிடற மனநிலையில் இல்லை''

''பிடிவாதம் பிடிக்காத ஷைலஜா. யார்கிட்ட யார் பிடிவாதம் பிடிக்கணும்னு இருக்கு. மதுவோட அம்மாவே



பெரிய மனசு பண்ணி இறங்கி வந்திருக்கிறப்போ, நீ முருங்கை மரத்துல ஏறி உட்கார்றது சரி இல்லை''

சடாரென்று அவள் பக்கம் திரும்பினாள் ஷைலஜா. கண்கள் நெருப்பைக் கொட்டின. வார்த்தைகளில் அனல் வீசின.

''ஆடு நனையறதேன்னு ஓநாய் கவலைப்பட்ட கதை உன்னுடையது. உன்னை எனக்குத் தெரியாது...? அந்தம்மா உன்னைத்தான் சாப்பிடக் கூப்பிட்டாங்களே தவிர, என்னை இல்லை. உன்கிட்டதான் பேசினாங்களே தவிர, என்கிட்டே இல்லை. அதனால் என்னைப் பற்றின கவலையை விட்டுட்டு நீ போய் சாப்பிடு...''

சித்ராவின் முகம் மாறிற்று. தலை குனிந்துபோயிற்று. அதற்குமேல் ஒன்றும் பேசாமல், அவள் அமைதியானது, மதுசூதனனின் கோபத்தைக் கிளப்பிற்று. காது மடல்களும் முகமும் சிவக்க, ஷைலஜாவைப் பார்த்துக் கேட்டான், அவன்,

''நீ இப்போ எங்க கூட வரப்போறியா, இல்லையா...?''

''இல்லை...இல்லை...இல்லை...''

''சரி, வாங்க சித்ரா போகலாம்'' சட்டென்று ஆத்திரத்தோடு திரும்பினான் அவன். சித்ரா, தயங்கிக் கொண்டே ஆரம்பித்தாள்.

''இல்ல மது...இவ இல்லாமல் போனால், அம்மா...''

''நீங்க இப்போ வரப்போறீங்களா இல்லையா...?''

மேலே ஒரு வார்த்தை பேசாமல், சித்ரா அவனைத் தொடர்ந்து காரில் ஏறிக்கொண்டாள்.

சீ! என்ன பெண் இவள்'

வெறுப்பும், வேதனையுமாக முனகிக் கொண்ட மது, காரைக் கிளப்பி அதிவேகத்தில் திருப்பிக் கொண்டு போனான்.

மண்ணும் புழுதியும் பறக்க, அந்த சிவப்பு மாருதி சீறிக்கொண்டு போவதை கையாலாகாத கோபத்துடனும், வெறுப்புடனும், ஏமாற்றத்துடனும் பார்த்துக் கொண்டு நின்றிருந்தாள் ஷைலஜா.

மீண்டும் அவள் கண்கள் கலங்கின.

## 15

"என்ன இது...இவ்வளவு வேகமாகப் போறீங்க...?'' சித்ரா கேட்டாள்.

''ஸாரி.'' சட்டென்று காரின் வேகத்தைக் குறைத்தான் மது. கால் வினாடி அமைதியாக இருந்து, பின்னர் பேசத் துவங்கினான்.

''உங்க தோழி எப்படிப் பேசினா பார்த்தீங்களா...? எவ்வளவு பிடிவாதமாக வர மறுத்திட்டா பாருங்க''

அதற்குப் பதில் வரவில்லை, சித்ராவிடமிருந்து. மதுவின் முகத்தையே மிக மென்மையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன சித்ரா பதில் பேச மாட்டேன்றீங்க?'' என்று திரும்பியவன், அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து கேட்டான்.

''ம்...!'' என்று சட்டென்று கவனம் கலைந்தவளாகச் சொன்னாள் :

''ஒண்ணுமில்லை மது...''

''சொல்லுங்க....என்ன விஷயம்?''

''வாங்க, போங்கன்ற மரியாதையெல்லாம் எனக்கு வேணாம்னு சொன்னேன் இல்ல...?''

''அதை அப்புறம் பேசிக்கலாம். முதல்ல ஏன் அப்படி பார்த்தீங்கன்னு சொல்லுங்க.''

''ஐ ஃபீல் ஸாரி ஃபார் யு மது...''



''ஏன்...?''

''உங்கக்கிட்ட ஷைலு அப்படி நடந்துட்டிருக்க வேணாம்.''

''சில சமயம் உங்களைப் பார்த்தால்கூட, எனக்குப் பாவமாக இருக்கும் சித்ரா....''

''எதுக்கு...?''

''ஷைலுவும், நீங்களும் அவ்வளவு சினேகிதம்னு சொல்லிக்கிறீங்க. எப்பவும் ஒண்ணா இருக்கீங்க. ஆனால் ஷைலு உங்களைக் கொத்திக்குதற்றா. ஆனாலும், நீங்க பேசாமல் இருக்கீங்க. அவகிட்ட மட்டும் எப்படி அவ்வளவு பொறுமையாக இருக்கீங்க?''

''ஷைலுவுக்கு ஏதோ காம்ப்ளெக்ஸ், அதை கோபமாக வெளிக்காட்றா. அவ்வளவுதானே...? மற்றபடி நல்ல பொண்ணு. எனக்கு வேண்டியது நல்ல மனசு. அதுக்காக பேசாமல் இருக்கேன்''

''உங்களுக்கும் நல்ல மனசு. அதை அவ புரிஞ்சுக்கலையே...உங்களைப் பார்க்கிற போதே கோபமா, குரூரமா பார்க்கிறாளே...வெறுப்பும், ஆத்திரமாகப் பேசறாளே...?''

''இப்போ உங்ககிட்ட கூடத்தான் அப்படிப் பேசினா... அதனால உங்ககிட்ட அன்பில்லேன்னு அர்த்தமா....?''

''நான் அப்படிச் சொல்லல சித்ரா...''

''இல்லே உங்களுக்குத்தான் மனசு விட்டுப் போயிடுத்துன்னு சொல்ல முடியுமா?''

''அவ இப்படியே நடந்துக்கிட்டாள்னால், விட்டுப் போனாலும் போயிடும்.''

''நீங்க அப்படிச் சொல்லக் கூடாது மது. உங்களுக்கே தெரியும், ஷைலஜா ஒரு குழந்தைன்னு.''

''அதுக்காக எப்பவும் முரடும், பிடிவாதமும் பிடிக்க கூடாது சித்ரா.''

''அதுவும் சரிதான். நாளைக்கு நான் அவகிட்ட மெதுவா, இதமா சொல்றேன்.''

''வேணாம். இப்போ அம்மாகிட்ட என்ன சொல்லப் போறோம்னு சொல்லுங்க...?''

''என்கிட்ட விட்டுடுங்க. நான் சமாளிச்சுக்கறேன்''

''ஷைலஜா ஏன் வரலைன்னு என்கிட்ட கேட்டாங்கன்னால்?''

''அதுக்கும் நானே பதில் சொல்லிக்கிறேன்.''

வீட்டிற்கு வந்ததும், ருக்மிணியம்மாள் முதலில் கேட்ட கேள்வி அதுதான்.

''எங்கப்பா அந்தப் பொண்ணு...?''

மதுவை முந்திக் கொண்டு, சித்ரா பதில் சொன்னாள்:

''நாங்க பஸ் ஸ்டாப் வரைக்கும் தேடிக்கிட்டு போனோம்மா. அவளைக் காணலை, ஒருவேளை ஆட்டோ பிடிச்சு வீட்டுக்குப் போயிட்டாளோ என்னவோ...?''

''போனாப் போகட்டுமேம்மா. நீ ஏன் அதுக்கு இத்தனை கவலைப்படற...''

''அப்படியில்லேம்மா. வரும்போது என் கூட கார்ல வந்திட்டு, போகும் போது தனியா ஆட்டோ பிடிக்க போனால் நல்லவா இருக்கும்? அவங்கம்மா, என்னை இல்ல தப்பாக நினைப்பாங்க....?''

''நல்லா இருக்கே. அவங்க பொண்ணு செய்த தப்புக்கு உன்னை எதுக்குத் தப்பா நினைக்கணும்...?''

சித்ரா, அதற்குப் பதில் சொல்லத் தெரியாமல் பேசாதிருக்க, அந்த அம்மாளே சொன்னாள் :

''நல்ல வேளை! அந்தப் பெண்ணைக் கூட்டிட்டு வரணும்னு வீடுவரை போகாமல், பஸ் ஸ்டாப்போடு திரும்பினீங்களே... அதுவரை சந்தோஷம். வாங்க சாப்பிடலாம்.''



''நீங்களும் உட்காருங்கம்மா. நான் பரிமாறறேன்'' என்று கிருஷ்ணவேணி சொன்னதும், ருக்மிணியம்மாள் சித்ராவின் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

''சங்கோஜப்படாமல் சாப்பிடும்மா. உன் வீடு மாதிரி நினைச்சுச் சாப்பிடு.''

''வீடு மாதிரி என்னம்மா....அவங்க வீடுதானே...? அவங்க வீடாகத்தானே ஆகப்போகுது...'' என்று சிரித்த கிருஷ்ணவேணியை ஒன்றும் புரியாத மாதிரி ஏறிட்டாள் சித்ரா.

''என் வீடாகப் போகுதா...? என்ன சொல்ற நீ...?''

சட்டென்று சமாளிக்க முயன்றாள் கிருஷ்ணவேணி.

''ஒன்னுமில்லீங்க. பால் பாயாசம் சாப்பிடுங்க. அம்மா, நீங்க வரப் போறீங்கன்னு செய்தாங்க. பாயசம் மட்டுமில்லை. இன்னிக்கு சமையல் மொத்தமும் அம்மா தான் பார்த்துப் பார்த்து அக்கறையா செய்தாங்க...''

''பார்த்தீங்களா சித்ரா... உங்களுக்குன்னு அம்மா எல்லாம் ஸ்பெஷலா செய்திருக்காங்க. எனக்குன்னால் செய்யமாட்டாங்க''

''ஆமாண்டா... உனக்கு ஒண்ணுமே செய்து தராமல், தினமும் பட்டினி போடறேன் இல்ல...?'' செல்லமாய் கோபித்துக் கொண்ட ருக்மிணியம்மாள் தொடர்ந்து கேட்டாள்.

''ஆமாம், அது என்ன இவளைப் போய் நீ வாங்க போங்கன்னு மரியாதையாக கூப்பிடற...? உன்னை விடச் சின்னப் பொண்ணு இல்ல....?''

''சொல்லுங்கம்மா...நான் சொன்னால் கேட்க மாட்டேன்னாரு. நீங்களாவது சொல்லுங்க''

''நீ சொல்லியே கேட்காதவன் நான் சொல்லியாம்மா கேட்பான்?''

''அப்படியில்லேம்மா. சித்ரா, சாதாரண வீட்டுப் பொண்ணு இல்ல. பெரிய இடம். பணக்கார இடம்...''

''சரிடா, அந்தப் பணத் திமிரும், கர்வமும் பிடிச்சிருந்தால், வீட்டுக்கு வந்திருப்பாளா? இத்தனை சகஜமாகப் பழகுவாளா...?''

''கேளுங்கம்மா...நல்லா கேளுங்க. இத்தனை சொன்னதற்கு அப்புறமும் இவர் 'ங்க' போட்டுக் கூப்பிட்டாரு... நான் பேசவேப் போறதில்லை''

''சரி கூப்பிடலை. இன்னைக்கு சாம்பார் ரொம்பப் பிரமாதம்மா''

''சாம்பார் மட்டும்தானா....? கூட்டு, வெண்டைக்காய் கறி, பால், பாயாசம் எல்லாமே எக்ஸலண்ட்''

''எக்ஸலண்ட்டுன்னு சொல்லிட்டு, சரியா சாப்பிட மாட்டேன்ற...? சும்மா கொறிக்கிற...? இந்த லட்சணத்துல காலைல வேற டிபன் சாப்பிடலைன்னு ரொம்ப பசிக்குதுன்னு சொன்ன...''

''பசியெல்லாம் அடங்கிடுத்து. நேரமாயிடுச்சு இல்ல...?''

''எல்லாம் நீ கூட கூட்டிக்கிட்டு வந்த பொண்ணால் ஏற்பட்ட சங்கடம். அது கோவிச்சுக்கிட்டு போகாமல் இருந்து, நீங்க காரைப் போட்டுக்கிட்டு பின்னால் ஓடாமல் இருந்திருந்தால் எப்பவோ சாப்பிட்டு முடிச்சிருக்கலாம்''

'இது என்னடா சங்கடம்' என்று உதட்டைக் கடித்துக் கொண்டாள் சித்ரா. சடாரென்று தலை நிமிர்ந்த மதுசூதனன், அம்மாவை ஏறிட்டான்.

''ஏம்மா உங்களுக்கு அந்த பொண்ணு மேல இவ்வளவு கோவம்?'' என்று நிதானமாகத்தான் கேட்டான்.

உடனே ருக்மிணியம்மாளிடமிருந்து சுறுசுறுவென்று பதில் வந்தது.



ஆமாண்டா கோவம்தான். ஒரு பொண்ணு எப்படி நடக்கணுமோ அப்படி நடக்கணும். அதை விட்டுட்டு, தான் செய்த தப்புக்கு மத்தவங்க மேல் கோபப்படறதும், சொல்லாமல் வீட்டை விட்டு ஓடறதும் நல்லாவா இருக்கு...?''

''அவ என்கிட்ட சொல்லிட்டுத்தாம்மா போனா...''

''உன்கிட்ட என்னடா சொல்றது....? கூட கூட்டிக்கிட்டு வந்தவகிட்ட சொல்லலை...என்கிட்ட சொல்லலை... எங்களையெல்லாம் விட்டுட்டு, உன்கிட்ட என்ன சொல்றது...?''

''அது வந்து....வந்தும்மா...''

''சரி, நீ ஏன் அந்தப் பொண்ணுக்கு இப்படி பரிஞ்சுக்கிட்டு வர...?''

''இல்லம்மா. அவ ரொம்ப நல்லப் பொண்ணும்மா. தங்கமானவ. இன்னிக்குத்தான் முதல் தடவையா இப்படி நடந்துக்கறா...''

''நீ அப்படி எத்தனைத் தரம்டா பார்த்துட்ட, இது தான் முதல் தரம்னு சொல்றதுக்கு...''

''என்கூட ஒரு நாலைஞ்சு தரம் பார்த்திருக்காரும்மா...''

''அவன் போறாதுன்னு நீ வேற பரிஞ்சுக்கிட்டு வா. வேலிக்கு ஓணான் சாட்சி இல்லையா...? நீங்க ரெண்டு பேரும் என்ன சொன்னாலும், எத்தனை சொன்னாலும் எனக்கு அந்தப் பொண்ணைப் பிடிக்கலை. அவ்வளவு தான்!'' பட்டென்று சொல்லி முடித்தாள் ருக்மிணியம்மாள்.

அம்மாவின் மனதில் அவ்வளவு வெறுப்பு ஏற்படும்படி நடந்து கொண்டு விட்ட ஷைலஜாவை நினைத்து மனம் புழுங்கினான் மதுசூதனன். என்ன செய்து அம்மாவின்

மனதை மாற்றலாம் என யோசித்துக் கொண்டிருந்தபோது அந்தச் சூழ்நிலையின் இறுக்கத்தைக் குறைக்க சித்ரா கேட்டாள்.

''ஏம்மா, சாப்பிட்டதும் பகல்ல தூங்கற வழக்கம் உண்டா உங்களுக்கு?''

''ம்ஹூம். பகல்ல படுப்பேனே தவிர தூங்க மாட்டேன்.''

''இப்போ படுக்கப் போறீங்களா?''

''இல்ல. படுக்கணும்னு தோணல, எதுக்கும்மா கேட்கற...?''

''அப்படின்னா நீங்களும், மதுவும் எங்க வீட்டுக்கு வரீங்களா...?''

''இப்பவா...?''

''ஆமாம்''

''என்னடா போகலாமா...?''

''இன்னொரு நாளைக்குப் போகலாம்மா...''

''இன்னொரு நாள் எதுக்கு? அந்தப் பொண்ணு ஆசையா கூப்பிடுது. கிளம்பு' நான் கூப்பிட்டதும், அவ வந்த மாதிரி அவ கூப்பிட்ட உடனே நாமும் போகணும். அதுதான் மரியாதை. நீ போய் டிரஸ் மாற்றிக்கிட்டு வா...'' என்று மகனை அனுப்பினாள்.

''ஒரு நிமிஷம் இரும்மா சித்ரா. நானும் வேற புடவை கட்டிக்கிட்டு வரேன்'' என்று போனாள்.

அடுத்த கால்மணி நேரத்தில் சித்ராவின் கார், அவர்கள் இருவரோடு அந்த வீட்டை விட்டு கிளம்பிற்று. மனதில் சந்தோஷம் பொங்க சித்ராதான் வண்டி ஓட்டினாள்.

அதற்கு நேர்மாறான சஞ்சலத்துடன் வெளியில் பார்த்தவாறு அமைதியாக வந்தான் மது.

# 16

வீட்டு வாசலில் வண்டி நின்றதும் கீழே இறங்கிய ருக்மிணியம்மாள் அசந்து போனாள். வாசல் கதவைத் திறந்து சல்யூட் அடித்த கூர்க்காவும், கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரம் புல்தரை கடந்து வந்த முன் பகுதி நந்தவனமும், அண்ணாந்து பார்க்க வைத்த அரண்மனைக் கட்டிடமும், கார் பார்க்கிங் இடம் மாதிரி வகைக்கு ஒன்றாக வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த கார்களும், ஓடி வந்து கார் கதவைத் திறந்த வேலையற்ற டிரைவர் களும்...

''இது என்ன வீடா...இல்லாவிட்டால் அந்தக் கால ராஜாக்களின் அரண்மனையா....? இப்படிப்பட்ட வீட்டின் சொந்தக்காரப் பெண் இதில் நூறில் ஒரு பங்கு கூட இராத நம் வீட்டுக்கு வந்து சாப்பிட்டிருக்கிறது. எத்தனைப் பணி வாக நடந்து கொண்டிருக்கிறது! எவ்வளவு சாதாரண மாகப் பேசியிருக்கிறது! என்ன இருந்தாலும் பெரிய இடம் பெரிய இடம்தான். பரம்பரைப் பணம் அடக்கம் காட்டும். அர்த்தராத்திரியில் குடை பிடிக்காது....'

ருக்மிணியம்மாளைப் போலவே மதுவும் அசந்து போய் நின்றிருந்தான். சித்ராவை முதல் முதலாகப் பார்த்ததி லிருந்து பணம் பேசுவதைப் புரிந்து கொண்டிருந்தான். ஆனால் அவர்கள் வீட்டு நாய்க்குட்டிகூட பன்னீரில் குளிக்கிற அளவிற்குப் பணக்காரியாக இருப்பாள் என்று நினைக்கவில்லை. இத்தனை பெரிய வீட்டிற்கு சொந்தக் காரியாக இருப்பாள் என எண்ணவில்லை. ஆர். கே. இண் டஸ்ட்ரீஸ் முதலாளியின் மகள் என்பது தெரியுமே தவிர ஆர். கே. இண்டஸட்ரீஸ் இத்தனை பெரிய இடம் என்பது தெரியாது. டி. வி. எஸ். மாதிரி, சிம்சன் மாதிரி, ஆர். கே. இண்டஸ்ட்ரீசும் பெரிய தொழிலாதிக்கக் கோட்டை என்பதைத் தெரிந்து கொண்டான். இத்தனை பெரிய வீடும், ஒரு ஏக்கர் பரப்புள்ள முன் வாசலும், கார் களும் கூர்க்காவும், வேலைக்காரர்களும்...

'சித்ரா...எத்தனைப் பெரிய இடத்துப் பெண் நீ! நீயா உன்னை ஒருமையில் கூப்பிடச் சொல்லி என்னைக் கெஞ்சுவது...? நீயா முகத்தைத் திருப்பி கோபித்துக் கொண்டு போன சினேகிதியின் பின்னால் பஸ் ஸ்டாப் வரை தேடிக் கொண்டு ஓடுவது? அவளிடமிருந்து அத்தனை சிடுசிடுப்புக்களையும் வாங்கிக் கொள்வது...எத்தனை பேசினாள் ஷைலஜா... எவ்வளவு முகத்தால் அடித்தாள். எவ்வளவு சிடுசிடுத்தாள்... நீ இத்தலைப் பெரிய பணக்காரி என்பது நிச்சயம் ஷைலஜாவிற்குத் தெரிந்திருக்கும். அப்படி இருந்துமா அவள் அவ்வாறு நடந்து கொள்கிறாள். அதற்கு எத்தனை தைரியம் வேண்டும். மனோதிடம் வேண்டும். பணத்திற்கு மதிப்பு கொடுக்காத தன்மை வேண்டும், ஷைலஜாவின் அந்த குணம் பெரிதா...? அல்லது இவ்வளவு பெரிய கோடீஸ்வரியாக இருந்தும் எளிமையானவளாக என் வீடு தேடி வந்து சாப்பிட்டு சாதாரணமானவளாக நடந்து கொள்கிறாயோ நீ பெரியவளா....?'

அவனுக்குப் புரியவில்லை. ஷைலஜா, சித்ரா இருவரில் யார் தட்டு உயர்ந்து, யார் தட்டு தாழ்கிறது என்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இருவரில் யார் சிறந்தவர் எனப் பட்டி மன்றம் வைத்தால் யார் ஜெயிப்பார்கள் என எண்ணிப் பார்த்தான். கண்ணகியா, மாதவியா என்கிற பட்டி மன்றங்களைப் போன்றே இதன் முடிவும் இருக்கும் எனத் தோன்றிற்று. தான் நடுவராக இருக்கின்ற பட்சத்தில் என்ன தீர்ப்பு வழங்குவோம் என்பதை நினைத்துப் பார்த்தான்.

சட்டென்று பிரேக் போட்ட மாதிரி மனது நின்றது. இது என்ன சங்கடம் என தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். 'திடீரென்று கண்ணகியின் நினைவும், மாதவியின் நினைவும் வருவானேன்...? ஷைலஜாவையும், சித்ராவையும் அவர்களோடு ஒப்பிடத் தோன்றுவானேன்...? அப்படியானால் நான் யார்...? கோவலனா? கண்ணகியைக்



கைவிட்டு மாதவியின் அழகில் மயங்கியவனா? அதற்குத் தண்டனையாகத் திருட்டுக் குற்றம் சுமத்தப்பெற்று கொலை செய்யப்பட்டேனா...?

''என்ன ஆச்சு மது எங்களுக்கு...? ஏன் திடீர்னு முகமெல்லாம் வேர்த்துக் கொட்டுது?''

சித்ரா அவனைக் கற்பனைகளிலிருந்து மீட்டு நிகழ் காலத்திற்குக் கொண்டு வந்தாள். சடாரென்று உடலைச் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்து அவளைப் பார்த்தான் மது.

''ம்...ஒண்ணுமில்ல...ஏ.சி. கார்லேருந்து வெளில வந்ததால் இருக்கும்...'' என சமாளிக்க முயன்றான்.

''சரி. ஏன் அப்படி வாசல்லியே நின்னுட்டீங்க...? மதுமதி இந்தி சினிமாவில் திலீப்குமாருக்குத் திடீர்னு பூர்வ ஜென்ம ஞாபகம் வந்த மாதிரி உங்களுக்கும் வந்துடுச்சோன்னு நினைச்சேன்.''

சித்ரா சிரித்துக் கொண்டுதான் சொன்னாள். ஆனால் அவனுக்குச் சுரீர் என்றது. என்ன இவள். மனதில் இருப்பதைக் கொக்கி போட்டு இழுக்கிற மாதிரி இப்படிப் பேசுகிறாள் என்று தோன்றிற்று. இந்த மாதிரி இவள் பேசுவது இது இரண்டாவது முறை. மகாபலிபுரம் போனபோது அவளது அப்பாவைப் பற்றின பேச்சு வந்தபோது இப்படித் தான் சொன்னாள்.

'என்ன பாமரேனியன் நாய்க்குட்டியும் எங்க அப்பாவும் ஒண்ணுன்னு நினைக்கிறீங்களா...?' என்று அவன் மனதில் அப்போது நினைத்துக் கொண்டிருந்ததை அப்படியே கேட்டாள். மீண்டும் இப்போதுதான் கோவலன் கண்ணகியைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்க, 'பூர்வ ஜென்ம வாசனையா...?' என்கிறாள்.

'இருக்குமோ...? ஒருவேளை தன் பூர்வஜென்மம் கோவலனாக இருந்திருக்குமோ...?'

மீண்டும் அவன் எண்ணங்களில் அமிழ அவள் மறுபடியும் அவனை வெளியில் கொண்டு வந்தாள்.

''திரும்பவும் பூர்வ ஜென்மத்துக்கே போயாச்சா...?'' என்று சிரித்தாள்.

''உள்ளே வர்ற உத்தேசம் இருக்கா இல்லையா...?''

''இதோ வந்திட்டேன்,'' என்று போர்டிகோவின் படிகளில் ஏறினான். ''வாம்மா...'' என்று அம்மாவையும் கூட அழைத்துக் கொண்டான்.

''உங்க வீட்டு போர்டிகோ படிகளில் ஏறுகிறபோது ராஜாஜி மண்டபத்துல ஏத்ற மாதிரி இருக்கு...'' என்றான்.

''நல்லவேளை. ராஜ்பவன்னு சொல்லலையே...'' என்று சிரித்தாள் சித்ரா.

''நினைக்கிறதைக்கூட என்னால் பெரிசா நினைக்க முடியலை பாருங்க'' என்ற மது, ''ராஜ்பவனுக்கு உங்க வீடு எந்த விதத்திலும் குறைஞ்சதாக இருக்காதுங்க.'' என்பதையும் கூடவே சொன்னான்.

''கொஞ்சம் விட்டால் போறும் வெள்ளை மாளிகைன்னு கூடச் சொல்லிடுவீங்க. உங்ககிட்டே ஜாக்கிரதையாகப் பேசணும்.''

சித்ரா அவர்களை உள்ளே அழைத்துப்போய் வரவேற்பறையில் உட்கார வைத்தாள்.

''ஒரு நிமிஷம் இருங்க. இதோபோய் அம்மா, அப்பாவைக் கூட்டிக்கிட்டு வரேன்.'' என்று உள்ளே போனாள்.

சித்ரா அகன்றதும் அறை முழுதும் கண்களை ஓடவிட்டான். அவள் சொன்ன மாதிரி அந்த வீட்டை வெள்ளை மாளிகை என்று சொன்னால்கூடப் பொருந்தும் என்று தோன்றியது. சுவர் மூலையில் ஒட்டிக் கொண்டிருந்த ஒட்டடையில்கூட பணத்தின் மினுமினுப்பு



தெரிந்தது. அவன் திரும்பி அம்மாவைப் பார்த்தான். அம்மா எவ்வளவு பிரமித்துப் போயிருக்கிறாள் என்பதை உணர்ந்தான். அந்த இடத்திற்குத் தான் தகுதியே இல்லை என்கிற மாதிரி அம்மா சோபாவில் புதைந்து கிடப்பதைப் பார்த்து சொன்னான்.

''சரியா உட்கார்ந்துக்கம்மா.''

நிமிர்ந்து உட்கார முயன்ற ருக்மிணியம்மாள் முதல் முறையாக வாய் திறந்தாள்.

''என்ன வீடுப்பா இது!''

அவன் பதில் சொல்லாமல் புன்னகைத்தான்.

''எப்படிப்பட்ட பொண்ணு! நம்ம வீட்டுக்கு வந்து நான் சமைச்சுப்போட்ட சாதாரண சாப்பாட்டை எப்படி சாப்பிட்டுச்சு!''

அதற்கும் புன்னகைத்தான்.

''நிறைகுடம் தளும்பாதுன்றது சரியாகத்தான் இருக்கு. கூட வந்ததே ஒரு குறைகுடம். இவ கால் தூசு பெறாதது என்ன ஆட்டம் ஆடிச்சு....''

சடாரென்று அவன் முகம் மாறிற்று. ஷைலஜா பற்றி ஏதோ சொல்ல வாயெடுத்தபோது கையில் பைப்பும், நல்ல உயரமும், அந்தக்கால நடிகர் எஸ்.வி. ரங்காராவை நினைவு படுத்துபவராக சித்ராவுடன் அறைக்குள் நுழைந்தார் அவளது அப்பா. சடாரென்று எழுந்து நின்றான் மது. கூடவே ருக்மிணியம்மாளும் எழுந்து கொண்டாள்.

''அடேடே... உட்காருங்கம்மா...ஏன் எழுந்து நிற்கறீங்க...'' என்று மதுவின் அருகில் வந்தார்.

''எங்கப்பா...'' என்ற சித்ரா அவர் பக்கம் திரும்பினாள். அவர் அவளைக் கையமர்த்தி தானே பேசினார். ''இவர் மது. இவங்க இவரோட அம்மா ருக்மிணியம்மாள்,'' அதைத்தானே சொல்ல வந்த....? நானே சொல்லிட்டேன். சரியா...? என்ன பார்க்கற...? என் பிரெண்ட் ஒருத்தர் வந்திருக்கார் உங்களை அறிமுகப்

படுத்தணும் வாங்கப்பான்னுதானே கூட்டிக்கிட்டு வந்தோம். அப்பாவுக்கு எப்படிப் பேரெல்லாம் தெரிஞ்சிருக்குன்னு ஆச்சரியமாக இருக்கா...? என்ன அப்படிப் பார்க்கற...? பெத்த பொண்ணு மகாபலிபுரம் போயிருக்கா. அலையில் விழுந்து அடிச்சுக்கிட்டுப் போக இருந்தவளை ஒருத்தர் காப்பாத்தி தூக்கிக்கிட்டு வந்தார்னால் அவர் யார் என்னன்னு தெரிஞ்சுக்க வேண்டியது பொண்ணைப் பெத்த அப்பாவோட கடமை இல்லையாம்மா...? மனுஷத்தனம் இல்லையா...?''

அசாதாரணமாகச் சொல்லிவிட்டு அவர் பைப்பைப் பற்ற வைத்துக் கொண்டபோது சித்ராவும், மதுவும் அரண்டுபோய் கண்கள் அகல அவரைப் பார்த்தனர். பைப் புகையை இழுத்து வெளியில்விட்ட அவர் சிரித்துக் கொண்டே மதுவை ஏறிட்டார்.

''என்னப்பா மது, அப்படிப் பார்க்கற...?''

''அப்பா...நாங்க மகாபலிபுரம் போனது கடல்ல நான் விழுந்ததெல்லாம் உங்களுக்கு எப்படிப்பா தெரியும்...?''

''என் அருமைப் பெண்ணே...பெத்த அப்பன் பக்கத்து கெஸ்ட் ஹவுஸில் தங்கி இருந்ததைக் கூட கவனிக்காமல் போனது உன் தப்பும்மா...''

''ஏம்ப்பா...அன்னிக்கு நீங்களும் மகாபலிபுரம் வந்திருந்திங்களா...?''

''இல்லைன்னால் இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்?''

''போங்கப்பா. உங்க பிரெண்ட்ஸ் யாராவது பார்த்துட்டு வந்து சொல்லியிருப்பாங்க...''

''இல்லைம்மா...நானே வந்திருந்தேன். என் வெள்ளை டொயட்டோவைக் கொண்டு வந்திருந்தேன். வேணும்னால் நீங்க மூணு பேரும் என்ன கலர் டிரஸ் போட்டுட்டிருந்திங்கன்னு சொல்லட்டுமா...?''



''மூணு பேரா...? நானும் மதுவும் மட்டும்தானே போயிருந்தோம்...''

''ஹாய், உன் கூட நம்ம வீட்டுக்கு அடிக்கடி வருமே... அந்தப் பொண்ணும் வந்திருந்தது. சரியா...?''

''சரி. நான் என்ன டிரஸ் போட்டுட்டிருந்தேன்னு சொல்லுங்க பார்க்கலாம்...?''

''ம்...அதுக்குப் பேர் தெரியலை. கவுன் மாதிரி ஏதோ ஒண்ணு...''

''சரி. என்ன கலர்...?''

''ரெட் மாதிரி ஒரு கலர்?''

''என்னப்பா...எல்லாம் மாதிரி மாதிரின்னு சொல்றீங்களே தவிர அடிச்சு சொல்ல மாட்டேன்றீங்க. நானும் நீங்க பார்த்தது என்னை மாதிரி ஒருத்தின்னு சொல்லட்டுமா?''

''அதெப்படி சொல்ல முடியும்? நான் பார்த்தது உன்னைத்தானே...?''

''அது நிஜம்னால் என்ன கலர் டிரஸ்ஸுன்னு சொல்லுங்க...?''

''சொன்னேனில்ல...ரெட்டுன்னு...''

''ரெட் இல்லப்பா அது. மஜந்தா...''

''ஏதோ ஒரு தா. நான் சொன்னது சரிதானே...?''

''இவர் என்ன டிரஸ் போட்டுட்டிருந்தார்ன்னு சொல்லலையே...?''

''பாண்ட் ஷர்ட்...?''

''இல்லைன்னால் லுங்கி கட்டிக்கிட்டா வருவாரு...? கலரைச் சொல்லுங்கப்பா...''

''ம்...எஸ்...சாக்லேட் ப்ரௌன். சரியா...?''

''என்ன மது...? அப்பா சொல்றது சரியா...? நீங்க சாக்லெட் ப்ரௌனா போட்டுட்டு வந்தீங்க...?''

''எஸ், ஹி ஈஸ் கரெக்ட்.''

''சரிப்பா....ஷைலு என்ன போட்டுட்டு வந்தான்னு சொல்லலையே...?''

''அது யார் ஷைலு...?''

''அதாம்ப்பா...என் பிரெண்டு. நம்ம வீட்டுக்கு வருவாளே...''

''அவ பேர் ஷைலுவா...?''

''ஆமாம். அவ என்ன கலர் டிரஸ் போட்டுட்டு....''

''என்னம்மா சித்ரா நீ...?'' அவர்தான் பார்த்தேன்னு சொல்லிட்டாரில்ல...? இன்னமும் கேள்வி கேட்டுக்கிட்டு...''

ருக்மிணியம்மாள் உரிமை எடுத்துக் கொண்டு லேசாக அதட்டிய பின்னரே ஓய்ந்தாள் சித்ரா.

''சரி. கேட்கலை. மகாபலிபுரம் இஷ்யுவை அதோட விட்டுடறேன். இப்போ உட்காரலாமாப்பா...?''

''ஏம்மா...நானா உட்காரவேணாம்னு சொன்னேன்...? நீதான் நிற்க வச்சு கேள்வி கேட்கற...''

''ஐயயோ...உட்காருங்கப்பா...''

''உட்கார்றேம்மா. நீ உத்தரவு கொடுத்தப்புறம் உட்கார வேண்டியதுதானே...'' சிரித்துக் கொண்டே உட்கார்ந்தவர் ''உட்காரு மது. நீங்களும் உட்காருங்கம்மா...'' என்றார்.

எல்லோரும் உட்கார்ந்ததும் சித்ராவிடம் சொன்னார்.

''சித்ரு. இவங்க லஞ்சுக்கு அரேஞ்ஜ் பண்ணச் சொல்லும்மா...''

''இல்லப்பா. லஞ்ச் முடிச்சிட்டுத்தான் வரோம்.''



''சரி. அப்படின்னா ஹைடீ வச்சுக்குவோம். இப்ப ஏதாவது குடிக்கத்தரச் சொல்லு.''

சித்ரா மணியடித்து வேலையாளை வரவழைத்து ஆப்பிள் ஜூஸ் கொண்டு வரச் சொன்னாள்.

''அப்பா, மது சிவில் இன்ஜினியர்ப்பா.''

''தெரியும்மா...எங்க படிச்சீங்க மது?''

''அண்ணாமலை யூனிவர்ஸிடி.''

''எப்போ முடிச்சீங்க?''

''ரெண்டு வருஷமாச்சு.''

''குட். இப்போ எத்தனை கன்ஸ்ட்ரக்ஷன் ஒர்க் நடத்திட்டிருக்கீங்க?''

''ஒண்ணுதான் சார். பாடிகிட்ட ஒரு ஆஸ்பத்திரி...''

''ஏம்ப்பா...இதுக்குள்ள மடமடன்னு பத்து காண்ட்ராக்டாவது வாங்கியிருக்க வேணாம்...''

''அவ்வளவு தூரத்துக்கு எங்க சார் முடியும்...?''

''ஏன் முடியாது?...நான் இருக்கேன் இல்ல...? இனி மேல் எங்க எந்த கட்டிடம் வரப் போறதோ அத்தனையும் உனக்குத்தான். நீதான் கட்டப் போற, நான் பிடிச்சுத் தரேன். உனக்காக இல்லைன்னாலும் என் பொண்ணுக்காக செய்ய மாட்டேன்...?''

சித்ரா பக்கம் திரும்பி கண்ணடித்தார், ''என்னம்மா...? செய்யலேன்னா நீ என்னைச் சும்மா விட்டுடுவியா....?'' என்று கேட்டார்.

''உங்க பொண்ணுதானேப்பா நான்.'' என்று சித்ராவும் சிரித்தாள்.

அதற்குள் மூன்றே டம்ளர்கள் ஜூஸ் வந்தது.

''உங்களுக்கு சார்....?'' பவ்யமாகக் கேட்டான் மது.

''கண்ணால் கூடப் பார்க்கக் கூடாதுப்பா. உடனே ஷுகர் ஏறிடும்.''

உதட்டோரம் வைத்து நூல் உறிஞ்சக் கொண்டே மெதுவாகச் சொன்னான் மது.

"நீங்க இவ்வளவு பிரியா இவ்வளவு சாதாரணமாகப் பேசுவீங்கன்னு நினைக்கலே இல்லை சார்,"

"எப்பா...திமிரா அலட்சியமா கடுகடுன்னு இருப்பேன்னு நினைச்சியா?"

"இல்ல சார்... வந்து...

"என்ன நீ சார் மோர்னுகிட்டு...?"

"..............."

"என்ன சித்ரா...உன் பிரெண்டு சார்னு கூப்பிட்டு என்னைத் தள்ளி நிறுத்தப் பார்க்கறாரு..."

"பின்ன வேற எப்படிப்பா கூப்பிடறது உங்களை...? நான் கூப்பிடற மாதிரி அப்பான்னா...?"

"வேணாம், மாமான்னு கூப்பிடட்டும்."

அதிர்ந்து போனான் மதுசூதனன். 'என்ன சொல்றார் இவர்...?' என்று குழம்பிப் போனான். ஆனால் ருக்மிணியம்மாளின் முகம் சடாரென்று மலர்ந்தது. கண்கள் பளிச்சென ஒளிர்ந்தன. நேரிடையாக அவரிடமே பேசினாள்.

"நீங்களே அப்படி கூப்பிடச் சொல்றீங்கன்னால், அதுக்கு அவன் ரொம்பக் கொடுத்து வச்சிருக்கணும். பூர்வ ஜென்மத்துல புண்ணியம் பண்ணியிருக்கணும்."

அவர் சிரித்தார். சிரித்துக் கொண்டே சொன்னார்.

"இத்தனை நேரம் நானும் விளையாட்டாப் பேசிட்டேம்மா. இப்போ சீரியஸாகச் சொல்றேன். எனக்கு இருக்கிறது ஒரே பொண்ணு. அவ எது நினைக்கிறாளோ அதை நடத்தி வைக்கணும். புலிப்பால் வேணும்னு அடம் பிடிக்கிறாளா...? உடனே நாலா பக்கமும் புலியைப் பிடிச்சு பால் கறக்கக் கூடிய ஆட்களைப் பார்த்து



அனுப்பிடுவேன். அவ சந்தோஷம் தவிர எனக்கு வேற என்ன வேணும் சொல்லுங்க...? விழுந்து விழுந்து இவ்வளவு சம்பாதிக்கிறேனே... இதெல்லாம் யாருக்கு சொல்லுங்க...? எல்லாம் இவளுக்குத்தானே...? வெறும் பணத்தை வச்சிட்டு மனசுக்குப் பிடிச்ச வாழ்க்கையாக அமைச்சுத் தரலேன்னால் எப்படி...?என்ன உபயோகம்...? நான் சம்பாதிச்ச அத்தனை சொத்துக்களும் மதிப்பிழந்து இல்ல போகும்? நாமெல்லாம் வாழற நிம்மதியில்லாத வாழ்க்கை அவ வாழக்கூடாது. நிம்மதியா திருப்தியா வாழணும். இதுதாம்மா என் ஆசை. இதுக்கு என்ன செய்யவும் நான் தயாராக இருக்கேன்."

உருக்கமான குரலில் அவர் சொன்னது கேட்டு சித்ரா நெகிழ்ந்து போனாள்.

"அ...ப்...பா..." என்று அவர் கையைப் பற்றிக் கொண்டாள். செல்லமாக அவளது தலை வருடினவர் சட்டென்று பழைய கம்பீரம் வர அழுத்தமாகப் பேசத் தொடங்கினார்.

"லோ... இனிமேல் நீங்க கவலைப்பட வேணாம்மா. மதுவையும் அவனது தொழிலையும் சேர்த்து கவனிக்கிறது என் பொறுப்பு. எதுல யார் முன்னுக்கு வரணும்னாலும் ஒரு 'காட் ஃபாதர்' வேணும். கைதூக்கி விடற ஆள் வேணும். நல்லது கெட்டதை எடுத்துச் சொல்ற நல்ல மனசு வேணும். 'இப்படிப் போன்னு' வழி காட்ற கை வேணும். அந்தக் கையாக நான் கிடைச்சுட்டேன், மதுவின் உயர்வுக்கு நானே வழி செய்யறேன். உங்க பிள்ளைக்கு காட் பாதராக இருக்கேன். கட்டிடம் கட்டறதை விட்டுட்டு என் கூட பிஸினஸ்ல சேர்த்துக்கச் சொல்லலாம். ஆனால் யாருமே தன் கால்கள்ல நிக்கணும்ங்கிற விருப்பமுள்ளவன் நான். சொந்த அனுபவங்களையும் உழைப்பையும் வச்சு முன்னுக்கு வரணும்னு நினைக்கிறவன். அதனாலதான் அப்படி சொல்றேன். அதுதான் மதுவுக்கும் நல்லது. சித்ராவுக்கும் நல்லது. நானெனக்கு ஏதோ ஒரு விஷயத்துல அபிப்ராய

பேதம் வந்ததுன்னு வச்சிக்குங்க. அப்போ சித்ரா எங்க அப்பாவால் முன்னுக்கு வந்தீங்கன்னு குத்திக்காட்ட மாட்டா பாருங்க. அதுக்குச் சொல்றேன்.''

அவர் பேசப் பேச ருக்மிணியம்மாளின் நெஞ்சு நிறைந்தது. ஆனால் மதுசூதனனின் மனது இன்னும் பாரமாகி கனக்கத் தொடங்கிற்று. என்ன இது...? எல்லாமே ஏன் இப்படி மேலும் மேலும் சிக்கலாகிறது. என்ன நினைத்து இப்படிப் பேசுகிறார், இவர். போடுகிற கணக்கு வேற மாதிரி போகும் போலிருக்கிறதே... இதற்கு என்ன செய்வது...?''

''நினைத்து நினைத்து குழம்பிப் போனான் மது...

## 17

வருகின்ற வழியெல்லாம் வாசுதேவனின் புகழ் பாடினாள், ருக்மிணியம்மாள். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த மதுசூதனன், அதற்கு மேல் தாங்க முடியாதவனாக அம்மா பக்கம் திரும்பினான்.

''ஏம்மா—இன்னும் கொஞ்ச நேரம் போனால் போற்றி போற்றின்னு ஆயிரத்தெட்டு போற்றிகள் கூடப் பாடுவாய் போல இருக்கு! பூ போட்டு அர்ச்சிக்காத குறைதான்...' என்று சிரித்தான்.

''நிச்சயம் செய்வேண்டா...செய்யலாம்டா. எப்படிப் பட்ட மனிதர் என்னமாய்ப் பேசினார் பார்த்தாயா?''

அவன் பேசாதிருந்தான்,

''என்ன மது, பேசாமல் இருக்கே... உயர்ந்த மனிதர்னு உனக்குப் படலையா...?''

ஆமாம்மா... உயர்ந்த மனிதர்தான்...அதுல சந்தேகமில்லை; ரங்காராவ் மாதிரி இருக்கார். ஆறடி இருப்பாரா...?''



''ஏய், என்னடா விளையாடற...? நான் அந்த உயரத்தைச் சொல்லலை''

''பின்ன...?''

''மனசோட உயரத்தைச் சொன்னேன். உனக்கு எவ்வளவு உதவி செய்யிறேன்னு சொன்னார் பார்த்தியா? இந்தக் காலத்துல யார் இந்த மாதிரி சொல்வாங்க? தெய்வம், மனுஷ ரூபத்துல வரும்னு சொல்றது சரியாகத் தான் இருக்கு.''

''ஐயோ—என்னம்மா நீ...? எல்லாம் தன் பொண்ணுக்காகச் சொன்னாரே தவிர, எனக்காக இல்லைம்மா...''

''உனக்காகன்னு ஓடி வந்து செய்ய நீ யார்டா அவருக்கு? ஏன் செய்யணும்...? ஏதோ தன் பொண்ணு, அதுவும் ஒரே பொண்ணுன்னு, அவ ஆசைப்படறாளேன்னு செய்யறார்...''

''அவ மட்டும் ஆசைப்பட்டுட்டா போறாதும்மா'' சட்டென்று மனதில் இருந்ததைச் சொல்லிவிட்டான். அதற்கு மேல் தாங்க முடியாது என்று தோன்றிற்று. இதற்கு இந்த இடத்தில் முற்றுப் புள்ளி வைப்பது நல்லது எனப் பட்டது. எனவே மனம்விட்டுப் பேச முடிவு செய்தான்.

அவன் சொன்னதைக் கேட்டு பதறிப் போனாள் ருக்மிணியம்மாள்.

''என்னப்பா சொல்ற...?'' என்பதை நிதானமாகவே கேட்டாள்.

''இல்லம்மா... சித்ரா மட்டும் ஆசைப்பட்டா போதுமா? நான் ஆசைப்பட வேணாமான்னு கேட்கிறேன்.''

''யாருக்காவது அந்தப் பொண்ணு மேல ஆசையில்லாமல் போகுமா? அழகு, அறிவு, அடக்கம், எல்லாத்துக்கும் மேல பணம் எல்லாம் இருக்கிறபோது என்னடா குறை?''

''இது எல்லாத்துக்கும் மேல மனசுன்னு ஒண்ணு வேணாமாம்மா...!''

"அந்தப் பொண்ணுக்கு மனசில்லேன்னு சொல்றியா?"

"இல்லம்மா. எனக்கு இல்லேன்னு சொல்ல வரேன்."

"மது...என்னடா இது...? திடீர்னு ஒரு குண்டைத் தூக்கிப் போடற...என் மனசுல நான் நிறைய கனவுகளை வளர்த்துக்கிட்டேன்டா..."

"அதே மாதிரி எனக்கும் கனவுகள் இருக்கும் இல்லையாம்மா? நானும் வளர்த்துக்கிட்டிருப்பேன் இல்லையா?"

"மது...நீ என்னப்பா சொல்ற?"

அந்த அம்மாளின் குரலில் அதிர்ச்சி தெரிந்தது. ஆசைகள் நிராசையாகி விடுமோ என்கிற பயம் தெரிந்தது. அதைத் தாங்கிக் கொள்ளத் தனக்கு சக்தி கிடையாது என்றும் தோன்றிற்று. அதனால் குரல் இடற கரகரக்க மறுபடியும் கேட்டாள்,

"நீ என்ன சொல்றேன்னு எனக்குப் புரியல மது,"

"என் மனசில சித்ரா இல்லேம்மா."

"சித்ரா இல்லையா?"

"இல்லைம்மா...?"

"பின்ன...?"

அவன் ஒரு வினாடி தயங்கினான். அதற்குள் அந்த அம்மாள் துடித்துப் போய் கேட்டாள்.

"சொல்லுப்பா...வேற யார் இருக்காங்க?"

"ஷைலும்மா..."

"என்ன...என்ன...?"

"ஷைலஜாம்மா..."

"சித்ரா கூட காலைல வீட்டுக்கு வந்ததே...அந்தப் பொண்ணா?"



"ஆமாம்மா..."

சுறுசுறுவென்று அந்த அம்மாளின் முகம் சிவந்தது. கண்களிலும் சிவப்பு எட்டிப் பார்த்தது. வார்த்தைகள் வேகமாக வந்தன.

"உனக்கென்ன பைத்தியமாடா?"

அவன் பேசாதிருந்தான்.

"சித்ரா எங்கே...அந்தப் பொண்ணு எங்கே? அழகாகட்டும், குணமாகட்டும், பணமாகட்டும்... இவ கால் தூசு பெறுவாளாடா அவ...?"

"அம்மா...நீ சொல்றது எல்லாம் சரின்னே வச்சுக்கிட்டாலும், அது உன் பார்வைம்மா. உன் பார்வையிலிருந்து பார்க்கிறபோது, சித்ரா அழகாகத் தெரியற மாதிரி, என் பார்வையிலிருந்து பார்த்தால் ஷைலஜா அழகாத் தெரியறாம்மா, லைலா மஜ்னு கதை தெரியுமாம்மா உனக்கு...? லைலா என்ன அழகுன்னு மஜ்னுவைக் கேட்டப்போ, அவன் சொன்னானாம்: 'என் கண்களால் நீங்க லைலாவைப் பார்க்கணும்; உங்க கண்களால் பார்க்கக் கூடாது'ன்னானாம், அதே மாதிரி என் கண்களால் நீங்க ஷைலஜாவைப் பார்க்கணும்மா..."

"போறும், நிறுத்துடா. எந்தக் கண்ணால் பார்த்தாலும் அந்தப் பொண்ணு அப்படித்தான்டா இருக்கும். முதல் பார்வையிலே எனக்கு அந்தப் பொண்ணைப் பிடிக்கலை."

"இல்லைம்மா. ரொம்ப நல்லப் பொண்ணு. இன்ஃபாக்ட் சித்ராவை விட நல்லவ..."

"சீ! வாயை மூடு" என்று சிடுசிடுத்த ருக்மிணியம்மாளைத் திரும்பிப் பார்த்தான் மது. இதுவரை அந்த மாதிரியெல்லாம் அவள், அவனிடம் பேசியதில்லை. ஒரு வார்த்தை அதட்டலாகச் சொன்னதில்லை. முதல் முறையாக, அவன் இன்றுதான் இதுபோன்ற வார்த்தைகளைச்

கேட்கிறான். அம்மா தன் நிதானத்தை இழக்கிறாள் என்பது புரிந்தது. அம்மா மாதிரி தானும் நிதானத்தை இழக்கக் கூடாது என்பதில் தீர்மானமாக இருந்தான். எனவே பதிலுக்குக் கோபப்படாமல், மெதுவாகவே பேசினான்.

''என்னம்மா...இப்படியெல்லாம் பேசற?''

''பின்ன என்னடா...? யாராவது இவ்வளவு புத்தி கெட்டு நடந்துப்பாங்களாடா? மகாலஷ்மி மாதிரி பொண்ணு வந்தால் வேண்டாம்னுட்டு, மூதேவியை கட்டிக்க நினைப்பாங்களா?''

''அம்மா...?!''

''என்னடா அம்மான்னு அதட்ற...? எனக்கு அந்த ஷைலஜாவைக் கொஞ்சம் கூடப் பிடிக்கலை. அது வீட்ல நுழைஞ்ச நேரமே சரியில்லை. என்கிட்ட சரியா நடந்துக்கலை. மரியாதை தெரியலை. வேணும்னே பழரச டம்ளரைக் கீழே போட்டு அமர்க்களப்படுத்திச்சு...''

''ஏம்மா...வேணும்னே யாராவது ஜுஸ் டம்ளரைக் கீழே போடுவாங்களா...கை தவறி விழுந்திருக்கும்''

''விழும்டா...மனசுல மரியாதையும், பயமும் இருந்தா கை தவறுமா? இல்ல...கீழேதான் விழுமா?''

''ஷைலஜாவை நீ தப்பான கண்ணோட்டத்துலயே பார்க்கறம்மா. அதான் எல்லாமே தப்பாத் தெரியுது.''

''தப்பைத் தப்பாத்தாண்டா பார்க்க முடியும். சரியா பார்க்க முடியாது!''

''முதல்ல ஷைலஜாவை மட்டும் பார்த்திருந்தால் உனக்கு இந்த அபிப்பிராயம் ஏற்பட்டிருக்காதும்மா. மனசுக்கு ரொம்பப் பிடிச்சுப் போயிருக்கும். அவளுடைய வெகுளித்தனம், பயந்த சுபாவம், எளிமை எல்லாம் கண்ணுல பட்டிருக்கும்...பாராட்டி இருப்பாயம்மா. மருமகளாக ஏற்றுக்க சம்மதிச்சிருப்பாய்....ஆனால், சித்ரா



வோட கூடப் பார்த்ததால், சித்ராவை முதல்ல பார்த்ததால் இப்படிப் பேசறம்மா...''

''இல்ல...அந்தப் பொண்ணைத் தனியாப் பார்த்திருந்தாலும், சம்மதிச்சிருக்க மாட்டேன். முதல்ல அதன் முகமே எனக்குப் பிடிக்கலை. உர்ருனு கோபமும், ஆத்திரமும் கனைகணக்கிற நெருப்புக் குண்டம் மாதிரி இருந்திச்சு...''

''இல்லம்மா. ஷைலஜா...''

''இதப்பாரு மது, திருப்பித் திருப்பி அந்தப் பொண்ணைப் பத்திப் பேசாதே. எனக்குப் பிடிக்கலைன்னால் பிடிக்கலைதான். பழுத்த பழம் இருக்க, காயை சாப்பிடற மாதிரி, சித்ரா இருக்க யாராவது இந்தக் குரங்குக்கு ஆசைப்படுவாங்களா?''

''அ...ம்....மா....''

''என்னடா அம்மா...கொஞ்சம் யோசிச்சுப் பாருடா. இவளுடைய கால் தூசு பெறுவாளாடா அவ...?''

''ஏம்மா...பணத்தை வச்சுத்தானேம்மா நீ அப்படி சொல்ற?''

''பணமும்தான். பணமில்லாமல் வாழ்க்கைல எது நடக்கும்? எது கிடைக்கும் சொல்லு...?

''அப்படிப்பட்ட பணத்தையே ஷைலஜா துச்சமாக மதிக்கிறாளே...இந்த சித்ராவை மதிக்கக்கூட மாட்டேன்றாளே...அதுக்கு என்ன சொல்ற? அந்த மாதிரி நடக்க எத்தனைத் தன்னம்பிக்கை வேணும்? சுய கவுரவம் வேணும்? பணத்தின் மீது ஆசையில்லாத தனம் வேணும்...?''

''ஆஹா....! நல்லா சொன்ன மது. அதுக்குப் பேர் பணத்தின் மீது ஆசையில்லாததில்லை...சீ...சீ...இந்தப் பழம் புளிக்கும் கதைதான். தனக்குக் கிடைக்காதது, தன் கிட்டே இல்லாதது எதிராளிகிட்ட இருக்கேன்ற வயிற்

பொறிச்சல்தான். அதுதான் துச்சமா, மதிக்காத குணமா, கோபமா, ஆத்திரமாகவெல்லாம் வெளிப்படுது...''

''ஐயோ...நான் எப்படிச் சொல்லிம்மா உனக்குப் புரிய வைக்கிறது...அப்படித்தான் என்றால், சித்ரா ஏம்மா ஷைலஜாகிட்டே பிரெண்டாக இருக்கிறாள்? ஏன் அவள் வீட்டுக்கு அடிக்கடி போகிறாள்? பஸ் ஸ்டாப் வரை அவளைத் தேடிக்கொண்டு எதற்காக என்னோடு வந்தாள்...? ஷைலஜாகிட்ட எதையோ பார்த்ததால் தானே அத்தனை ஆழமான நட்பு ஏற்பட்டிருக்கு...?''

''ஷைலஜாகிட்ட எதையோ பார்த்த காரணமில்லை. பார்க்க அந்தப் பொண்ணுகிட்ட ஒண்ணும் இல்லவும் இல்ல. நீ சொன்ன அத்தனைக்கும் காரணம், சித்ராவோட பெரிய மனசு. இளகின மனசு. தாராள மனப்பான்மை. தயாள குணம். எளிமை கண்டு இறங்குகிற குணம். இதெல்லாம் இருக்கிறதால்தான் தன் மேல பொறாமை கொண்டு நெருப்பாகக் கொட்டுகிறவளிடம் கூட குளிர் காற்று மாதிரி இதமாகச் சிரித்துக் கொண்டே நெருங்கிப் பேசுகிறாள். அதுதான்டா பெரிய இடம். பரம்பரைப் பணம். சின்னது பெரிசு பண்ணாத தாராள மனசு...''

ருக்மிணியம்மாள் சொல்லி முடித்ததும், சிறிது நேரம் பேசாமல் இருந்தான் மது. முகத்தில் மீண்டும் குழப்பம் தெரிந்தது. ஒருவேளை அம்மா சொல்வதெல்லாம் நிஜமாக இருக்குமோ என்று தோன்றிற்று. மகாபலிபுரம் போன நாளிலிருந்து ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தான். அனாவசியமாகக் காரணமே இன்றி, சித்ரா மீது ஷைலஜா கோபப்பட்டது தெரிந்தது. வார்த்தைகளால் குதறிப் போட முயன்றது புரிந்தது. சிடுசிடுவென எரிந்து விழுந்தது. பார்வையால் நெருப்பைக் கொட்டினது...

அத்தனை சமயங்களிலும் சித்ரா அமைதியாகத்தான் இருந்தாள், பணிந்துதான் போனாள். சிரித்துக்கொண்டே அவனை நெருங்கினாள். இதமாய், சாந்தமாய், மென்மையாய் பேசினாள்...



ஒருவேளை அம்மா சொல்கிற மாதிரி ஷைலஜாவிற்கு, சித்ராவிடம் ஏற்பட்டிருப்பது தாழ்வு மனப்பான்மை தானோ...? பொறாமையோ...? பணம், பதவி, அந்தஸ்து, அழகு அத்தனையும் சித்ராவிடம் குடி கொண்டிருப்பதில் ஏற்பட்ட வெறுப்போ...?

அப்படித்தான் இருக்க வேண்டுமென அவனுக்கும் தோன்ற ஆரம்பித்தது. இல்லாவிட்டால் ஷைலஜா, சித்ராவை வெறுக்க காரணமில்லை. அத்தனை வெறுத்தாலும் சித்ரா மீண்டும் மீண்டும் ஷைலஜாவைத் தேடிப் போவது அவளது பெரிய மனதைக் காட்டுகிறது. எளிமை கண்டு இரங்கும் குணத்தைச் சொல்கிறது.

''என்ன மது, பதிலே வரலை...? ஒரு பொண்ணு மனசு இன்னொரு பொண்ணுக்குத்தான் தெரியும். சித்ரா, தங்கமான பொண்ணுப்பா, அவமேல் பொறாமைப்பட்டு சாகிற அந்த ஷைலஜா உனக்கு வேணாம்ப்பா...அப்படி அவகிட்ட என்ன இருக்குன்னு நீ ஆசைப்படற சொல்லு...? என்னைச் சொன்னாயே...நீ ஷைலஜாவை முதல்ல பார்த்திருக்கணும்னு. இப்போ அதையே நான் திருப்பிச் சொல்றேன். சித்ராவை நீ முதல்ல பார்த்திருக்கணும். அவ உன் கண்ணுல பட்டிருக்கணும். பேசிப் பழகி இருக்கணும் அப்போ நிறம் மட்டுமில்லை; குணமும் தங்கம்னு தெரிஞ்சிருக்கும். அவமேல் ஆசைப்பட ஆரம்பிச்சிருப்ப...உன் போறாத காலம், முதல்ல நீ ஷைலஜாவைப் பார்த்துத் தொலைச்சிருக்க! யார் என்னன்னு புரிஞ்சுக்காமல், ஆசைப்பட ஆரம்பிச்சிருக்க...சரி, விடு. இப்போதாவது தெரிஞ்சுதேன்னு நினைச்சுக்க. காலுக்கு சரியில்லாத செருப்பைக் கழட்டி எறி. நான் சொல்றதைக் கேளு. சித்ரா மாதிரி அழகு, குணம், அமைதி, அறிவு, அந்தஸ்து, பணம் எல்லாம் சேர்ந்த ஒரு பொண்ணு உனக்குக் கிடைக்கமாட்டா. அவ உனக்குக் கிடைக்கிறது ரொம்பப் பெரிய அதிர்ஷ்டம். அதிர்ஷ்டம் ஒரு முறைதான் வீட்டுக் கதவைத் தட்டும்னு சொல்லுவாங்க; உடனே கதவைத் திறக்க உனக்குத் தெரிஞ்சிருக்கணும்.''

சற்று நிதானித்து, அவன் முகத்தை ஏக்கமாய், உருக்கமாய், அன்பாய் பாசமாய் பார்த்து, மீண்டும் தொடர்ந்தாள் அந்த அம்மாள்.

"இதப்பாரு மது...எல்லா அம்மாக்களுக்கும் இருக்கக் கூடிய ஆதங்கம்தாம்ப்பா எனக்கும் இருக்கு. தன் மகன் சந்தோஷமா, சவுக்கியமா இருக்கணுமேன்னு நினைக்காத அம்மா இருக்க மாட்டாங்க. உலகத்துல எல்லாரும் எப்படி நடந்துப்பாங்களோ, அதே மாதிரிதான் நானும் நடந்துக்கறேன். உன் எதிர்காலம் பிரகாசமாக இருக்கணும்னு நினைக்கிறேன். உனக்கு நல்ல வாழ்க்கை அமையணும்னு ஆசைப்படறேன். என் நினைப்புல எதுனா தப்பு இருந்தா சொல்லு...?"

அந்த உண்மையின் தாக்குதலில் பதில் சொல்ல முடியாமல் தயங்கினான் அவன்.

"அ....ம்மா..." என்று தடுமாறினான்.

"நீ மாட்டேன்னு மறுத்தால் சித்ராவுக்கு எந்தவித நஷ்டமும் இல்லை. பார்க்கப் போனால், அவங்களுக்கு நாம் எங்கேயோ அதல பாதாளத்துலதான் இருக்கோம். எப்படிப் பார்த்தாலும் சமானமில்லை. ஆனால் அந்தப் பொண்ணு மனசுக்கு உன்னைப் பிடிச்சுப் போயிருக்கு. உன் மேல ஆசைப்படுது. அது ஆசைப்படலேன்னால், அவங்க வீட்டு வாசலை மிதிக்கிற தகுதிகூட நமக்குக் கிடையாது. நினைச்சுப் பார்க்கப் போறதுகூட கிடையாது..."

"அ...ம்மா..."

"ஆமாம்ப்பா. மெதுவா நிதானமா இதையெல்லாம் நினைச்சுப் பாரு. சித்ரா மாதிரி ஒரு பொண்ணோட அன்பு கிடைக்கிறது எத்தனை பெரிய விஷயம்னு யோசிச்சுப் பாரு.... அதனால் எதிர்காலத்துல வரக்கூடிய நன்மையெல்லாம் கணக்குப் போட்டுப்பாரு. அவங்கப்பா எத்தினி அழகாச் சொன்னாரு... 'இப்பவே என்கூடச் சேர்த்துண்டுடலாம். ஆனால் நாளைக்குப் பின்னால் ஏதாவது மனஸ்தாபம்னு வந்தால், எங்கப்பா தயவால் முன்னுக்கு வந்ததா



என் பொண்ணு சொல்லிக் காட்டக் கூடாது'ன்னு எவ்வளவு விவேகமாக பேசினாரு...அதனால்தான் உன் தொழில்லயே உனக்கு உதவி செய்யறேன்னிருக்காரு..."

"—அவரு கை காட்டினால் போறும்...காட்ற திசையெல்லாம் கட்டிடம் கட்ட ஆளுங்க ஓடி வருவாங்க. இப்போ ஒரு கட்டிடம்தானே கட்டற...? அதுக்கு எத்தினி நாள் அலைஞ்சே...? யார் யார் தயவுக்கெல்லாம் போய் நின்னே...? எல்லாத்தையும் நினைச்சுப் பாரு... நாய் அலைச்சல் அலையலெ?"

"இப்போ எந்த அலைச்சலும் இல்லாமல், யார் காலையும் கையையும் பிடிக்காமல் வீட்டுக்கே டெண்டர் தேடிக்கிட்டு வரும். ஒரே ஒரு ஆஸ்பத்திரிக்கு பதிலா நாலைஞ்சு ஆஸ்பத்திரிகள், சினிமா தியேட்டர், அடுக்கு மாடி பிளாட்ஸ், கடைகள்னு கட்டி...நீ பெரிய பில்டிங் காண்ட்ராக்டராகலாம். கோடீஸ்வரனாக ஆகலாம். நீ பார்த்து ஆயிரம் பேருக்கு வேலை தரலாம். நான் உன்னை திருடச்சொல்லலை...தப்புக்காரியம் செய்யச்சொல்லலை... நியாயமா சம்பாதிக்கச் சொல்றேன். சித்ராவோட அப்பா சொன்ன மாதிரி கைதூக்கிவிட ஒரு ஆள் வேணும். 'காட் ஃபாதர்' வேணும். கடவுள் உனக்கு வழி காட்றார். அதிர்ஷ்டம் உன் வீடு தேடி வருது. சித்ராவோட அப்பா 'வா, தூக்கி விடறே'ன்னு கை நீட்டுறாரு...அந்தக் கையை புடிச்சுக்க உனக்குத் தெரியணும். புத்திசாலித்தனம் வேணும். சாமர்த்தியம் இருக்கணும். நான் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லிட்டேன். ஒரு அம்மாவால் சொல்லக்கூடியதெல்லாம் சொல்லிட்டேன். இனி எல்லாத்தையும் யோசிச்சு ஒரு முடிவுக்கு வர வேண்டியது உன் பொறுப்பு. யோசிச்சு சொல்லு..."

சொல்லிவிட்டு அந்த அம்மாள் சமையலறைக்குள் நுழைந்தாள். தன் அறைக்கு வந்து கட்டிலில் படுத்த மதுசூதனன் தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தான்.

## 18

கட்டிலில் மல்லாந்து படுத்து மேலே சுற்றும் மின் விசிறியையே பார்த்துக் கொண்டிருந்தான் மது. மனது ஒரு நிலையில் இல்லை. ஷைலஜா தவிர வேறு யாரையும் அவனால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. அதே சமயம் அம்மா சொன்னதையும் அலட்சியப்படுத்திவிட முடிய வில்லை. அம்மா சொன்னதில் லாஜிக் தெரிந்தது. நியாயம் இருப்பதாகப் பட்டது. எந்த அம்மாவாக இருந்தாலும், அதைத்தான் சொல்லியிருப்பாள். அப்படித் தான் சொல்லியிருப்பாள். அப்படித்தான் பேசியிருப் பாள். மகன் முன்னுக்கு வர வேண்டும், வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டும், வசதிகளோடு இருக்க வேண்டும், அந்த வசதிகளை அடைய பணம் சம்பாதிக்க வேண்டும் என்று நினைக்காத அம்மா இருக்க முடியாது. கெட்ட பிள்ளைகள் உலகத்தில் இருக்கலாம். ஆனால், கெட்ட தாயார் மட்டும் இருக்கவே முடியாது. அதிலும் ஒரே மகன் என்கிறபோது, அந்த மகனின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டாத அம்மா இருக்கவே முடியாது.

அதிலும் அவனுடைய அம்மா நிறையவே அக்கறை காட்டி இருக்கிறார். அப்பாவைவிட அம்மாதான் அவனுக் காக அதிகம் உழைத்திருக்கிறாள். கவலைப்பட்டிருக் கிறாள். கூட எல்லாவற்றிற்கும் ஓடி வந்திருக்கிறாள். அம்மா அந்தக்கால எஸ்.எஸ்.எல்.சி. அதனால் அழகாய் ஆங்கிலம் பேசுவாள். அந்தத் திறமையை வைத்துக் கொண்டே அவனை எல்.கே.ஜி யிலிருந்து இன்ஜினியரிங் வரை தானே முன்னின்று சேர்த்திருக்கிறாள்.

அவனுக்கு இன்னும்கூட அம்மா தன்னை முதல் முதலாக எல்.கே.ஜி. வகுப்பில் கொண்டுபோய் சேர்த்தது நினைவிருந்தது. அப்போது அவர்கள். மைலாப்பூரில் வாடகை வீட்டில் குடியிருந்தார்கள். அவனுக்கு நாலரை வயது இருக்கும்.



'நீ எங்க படிக்கப் போற மது....?'

'வித்யா மந்திர்'

யார் கேட்டாலும், லஸ் கார்னரில் இருந்த பள்ளியைச் சொல்வான். அந்தப் பள்ளிக்கூடம் அவனது கனவுலகமாக இருந்தது. அதற்குக் காரணம், அவனது வீட்டின் பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் எல்லாம் அங்கு படித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், அம்மா அவனைக் கட்டுப்பாடு மிகுந்த கிறிஸ்தவ கான்வெண்ட் ஒன்றில் சேர்க்க வேண்டு மென்றிருந்தாள்.

''அம்மா...நான் வித்யா மந்திர்லயே படிக்க றேம்மா...''

இவன் ஆசைப்பட்டதும், தன் ஆசையைக் கைவிட்டு, வித்யா மந்திர் ஓடினாள். விண்ணப்பத்தாள் வாங்கிக் கொண்டு வந்தாள். அதைப் பூர்த்தி செய்தபோது அப்பா கேட்டார்,

''என்ன ருக்மிணி...இந்த ஸ்கூலுக்கு அப்ளிகேஷன் போடற? அவனை அந்தக் கான்வெண்ட்ல படிக்க வைக்க ஆசைப்பட்ட...?''

''என் ஆசை கிடக்குதுங்க, என் ஆசையாங்க முக்கியம்? மதுவோட ஆசைதாங்க முக்கியம். அவன் இந்த ஸ்கூல்ல சேரணும்னு நினைக்கிறான். ஆசைப்பட்ட இடத்துல சேர்த்துவிட வேண்டியதுதாங்க நம் கடமை...''

அம்மா சொன்ன வார்த்தைகள்கூட நினைவிருந்தன. விண்ணப்பித்த பின் அம்மா சும்மா இருக்கவில்லை. அடிக்கடி அந்தப் பள்ளிக்கூடத்திற்குப் போனாள். தலைமை ஆசிரியையை சந்தித்தாள். அங்கு சேர்வதில் தன் மகன் எத்தனை ஆர்வமாக இருக்கிறான் என்பதை

விளக்கினாள். கடைசியில் அவன் ஆசைப்பட்ட பள்ளியில் இடம் கிடைத்து, சம்பளம் கட்டிய பின்னரே அமைதி யானாள்.

அன்றிலிருந்து ஆரம்பித்ததுதான் அவனுக்கும், அம்மாவுக்குமான அந்த நட்பு, தோழமை, இறுக்கம் எல்லாம்...முதல் நாள் அவனைக் கொண்டு போய் பள்ளி யில் விட்டது, திடீர் என்று பயம் வந்து அவன் பள்ளிக்குப் போக மாட்டேன் என்று அடம் பிடித்தது, சமாதானப் படுத்தி, அன்பாக அரவணைத்து, பாசமாகப் பேசி, ரிக்ஷா வில்கூட வந்து, அவனை விட்டுவிட்டு அகன்று விடாமல் ஒரு மூலையில் நின்று கவனித்து, 'நான் இருக்கிறேன். கவலைப்படாதே...' என்று சைகையில் கைகாட்டி, திரும்ப வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து...

அதன்பின் பத்து நாட்கள் அவனோடு தினமும் பள்ளிக்கு வந்திருக்கிறாள். கூட இருந்து தலை தடவி தந்திருக்கிறாள். அன்பாய் இதமாய் பேசியிருக்கிறாள். ஆறுதலளித்திருக்கிறாள்...அப்போது மட்டுமில்லை; எப் போது எது என்றாலும், அவனுக்கு அம்மாதான். பேச்சுப் போட்டியா... அம்மா...வெளியிடங்களுக்குப் போவதா... அம்மா. சுற்றுப்பயணமா...அம்மா. நண்பர்கள் வீடுவரை கொண்டு போய் விடவேண்டுமா...அம்மா.

அம்மா...அம்மா...அம்மா....

இப்படி அம்மா பிள்ளையாக வளர்ந்தவன் தான் அவன். அப்பா அவன் அருகில் அதிகம் வந்ததில்லை. தோள் மீது கைபோட்டு தோழமையாகப் பேசியதில்லை. அவனுடன் அலைந்து திரிந்ததில்லை. அவனது ஆசைகள் என்ன என்று அறிந்து கொண்டதில்லை.

''என்ன மது. எப்படிப் படிக்கற...'' என்று ஒரு வார்த்தை கேட்பதோடு சரி. அவன் கொண்டு வருகிற பிராக்ரஸ் ரிப்போர்ட்டில் கையெழுத்து போடுவதுடன் சரி.



மற்றபடி ஆபீஸ்—வீடு, வீடு—ஆபீஸ் என்றிருக்கக் கூடிய சராசரி மனிதர்களில் ஒருவர்தான் அப்பா. ஞாயிற்றுக் கிழமைகூட ஆபீஸ் போய் பழக்கப்பட்டவர். வீடு பற்றி அதிகம் தெரியாதவர். எண்ணி எண்ணி வார்த்தைகளைப் பேசுபவர். உணர்ச்சி பூர்வமாகத் தன்னை வெளிப் படுத்திக்கொள்ளாதவர்.

அப்படிப்பட்ட அப்பாவைவிட அவன் மனது அம்மா விடம் ஒட்டிக் கொண்டது. தோழமை கண்டது. இதம் பார்த்தது. நல்ல சிநேகிதியாகத் தோளில் கைபோட்டுக் கொண்டது.

அம்மாவும் அப்படித்தான் இருந்தாள். அப்பாவிட மிருந்து வரவேண்டிய தன்னம்பிக்கை, தைரியம், வெளி உலகத்தைப் புரிந்து கொள்கிற தன்மை எல்லாவற்றையும் சேர்த்துத் தந்தாள். இன்ஜினியரிங் கல்லூரியில் சேரச் சொல்லி அவனுக்கு முனைப்பு ஏற்படுத்தியது அம்மா தான்.

இன்ஜினியரிங் படித்து, ஒரு பிரபல கட்டிடக்கலை நிறுவனத்தில் சேர்ந்து, இரண்டு வருடத் தொழில் பழகி, பின்னர் தனியாகத் தானே கம்பெனி ஆரம்பித்து வீடு கட்டி, குடி புகுந்து ஆரம்பித்த கம்பெனி ஓரளவு சிறக்கிற தென்றால்,

எல்லாவற்றிற்கும் காரணம் அம்மா, அம்மா, அம்மா தான்!

வாழ்க்கை கற்றுத் தந்தவள். நம்பிக்கை ஊட்டியவள். கூட இருந்து தைரியம் தந்தவள். சொந்தத் தொழிலில் அதிகப்படி இரும்பு வாங்க, சிமெண்ட் வாங்க சிரமப்பட்ட போதெல்லாம் பாங்க் லாக்கரிலிருந்து நகைகளை அள்ளித் தந்தவள்.

''இந்தா மது....இதை வச்சு இப்போ ஏற்பட்டிருக்கிற பண முடையைத் தீரு. அப்புறம் மீட்டுக்கலாம்...''

''ஐயோ என்னம்மா இது...உன் நகைகளை வச்சுப் பணம் வாங்கச் சொல்றே?'' அதிர்ந்து போனான் அவன்.

''சரி, வைக்கக் கஷ்டமாக இருந்தால், பேசாமல் வித்திரு...''

''அ....ம்...மா...''

''என்னடா அப்படிப் பதர்றே? உன்னைவிட எனக்கு நகைகளா முக்கியம்...? அப்படி என்ன நான் இந்த நகைகளை தினமும் போட்டுக்கிறது முழுகிப் போவுது....? போ... போய் பணமாக்கி, வேலை நடக்கிறதைப் பாரு. அப்புறம் மீட்டுக்கலாம்!''

அப்படி எல்லாமே அவன்தான் என்றிருந்த அம்மா, இதுவரை அவனிடமிருந்து ஒன்றும் ஆசைப்பட்டதில்லை. எதுவும் கேட்டதில்லை. முகம் சுளித்ததில்லை. குரலை அழுத்திப் பேசினதில்லை. அவனாகத்தான் லாபத்தில் பட்டுப்புடவை வாங்கினான். கைக்கு ஒரு ஜதை கல் வளையல்கள் செய்தான். அப்பாவுக்கு மோதிரம், சங்கிலி, என வாங்கிக்கொண்டு வந்தான். அப்போது கூட அம்மா சொன்னாள்.

''எங்களுக்கு எதுக்குப்பா இதெல்லாம்...? எல்லாத்தையும் பணமாக வச்சுக்கிட்டிருந்தால், வரப்போற மருமகளுக்குப் போடலாமில்ல...இந்த வயசுக்கு மேல எனக்கு நகையா கேட்குது...?''

''ப்சு...மருமகள் வர்றபோது பார்த்துக்கலாம்மா...''

''என்னடா பார்த்துக்கிறது? எப்போ பார்க்கிறது....? இந்த வயசுல கல்யாணம் செய்து பார்க்கணும்டா. இளசாக இருக்கிறபோது கல்யாணம் செய்திடணும். இந்தக் காலத்துல முப்பது வயசுக்கு மேல் முகமெல்லாம் முத்திப் போனதுக்கு அப்புறமில்ல கல்யாணம் செய்துக்கிறாங்க...''

''முப்பதுன்றது ஆணுக்கா பெண்ணுக்காம்மா?''

''பொண்ணுங்க மட்டுமென்ன.... படிச்சு முடிச்சு, பட்டம் வாங்கி, வேலை தேடி சுய கால்கள்ல நிற்க



ஆரம்பிச்சப்புறமில்ல இந்தக் காலத்துல கல்யாணத்துக்கு சம்மதிக்கிறாங்க. அதுக்கு எப்படியும் வயசு இருபத்தைந்து இருபத்தாறு இருபத்தேழுன்னு ஆயிடுதில்ல...?''

''ஏம்மா...பொண்ணுங்க படிக்கறதும், சுய கால்கள்ல நிற்கிறதும் தப்புன்னு சொல்றியா?''

''தப்புன்னு சொல்லலைடா... அவங்களுக்கு ஆம்பிளைங்க மேல ஏற்பட்டிருக்கிற நம்பிக்கையின்மையை அது காட்டுதோன்னு தோணுது!''

''எப்படி...எப்படி...?''

ஆமாண்டா...எங்க காலத்துல நான் எஸ்.எஸ்.எல்.சி. படிச்சதே அதிகம். வேலைக்குப் போகணும்னு நினைச்சதில்லை. எங்க வீட்ல வீட்டு வாசற்படியைத் தனியாகத் தாண்டவிட்டதில்லை...''

''அப்போ எப்படிம்மா நீ இத்தனை சாமர்த்தியசாலியாக இருக்கே...?''

''சீ! போடா பைத்தியம்? நான் என்ன சாமர்த்தியம்.... எங்க அம்மா பாட்டியெல்லாம் இன்னும் சாமர்த்தியசாலிங்க. நடைமுறை வாழ்க்கை தெரிஞ்சவங்க...அவங்களாம் எந்த ஸ்கூல் போய் படிச்சாங்க? அனுபவம் கற்றுத்தர்ற படிப்பு பெரிய படிப்புடா...''

''உன் அனுபவம் உனக்கு என்னம்மா கற்றுத் தந்திருக்கு?''

''ம்... சீக்கிரமாகக் காலா காலத்துல பிள்ளைக்குக் கல்யாணம் செய்துடணும். அழகா பேரன் பேத்திகளைப் பார்த்திட்டு கண்ணை மூட...''

சடாரென்று கை நீட்டி அம்மாவின் வாயை மூடுவான் அவன். அவள் சிரித்துக்கொண்டே அவனது கையை அகற்றுவாள்.

''போடா பைத்தியம்! நெருப்புன்னால், வாயா வெந்து போயிடப் போவுது?'' என்பாள்.

அவனுக்கும், அம்மாவுக்கும் இடையில் இருந்த தோழமை அப்படிப்பட்டது. பாசம் அப்படிப்பட்டது. இதயம் அப்படிப்பட்டது.

அந்த அம்மா சொல்கிறாள்... அவனது நல்லதற்கு என்கிறாள். எதிர் காலத்தை யோசித்துப் பார்க்கச் சொல்கிறாள். சித்ராவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சொல்கிறாள். இதுவரை ஆசைப்பட்டு அவனிடம், ஒரு முழம் பூ கூட கேட்டறியாத அம்மா, முதன் முதலாகத் தன் ஆசையை மனம் திறந்து சொல்கிறாள், அதுவும்கூட அவளுக்காக அவள் சொல்லவில்லை.... அவனுக்கு வசதி என்றோ, நன்மை என்றோ எதிர்பார்க்கவில்லை. அவனது நன்மை கருதிச் சொல்கிறாள். எதிர்காலம் கருதிச் சொல்கிறாள், சித்ராவை மனப்பூர்வமாக விருப்பப்பட்டுச் சொல்கிறாள். அவளை மருமகளாக ஆக்கிக் கொண்டு விடுகிற ஆசையில் பேசுகிறாள்.

அப்படியெல்லாம் அம்மா ஆசைப்பட்டதில்லை. தகுதிக்கு மீறி எதையும் நினைத்ததில்லை. எதிர்பார்த்ததில்லை.

"விரலுக்குத் தகுந்த வீக்கம்தான் எப்போதும் நல்லது. இல்லைன்னால் ஆபரேஷனில் கொண்டு போய் விட்டு விடும்..."

என்பவள், இப்போது சித்ரா மாதிரி ஒரு கோடீஸ்வரியை மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் எனத் துடிக்கிறாள். சித்ரா வீடு தேடி வந்து தன் விருப்பத்தைக் கோடி காட்டியிராத பட்சத்தில், அம்மா தானாகப் பெண் கேட்டு அவர்கள் வீட்டிற்குப் போயிருக்கப் போவதில்லை. சித்ரா வந்து சிரித்துச் சிரித்துப் பேசி வீட்டிற்கும் கூட்டிப் போனதால்தான் அம்மாவின் மனதில் அந்த ஆசை அழுத்தமாக விழுந்து போயிருக்கிறது. மடமடவென வேர் விட்டு வளர்ந்திருக்கிறது. அதிலும் சித்ராவின் அப்பா வாசுதேவனின் பேச்சைக் கேட்ட பின்பு விழுது விட்டு பூமி தொட்டுக் கொண்டு நிற்கிறது.



அந்த அளவிற்கு அம்மா ஆசையும் எதிர்பார்ப்புமாக இருக்கிறாள். சித்ரா மீது பிடித்தமாக இருக்கிறாள். அதே சமயம் ஷைலஜாவை வெறுக்கிறாள். அவளது பேச்சை எடுத்தால்கூடப் பற்றி எரிகிறாள்.

அந்த அளவு வெறுப்பு அம்மாவிற்கு ஷைலஜா மீது எப்படி ஏற்பட்டது...? ஏன் ஏற்பட்டது...? வெறும் பழரசடம்ளரை நழுவ விட்டதாலா...? அதற்காக அத்தனை வெறுப்பா...?

"இருக்காது. சின்ன விஷயங்களைப் பெரிது படுத்துபவளல்ல அம்மா. மனிதர்களை வெறுக்கக் கூடியவளல்ல. அப்படிப்பட்டவள் ஷைலஜாவை வெறுக்கிறாள் என்றால், இதை விதி என்று சொல்லாமல் வேறு எதுவும் சொல்ல முடியாது."

இன்று எதற்காக ஷைலஜா இங்கு வந்தாள்...? என்ன காரணம்? .என் வீடு என்பதைத் தெரிந்து கொண்டுதான் வந்தாளா...? என்ன சொல்லி சித்ரா அவளை அழைத்துக் கொண்டு வந்தாள்...? என்ன நடந்தது அவர்களுக்குள்...?

அவனுக்கு தெரிந்து கொள்ள வேண்டும் போலிருந்தது. உடனே ஷைலஜாவிடம் பேச வேண்டுமெனத் தோன்றிற்று. அவளது குரலைக் கேட்க வேண்டும்போலிருந்தது.

கட்டிலின் பக்கத்தில் இருந்த தொலைபேசியை எடுத்து மார்பின் மீது வைத்துக் கொண்டு ஷைலஜாவின் எண்களை சுழற்றினான். மறுமுனையில் ஷைலஜாவின் அம்மா குரல் கேட்டது. வழக்கப்படி பயந்து தொலைபேசியை வைத்து விடாமல் சட்டென்று யோசனை வரத்துணிந்து கேட்டான்.

"ஷைலஜா இருக்காங்களா...?"

"நீங்க யார் பேசறது...?" ஆண் குரல் ஏற்படுத்திய சந்தேகத்துடன் கேட்டாள் அந்த அம்மாள்.

"நான் சித்ரா வீட்லேருந்து பேசறேன். சித்ரா ஷைலஜாகூடப் பேசணுமாம்.

"அப்படியா...? இருங்க கூப்பிடறேன்."

அந்த அம்மாள் சற்றே உரத்த குரலில் ''ஷைலஜா...'' என்று கூப்பிடுவது கேட்டது.

''உனக்கு போன் வந்திருக்கு...''

''யாரும்மா...?''

''சித்ரா வீட்டிலேருந்து பேசறாங்க.''

''யார் பேசறதும்மா....?''

''தெரியலை. நீயே கேளு...''

அவன் மனசு துடிக்கக் காத்திருந்தபோது ஷைலஜா ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ...?''

''ஷைலு...நான்தான் மது பேசறேன்.''

அவள் பேசலாமா வேண்டாமா என்று யோசிப்பவளாக ஒரு வினாடி தயங்கினாள்.

''ஷைலு...நான் உன்னைப் பார்க்கணும். இப்பவே இந்த நிமிஷமே பார்த்தாகணும்.''

''எதுக்கு...?''

''என்ன ஷைலு இப்படி கேட்கற...?''

''பின்ன...வேற எப்படி கேட்பாங்களாம்...?''

''என்மேல் என்ன கோபம் ஷைலு....?''

''நான் என்ன தப்பு செய்தேன்...?''

''அப்படி நான் சொல்லலையே... எனக்கு எந்தக் கோபமும் இல்லையே...''

''அப்படின்னா உடனே வா...''

''எங்க....?''

''உங்க வீட்டு தெருக்கோடிக்கு வா. நான் வந்து கூட்டிக்கிட்டுப் போறேன்.''

''ம்ஹூம். நான் வரலை...''

''ஏன்...?''

''பிடிக்கலை.''

''எது பிடிக்கலை...?''

''உங்களையே பிடிக்கலை...''

''நிஜமாகச் சொல்றியா ஷைலு...?''



''நான் ஏன் பொய் சொல்லணும்?''

''எனக்கு உன்கிட்டே பேசணும்.''

''ஐயம் ஸாரி. எனக்கு யார்கிட்டேயும் எதுவும் பேச வேண்டாம்.''

டக்கென்று தொலைபேசியின் ரிஸீவர் வைக்கப் பட்டதில் அதிர்ந்து போய் அப்படியே உட்கார்ந்திருந்தான் அவன்...

20214
19
3235350

ஷைலஜா தொலைபேசியைத் துண்டித்ததில் வெறும் அதிர்ச்சி மட்டுமின்றி ஏமாற்றம், கோபம், வெறுப்பு எல்லாம் எட்டிப் பார்த்தன மதுவின் மனதில். 'சீ! என்ன பெண்' என்கிற சலிப்பு கூட ஏற்பட்டது. ஏன் இத்தனை பொறுமையற்றவளாக இருக்கிறாள் என்று தோன்றியது. படபடப்பும், நிதானமின்மையும், எளிதில் உணர்ச்சி வசப்படுகின்ற சுபாவமும்தான் ஷைலஜா என்பதை அறிவு உணர்த்த சற்றே நிதானமடைந்தான். உணர்ச்சி பூர்வமாக மட்டும்தான் அவளால் நடந்து கொள்ள முடியுமே தவிர அறிவுபூர்வமாக அணுக இயலாது என்பதில் இன்னமும் இறங்கினான். அவளிடம் கோபம் காட்டக் கூடாது. முரண்டு பிடிக்கிற பிடிவாதக் குழந்தையாவாள். பொறுமையும், நிதானமுமாகத்தான் சமாளிக்க வேண்டும். பத்து வயதுச் சிறுமியிடம் பேசுகிற மாதிரி பேசவேண்டும்...

மனதிற்குள் தீர்மானித்த பின்னர் மீண்டும் ஷைலஜாவின் தொலைபேசி எண்ணைச் சுழற்றினான். நல்ல வேளையாக அவளது அம்மா எடுக்காமல் அவளே எடுத்தாள். மறுபடியும் தான் பேசப் போவதை எதிர்பார்த்தே அவள் காத்திருந்ததை உணர்ந்து கொண்டான். தான் பேசாத பட்சத்தில் எந்த அளவு ஏமாற்றமடைந்திருப்பாள் என்பதைப் புரிந்து கொண்டவனாக அவளது ஆர்வமான ஹலோவுக்கு அமைதியான குரலில் பதிலளித்தான்.

''ஷைலு நான்தான். உன்னுடைய மது பேசறேன்.''

''...............''

''ப்ளீஸ். கொஞ்சம் வெளில வா ஷைலு. உன்கிட்ட நிறையப் பேசணும்.''

''எனக்கு யார்கிட்டேயும் எதுவும் பேச வேண்டாம்.''

''என்கிட்ட கூட வா...?''

''முக்கியமா உங்ககிட்டத்தான்.''

''நான் அப்படி என்ன தப்பு பண்ணினேன்?''

''தப்பு பண்ணினதா நான் சொல்லலையே...''

''பின்ன...?''

''ஒண்ணுமில்லை,''

''ஏன் என்கிட்ட பேசமாட்டேன்ற...?''

''சித்ரா கிடைக்கலையா பேசறதுக்கு?''

''நான் இப்போ அவ வீட்லேருந்து தான் வரேன்.''

''என்ன...என்ன...?''

''நேர வா, எல்லாம் சொல்றேன்.''

''என்ன சொல்லணும்?''

''நேர்ல வாயேன்?''

''எதுக்கு வரணும்?'' சித்ராவைக் கூப்பிடுங்க வருவா...''

''அவளையும் கூப்பிட்டுக்கணும்னால் கூப்பிட்டுக்கலாம்.''

''அவளையும் என்ன...? அவளையே கூப்பிடுங்க. அவகிட்டயே பேசுங்க. அவ இருக்கிற போது நான் எதுக்கு? ஒய் மீ...? ப்ளீஸ்....லீவ் மீ...லீவ் மீ இன் பீஸ்....''

வேதாளம் மீண்டும் முருங்கைமரம் ஏறி தொலைபேசி தொடர்பைத் துண்டித்ததும் தன் தவற்றை உணர்ந்து கீழ்



உதட்டைக் கடித்துக் கொண்டான் மது. சிவப்புத் துணியைக் கண்டதும் சீறிப் பாய்கிற காளை மாதிரி சித்ராவின் பெயரைக் கேட்டாலே சிறுபவளிடம் அதைச் சொல்லியிருக்கக் கூடாது என்று நினைத்துக் கொண்டான். இப்போது தவறு தன் மீதுதான் எனப் புரிந்து கொண்டு மறுபடியும் தொலைபேசி எண்களைச் சுழற்றினான், ஷைலஜாவே எடுத்தாள்.

''ஸாரி சித்...'' டக்கென்று நாக்கைக் கடித்துக் கொண்டான் ('என்ன இது...? ஏன் இப்படி உளருகிறேன்...?')

''லுக் மிஸ்டர்.''... ஷைலஜாவின் கோபம் உச்சந்தலையைத் தொட்டது. குரல் உயராவிட்டாலும் அழுத்தமாக வந்தது.

''நான் சித்ரா இல்லை. என் பெயர் ஷைலஜா. டு யு அண்டர்ஸ்டாண்ட்...? டு யு ஃபாலோ மீ...? உங்களுக்கு சித்ராவின் டெலிபோன் நம்பர் வேணும்னால் தரேன் யு கேன் கால் ஹர் பை யுவர் செல்ஃப்.''

''சாரி ஷைலு. வாய் தவறி....''

''வாய் தவறிச்சா, மனசு தவறிச்சான்னு எனக்குத் தெரியாது. தெரிஞ்சுக்கவும் இஷ்டப்படலை. தயவு செய்து இனிமேல் என்னைத் தொந்தரவு செய்யாதீங்க.''

தொலைபேசித் தொடர்பைத் துண்டித்து கீழ் உதட்டை இறுகக் கடித்து அழுகையை அடக்க முயன்றாள் அவள். ஆனாலும் முடியவில்லை. நட்சத்திரங்களாக இரண்டே துளிகள் கண்களின் ஓரத்தில் எட்டிப் பார்த்தன. உள்ளுக்குள் அலை அலையாகப் பொங்கி வந்தது. புயல் நேரத்து சமுத்திரமாக ஆர்ப்பரித்தது.

''வாய் தவறிடுத்தாம். மகாபலிபுரம் போன நாளிலிருந்து சித்ரா ஜெபம் செய்யறது எனக்குத் தெரியாதுன்ற நினைப்பா...? பணம் செய்யிற வேலை. எல்லாருக்குமே இப்போ பணம்தான் தேவையாக இருக்கு...''

கன்னங்களில் நட்சத்திரங்கள் இறங்கிய தருணத்தில் மீண்டும் தொலைபேசி ஒலித்தது. எடுத்தாள்.

''ஷைலு ஐயம் ஸா...''

''ஸாரி. ராங் நம்பர்.''

ரிஸீவரை வைத்துவிட்டு அகன்றபோது அம்மா கேட்டாள்.

''யாருடீ...?''

''ராங் நம்பர்மா....''

அம்மா அவளை சந்தேகமாகப் பார்த்துக் கொண்டே ''ஏதோ சித்ராங்கெனல்லாம் பேசிண்டிருந்த...?'' என்ற போது அவளுக்குள் பழைய கோபம் சுரீரென்று பற்றிக் கொண்டது.

'இங்கிதமில்லாத சென்ற நூற்றாண்டு அம்மாவே, கொஞ்சம் பேசாமல் இரேன். இந்த நூற்றாண்டின் இருபது வயசுகளைப் புரிந்து கொள்ள முடியாமற் போனால் குறைந்த பட்சம் வாயை மூடிக் கொண்டாவது இரேன். எதற்காக என் எல்லா விஷயங்களிலும் குறுக்கிடுகிறாய்? ஒவ்வொரு அசைவையும் ஊடுருவிப் பார்க்கிறாய்...? நீ நிகழ்காலத்தையும் புரிந்து கொள்ளப் போவதில்லை.'

''என்னடீ பேசாமல் இருக்கே...?''

''என்ன...?''

''இதுக்கு முன்னால் யார்கிட்ட பேசின?''

''என் கிளாஸ்மேட், கூடப் படிக்கிறவ. ஏதோ காலேஜ் விஷயம். எல்லாத்தையும் உன்கிட்ட சொல்லிண்டிருக்க முடியுமாம்மா...?'' கோபத்தில் கடுகளவு வெளிப் பட்டது.

அதற்கே அந்த அம்மாள் எரிச்சல் அடைந்தாள்.

''சரி சரி போ. வாயாடாதே. போய்ப் படி. இனிமேல் போன் வந்தால் நான் எடுக்கிறேன்.''



ஷைலஜா நகர தொலைபேசி ஒலித்தது. அவள் நின்று தயங்க அம்மாவின் குரல் அவளைத் துரத்திற்று.

''போ....போய் படிக்கிற வேலையைப் பாரு'' என்றவள் வேகமாக வந்து ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ...''

''...............''

''ஹலோ...''

''கடன்காரக் கட்டைல போறவங்க என் குரல் கேட்டால் பேசமாட்டாங்க.''

தொலைபேசியை வைத்துவிட்டு ஷைலஜாவை முறைத்தாள்.

''படிக்கப் போகலை....?''

''இதோ போய்க்கிட்டே இருக்கேன்.''

உள்ளே போய் அவள் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டபோது தொலைபேசி ஒலித்தது. அம்மா ஓடிப் போய் எடுப்பது தெரிந்தது. எதுவும் பேசாமல் முணு முணுத்துக் கொண்டே ரிஸீவரை வைப்பது கேட்டது.

மதுதான் என்பது புரிய தானே போய் எடுத்துப் பேசியிருக்கலாமோ என்று ஆதங்கப்பட்ட மனதை அடக்க முற்பட்டாள்.

''சீ! திரும்பத் திரும்ப இந்த மனசு ஏன் இப்படி அலை பாயறது....'' சித்ராவைத் துரத்திக்கிட்டு ஓடறவா பின்னால் நான் ஏன் ஓடணும்?''

'ஏய் ஷைலு... நிஜமா நெஞ்சைத் தொட்டுச் சொல்லு...? மது சித்ரா பின்னால் ஓடுவார்னா நினைக்கிற...?'

'ஓடாதவர் ஏன் அவள் வீட்டுக்குப் போனாராம்?'

'காரணம் சொல்றேன் வான்னு உன்னைக் கூப்பிட்டாரி இல்ல...?'

'காரணம்... பெரிய காரணம். மனசு ஒன்றைத் தீர்மானிச்சுட்டால் அதுக்கு சாதகமாக ஆயிரம் காரணம் கற்பிச்சுக்கும்...எந்தக் காரணமாக இருந்தாலும் எதுக்காக அவன் வீட்டுக்குப் போகணும்?'

'அவன் கூப்பிட்டிருப்பான். அதனால் போயிருப்பார். உனக்குத் தைரியம் இருந்தால் நீயும் வீட்டிக்குக் கூப்பிடேன். அம்மா, அப்பாவுக்கு அறிமுகப்படுத்தேன்.'

'ஆமாம். அத்தனைத் தைரியமிருந்தால் நான் ஏன் இப்படி இருக்கேன்...? தைரியமே இல்லாமல் பூட்டிப் பூட்டி வளர்த்த அம்மாவும் அப்பாவும் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்தால் உடனே உட்கார வைத்து காப்பி தரப் போறாங்க இல்ல...' இந்த மாதிரி அம்மா அப்பாவால்தான் நான் பயந்தாங்கொள்ளியாகக் கோழையாக இருக்கேன். சீ! என்ன அப்பா அம்மா இவங்க. எதற்கும் சந்தேகம். இப்படிப்பட்ட கட்டுப்பெட்டி அம்மா அப்பாவுக்குப் பிறந்த எனக்குக் காதலா கேட்கிறது காதல்...?'

அவளது வெறுப்பு, கோபம், இயலாமை, ஆத்திரம் எல்லாம் அம்மாவின் மீதும் அப்பாவின் மீதும் திரும்பிற்று. சித்ரா மாதிரி தன்னை வளர்க்காதது அவர்களின் தவறு எனப்பட்டது. மத்தியத்தர வர்க்கத்திற்கே சொந்தமான பயம், சந்தேகம் இவற்றால் போற்றி போற்றி வைத்து விட்டார்கள் என்பது பிடிபட்டது.

'விளக்கு' வைக்கிற நேரத்துல வாசல்ல என்ன வேலை...?'

''இருட்டினதற்கப்புறம் வெளில போறதுன்னு என்ன கெட்ட பழக்கம்?'

யாராவது ஓர் இளைஞன் தெருவில் போகிறபோது விலாசம் விசாரித்தால்கூட,

'யாருடி அவன்...? என்ன கேட்டான்? என்கிற துருவுகிற பார்வை.



தொலைபேசியில் ஆண்குரல் கேட்டால் சந்தேகம்.

தெரு வாசலில் நின்றால் சந்தேகம்.

ஜன்னலருகில் இருந்தால் சந்தேகம்.

சிரித்தால் சந்தேகம். பேசினால் சந்தேகம்.

சந்தேகம், சந்தேகம், சந்தேகம்....

'சீ! என்ன ஜென்மங்கள்...இவர்களுக்கு வந்து ஏன் பெண்ணாகப் பிறந்தோம்...?'

சட்டென்று அடிமனதின் கேள்விகள் மேல்மனதின் பதில்கள் இரண்டும் நின்று ஆழத்திலிருந்து புதிதான கேள்வி ஒன்று எழுந்தது.

'ஒரு வேளை நானும் சந்தேகம்தான் படுகிறேனோ...? அப்பாவையும், அம்மாவையும் திட்டுகிற எனக்குள்ளும் அதே 'மிடில்கிளாஸ் மெண்ட்டாலிட்டி' தான் இருக்கிறதோ...? எனக்கும் தெரியாமல் நானும் ஓர் நடுத்தர வர்க்கத்துப் பிரஜையாகத்தான் வளர்ந்திருக்கிறேனா...? எலுமிச்சம்பழம், உப்பிலும், காரத்திலும் ஊறி ஊறி ஊறுகாயாக மாறுகிற மாதிரி மாறியிருக்கிறேனா...? மாறுவதென்ன...? ஒரு வேளை பிறவியே ஊறுகாய் தானோ...? உப்பும், காரமும் தானோ...?'

இல்லாவிட்டால் சித்ரா தன் அப்பாவின் பெண் சிநேகிதி பற்றிச் சொன்னபோது ஏன் அப்படி அதிர்ந்து போக வேண்டும்? சொந்த அப்பாவிடம் அவளுக்கு ஏற்படாத அதிர்ச்சி எனக்கு ஏன் ஏற்பட வேண்டும்? மது சித்ராவிடம் பழகுவது ஏன் தவறாகப் பட வேண்டும்? தண்ணீரில் விழுந்தவளைத் தூக்கிக் கொண்டு வந்தது ஏன் விகற்பமாக வேண்டும்? அவள் வீட்டிற்குப் போனது ஏன் குற்றமாகத் தெரிய வேண்டும்?

இதில் எது குற்றம்...? எது தவறு...? என் பார்வையும், நினைப்பையும் தவிர குற்றமும் தவறும் எதில் இருந்திருக்கிறது...? கடவுளே...! நான் ஏன் இப்படி இருக்கிறேன்...?

எதற்காக இவ்வாறு நடந்து கொள்கிறேன். அப்பாவையும், அம்மாவையும் திட்டுகிற எனக்கும் அதே நடுத்தர வர்க்கத்துப் பார்வையும், புத்தியும் தானே வந்திருக்கிறது?

பரந்து சிந்திக்கும் மனப்பான்மையும், விரிவாகப் பார்க்கும் பார்வையும் ஏன் ஏற்படவில்லை.... ஏன் எல்லாமே கோணலாகப்படுகிறது? கோணங்கித்தனமாக நினைக்கத் தோன்றுகிறது...?

எல்லாமே இல்லை. எல்லாவற்றிலும் கோணல் தெரிவதில்லை. கோணங்கித்தனமான எண்ணமில்லை. மதுவைப் பற்றிய விஷயங்களில்தான் ஏற்படுகிறது. மதுவிடம் மட்டும்தான் தோன்றுகிறது. அவர் யாரிடம் பேசினாலும் சந்தேகம் வருகிறது. மனதிற்குப் பிடிக்காமல் போகிறது.

அதே மாதிரித்தான் அப்பாவிற்கும் அம்மாவிற்கும் கூட நம் மீது மட்டும் தோன்றுகிறதா? சந்தேகம் வருகிறதோ...? கேள்விகள் கேட்கிறார்களோ...?

மதுவின் மீது எனக்கு சந்தேகமும், பொறாமையும் வரக் காரணம் அன்பு. அபரிமிதமான அன்பு. அவர் எனக்கு மட்டும்தான் சொந்தமாக இருக்க வேண்டும் என்கிற உரிமை கலந்த காதல்....

அதே அன்பும் பாசமும்தான் அப்பாவையும் கூட கேள்விகள் கேட்க வைக்கின்றன. பாதுகாக்க வைக்கின்றன. பணம் படைத்தவர்களுக்கு பணம் மிகப் பெரிய பலம், அந்த பலமில்லாத காரணத்தினால்தான் நடுத்தரவர்க்கத்தினர் அதிகப் பாதுகாப்பு தேடுகிறார்கள். தருகிறார்கள். அதைத் தவறாக நினைத்தது நம் தப்புத்தான்.

அதே தப்பைத்தான் மது விஷயத்திலும் செய்கிறேன். அனாவஸ்யமாக அவசரப்பட்டு, சந்தேகப்பட்டு நானும் கஷ்டப்பட்டு, அவரையும் கஷ்டப்படுத்துகிறேன். அதிலும் போட்டி என்று வந்த பின்னால் நான் எதுவும் செய்வேன். எந்த விளிம்பிற்கும் செல்வேன் என்று சொல்லிவிட்டே



சித்ரா செய்கிறாள். அதை எதிர்கொள்ள முடியாமல், சமாளிக்கிற வழி தெரியாமல் வெறும் கோபப்பட்டு, ஆத்திரப்பட்டு, பேச்சில் எரிச்சலும், வெறுப்பும் கலந்து கொட்டி...

'மது புரிந்துகொள்ளுங்களேன். இவை அத்தனைக்கும் காரணம் நான் உங்கள் மீது வைத்திருக்கிற ஆழமான அன்புதான் என்பதைத் தெரிந்துகொள்ளுங்களேன்...'

உடனே மதுவிடம் பேச வேண்டுமென்று தோன்றிற்று. ஓடிப்போய் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றி மன்னிப்பு கேட்கவேண்டும் போலிருந்தது.

சடாரென்று புத்தகத்தை வைத்துவிட்டு எழுந்து வரவேற்பறைக்கு வந்தாள். சோபாவில் உட்கார்ந்திருந்த அம்மா கேட்டாள்.

''என்னடி...?''

''போன் பண்ண வந்தேன்?''

''யாருக்கு?''

''ஒரு பிரெண்டுக்கு?''

''எந்த பிரெண்ட்?''

''ஏம்மா. எல்லார் பேரையும் உன்கிட்ட சொல்லிண்டிருக்க முடியுமாம்மா...?''

அந்த பதிலில் எரிச்சலடைந்த அம்மா சோபாவை விட்டு எழுந்து சமையலறைக்குள் நுழைந்தவாறு சொன்னாள்.

''சரி. சரி. வளவளன்னு பேசிண்டே இருக்காமல் சீக்கிரம் பிடிச்சுண்டு சாப்பிட வா.''

அம்மா மறைவதற்கென்று காத்திருந்தவள் மடமட வென்று மதுவின் தொலைபேசி எண்களைச் சுழற்றிவிட்டு மனசு படபடக்கக் காத்திருந்தாள்.

மறுபக்கம் ரிஸீவர் எடுக்கப்பட்டு அழுத்தமான பெண் குரல் ஹலோ என்றது.

''மது இருக்காரா...?''

''நீங்க யார் பேசறது...?''

''ஷைலஜா.''

''ஓ...நீயா...? அவன் இல்லையே...வெளில போயிருக்கான.''

''நீங்க அம்மாவா...?''

''ஆமாம். மதுவோட அம்மா. குரல் தெரியலையா...?''

''தெரியலைம்மா. எப்போ வெளில போனார்மா...?''

''சாயந்திரமே போயிட்டான்...''

''அ...அப்படியா...? கொஞ்ச நேரம் முன்னால் என் கிட்ட பேசினாரே...?''

''பேசினானா...?''

''ஆமாம். ரெண்டு மூணுதரம் பேசினார். வீட்லேருந்துதான் பேசறார்னு நினைச்சேன்.''

அதற்கு அந்த அம்மாளிடமிருந்து பதில் வராததால் அவளே கேட்டாள்.

''எப்போம்மா வருவார்?''

''தெரியலை.''

''வந்தால் நான் போன் பண்ணினதாகச் சொல்றீங்களா...?''

''சொல்லமாட்டேன்.''

''சொல்ல மாட்டீங்களா...?''

''ஆமாம். இதப்பாரு...உன் பேர் என்ன சொன்ன...? என் மனசுலயே நிற்க மாட்டேன்னுது...''



''ஷைலா...ஷைலஜா...''

''சரி. ஏதோ ஒரு பேர். இந்த மாதிரி இனிமேல் அனாவஸ்யமா அவனுக்குப் போன் பண்ணாதே. நேரம் கெட்ட நேரத்துல பண்ணி தொந்தரவு படுத்தாதே. அது அவனுடைய கல்யாண வாழ்க்கையைப் பாதிக்கும்.''

''கல்...யாணமா...?''

''ஆமாம்.''

''அவருக்கா...?''

''ஆமாம்.''

''எ...எப்போ...?''

''கூடிய சீக்கிரம்.''

''பொண்ணு...யா...ருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?

''வேற யார்...சித்ராதான்.''

அதிர்ந்து அப்படியே நின்று போனாள் ஷைலஜா...

## 20

தாங்கிக்கொள்ள முடியாமற் போயிற்று ஷைலஜாவால். ஒரு வினாடி இதயம் துடிப்பதை நிறுத்தி மீண்டும் தொடர்ந்தது. கண்ணோரங்களில் அழுகை கரை கடக்கக் காத்துக் கொண்டு நின்றது. ஏதோ ஒரு வேகத்திலும், குழந்தைத்தனமான கோபத்திலும், அவசரத்திலும், படபடப்பிலும்தான் மதுவிடம் பேசமாட்டேன் என்று சொன்னாளே தவிர வெறுப்பில் சொல்லவில்லை. நிஜமாகச் சொல்லவில்லை. நிஜமாகச் சொல்ல அவளால் முடியவும் முடியாது. மது இல்லாத வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியாது. மறக்க முடியாது. அவனைத் தவிர வேறு யாரையும் துணை என்று ஏற்றுக்

கொள்ள இயலாது. ஒன்றைப் பிடி. உறுதியாகப் பிடி என்கிற மாதிரி மனதிற்குப் பிடித்ததை இறுகப் பற்றிக் கொள்வாளே தவிர மாற்றிக்கொள்ள மாட்டாள். மாறுவதைப் பற்றி நினைத்துக்கூடப் பார்க்க மாட்டாள். அப்படியெல்லாம் மாற்றிக்கொள்கிற பெண் இல்லை அவள்.

இதெல்லாம் மதுவிற்குத் தெரியும். அவளின் இந்த குணம்தான் அவனை மிகவும் கவர்ந்தது. அது மட்டுமின்றி அவளது எளிமை, சாதாரணமாக, இயல்பாகப் பழகும் சுபாவம், எதையும் சட்டென்று சுலபமாக நம்பிவிடுகிற தனம், உள்ளுக்குள் ஒன்று வைத்து வெளியில் வேறொன்றைப் பேசாத வெள்ளை மனம், வெகுளித்தனம் இவை எல்லாமும்தான் மதுவிற்கு அவளைப் பிடித்துப் போனதன் காரணம்.

''என்ன ஷைலு நீ இப்படி இருக்க...?''...அவளுடன் பழக ஆரம்பித்த புதிதில் ஆச்சரியமாகக் கேட்டான் அவன்.

''எப்படி....?''—ஒன்றும் புரியாதவளாக விழித்தாள் அவள்.

''குழந்தை மாதிரி இருக்க...''

''ஐய குழந்தை புடவை கட்டுமா...?''

''இதோ கட்டிக்கிட்டு நிற்குதே. மாறுவேடப் போட்டியில் நீ பார்த்ததில்லை...? சின்னக் குழந்தைகளுக்குப் பெரிய பெரிய வேஷம் போடுவாங்க. அந்த மாதிரிதான் நீ போட்டுக்கிட்டு நிற்கிற...''

''போங்க நீங்க. என்னை கலாட்டா பண்றீங்க.''

''கலாட்டா பண்ணலை. நிஜமாகத்தான் சொல்றேன். குழந்தைங்க கொஞ்சம் கூட முதிர்ச்சி இல்லாமல் மனசுல இருக்கிற அத்தனையும் வெளியில் கொட்டும் பாரு. அந்த மாதிரிதான் நீயும் கொட்ற...எல்லா உணர்ச்சிகளையும்



வெளில காட்டிடற. கோபம், ஆத்திரம், பொறாமை, படபடப்பு எல்லாமே வெளில வந்துடுது. மனசுல ஒண்ணும் தங்கமாட்டேன்னுது. அந்த மாதிரி இருக்கக் கூடாது ஷைலஜா.''

''போங்க. என்னால் அந்த மாதிரித்தான் இருக்க முடியும். எல்லாத்தையும் வெளில கொட்டினால்தான் எனக்கு நிம்மதி. நான் நானாகத்தான் இருப்பேனே தவிர மாற மாட்டேன்.''

இப்படி அவர்கள் பேசிக்கொண்டதெல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. தன்னை அவன் குழந்தையாக பாவித்தது நெஞ்சில் வந்து போயிற்று. அதே குழந்தைத்தனத்தில் தான் இப்போதும் இப்படி பேசிவிட்டேன் என்பதை அவன் ஏன் புரிந்து கொள்ளவில்லை என நினைத்தபோது மனது சங்கடப்பட்டது. துக்கம் தொண்டையை அடைத்தது. கதறி கதறி அழ வேண்டுமெனத் தோன்றிற்று. அழுதால் அம்மாவிற்குத் தெரியவரும். கேள்விகள் கேட்பாள். அழுவதற்குக்கூட அந்த வீட்டில் உரிமை இல்லை. தனிமை இல்லை என்பதை உணர்ந்து அதற்குமேல் தாங்கிக்கொள்ள மாட்டாதவளாக எழுந்து குளியலறைக்குள் போய் கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டாள். குழாயைத் திறந்துவிட்டு பிளாஸ்டிக் வாளியில் தண்ணீர் விழுகிற சத்தத்தில் வாய்விட்டு அழுதாள்.

'மது....என்னைப் புரிஞ்சுக்கோங்களேன். நீங்க இல்லாமல் என்னால் இருக்க முடியாது என்பதைத் தெரிந்து கொள்ளுங்களேன். சித்ராவிற்குப் பணம் இருக்கிறது. எதையும் சாதிக்கிற திறமை இருக்கிறது. ஓடிவந்து செய்ய ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் எனக்கு எதுவுமில்லை. யாருமில்லை. உங்களைத் தவிர ஒருவருமில்லை. நீங்கள் சித்ராவிடம் பழகுகிற பொறாமையில், எங்கே அவளை நேசித்துவிடுவீர்களோ என்கிற பயத்தில்தான் அப்படிப் பேசினேனே தவிர வேறு எதுவுமில்லை. மது...எனக்கு

உங்களைப் பார்க்க வேண்டும். அதுவும் இப்போதே பார்க்க வேண்டும். என் மனதில் இருப்பதையெல்லாம் கொட்ட வேண்டும். இந்த நிலையில் என்னால் சாப்பிட முடியாது. தூங்க முடியாது. படிக்க முடியாது. ஏன், மூச்சுகூட விட முடியாது. என்னால் சித்ரா மாதிரி நினைத்த நேரத்தில் வீட்டைவிட்டு வெளியில் வரமுடியாது. எனக்கு உங்கள் வீடு தெரியாது. தெரிந்தாலும் தனியாக வருகிற தைரியம் கிடையாது. எல்லாம் தெரிந்தும் நீங்கள் இப்படிச் செய்யலாமா மது...? தயவு செய்து என்னிடம் பேசுங்கள் மது. நீங்கள் இல்லாமல் நான் இல்லை மது. நான் உங்கள் மீது எல்லையற்ற அன்பு வைத்திருக்கிறேன். அன்பு இருக்கிற இதயத்தில்தான் பொறாமை வரும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்களேன்...'

வாய்விட்டு அரற்றி அவள் அழுது கொண்டிருந்தபோது வாளி நிறைந்து தண்ணீர் வழிய ஆரம்பித்தது. வெளியில் அம்மா குளியல் அறைக் கதவைத் தட்டுவது கேட்டது.

''அரை மணி நேரமாக பாத்ரூமுக்குள்ள என்னடி பண்ற...?''

அவசரமாகக் கண்களைத் துடைத்து, முகம் கழுவி அழுத சுவடு தெரியாதிருக்க முயன்றவளாக வெளியில் வந்தாள் அவள்.

''இத்தனை நேரமாக பாத்ரூமுக்குள் என்னடி பண்ணின...?''

''பாத்ரூமுக்குள் என்னம்மா பண்ணுவாங்க...?''

திருப்பிக் கேட்ட கேள்வியில் குரல் கரகரத்ததைத் தடுத்துக் கொள்ள முடியவில்லை அவளால். அம்மாவும் பெண் என்பதையும் மறந்து போனாள். அவள் முகத்தையும், சிவந்திருந்த கண்களையும் கவனித்த அம்மாவின் புருவங்கள் சுருங்கின.

''அழுதியாடி...?''



''இல்லையே...''

''பொய் சொல்லாத, உன் கண்ணும் மூஞ்சியும்தான் நீ அழுதிருக்கிறதைச் சொல்றதே...ஏண்டி அழுத...?''

''நான் அழலேம்மா...'' சொன்ன போதே அவளுக்குள் அழுகை துறுத்துக் கொண்டு வந்தது. கண்கள் நீரில் மிதக்கத் துவங்கின. அந்தச் சின்ன அனுதாபமும் ஆறுதலும் தேவையாக இருந்தன. சரிவதற்கு ஒரு தோள் இருந்தால் தேவலாம் என்று மனம் ஆதங்கப்பட்டது.

அதை கவனித்த பெற்ற மனம் பதறிப் போயிற்று. தாய் உள்ளம் தவித்தது.

''என்னடீ ஆச்சு...ஏன் இப்படி அழற...''

''ஒன்னுமில்லேம்மா...''

அந்த அம்மாளால் விட முடியவில்லை. சடாரென்று அவள் தோள் மீது கை போட்டு அணைத்துக் கொண்டாள். முதுகு வருடினாள். குரல் கனிய கேட்டாள்.

''ஏன் இப்படி துக்கம் பொத்துக்கிட்டு வருது ஷைலஜா...? என்ன ஆச்சு சொல்லும்மா...? சாயந்திரத்திலிருந்து பார்க்கிறேன். நீ சரியாகவே இல்லை...''

அந்தத் தூண்டுதல் தேவைப்பட சடாரென்று தாயின் தோளில் சரிந்து கொண்டாள். முகம் புதைத்து கரகரவென்று கண்ணீர் விட ஆரம்பித்தாள்.

அவளது முகத்தை நிமிர்த்தி கண்ணீரைத் துடைத்த அந்த அம்மாள் எது எதுவோ நினைத்து நெஞ்சு படபடக்க மறுபடியும் கேட்டாள்.

''சொல்லும்மா....என்ன ஆச்சு...? இந்த அளவு துக்கப் படும்படியான விஷயம் என்ன நடந்திச்சு....?''

அதற்குப் பின்னரே தன் தவறு பிடிபட சடாரென்று தன்னை சமாளித்துக் கொண்டாள் ஷைலஜா. அம்மாவின் தோள்விட்டு விலகி முகம் துடைத்துக் கொண்டாள்.

''ஒண்ணுமில்லைம்மா... சித்ராவுக்கும் எனக்கும் கொஞ்சம் மனஸ்தாபம்.''

''அப்படித்தான் இருக்கும்னு நானே நினைச்சேன். டெலிபோன்ல நீ பேசினதை வச்சு ஊகிச்சேன். ஏண்டி அவகூட சண்டை போடற...?''

முற்றிலும் தன்னை சமாளித்துக் கொண்டு விட்ட ஷைலஜா லேசாய் நிஜம் கலந்து பொய் சொல்லத் துவங்கினாள்.

''நான் போடலைம்மா. அவதான் சண்டை போடறா. என் கூட போட்டி போடறா...''

''ஷைலு, நான் உனக்கு ஒண்ணு சொல்லட்டுமா...? கேட்டுக்கறியா....?''

''ம்...''

''சித்ரா கூட சண்டை போட நம்மால் முடியுமா...? நாம் எங்கே...அவள் எங்கே...? மலைக்கும் மடுவுக்கும் இருக்கிற வித்தியாசம். வானத்துக்கும் பூமிக்கும் இருக்கிற வித்தியாசம். எத்தனை ஏணி வச்சாலும் எட்ட முடியாத உயரம். அவளோடு உனக்கென்னடி மனஸ்தாபம். அத்தனை பெரிய பணக்காரியானாலும் நல்ல பொண்ணு. அந்தஸ்து வித்தியாசம் பார்க்காமல் சாதாரணமாகப் பழகறா. நம் வீடு தேடி ஓடி வர்றா. அவகூட சண்டை போடலாமாடி...? அவளை மாதிரி ஒருத்தி சினேகிதமாகக் கிடைக்க நீ ரொம்பக் கொடுத்து வச்சிருக்கணும். அந்த மாதிரி பணக்காரங்க சினேகிதமெல்லாம் வாழ்க்கைக்கு ரொம்பத் தேவை. துவங்க உதவி தேவை. ஏணிப்படியாக வச்சுக்கிட்டால் ஏற சௌகர்யமாக இருக்கும்.''

கேட்கக் கேட்க மனது அமைதியடைவதற்கு பதிலாக இன்னமும் சங்கடப்படத் துவங்கிற்று ஷைலஜாவிற்கு. 'இதே மாதிரி மதுவும் நினைப்பாரோ...? மதுவின் அம்மாவும் இப்படி நினைப்பதற்கு சாத்தியமிருப்பதை உணர்ந்து மறுபடியும் கண்கலங்கலானாள்.



உண்மையான அன்பு, ஆசை, பாசம் இவற்றிற்கெல்லாம் மேலாக வாழ்க்கைக்கு இது போன்ற ஏணிப்படிகளே அதிகம் தேவையாக இருப்பதை உணர்ந்தாள். அதைத் தேடித்தான் மனிதர்கள் ஓடுவார்கள் என்பதையும் புரிந்து கொண்டாள்.

'ஒரு வேளை அதைச் சொல்லத்தான் மது டெலிபோனில் கூப்பிட்டாரோ...? நேரில் பேசலாம் என்றாரோ? தான் ஏணிப்படி தேடிக் கொண்டு விட்டேன், என்னை மறந்து விடு என்பாரோ...?''

நினைத்து நினைத்து தவித்துப் போனாள். அதற்கு மேலும் மதுவைப் பார்க்காமல் இருக்க முடியாது என்பதை உணர்ந்து மெல்ல அம்மாவை ஏறிட்டாள். அந்தப் பார்வையின் கெஞ்சலைப் புரிந்து கொண்ட அம்மா கேட்டாள்.

''என்ன... நான் சொன்னதெல்லாம் சரிதானே...? மனசுல ஏறிச்சா...''

ஏறிற்று என்று தலையாட்டினாள்.

''என்ன செய்யப் போற...?''

''சித்ரா வீடு வரைக்கும் போகலாம்னு இருக்கேன்.''

''இப்போவா...?''

''மணி எட்டாயிடுத்தேடி... காலைல பார்த்துக் கோயேன்.''

''இல்லம்மா...இப்பவே பார்த்துடறேன்.''

''போன்ல பேசேண்டி...''

''வேணாம்மா....நேர்ல போயே பார்த்துடறேம்மா...''

அம்மா தயங்க இவள் கெஞ்சினாள்.

''ப்ளீஸ்மா. போறேம்மா. நேர்ல பார்த்து பேசினால் தாம்மா மனசு நிம்மதியா இருக்கும்.''

''அப்பா வந்தால் திட்டுவார்டி...''

"சித்ரா வீடுன்னு சொன்னால் திட்டமாட்டார்மா."

"சரி. ரகுவை கூட்டிட்டுப் போ..."

"வேணாம்மா. ரகு வேணாம். நான் சீக்கிரம் வந்துடறேன். சித்ராவே கொண்டு வந்து விட்டுடுவாள்."

"சரி. அவளுக்கு போன் பண்ணி சொல்லிட்டுக் கிளம்பு. போனேன் வந்தேன்னு கால்மணி நேரத்துல வந்துடு."

"சரிம்மா...என் செல்ல அம்மா..."

அம்மாவைக் கட்டிக் கொண்டு கன்னங்களில் முத்தமிட்டாள். மடமடவென்று புடவை மாற்றினாள். முகத்தை சரி செய்து கொண்டாள். பர்ஸைத் திறந்து கையில் என்ன பணம் இருக்கிறது என்று பார்த்தாள். மாத முதலானதால் ஐம்பது ரூபாய் இருந்தது. ஆட்டோவிற்கு அது போதும் என்று தோன்றிற்று. காலையில் சித்ரா கூட்டிப் போன மதுவின் வீடு லேசாக நியாபகமிருந்தது. ஆனாலும் அவளுக்கு போன் பண்ணி அட்ரஸ் வாங்கலமா என்று நினைத்தாள். 'சீ! அவளிடமா...?' என்கிற எண்ணம் குறுக்கிட்டது. இனி அவள் முகத்தில் கூட விழிக்கக் கூடாது. மதுவின் கால்களில் விழலாமே தவிர அவளிடம் எதற்கும் போய் நிற்கக் கூடாது. இனி சித்ரா என்பவளின் சினேகிதமே வேண்டாம்.'

சட்டென்று ஓர் எண்ணம் குறுக்கிட்டது. மதுவின் தொலைபேசி எண்களைச் சொல்லி 197லிருந்து அவனது விலாசம் வாங்கினால் என்ன? அல்லது டெலிபோன் டைரக்டரி பார்க்கலாமே...?

அம்மா சமையலறைக்குப் போன சமயம் 197 சுழற்றி மதுவின் தொலைபேசி எண்ணையும், பெயரையும் சொல்லி விலாசம் கேட்டாள். கொடுக்கப்பட்ட விலாசத்தை மனதிலேயே குறித்துக் கொண்டாள். ரிஸீவரை வைத்த போது அம்மா வரவேற்பறைக்கு வந்தாள்.



"என்னடி சித்ரா இருக்காளா?"

"இருக்காம்மா..."

"வரேன்னு சொன்னியா?"

"சொல்லிட்டேம்மா."

"போயிட்டு சீக்கிரம் வந்துடு."

"சரிம்மா."

படியிறங்கி தெருக்கோடி போய் ஆட்டோ பிடித்து மதுவின் விலாசம் சொல்லி பத்தடி நகர்ந்திருப்பாள் ஷைலஜா. அவள் வீட்டு தொலைபேசி ஒலிக்க ஆரம்பித்தது. அம்மா வந்து 'இதுக்கு வேற வேலை இல்லை. ஒரு வேலை செய்ய விடமாட்டேன்னுது' என முணு முணுத்துக் கொண்டே வந்து எடுத்தாள்.

"ஹலோ..."

"நான் சித்ரா பேசறேம்மா. ஷைலஜா இல்லை...?"

"இல்லையே... இப்போதானே உன் வீட்டுக்குக் கிளம்பிப் போறாள்.

"என் வீட்டுக்கா...? நான் வீட்ல இல்லையே...வெளில இருந்துதானே பேசறேன்."

"என்னம்மா சொல்ற நீ...! உன் வீட்டுக்கு போன் பண்ணினாளே... நீ இருக்கிறதா சொல்லிட்டுத்தானே போனாள்.. "

"அப்படியா...? எனக்குத் தெரியாதேம்மா ஒரு வேளை என் வீட்ல வேற யார்கிட்டேயாவது பேசியிருக்கலாம்.

"அப்படின்னா உன்கிட்ட பேசினதா என்கிட்ட ஏன் பொய் சொன்னா...? நீ வீட்ல இருக்கிறதாகக் கூடச் சொன்னாளே...?"

"அவசரத்துல மறந்து போய் ஏதாவது வாய் தவறி உளறி இருப்பா..."

''அது எப்படி வாய் தவறும்...?'' என்ற அம்மா அடி வயிறும், மனமும் பதற யோசிக்கத் தொடங்கிய போது சித்ரா சமாதானப்படுத்துகிற மாதிரி பேசினாள்.

''நீங்க கவலைப்படாதீங்கம்மா. நான் உடனே கிளம்பி வீட்டுக்குப் போய் பார்க்கிறேன்.''

தொலைபேசியைத் துண்டித்த தாயின் மனது மகள் தன்னிடம் பொய் சொல்லிவிட்டு சித்ரா வீட்டிற்குப் போகாமல் வேறு எங்கோ போயிருக்கிறாள் என்கிற நிஜம் உணர்ந்து தவியாய் தவித்தது.

## 21

ஷைலஜாவின் அம்மாவிடம் பேசிய சித்ரா உடனே தன் வீட்டிற்கு வந்தாள். ஷைலஜா வீட்டிற்கு வருவாள் என்று எதிர்பார்த்து அரைமணி நேரத்திற்கும் மேலாகக் காத்திருந்தாள். அவள் வராது போகவே மீண்டும் தொலைபேசியில் அழைத்தாள்.

''ஷைலஜா இன்னும் வரலையேம்மா...?'' என்றாள்.

அந்த அம்மாள் பயமும், பதட்டமுமான குரலில் பதில் சொன்னாள்.

''உன் வீட்டுக்குப் போறதாகச் சொல்லிட்டுத்தாம்மா கிளம்பினாள்.''

''எதுல போறதாகச் சொன்னாள்மா...?''

''வழக்கப்படி ஆட்டோவில் போறதாகத்தான் சொன்னாள்.''

''ஒரு வேளை பஸ்ல வராளோ என்னவோ...?''

''பஸ்ஸானால் கூட இத்தனை நேரம் வந்திருக்கணுமே...?''



''பஸ் கிடைக்கலையோ என்னவோ...? பயப்படாதீங்கம்மா. கவலைப்படாதீங்க. இங்கதான் வருவாள். வந்ததும் நான் திரும்ப போன் பண்றேன். இல்லைன்னால் நானே கார் எடுத்துக்கிட்டு வரேன்.''

''இவர் வந்தால் என்னைக் கொன்னு போட்டுடுவார்மா. ஏன் தனியாக அனுப்பினேன்னு கோவிச்சுப்பார். எனக்கென்னவோ கவலையாக இருக்கு. அடிவயிறெல்லாம் புரட்டுது...''

''ஐயயோ...என்னம்மா நீங்க...? இந்தச் சின்ன விஷயத்துக்குப்போய் இப்படி மனசை அலட்டிக் கிறீங்க...?''

''இல்லம்மா.... ஆம்பிளையானால் பரவாயில்லை. பொம்பளைப் பொண்ணு...''

''பொம்பளைங்க தனியா சந்திரமண்டலத்துக்குப் போற காலம்மா இது. அமெரிக்கா லண்டன்னெல்லாம் போறாங்க. நீங்க பிரெண்டு வீட்டுக்கு அனுப்பறதுக்கு பயப்படறீங்க...?''

''அந்த அளவு பெரிசா சிந்திக்கிற குடும்பமில்லேம்மா. தனியா அனுப்பிப் பழக்கமில்லை. உங்க வீடுன்ற காரணத்தினால் விடறோம்...''

''ஒரு கவலையும் படாதீங்க. வந்துடுவாள்.''

''வேற எங்கேயாவது போயிருப்பாளாம்மா...? வேற எந்த சினேகிதி வீட்டுக்காவது....''

''ம்ஹூம். அப்படியெல்லாம் அவளுக்கு வேற எந்த சினேகிதியும் கிடையாது. என்னைவிட்டால் யார் வீட்டுக்கும் போக மாட்டாள். பயப்படாமல் இருங்க. வந்ததும் போன் பண்ணிச் சொல்றேன்.''

அந்த அம்மாவுக்கு தைரியம் சொன்னாளே தவிர உள்ளுக்குள் அவளுக்கும் கவலை ஏற்பட்டது. நேரமாக ஆக ஷைலஜா வராததால் எங்கே போயிருப்பாள் என்ற

கேள்வி எழுந்தது. ஒருவேளை மதுவின் வீட்டிற்குப் போயிருப்பானோ...? இல்லாவிட்டால் இங்கு வருவதாகச் சொல்லிவிட்டு மதுவுடன் வழக்கப்படி வெளியில போயிருக்கலாமோ...? அப்படிப் போவதானாலும் இருட்டிய பின் போகமாட்டானே...மதுவின் வீடுகூட அவளுக்குத் தெரியாதே...மதுவின் வீட்டிற்கு டெலிபோன் செய்து பார்த்தால் என்ன...?

தொலைபேசி எண்களைச் சுழற்றியதும் மறு பக்கத்தில் ருக்மிணியம்மாளின் குரல் கேட்டது.

''அம்மா நான்தான் சித்ரா பேசறேன்.''

''சொல்லும்மா...''— அந்த அம்மாளின் குரல் குழைந்தது.

''மது இருக்காராம்மா...?''

''இருந்தாம்மா. இத்தனை நேரம் இங்கதான் இருந்தான். இப்போதான் கிளம்பி வெளில போனான்.''

''எங்க போனார் தெரியுமாம்மா...?''

''தெரியலையே...சொல்லிட்டுப் போகலையே...''

சித்ரா தயங்கினாள்.

''என்ன விஷயம் சித்ரா...?''

''இல்லம்மா...அவர் எங்கே போனார்னு தெரிஞ்சுக்கணும். யாருக்காவது போன் பண்ணிட்டுப் போனாரா...?''

இப்போது அந்த அம்மாள் தயங்கினாள்.

''சொல்லுங்கம்மா...ஷைலஜாவுக்கு போன் பண்ணினாரா...?''

மீண்டும் தயங்கி அந்த அம்மாள் உண்மை சொன்னாள்.

''அந்தப் பொண்ணு கொஞ்ச நேரத்துக்கு முன்னால் போன் பண்ணித்து.''



''என்ன சொன்னாள்?''

''என்கிட்டதான் பேசித்து...''

''அவர்கிட்ட பேசலையா...?''

''அவன்கிட்ட பேசணும்னு கேட்டுது. நான்தான் கொடுக்கலை. அவன் வீட்ல இல்லைன்னு சொல்லிட்டேன்.''

''அப்புறம்...?''

''இப்போதான் என்கிட்ட பேசினார். இல்லைன்னு சொல்றீங்களேன்னு கேட்டுது...''

''அதுக்கு நீங்க என்ன பதில் சொன்னீங்க?''

''..........''

''தயங்காமல் சொல்லுங்கம்மா. என்ன பதில் சொன்னீங்க....?''

''இனிமேல் இங்க போன் பண்ணாதே. அனாவஸ்யமா அவனைத் தொந்தரவு செய்யாதேன்னு சொன்னேன்.''

''ஏம்மா அப்படிச் சொன்னீங்க?''

''என் மனசுக்குப் பட்டதைச் சொன்னேன்.''

''வேற ஏதாவது சொன்னீங்களா?''

''ஏம்மா இத்தனை கேட்கற...?''

''காரணமாகத்தான் கேட்கிறேம்மா...''

''அந்தப் பொண்ணு ஏதாவது சொல்லித்தா?''

''எந்தப் பொண்ணும்மா...?''

''அதான்...ஷைலஜாவோ, புய்லஜாவோ...''

''உங்களுக்கு ஏம்மா அவ பேரைக் கேட்டாலே இத்தனைக் கோபம் வருது?''

''கோபம் மட்டுமில்லை. வெறுப்பும் வருது....''

''அதான் ஏன்னு கேட்கிறேன்''

''இங்கிதம் தெரியாத பொண்ணு...''

''அதுமட்டும்தான் காரணமா?''

''..........''

''சொல்லுங்கம்மா. அவளுக்கு இங்கிதம் தெரியலேன் றதுதான் காரணமா?''

''என் மனசுக்கு அவளைப் பிடிக்கலை.''

''ஏம்மா...?''

''இதப்பாரும்மா சித்ரா, நீ உன் சிநேகிதிக்காகப் பரிஞ்சுக்கிட்டு வந்தாலும், எத்தனைத் துருவித் துருவிக் கேட்டாலும் என் பதில் ஒண்ணுதான். உனக்கும், மதுவுக்கும் நடுவில் யார் குறுக்கிட்டாலும் எனக்குப் பிடிக்காது.''

''ஷைலஜா குறுக்கிடறதாக உங்களுக்கு ஏம்மா தோணித்து?''

''என் பிள்ளையே சொன்னான்''—சட்டென்று பொய் சொல்லி அறியாத வாய் உண்மை சொல்லிற்று. அதைப் பிடித்துக் கொண்டாள் சித்ரா.''

''என்னம்மா சொன்னார்?''

''என்னவோ சொன்னான் விடு. அது எதுக்கு உனக்கு?''

''தெரிஞ்சுக்கலாம்னு தான் கேட்கிறேன்.''

''தெரியவேணாம் உனக்கு.''

'ஆனால் உங்களுக்குத் தெரிந்ததைவிட நிறைய விஷயம் எனக்குத் தெரியுமே...' என்று நினைத்துக் கொண்ட சித்ரா ஒரு வினாடி யோசித்தாள். அந்தச் சிறிது நேர மௌனத்தைக்கூட தாங்க இயலாத அந்த அம்மாள் தவித்துப் போனாள்.

''என்னம்மா சித்ரா பேசாமல் இருக்க?''



''நான் உங்ககிட்ட ஒண்ணு கேட்கலாமாம்மா?''

—சித்ராவின் குரல் தழைந்து மெதுவாக வந்தது.

''கேளும்மா, தாராளமாகக் கேளு.''

''என்னைப்பாக்காமல் நேராக ஷைலஜாவை மட்டும் பார்த்திருந்தால் ஏற்றுக்கிட்டிருப்பீங்களா மாட்டீங் களா...?''

''ஏற்றுக்கிட்டிருப்பீங்களான்னால்...என்ன அர்த்தம்?''

''மருமகளாக்கிக்க சம்மதிச்சிருப்பீங்களா மாட்டீங் களா?''

''அதைப்பற்றி இப்போ எதுக்கு?''

''சொல்லுங்களேன், ப்ளீஸ்...?''

''நடக்காத ஒன்னை, நடக்கப் போகாத ஒன்னைப் பற்றி அனாவஸ்யமாக எதுக்கு யோசிச்சுப் பார்க்கணும்?''

''இல்லம்மா...சும்மா....''

''வேணாத விஷயமெல்லாம் பேசவேண்டாம்மா. நீ இப்போ எதுக்கு போன் பண்ணினே...சொல்லு...''

''மது இருந்தால் பேசலாம்னு...''

''வந்தால் பேசச் சொல்லட்டுமா?''

''பேசச் சொல்லுங்க.''

''எத்தனை நேரமானாலும் பரவாயில்லையா?''

''பரவாயில்லை.''

''அப்படின்னா வச்சிடட்டுமா...?''

''இன்னும் ஒரு விஷயம்மா...''

''என்ன சொல்லு?''

''ஷைலஜா அங்கே வந்தாளானால் எனக்கு போன் பண்றீங்களா?''

"இங்கே என் வரப்போறா...?"

"ஒருவேளை வந்தாள்னால்தான் சொல்றேன்"

"ஆகட்டும்."

"மறக்காமல் சொல்லுங்க."

"சரி."

தொலைபேசியை வைத்த பின் தான் செய்வது சரியா என்று யோசிக்கத் துவங்கினாள். அன்பாய், பிரியமாய், ஆசையாய், காதலாய் சிந்துருவெவர்களுக்கிடையில் தான் நுழைந்தது சரியா...? எதற்காக இப்படியெல்லாம் செய்கிறோம்...? வெறும் போட்டிக்காகவா...? அன்று கல்லூரியில் ஷைலஜாவிடம் சவால் விட்டதற்கா...? எல்லா ஆண்களும் இந்த விஷயத்தில் ஒன்றுதானென நிரூபிப்பதற்காக மட்டுமா...?

அதற்கா...? அதற்கு மட்டும்தானா...?

"ஆமாம் என மேல் மனது தலையாட்டிற்று. இல்லை என்று அடிமனது மறுத்தது. சரி, இல்லை என்றால் என்ன அர்த்தம்? எதற்காக அப்பாவிடம் போய் அப்படிச் சொன்னோம்...?"

"டாடி, நான் வீட்டுக்கு ஒருவரைக் கூட்டிட்டு வந்திருக்கேன் டாடி..."

'கொஞ்சம் இரு' என்று கை காட்டினார் அப்பா, தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்ததைத் தொடர்ந்தார்.

"...விலன் மல்ஹோத்ரா. நான் சொன்னதை சரியாக் காதுல வாங்கிக்கிட்ட இல்ல...? எஸ். நாளைக்குக் காலையில் லிவர்பூலுக்குப் போய் மிஸ்டர் ஹோம்ஸைப் பாரு. எப்படியும் அந்த டெண்டர் நமக்கு சாதகமாக முடியணும். ஆமாம். தப்பு பண்ணிடாத. எவ்வளவு டாலர் கேட்டாலும் சரின்னு சொல்லிடு. தயங்காதே. இது நமக்கு



பிரிஸ்டிஜ் பிராப்ளம். எப்படியும் நமக்கே கிடைச்சாகணும். அதுக்கு என்ன செய்யணுமோ அதையெல்லாம் செய்திடு. ஓ.கே. செய்திட்டு நாளைக்கு சாயந்திரம் ஆபீசுக்கு போன் பண்ணு. ஆமாம். ஆபீஸ்லதான் இருப்பேன். ஓ கே..."

தொலைபேசித் தொடர்பைத் துண்டித்து அவள் பக்கம் திரும்பினார்.

"லண்டன் கால்மா...ம்...இப்போ சொல்லு. யாரைக் கூட்டிட்டு வந்திருக்க...?"

"மிஸ்டர் மதுன்னு ஒருத்தரை."

"ஓஹோ...யார் அவர்....?"

"என் பிரெண்டு."

"சரி."

"அவரை நீங்க பார்க்கணும்."

"நான் எதுக்காகம்மா பார்க்கணும்?"

"உங்க மாப்பிள்ளையை நீங்க பார்க்க வேணா மாப்பா....?"

"ஓஹோ...ஹோ...அப்படியா விஷயம்...?"

"கன்குராஜு-லேஷன்ஸ்மா..." என்று கை குலுக்கினார். பின்னர் எழுந்து வந்து அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டார். மெதுவாக முன் உச்சியில் முத்தமிட்டார். குரல் கரகரக்கப் பேசினார்.

"ரொம்ப சந்தோஷம்மா. எனக்கு கஷ்டம் கொடுக்காமல் நீயே தேடிக்கிட்ட. உன் மனசுக்குப் பிடிச்சிருக்கில்ல. அது போதும். ஆமாம், மதுன்னு சொன்னாயே, அதுதான் பேரா...?"

"மதுசூதனன்."

"என்ன செய்யறாரு?"

"பில்டிங் காண்ட்ராக்டர்ப்பா."

''வெறும் காண்ட்ராக்டரா...?''

''இல்லப்பா எம். டெக்.''

''எந்த யூனிவர்ஸிடி?''

''பிட்ஸ் பிலானிப்பா...''

''வெரிகுட். அப்படின்னால் பிரில்லியண்ட் ஸ்டூண்ட்டாகத்தான் இருப்பான்.''

''வெரி பிரில்லியண்ட் டாடி...''

''இல்லைன்னால் நீ பிடிச்சிருப்பியா...? எந்த வருஷம் பாஸ் பண்ணினாரு?''

''ரெண்டு வருஷத்துக்கு முன்னால் டாடி.''

''இப்போ என்ன செய்யறாரு...?''

''ஏதோ சின்னதா தொழில் செய்யறாரு.''

''பெரிசாக்கிடுவோம். கவலைப்படாதே. வா போய் பார்ப்போம்.''

''அவங்க அம்மா கூட வந்திருக்காங்க டாட்...''

''எக்ஸலெண்ட். அந்தப் பக்கம் எல்லார் சம்மதமும் கிடைச்சிடுச்சுன்னு சொல்ற...? எம் பொண்ணுன்னு தெரிஞ்சப்புறம் சம்மதிக்காமல் இருக்க அவங்களுக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு...? எங்க உட்கார்ந்திருக்காங்க?''

''ஹால்ல டாடி.''

''வா போய் பேசலாம்.''

அதன் பின்னரே அவர் அவ்வளவும் பேசினார். வெறும் சவால் என்கிற பட்சத்தில் அப்பாவிடம் சொல்கிற அளவிற்குத் துணிந்திருப்போமா...?

பின் என்ன...?

எதற்காக இவ்வளவும் செய்தோம்....?

Am I in love with Madhu...?



நானும் மதுவைக் காதலிக்க ஆரம்பித்துவிட்டேனா...? வெறும் போட்டி இப்போது காதலில் வந்து நின்றிருக்கிறதா....?

ஆம். அப்படித்தான் இருக்கவேண்டும். வேண்டுமென்ன...? அதேதான். விளையாட்டாக ஏதோ சொல்லப் போய் இப்போது புதைமணலில் கால்விட்ட மாதிரி ஆகிவிட்டது. கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கிக் கொண்டிருக்கிறேன். கொஞ்சம் கொஞ்சமாக என்னை இழந்து கொண்டிருக்கிறேன்.

இழந்து கொண்டிருக்கிறேனா...?

அல்லது இழந்துவிட்டேனா....?

கொஞ்சம் கொஞ்சமாகவா...?

அல்லது முற்றும் இழந்துவிட்டேனா...?

முற்றும் இழக்காது போனால் எப்படி அப்பாவிடம் சொல்ல முடியும்? அதிலும் எவ்வளவு ஆணித்தரமாகச் சொன்னேன்? 'உங்க மாப்பிள்ளையை நீங்க பார்க்க வேண்டாமா?'

எப்படிச் சொன்னேன்...? ஏன் சொன்னேன்? ஷைலஜா மதுவை நேசிக்கிற விஷயம் தெரியும். மது இல்லை என்றால் அவளுக்கு வாழ்க்கை இல்லை என்பது தெரியும். எல்லாம் தெரிந்தும் செய்கிறேன் என்றால் அதற்கு என்ன காரணம்? கண்ணகியிடமிருந்து கோவலனை அபகரித்துக் கொண்ட மாதவியாக மாறிவிட்டேனா...? அல்லது இதுவரை தோல்வியே காணாத ஆழ் மனதின் உந்துதலா...? எப்படியாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்கிற வெறியா....?

எது என்னை இதெல்லாம் செய்யத் தூண்டிற்று...? இத்தனை செய்கிறோமே.... மதுவின் மனநிலை என்ன...; காற்றாடி மாதிரி காற்றடிக்கிற பக்கம் திரும்பியிருக்கிறதா

அல்லது தங்கூரம் பாய்ச்சின மாதிரி ஷைலஜாவிடம் நிலையாக நிற்கிறதா?

அவர் அவரது அம்மாவிடம் ஷைலஜா பற்றி ஏதோ சொல்லியிருக்கிறார். அது என்ன என்பது தெரியாதவரை இதற்குப் பதில் சொல்ல முடியாது. அது என்ன என்பதை நேரில் போய்தான் தெரிந்து கொள்ள வேண்டும். இப்போதே போனால் என்ன?

அவள் முடிவெடுக்கும் முன்னர் தொலைபேசி ஒலித்தது. எடுத்தாள்.

''ஹலோ...''

''நான்தாம்மா ருக்மிணி பேசறேன்.''

''சொல்லுங்கம்மா... அவர் வந்துட்டாரா?''

''இல்லைம்மா. அதுக்குப் பதிலாக அந்தப் பொண்ணு வந்திருக்கு.''

''ஷைலஜாவா...?''

''ஆமாம்.''

''அவகிட்ட ஒரு நிமிஷம் போனைக் கொடுங்க.''

''நான் உள்ள கூட்டிக்கிட்டு வரலை. வாசல்லியே நிற்க வச்சிருக்கேன் ''

''ஏம்மா...?''

''வேணாம்.''

''சரி. அவகிட்ட பேச்சு கொடுத்து அங்கேயே வச்சிக்கிங்க. நான் இதோ புறப்பட்டு வரேன்,''

''நீயே வரியா?''

''ஆமாம்.''

''எதுக்கும்மா....?''

''நேர்ல சொல்றேன்.''



தொலைபேசியை வைத்து விட்டு ஷைலஜாவின் அம்மாவைக் கூப்பிட்டுச் சொன்னாள்.

''ஷைலஜா இங்கதான் இருக்கா கவலைப் படாதீங்க. இன்னும் அரை மணி நேரத்தில் நானும் அவளும் அங்கே வறோம்.''

## 22

ஷைலஜாவிடம் என்ன பேசுவது என்பது புரியாமலே புறப்பட்டாள் சித்ரா. கீழே இறங்கி வந்த போது வீடு நிசப்தமாக இருந்தது. மனிதர்கள் நடமாடுவதற்கான அறிகுறியற்றிருந்தது. அப்பாவின் அறையில் விளக்கு எரியாததால் அப்பா கிளம்பி வெளியில் போய் விட்டது தெரிந்தது. அப்பா இல்லை என்றால் அவரைக் கவனிக்க வென்று தனியாக இருக்கிற வேலைக்காரப் பெரியவர் வீட்டின் பின்பக்கம் போய் விடுவார். மற்ற வேலைக் காரர்களுடன் சேர்ந்து அரட்டை அடிக்காமல் வீட்டு விவகாரங்கள் முழுதும் வெளியில் கொண்டு வராமல், மற்ற வீட்டு வேலைக்காரர்கள், டிரைவர்கள் மூலம் கொண்டு வரப்பட்ட எஜமான் வீட்டு விஷயங்களை அசை போடாமல் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த அறையில் போய் படுப்பார் பெரியவர். அம்மா அப்பாவைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட கையோடு அம்மா வீட்டவர் களால் அந்தப் பெரியவர் சீதனங்களோடு சீதனமாக அனுப்பப்பட்டவர் என்பதை சித்ரா கேள்விப் பட்டிருக் கிறாள். அந்தப் பெரியவரே நிறைய முறை அவளிடம் சொல்லியிருக்கிறார்.

''உன்னை மட்டுமில்ல கண்ணு. உங்க அம்மாவையே தூக்கி வளர்த்தவன் நான்தான் தெரிஞ்சுக்க...''

அந்தக் குரலில் பெருமை, உரிமை, ஆசை, பாசம் எல்லாம் இருக்கும். அமெரிக்காவில் எம்.பி.ஏ படிக்கிற

அவளது அண்ணனை விட அவருக்கு இவளைத்தான் பிடிக்கும்.

''ஏன் தாத்தா உங்களுக்கு மகேஷைப் பிடிக்காதா...?''

''பிடிக்குமே....''

''பின்ன மகேஷ் என்கிட்ட சண்டை போட்டால் எனக்கே பரிஞ்சுக்கிட்டு வரீங்க....?''

''அது, ஆம்புளைப் புள்ளை. வீட்லதான் இருக்கும். ஆனால் நீ... நாளைக்கே பெரிய பொண்ணாகி படிச்சு முடிச்சப்புறம் இன்னொருத்தர் வீட்டுக்குப் போயிடுவே இல்ல...?''

அந்தப் பத்து வயதில் அதைக் கேட்டு அவள் கோபப் படுவாள்.

''போங்க தாத்தா... நான் யார் வீட்டுக்கும் போக மாட்டேன்.''

''கல்யாணமானால் எல்லாப் பொண்ணுங்களும் புருசன் வீட்டுக்குப் போய்த்தாம்மா ஆகணும், உங்கம்மா வரலை...?''

''அவங்க வந்தாங்க. நான் போக மாட்டேன். என் வீட்டுக்கு வர புருஷனாகத்தான் நான் தேடிப்பேன்.''

எப்போதோ பத்து வயதில் சொன்னது இப்போது திடீரென்று அவளுக்கு நினைவு வந்தது. மதுவைக் கல்யாணம் செய்து கொண்டால் தான் அவனது வீட்டிற்குப் போக வேண்டாம். அப்பா கேட்டுக் கொண்டால் அவன் தன் வீட்டிற்கு வருவான். அவனது அம்மாவும் அப்பாவும் கூட வரக்கூடும். ஒரு வேளை அவர்கள் வர சம்மதிக்காத பட்சத்தில் அவர்கள் அங்கேயே இருக்கலாம். அவன் மட்டும் வந்தால் போதும்...

காரில் ஏறி காரைக் கிளப்பிய போது 'மனது எப்படிப் பட்ட காரணங்களையெல்லாம் சொல்லி சமாதானம்



தேடுகிறது என நினைத்துக் கொண்டாள். 'இதெல்லாம் என்ன நொண்டிச்சாக்கு. தனக்கு மதுவைப் பிடித்திருக் கிறது. தான் அவனை விரும்புவது நிஜம். அவனுடன் பழகப் பழக அவனது அழகிலும், குணங்களாலும் கவரப் பட்டு விட்டதுதான் உண்மை. அந்த உண்மையை ஒப்புக் கொள்வதை விட்டு எதற்காக வேறு காரணங்களைச் சொல்லி, சமாதானப் படுத்திக் கொள்ள வேண்டும்?''

'பிடித்தது கிடைத்து பழக்கப்பட்டு விட்ட தனக்கு. ஆசைப்பட்டதை யெல்லாம் அடைவது வழக்கமாகி விட்ட தனக்கு இதுவும் கிடைக்க வேண்டும். இதையும் அடைந்து விடவேண்டும். அதில் பிரச்சினை எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. கிடைக்காமற் போக வழியில்லை.'

ஆனால்... ஷைலஜா...?

அவள் என்ன செய்வாள்...?

அவளுக்கு என்ன பதில் சொல்ல முடியும்...?

விளையாட்டாக, போட்டியாக ஆரம்பித்து கடைசி யில் என்னிடமிருந்து மதுவை அபகரித்துக் கொண்டு விட்டாயே... என்று அவள் கேட்டால்...?

கேட்கக் கூட வேண்டாம். அந்த அர்த்தத்தில் ஒரு பார்வை பார்த்தால் கூடப் போதும். தான் உள்ளுக்குள் சுருண்டு விடுவோம். உடைந்து போய் விடுவோம். கிட்டத்தட்ட பதினைந்து வருட நட்பு. நொருங்கிப் போய் விடும். இதுவா நல்ல நட்பிற்கு அடையாளம்...? ஒரு சிநேகிதி செய்கிற செயலா இது...? 'உயிர் காப்பான் தோழன்' என்பார்களே. ஆனால் நான் உயிரைக் காப்பதற்கு பதில் உயிரை எடுக்கப் போகிறேனா...? பறித்துக் கொள்ளப் போகிறேனா....? கடவுளே என்ன இது...? எதற்காக என்னை இந்தச் சிக்கலில் மாட்ட வைத்தாய்?....துள்ளலும், துடிப்பும், விளையாட்டும், கேலியும், கள்ளமற்ற சிரிப்புமாக இருந்த எனக்கு ஏன் இந்தப் பிரச்சினையைக் கொடுத்தாய்?

அன்று என் நாக்கில் சனி இருந்ததோ....? அதுதான் ஷைலஜாவுடன் பந்தயம் கட்ட வைத்ததோ...? துணிந்து செயலில் இறங்கச் செய்ததோ? இதை விதி என்று சொல்லாமல் வேறு என்ன சொல்ல முடியும்...? எந்தப் பெயரிட்டு அழைக்க முடியும்...?

'மது...நீங்கள் ஏன் அழகாக இருந்தீர்கள்...? ஏன் எதிலும் என்னுடன் ஒத்துப் போனீர்கள்...? அப்படி இல்லாமல் இருந்திருந்தால் நான் இப்போது இவ்வாறு அலைக்கழிய மாட்டேன். தவிக்க மாட்டேன். தூக்கமற்று, சாப்பாடு அற்று சங்கடப்பட மாட்டேன். உங்களை மறக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க மாட்டேன்.'

'மது...எனக்கு நீங்கள் வேண்டும். நீங்கள் தான் வேண்டும். இனி வேறு யாரையும் என்னால் நினைக்க முடியாது. கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியாது. நீங்கள் இல்லை என்றால் எனக்குக் கல்யாணமில்லை வாழ்க்கை இல்லை. எதிர்காலமில்லை...'

ஆனால் ஷைலஜா...?

பாவம் அவள்.

நான் செய்வது தவறு.

நம்பிக்கைத் துரோகம்.

ஆத்ம சிநேகிதத்திற்கு அவமானம்....

ஆனாலும்...ஆனாலும்....மது எனக்கு வேண்டும். அவரில்லாமல் இருக்க முடியாது. இனிமேலும் இப்படி சங்கடப்பட முடியாது. இன்று இதற்கு ஒரு முடிவு கண்டு பிடித்தாக வேண்டும். வழி தேட வேண்டும். மதுவிடம் மனசு விட்டுப் பேச வேண்டும். அதற்கு முன்னால் ஷைலஜாவிடம் பேசியாக வேண்டும்.

'என்ன பேசப் போகிறோம்...?'

'எப்படிப் பேசப் போகிறோம்...?'



எதுவும் தெரியாதவளாக மதுவின் வீட்டு முன்னால் காரை நிறுத்தினாள் அவள். காரைப் பூட்டிவிட்டு கீழே இறங்கினபோதே வெளி வராந்தாவின் பிரம்பு நாற்காலியில் ஷைலஜா உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள்.

அவளைப் பார்த்ததும் முன்பெல்லாம் துள்ளிக்குதித்துக் கொண்டு ஓர் சந்தோஷம் ஓடி வரும். அது இப்போது வர வில்லை. அதற்கு மாறாக அவளைப் பார்க்க நேர்வதில் சங்கடம் ஏற்பட்டது. தப்பு செய்கிற குறுகுறுப்பு அடி மனதை வருடிற்று. ஷைலஜாவைப் பார்க்காமல் போய் விட்டால் தேவலாம் போலிருந்தது. ஷைலஜா என்கிற பெயரையே தவிர்க்க முடியுமானால் நன்றாக இருக்கும் என்று தோன்றிற்று.

ஆனால் அது முடியாது. அவளைப் பார்ப்பதற்காகத் தான் வந்திருக்கிறோம். சில நிஜங்களை எதிர்கொண்டுதான் ஆகவேண்டும். வேறு வழியில்லை.

அவள் உள்ளே நுழைவதைப் பார்த்தும் பார்க்காத மாதிரி உட்கார்ந்திருந்தாள் ஷைலஜா. அது இவளுக்குள் சுருக்கென்று குத்திற்று. ஆனாலும் ஷைலஜாவின் கோபத் திலும், அலட்சியத்திலும் இருந்த நியாயம் பிடிபட வராந்தாவின் படிகளில் ஏறி ஷைலஜாவின் அருகில் போய் கேட்டாள். எதுவும் நடக்காத மாதிரி குரலில் பழைய தோழமையை வரவழைத்துக்கொள்ள முயன்று மெதுவாக ஆரம்பித்தாள்.

''என்ன ஷைலு...என் வீட்டுக்கு வர்றதாக அம்மா கிட்ட சொல்லிட்டு இங்க வந்து உட்கார்ந்திட்டி ருக்க....?''

''அது தேவலை, நானாவது உன் வீட்டுக்கு வர்ற தாகத்தான் சொன்னேன். சில பேர் ஏதோ சொல்லிட்டு வேற ஏதேதோ செய்திட்டிருக்காங்க...''

அதற்குப் பதில் சொல்ல வாயெடுக்கும் முன் ருக்மிணி யம்மாள் அவசரமாக வெளியில் வந்தாள். சித்ராவைப் பார்த்ததும் முகம் முழுவதிலும் பூரிப்பு ஓடிற்று.

''வாம்மா...இப்போதான் வந்தாயா...?''

''ஆமாம்மா...உள்ள நுழைஞ்சுக்கிட்டே இருக்கேன். நீங்களும் வெளில வரீங்க...''

''ஏன் வெளில நிற்கற... உள்ள வா... ஹால்ல உட்கார்ந்து பேசலாம்.''

''வா ஷைலு...உள்ள போகலாம்.''

சடாரென்று ருக்மிணியம்மாளின் முகம் மாறவும், ஷைலஜா பதில் சொல்லவும் சரியாக இருந்தது.

''ம்ஹூம். நான் வரலை. என்னை இங்கதான் உட்காரச் சொன்னாங்க. நான் இங்கேயே இருக்கேன்.''

''ப்ச...என்ன ஷைலு குழந்தை மாதிரி...? எழுந்திரிச்சு உள்ள வா...''

''நான் குழந்தை மாதிரி இருக்கிறதால்தான் எல்லாராலும் என்னை ஏமாத்த முடியறது.''

ஷைலஜா சொன்ன நிஜம் நெஞ்சில் நெருப்பாய் விழ பேசாமல் இருந்தாள் சித்ரா. ஆனால் ருக்மிணியம்மாளால் பேசாமல் இருக்க முடியவில்லை. சுறுசுறுவென கோபம் பற்றிக் கொள்ள ஷைலஜாவைப் பார்த்தாள்.

''என்ன நீ அதிகம் பேசற...? என்னவோ லட்சம் லட்சமா பணத்தைத் தூக்கிக் கொடுத்து நாங்க எடுத்துக்கிட்டு ஓடிட்ட மாதிரி இல்ல பேச்சு வருது...''

கண்கலங்க முதல் முறையாக அந்த அம்மாவை ஏறிட்டாள் ஷைலஜா.

''அம்மா...தயவு செய்து நீங்க என்னை மன்னிக்கணும். நான் உங்களை எதுவும் சொல்லலை. இதோ இவளைத்தான் சொல்றேன். இவகிட்டதான் பேசிட்டிருக்கேன்''

''அப்படின்னால் என்ன அர்த்தம்...? நீ வாயை மூடிக்கிட்டு சும்மாப் போன்னு சொல்லாமல் சொல்றியா...?''

''ஐயோ...நான் அப்படியெல்லாம் சொல்லலையே...''



''பின்ன... சித்ராவைச் சொன்னால் என்ன, எங்களைச் சொன்னால் என்ன.... எல்லாம் ஒண்ணுதான்.''

''ஓ...அந்த அளவுக்கு ஒண்ணாயிட்டீங்களா...?''

''ஆமாம். ''அந்த அளவுக்கு எங்களுக்குள் நெருக்கமாயிடுச்சு. மனசு ஒண்ணாயிடுச்சு.''

''யார் மனசு உங்க மனசா, உங்க பிள்ளையின் மனசா...?''

''ஏன், என் பிள்ளையின் மனசு கூடத்தான்.''

''உங்க பிள்ளைக்கு எத்தனை மனசும்மா...?''

''என்ன...?''

''இதைக் கேட்கத்தான் இங்க வந்தேன். உங்க பிள்ளையை நேர்ல பார்த்து கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன். அவர் இல்லை. அதனால் உங்ககிட்ட கேட்கறேன். நான் வந்து இதைக் கேட்டேன்னு அவர்கிட்ட சொல்லுங்க. நான் வரேன்.''

சொல்லிவிட்டுப் படியிறங்கிய ஷைலஜாவைத் தடுத்து நிறுத்த முயன்றாள் சித்ரா.

''நில்லு ஷைலு நானும் வரேன்.''

''வேணாம். வந்த மாதிரி திரும்பிப் போக எனக்கு வழி தெரியும்.''

''சொன்ன பேச்சைக் கேளு ஷைலு. உங்கம்மாகிட்ட நீ என் வீட்டுக்கு வந்திருக்கிறதா சொல்லியிருக்கேன்.''

''நீ சொல்லி நான் கேட்டதெல்லாம் போறும்.''

''சரி. கார்ல ஏறு. வீட்ல கொண்டு போய் விடறேன்.''

''தேவை இல்லை. ஆட்டோவுக்குக் கைல காசு இருக்கு.''

''பிடிவாதம் பிடிக்காத ஷைலஜா. உங்கம்மாகிட்ட நானே கொண்டு வந்து விடறதாகச் சொல்லியிருக்கேன்.

அதற்கும் அவள் நிற்காது போகவே கூட நடந்த சித்ரா அவளது கையைப் பற்றினாள். சடாரென்று உதறிய ஷைலஜா கண்களில் அனல் தெரிய அவளைப் பார்த்தாள்.

யு டு நாட் டச் மி... என்னைப் பார்த்துப் பேசி, தொட்டுப் பழகற எல்லாத் தகுதியையும் நீ இழந்துட்ட...''

''டோண்ட் பி ஸ்டுப்பிட் ஷைலஜா. வா போகலாம்.''

''மறுபடியும் சொல்றேன். நான் ஸ்டுப்பிட்டாக இருக்கிறதால்தான் உன்னால் இதெல்லாம் செய்ய முடிஞ்சது.''

''இதெல்லாம்னா என்ன அர்த்தம்...? அப்படி என்ன செய்திட்டேன் நான்?

''என்னைக் கேட்டுத் தெரிஞ்சுக்கிற மாதிரி நடிக்காத. இனிமேலயும் உன் நடிப்புல நான் ஏமாற மாட்டேன்.''

''உஷ்! இது ரோடு ஷைலு. போறவங்களெல்லாம் நம்மை ஒரு மாதிரி பார்த்திட்டுப் போறாங்க பாரு. இங்க நின்னு நாம் சண்டை போட வேணாம். நீ இங்கேயே இரு. நான் போய் காரை எடுத்துக்கிட்டு வரேன்....''

''ஸாரி. உன் கார்ல வர நான் தயாராக இல்லை.''

''டோண்ட் பீ ஸோ ரூட்...இரு வரேன்.''

அவளது பதிலை எதிர்பார்க்காமல் திரும்பி மதுவின் வீடுவரை ஓடினாள் சித்ரா. வீட்டு வாசலில் நின்றிருந்த ருக்மிணியம்மாளிடம் சொல்லிக் கொண்டாள்.

''அம்மா நான் போய்விட்டு வரேன்.''

''என்னம்மா அப்படி வந்ததும் ஓடற...? அந்தப் பொண்ணுக்காக நீ இப்படி ஓடறது நல்லாவா இருக்கு?''

''அப்படியில்லேம்மா. அவளைக் கொண்டு வந்து வீட்ல விடறதாக அவ அம்மாவுக்கு வாக்கு கொடுத்திருக்கேன். அதைக் காப்பாத்தணும்.''



''நல்ல வாக்கும்மா. கைகேயிக்கு தசரதன் கொடுத்த மாதிரி...'' என்று முணுமுணுத்துக் கொண்டாள் அந்த அம்மாள்.

அது காதில் விழுந்தும் விழாத மாதிரி காரைத் திருப்பிக் கொண்டு ''வரேம்மா...'' என்று குரல் கொடுத்துவிட்டு ஆக்ஸிலேட்டரை அழுத்தி ஷைலஜாவை விட்டு வந்த இடத்திற்குப் போன போது அங்கே ஷைலஜா இல்லை. அதற்குப் பதிலாகத் தன் சிவப்பு நிற மாருதி மீது சாய்ந்து நின்று கொண்டிருந்தான் மதுசூதனன். வழக்கமாக அவனது முகத்தில் காணப்படும் புன்னகை, குறும்பு இவற்றிற்குப் பதிலாக ஒரு வித சோகமும், கோபமும், வெறுப்பும் இழையோடுவதைக் கவனித்தாள் சித்ரா. அவனது காருக்குப் பின் தன் காரை நிறுத்திவிட்டு கீழே இறங்கி அருகில் போய் மிக மென்மையாய் குரல் தானாகக் குறைந்து தழையக் கேட்டாள்.

''என்ன ஆச்சு மது...?''

சடாரென்று திரும்பிய அவனது கண்கள் சிவந்து முகம் தகதகத்தது. குரல் கோபத்தில் உயர்ந்தது.

''பிளடி பிட்ச். அவ தன் மனசுல என்ன நினைச்சுட்டிருக்கா சித்ரா...?''

''யாரு...?''

''உன் பிரெண்டு...ஷைலஜா...''

''ஷ்....இது ரோடு மது. இங்க நின்னு பேச வேணாம். வாங்க வீட்டுக்குப் போய் பேசலாம்.''

''யார் வீட்டுக்கு?''

''உங்க வீட்டுக்கே போகலாம்.''

''வேணாம். அங்க போனால் அம்மா இருப்பாங்க பேச முடியாது.''

''அப்படியானால் எங்க வீட்டுக்குப் போகலாம்.''

''அங்கேயும் வேணாம் சித்ரா. ஐ நீட் ஸம் அவுட்டிங் டுடே...''

''சரி, டின்னருக்குப் போகலாமா....?''

''ம்...?'' என்று யோசித்தான் அவன்.

''யோசிக்காதீங்க...எங்க போகலாம்னு சொல்லுங்க. சோழாவா, தாஜ்ஜா....?''

''ரெண்டும் வேணாம். கிளப்புக்குப் போகலாமா?''

''ஜிம்கானாவா...?''

''ம்ஹூம். பிரஸிடென்ஸி கிளப்.''

''போகலாம். அங்கேயும் அப்பா மெம்பர்தான்.''

''நானும் மெம்பர் சித்ரா'' என்று சிரித்தான் அவன்.

அவளும் சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவன் மனதிற்கு இதமாக இருந்தது. அந்த நேரத்திற்கு தேவையானதாக இருந்தது. அவளது அன்மை, தோழமை, அன்பு எல்லாம் வேண்டி இருக்க இடமென்று பரபரத்தான் அவன்.

''வா சித்ரா. என் காரை வீட்ல விட்டுட்டு வரேன். ரெண்டு பேரும் உன் கார்லயே போயிடலாம்...''

''திரும்பி எப்படி வருவீங்க?''

''நீ கொண்டு வந்து விடமாட்டாயா சித்ரா...?''

''ம்ஹூம்.''

''மாட்டாயா....?''

''கொண்டு வந்து விடமாட்டேன். கூடவே கூட்டிட்டுப் போயிடுவேன்.''

அவன் சொன்ன விதம், அந்த வார்த்தைகளில் இருந்த நெகிழ்ச்சி எல்லாம் நெஞ்சைத் தொட கண்களை மூடி கால் வினாடி அமைதியாக இருந்து பின்னர் அவன் கை பற்றி ''தாங்க்ஸ் சித்ரா....'' என்ற போது முதல்முறையாக



சித்ராவின் உடம்பு முழுதும் ஒரு சிலிர்ப்பு ஓடிற்று. மனதிற்குள் அருவி பொங்கிப் பாய்கிற உணர்வு ஏற்பட்டது.

'இந்தப் பரவசத்திற்குப் பெயர்தான் காதலோ...?' தனக்குள் சொல்லிக் கொண்டாள் அவள்.

## 23

பிரஸிடென்ஸி கிளப்பின் குளிர்சாதன அறை அதிக வெளிச்சமும் இன்றி இருட்டாகவுமின்றி மிதமான பிரகாசத்தில் இருந்தது. எல்லா மேஜைகளுமே நிறைந்திருந்தன. எப்போதுமே சித்ரா இடது பக்கக் கோடியின் மூலை மேஜையைத்தான் தேர்ந்தெடுப்பாள். அன்று அதில் ஆறு பேர்கள் கொண்ட குடும்பம் ஒன்று உட்கார்ந்திருந்தது. அப்போதுதான் சாப்பிட ஆரம்பித்திருக்கிறார்கள் என்பது தெரிந்தது. பேசிக் கொண்டே அவர்கள் சாப்பிட்டு முடிக்கக் குறைந்தபட்சம் ஒரு மணி நேரத்திற்கு மேல் ஆகும் என்று தோன்றிற்று. 'இப்போதுதான் சென்னைவாசிகள் மெதுவாக வாழ்க்கையை அனுபவிக்கிற உணர்வு பெற்றிருக்கிறார்கள். இரவு பத்து மணிக்கெல்லாம் அடங்கிப் போய் விடுகிற ஊர் கொஞ்சம் கொஞ்சமாக இரவு வாழ்க்கைக்குப் பழக்கப்படுகிறது' என்று நினைத்துக் கொண்ட சித்ரா மதுவை ஏறிட்டாள்.

''ஒரு மேஜை கூட காலியில்லையே...என்ன செய்யலாம் மது...?

''அதான் நானும் யோசிக்கிறேன்.''

''வெளியில் போய் லானில் மேஜை ஏதாவது காலியாக இருக்கிறதா பார்க்கலாமா?''

''ஆர் யு வெரி பர்ட்டிகுலர் எபௌட் டின்னர்?''

''நோ...ஓய்...? நீங்க தான் டின்னரைப் பற்றி ஆரம்பிச்சது?''

''அப்போதைய மனநிலையில் கேட்டேன்.''

''இப்போது வேணாம்னு தோணுறதா?''

''இல்லை. எங்கேயாவது போய் நிம்மதியாக அமைதியாக உட்காரலாம்னு தோணுது.''

''அமைதியாக உட்காரணும்னு தோணுதா....? இல்லை தனியாக இருக்கணும்னு நினைக்கிறீங்களா....?''

சடாரென்று பார்வையை உயர்த்தி அவள் கண்களுக்குள் பார்த்தான் மது. 'நீ ஏன் இவ்வளவு புத்திசாலியாக இருக்கிறாய் சித்ரா...? என்னையும், என் மன உணர்வுகளையும் மிகத் துல்லியமாகப் புரிந்து கொள்கிறாயே அது எப்படி...? ஒருவேளை உனக்கும் எனக்கும் உணர்வலைகள் ஒன்றாக இருக்கின்றனவோ....? எனக்கும் ஷைலஜாவுக்கும் அது இல்லையோ...? எதிர்மாறான எண்ண அலைகள் கொண்டவர்களோ...? எங்களுக்குள் எந்த விஷயமும் அதனால்தான் ஒத்துப் போகமாட்டேன் என்கிறதோ...? சண்டை வருகிறதோ....?''

''என்ன மது அப்படிப் பார்த்துக்கிட்டு நிற்கறீங்க....? நான் ஏதாவது தப்பாகக் கேட்டுவிட்டேனா...?''

''ஓ...நோ...நமக்குள் ஒரே வேவ்லென்த் இருக்கிறதாக ஓர் நினைப்பு தோன்றிற்று. அதை நினைச்சுக்கிட்டிருந்தேன்...''

''ஒரே வேவ்லென்த் அமையறது கஷ்டமில்லையா மது...? நமக்கு அமைந்திருக்கு என்றால் நாம் அதிர்ஷ்டம் பண்ணினவங்கன்னு நினைக்கிறேன்,''

''அதிர்ஷ்டமா, துரதிருஷ்டமான்னு யோசிக்கிறேன்,'' —மது சொன்னதும் சித்ராவின் முகம் சடாரென்று மாறிற்று. மெதுவாகக் கேட்டாள் அவள்.

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''எல்லாத்தையும் இங்க நின்னே பேச முடியாது சித்ரா. மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கும். வா போய் எங்கேயாவது உட்கார்ந்து பேசலாம்.''



''எங்கே போகலாம்...?''

''இப்பவே மணி எட்டாகிறது. லேட்டாகப் போனால் உங்க வீட்ல திட்டுவாங்களா?''

''எங்க வீட்லயா...?'' என்று சிரித்தாள் அவள்.

''ஏன் சித்ரா சிரிக்கிற...?''

''என் வீட்ல நான் இருக்கேனா இல்லையான்னு கூடப் பார்க்க மாட்டாங்க. எவ்வளவு லேட்டாகப் போனாலும் எங்க போனேன்னு ஒரு வார்த்தை கேட்க மாட்டாங்க''

''அது வசதிதானே சித்ரா...?''

''நோ. அது பொறுப்பின்மை. அக்கறையில்லாததனம். எனக்கு அது பிடிக்கலை, என்னைக் கேள்விகள் கேட்கணும். எனக்காகக் கவலைப்படணும், கண்டிக்கணும், தட்டிக் கேட்கிற ஆள் இருக்கணும்.''

''ரொம்ப வித்தியாசமான பொண்ணு நீ. சரி வா, பீச்சுக்குப் போய் கொஞ்ச நேரம் நிம்மதியாக மணல்ல உட்காரலாம்.''

காருக்கு வந்ததும் கேட்டான் அவன். ''நான் ஓட்டட்டுமா சித்ரா.''

''ஓ.எஸ். வித் பிளெஷர்.''

அவன் கார் ஓட்ட பக்கத்தில் உட்கார்ந்து வந்தாள் அவள். கடற்கரை வருகிற வரை இருவரும் ஒரு வார்த்தை பேசாமல் அமைதியாகவே இருந்தார்கள். காந்திசிலையருகில் உள்ளே போய் காரை நிறுத்தினார்கள். இறங்கி மணலில் போய் எதிரெதிரில் உட்கார்ந்தார்கள். சிறிது நேரம் கடலை, வானத்தை, பிரகாசமாக எரிந்த சோடியம் விளக்கை, சுற்றி உட்கார்ந்திருந்த மனிதர்களை மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பின்னர் கடலை விட்டுப் புறப்பட்டு வெளியில் வந்த நிலவைப் பார்த்த மது கேட்டான்.

''இன்னிக்குப் பௌர்ணமியா சித்ரா...?''

''ம்ஹூ‍ம். இல்லை.''

''அது எப்படி அவ்வளவு தீர்மானமாகச் சொல்றே?''

''நிலா முழுசாக இல்லையே...?''

''வாழ்க்கையில் எதுவுமே முழுமையாக அமையாதா சித்ரா...''

''அமைந்தால் நீங்கள்ளாம் எங்கே கடவுளை நினைக்க போறீங்க?''

''நீ மட்டும் நினைப்பாயா...?''

''நான் இப்பவே நினைக்கிறதில்லை.''

''மைகாட். யு ஆர் வெரி ஃப்ராங்க்.''

''அந்த வெரின்ற வார்த்தை எடுத்துட்டீங்கன்னால் இன்னும் பொருத்தமாக இருக்கும்.''

''ஏன் சித்ரா...?''

''நீங்க நினைக்கிற மாதிரி நான் அத்தனை ஓபன் ஹார்டட் பர்ஸன் இல்லை.''

''அப்படின்னால்...?''

''நிறைய விஷயங்களை நானும் மறைச்சுப் பேசுவேன்''

''அது டிப்ளமஸியாகக் கூட இருக்கலாமில்லையா...?''

''அப்படி சொல்லிட முடியாது. சுயநலமாகவும் இருக்கலாம்.''

''இல்ல சித்ரா. நான் நம்பமாட்டேன். உன்னால் சுயநலமாக நடந்துக்கவே முடியாது.''

''ஐயம் ஸாரி மது. இவ்வளவு சுலபமாக நீங்க பெண்களை எடை போட்டுடக் கூடாது. கடைசியில் ஏமாந்து போவீங்க...''



அதைக் கேட்டு அவனிடமிருந்து ஆழமான பெரு மூச்சு ஒன்று வந்தது. கைகள் மணலில் அளைய சிறிது நேரம் பேசாமல் இருந்தான்.

''என்ன மது மௌனமாயிட்டீங்க?''

''நீ சொல்ற மாதிரி ஏமாந்து போயிட்டேனோன்னு தோணுறது...''

''எந்த விஷயத்துல...?''

''ஷைலஜா விஷயத்துல.''

''என்ன ஆச்சு.''

உடனே அவனிடமிருந்து பதில் வரவில்லை. அமைதியாக இருந்தான்.

''ஐயம் சாரி. என்கிட்ட சொல்லத் தயக்கமாக இருந்தால் வேணாம்.''

''தயக்கம் எதுவுமில்லை சித்ரா. இன்ஃபாக்ட் சொல்லணும்னுதானே இங்கே கூட்டிக்கிட்டு வந்திருக்கேன்.''

''அப்போ பனிச்சனு தேங்காய் உடைக்கிற மாதிரி பேசணும். பீடிகை போடறதெல்லாம் எனக்குப் பிடிக்காது.''

''பீடிகை எதுவுமில்ல சித்ரா. எப்படி எங்கே ஆரம்பிக்கிறதுன்னு தெரியலை.''

''சரி. நான் ஆரம்பிச்சுத் தரட்டுமா?''

''ம்...''

''உங்க வீட்டு தெருக்கோடியில் ஷைலஜாவைப் பார்த்திங்களா?''

''எப்போ...?''

''இப்போ. கொஞ்ச நேரத்துக்கு முன்னால், நான் உங்களை சந்தித்ததற்கு சற்று முன்பு.''

''நீயும் பார்த்தாயா?''

''பார்த்தேனாவது. நான் தானே உங்க வீட்லேருந்து அவ பின்னாலேயே கெஞ்சிக்கிட்டு ஓடி வந்தேன்.''

''கெஞ்சிக்கிட்டா...? எதுக்கு?''

''அவ எங்க வீட்டுக்கு வர்றதாக அவங்க அம்மாகிட்ட பொய் சொல்லிட்டு உங்க வீட்டுக்கு வந்திருக்கா...''

''என் வீட்டுக்கா...? எதுக்கு?''

''மது நீங்க சிவில் இன்ஜினீயரிங் தானே படிச்சிருக்கீங்க...?''

''என்ன திடீர்னு இப்படி கேட்கிற...?''

''பின்ன... லாயர் மாதிரி நடு நடுவுல குறுக்குக் கேள்வி கேட்கறீங்க... நான் முழுதும் சொல்லி முடிச்சுடறேன். அப்புறம் உங்க கேள்விகளைக் கேளுங்க...''

''ஓ.கே... சொல்லு...''

''ஷைலஜாவோட அம்மா எனக்கு போன் பண்ணி ஷைலஜா அங்கே வந்திருக்காளான்னு கேட்டாங்க. இல்லைன்னு நான் சொன்னதும் பதறிப் போயிட்டாங்க. கவலைப்படாதீங்கம்மா. அவ இங்கதான் வருவான்னு நான் ஆறுதல் சொன்னேன். ஒரு வேளை அவ உங்க வீட்டுக்குப் போயிருக்கலாம்னு தோணிச்சு. உங்கம்மாவுக்கு போன் பண்ணி ஷைலஜா அங்கே வந்தால் தெரியப் படுத்தச் சொன்னேன். அதே மாதிரி உங்கம்மாவும் தெரியப் படுத்தினாங்க. நான் வருகிறவரை அவளை அங்கேயே பிடிச்சு வையுங்கம்மான்னு சொல்லிட்டு காரை எடுத் துக்கிட்டு ஓடினேன்...''

''அது சரி அவ என் வீட்டுக்குத்தான் வருவான்னு எப்படி நினைச்ச?''

''பட்சி சொல்லிச்சு...''

''ஏன் வந்தாளாம்...?''



''நான் இன்னும் முடிக்கலை. ஒப்பந்தத்தை மீறி குறுக்குக் கேள்வி கேட்கறீங்க?''

''ஸாரி. சொல்லு.''

''உங்க வீட்டுக்குப் போய் அவகிட்ட பேச்சு கொடுத்துப் பார்த்தேன், சரியா பேசலை. ஆனால் உங்கம்மாகிட்ட பேசினா...''

''என்ன பேசினா...?''

''உங்க பிள்ளையை ஒரே மனசாக வச்சிக்கச் சொல்லுங்க. கண்டபடி அலையவேணாம்னு சொல்லுங்க. இனிமேல் அவர் மூஞ்சியில் விழிக்கக் கூடப் பிடிக் கலைன்னாள்.''

அவன் முகம் வாடிற்று. மனதில் ஏற்பட்ட வலி கண்களில் தெரிந்தது.

''ஐயோ... அம்மாவிடமா அப்படிச் சொன்னாள்...?''

''ஆமாம்...''

அதற்குப் பின் இன்னமும் முகம் தளைந்தான்.

''என்ன மது... ஒரு மாதிரி இருக்கீங்க...?''

''அம்மாகிட்ட அவ அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது சித்ரா...''

''கூடாதுன்னுதான் நானும் நினைக்கிறேன். என்ன செய்ய முடியும். கோபத்துல பேசிட்டாளே...''

''ஏற்கெனவே எங்கம்மாவுக்கு அவளைப் பிடிக்கலை. இப்போ இன்னும் வெறுப்பின் உச்சிக்குப் போயிருப் பாங்க...''

''அவ இன்னும் குழந்தையாகவே இருக்கா மது...''

''இப்போ அவளை எடை போடற விஷயத்துல நீ தான் ஏமாந்திட்டேன்னு நினைக்கிறேன்.''

''ஏன்...?''

''நீ நினைக்கிற மாதிரி அவ குழந்தை இல்லை சித்ரா... திமிரும் அகங்காரமும் பிடிச்சவ.''

''ஏன் அப்படிச் சொல்றீங்க மது...?''

''இன்னிக்கு சாயந்திரம் என்கிட்ட எப்படிப் பேசினான்னு தெரிஞ்சால் நீயும் அதே முடிவுக்குத்தான் வருவே.''

''ஐயம் ஸாரி மது...''

''ஷி டிட் நாட் ஃபீல் ஸாரி அட் ஆல். நீ எதுக்கு ஃபீல் பண்ணணும்?''

''உங்களுக்காக நான் ஃபீல் பண்ணாமல் வேற யார் ஃபீல் பண்ணுவாங்க?''

''சி...த்...ரா...?''

''எதுக்கு அவ்வளவு அதிர்ச்சியாகவும் ஆச்சரியமாகவும் பார்க்கறீங்க? இத்தனை நாளாகப் பழகறீங்க... என்னைப் புரிஞ்சுக்க முடியலையா....?''

''சித்ரா... வந்து...''

''வாங்க. இன்னும் பக்கத்துல வந்து நீங்க உட்கார்ந்தீங்கன்னால் எனக்கு சந்தோஷமாகத்தான் இருக்கும்.''

''அதில்லை சித்ரா. இன்னமும் ஷைலஜா என் மனசை விட்டு முழுசா அகலயில்லை. அவ மேல் கொஞ்சம் கோபம் இருக்கே தவிர—''

''வெறுப்பு இல்லைன்னு சொல்லவரீங்க. அதானே...?''

''ம்... அ... தான்.''

''அதுக்கு ஏன் தயங்கறீங்க...? அவளை நீங்க வெறுக்கணும்னு நான் சொல்ல வரல்ல. வெறுக்கவும் கூடாது. ஒரு வேளை அவள் உங்களை வெறுத்து ஒதுக்க ஆரம்பிச்சால் என்ன செய்வீங்க...?''

''ஆரம்பிச்சால் என்ன...? இப்பவே ஆரம்பிச்சுட்டான்னுதான் நினைக்கிறேன்...''



''நினைக்கிறதில்லை. நிஜமும் அதுதான்.''

''இருக்கணும் சித்ரா. இன்னிக்கு சாயந்திரம் அவ என்கிட்ட பேசினதிலிருந்து அப்படித்தான் தோணுது.''

''என்ன சொன்னா அப்படி?''

''ப்ச்சு! ஏதோ சொன்னாவிடு.''

''சரி. விட்டுடறேன்,''

''எப்படி எல்லாத்தையும் இவ்வளவு லைட்டாக எடுத்துக்கற நீ...?''

''கனமாக எடுத்துக்கிட்டு என்ன செய்யப் போகிறோம்..? நெஞ்சில் பாரத்தை சுமக்கிறதைத் தவிர...''

''ரொம்ப அழகாகப் பேசற சித்ரா. எனக்கு ஏற்பட்ட நிலைமை உனக்கு வந்தால் நீ என்ன செய்வ...?

''எந்த நிலைமையைச் சொல்றீங்க?''

''உயிராகக் காதலிக்கிறதாகச் சொன்ன ஒருத்தி திடீர்னு 'உங்களை வெறுக்கிறேன்.' இனிமேல் என் முகத்துலயே விழிக்காதீங்கன்னு சொல்றான்னு வச்சிக்க...''

''விழிக்க மாட்டேன்.''

''சடார்னு அப்படி விட்டுடறது அவ்வளவு சுலபமான விஷயமா சித்ரா...?''

''சுலபமாக்கிக்கணும், வேற என்ன செய்யமுடியும்?''

''என்னால் முடியலையே, அவ்வளவு சுலபமாக அவளை மறக்க முடியும்னு தோணலையே...?

''எந்த காயமும் ஆறுவதற்குக் கொஞ்சம் நேரமாகும் இல்லையா...உங்க மனசுல பட்ட இந்த காயம் ஆற எத்தனை நாளானாலும் நான் காத்துட்டிருக்கத் தயாராக இருக்கேன், சரியா ...?''

''சித்ரா...நான் ஏற்கெனவே ரொம்பக் குழம்பிப் போயிருக்கேன், இந்த விஷயத்துல உடனே என்னால் ஒரு

20214
3235350

முடிவுக்கு வரமுடியாது. அதனால்... அதனால்... எனக்குக் கொஞ்சம்..."

"டைம் வேணும். அவ்வளவுதானே... எடுத்துக்குங்க, எவ்வளவு நாள் வேணும்னாலும் எடுத்துக்குங்க. ஆனால் பதில் மட்டும் எனக்கு சாதகமாக இருக்கட்டும்..."

"சொல்லி முடித்து அவளது கை விரல்களோடு தன் கை விரல்களை அவள் சேர்த்துக் கொண்டபோது மறுக்க இயலாதவனாகப் பேசாமலிருந்தான் அவன்....

## 24

வீட்டு வாசலில் சித்ரா இறக்கி விட்டுப் போனதும் உள்ளே வந்தான் மது. அழைப்பு மணியை அழுத்துவதற்கு முன்பே கதவு திறந்த அம்மா கேட்டாள்.

"சித்ரா வரலை...?"

"இல்லை" என்று தலையாட்டினான் அவன்.

"ஏம்ப்பா...?"

"வாசல்லியே இறக்கி விட்டுப் போயிட்டாம்மா...."

ருக்மிணியம்மாளின் பார்வை கடிகாரத்திற்குப் போயிற்று. மணி பதினொன்றான சங்கடம் முகத்தில் தெரிந்தது.

"மணி பதினொன்றாகுதே... இதுக்கு மேல் ஏன் தனியாக அனுப்பின மது...? இங்கேயே தங்கச் சொல்லியிருக்கலாமே...?"

"அது எப்படிம்மா முடியும்..." என்றவனை இடைமறித்தாள் அந்த அம்மாள்.

"ஏம்ப்பா...என்னிக்கிருந்தாலும் நம்ம வீட்டுக்கு வரப் போறவதானே....':



அம்மாவின் அந்தப் பேச்சும், சிரிப்பும் அவனுக்கு ரசிக்கவில்லை. ரசிக்காதது மட்டுமின்றி பிடிக்கவுமில்லை. எத்தனை நாளாக இவனுக்குச் சித்ராவைத் தெரியும்...? பணம் என்றதும் மனிதர்கள் எவ்வாறு மாறிப் போகிறார்கள்... என நினைத்துக் கொண்டான்.

அம்மா...என்னைப் புரிந்து கொள்ளேன். என் உள் மனதில் சித்ரா இல்லை என்பதை தெரிந்து கொள்ளேன்...?

ஒரு ஆழமான பெருமூச்சுடன் படியேறி தன் அறைக்குப் போனான். உடைமாற்றி, ஏர்கண்டிஷனரை ஓடவிட்டு படுக்கையில் படுத்துக் கொண்டபோது தூக்கம் வரவில்லை. மீண்டும் மீண்டும் ஷைலஜாவின் நினைவு வந்தது. அவளைச் சந்தித்த அந்த முதல் வினாடியிலிருந்து இன்று வரை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்தான். நினைக்க நினைக்க நெஞ்சு விம்மிற்று. எத்தனைப் பிரியமாக, அன்பாக, காதலாகிக் கசிந்துருகியிருக்கிறாள். பூனைக் குட்டி மாதிரி தன்னையே சுற்றி சுற்றி வந்திருக்கிறாள். மது, மது என்று உருகிக் கசிந்திருக்கிறாள். அப்படிப் பட்டவள் இப்போது ஏன் இவ்வாறு மாறிப் போனாள்...? பார்க்கிற போதே ஏன் முகம் கடுகடுக்கிறதே...?கோபமும், வெறுப்பும் எட்டிப் பார்க்கிறதே...? வார்த்தைகளில் சீற்றம் வெளிப்படுகிறதே....? அப்படியெல்லாம் பேசக் கூடியவள் இல்லையே அவள். சட்சட்டென்று கோபப்படுவாளே தவிர ஆத்திரமும், வெறுப்பும் இருக்காதே...அந்தக் கோபம் கூட குழந்தையின் கோபமாகத்தான் இருக்குமே தவிர அழுத்தமும், ஆழமும் இருக்காதே...

பார்க்கப் போனால் ஷைலஜாவிடம் அவனைக் கவர்ந்த விஷயமே அவளது குழந்தைத்தனம்தான். கள்ளமற்ற வெகுளித்தனம். யாருக்கும், எந்தக் கெடுதலும் செய்ய வராத மனம். எந்த விதமான போலித்தனமும் இல்லாத நல்ல சுபாவம், உள்ளொன்று வைத்து வெளியில் வேறொன்று பேசவராத குணம்.

ரோஜா திரைப்படத்தில் அரவிந்த்சாமி மதுபாலாவை 'ஏ பட்டிக்காடு' என்று கூப்பிட்ட மாதிரி அவன் அவளை எப்போதும் 'ஏ மக்கு' என்றுதான் கூப்பிடுவான். அவளும் வெள்ளையாய் சிரித்துக் கொண்டே பாமரேனியன் நாய்க்குட்டி மாதிரி அருகில் ஓடிவருவாள். பேச்சில் வார்த்தைக்கு வார்த்தை மது மது என நூறு தரம் குழைவாள்.

அந்த அன்பு, வெள்ளை மனசு, குழந்தைத்தனம், ஓடி வந்து ஒட்டிக் கொண்ட சுபாவம் இவையெல்லாம் எங்கே போயின...? எதற்காக திடீரென்று இத்தனை கடுப்பும் வெறுப்புமாகப் பேசுகிறாள்...? எங்கேயாவது போகலாமென்று இவன் சொன்னால் சித்ராவைக் கூட கூட்டிக் கொள்ளலாம் என்று பிடிவாதம் பிடிப்பாளே... இவன் முகம் சடாரென்று மாறுமே...

''சித்ரா எதுக்கு...? கூட நாய்க்குட்டி மாதிரி...?'' என்றால் அவளது பார்வை தொய்யுமே... அந்தத் தொய்யலைத் தாங்கிக் கொள்ள முடியாமல்தானே மகாபலிபுரத்திற்குச் சித்ரா வரட்டுமென்று தலையாட்—

சட்டென்று எண்ணங்கள் நின்றன. கொக்கி போட்ட மாதிரி மகாபலிபுரத்தில் மாட்டிக் கொண்டது.

மகாபலிபுரம்!

சடாரென்று எதுவோ பிடிபட்ட மாதிரி படுக்கையை விட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டான். பளிச்சென்று எல்லாம் புரிகிற மாதிரி தோன்றியது. இத்தனை நாள் பிரச்சினைக்கு ஓர் தீர்வு கிடைத்ததாக உணரத் தொடங்கினான்.

நினைவுகளைப் பின்னோக்கிப் போட்டுப் பார்த்ததில் பிரச்சினை மகாபலிபுரத்திலிருந்து ஆரம்பித்திருப்பது தெரிய வந்தது. சித்ரா கடலில் விழ, தான் தூக்கிக் கொண்டு வந்த காட்சி மனதில் நின்றது.

'இன்னும் எத்தனை நேரம் அவளைத் தூக்கிகிட்டு அப்படியே நிற்கப் போறீங்க...?'



அதைக் கேட்ட ஷைலுவின் முகபாவம், வார்த்தைகளின் உஷ்ணம், கண்களில் விழுந்த சந்தேகத்திரை...

அந்தத் திரை விலக்கப்படாமல் மேலும் மேலும் கனத்துக் கொண்டே வந்து தற்போது தனக்கும் ஷைலஜாவுக்கும் இடையில் ஓர் இரும்புத்திரையாக விழுந்து போயிருப்பதைப் புரிந்து கொண்டான் அவன்.

''அட அசட்டுப் பெண்ணே...இதுவா இத்தனைத் தூரம் உன்னை அலைக்கழித்திருக்கிறது...'' என்பதை வாய்விட்டுச் சொல்லிக் கொண்டான்.

கூடவே இவை அத்தனைக் குழப்பங்களுக்கும் தானே முக்கிய காரணம் எனவும் தோன்றிற்று. ஷைலஜாவின் அடி மனசு தெரியாமல் மேலும் மேலும் சித்ராவிடம் நெருங்கிப் பழகியதும், பேசியதும் தன் தவறுதான் என்பதை உணர்ந்து கொண்டான். ஆனாலும் ஷைலஜாவின் சந்தேகமும், கோபமும் சந்தோஷத்தைத் தந்தது. தன் மீது அன்பில்லாத பட்சத்தில் அவள் ஏன் இவ்வாறு சந்தேகத்தில் அலைக்கழிய வேண்டும்...? கோபத்தில் குமுற வேண்டும்? அதிகபட்ச அன்பில் தனக்கு மட்டுமே சொந்தம் என்கிற உரிமையில்தானே அவள் கோபப்பட்டிருக்கிறாள். அந்த உரிமை பறிபோய் விடுமோ என்கிற பயத்தில் தானே சந்தேகப்பட்டிருக்கிறாள்...?

'ஷைலு...ஐயம் ஸாரி. உன்னைப் புரிந்து கொள்ளாத மடையனாக இருந்திருக்கிறேன். உன் கண் எதிரிலேயே சித்ராவைப் புகழ்ந்து, அவளுடன் பேசி, சிரித்து, நெருங்கிப் பழகி...

அது உன் மனதை எந்த அளவு காயப்படுத்தியிருக்கும்...? எவ்வளவு கோபப்படுத்தியிருக்கும்...? வலியும், வேதனையும் ஏற்படுத்தியிருக்கும் அதெல்லாம் தெரியாத எனக்கு உன் வெறுப்பு மட்டும் தானே தெரிந்தது. உன் மன வலியும், நீ பட்ட ஆத்திரமும் கோபமும்தானே தெரிந்தது.

சித்ராவின் புத்திசாலித்தனம் ஒன்றினால் மட்டுமே கவரப்பட்டு அவளுடன் பேசிச் சிரித்ததே உனக்குள் இத்தனை ரணத்தையும், வலியையும் ஏற்படுத்தி இருக்கு மானால் இன்னும் நானும், அம்மாவும் அவள் வீட்டிற்குப் போனது, அவளுடைய அப்பா என்னை மாப்பிள்ளை யாகவே வரித்துப் பேசியது, என் அம்மாவும் சித்ராவைத் தலையில் தூக்கி வைத்து கொண்டாடுவது என எல்லாமே தெரிந்தால்...?

தாங்குவாயா ஷைலு...? தாங்க முடியுமா உன்னால்...? பூ போன்ற உன் மனசு உதிர்ந்து கருகிப் போகாதா...? குழந்தை உள்ளம் உடைந்து நொறுங்கிச் சிதைந்து போகாதா? என் அம்மாவையும், அவளுடைய அப்பாவை யும் விடு ஷைலு... உன் சிநேகிதி, அருமைத் தோழி, உயிராக நீ நினைக்கிற உன் நீண்ட நாள் நண்பி...

அவளும் அல்லவா உனக்கு எதிராகச் செயல்படு கிறாள்...? என் மனசு மாற—உன்னை மறந்து அவள் பக்கம் திரும்ப எத்தனை நாளானாலும் காத்திருப்பதாகச் சொல் கிறாள். உன்னைப் பற்றின தப்பான அபிப்பிராயங் களையே எனக்குள் உருவாக்க முயலுகிறாள்.

இத்தனைக்கும் அவளிடம் நம் அன்பைப் பற்றி நீ பேசியிருக்கிறாய். காதலை எடுத்துச் சொல்லியிருக்கிறாய். நானின்றி நீயில்லை என்றிருக்கிறாய்... அப்படியுமா ஷைலு...?

சட்டென்று அவன் மனது சித்ரா ஏன் திடீரென்று அவ்வாறு நடந்து கொள்கிறாள் என்பதற்கான காரணத்தை அறிய முயன்றது. தன்னிடம் அவள் ஒட்ட முயல்வதும், தன் மனதை இழுக்கப் பாடுபடுவதும், புத்தி சாலித்தனத்தால் கவர முயல்வதும்,

'உங்களுக்காக நான் ஃபீல் பண்ணாமல் வேற யார் ஃபீல் பண்ணுவாங்க...?



''...எத்தனை நாளானாலும் நான் காத்துட்டிருக்கத் தயாராக இருக்கேன். சரியா....?''

'...எடுத்துக்குங்க. எவ்வளவு நாள் வேணும்னாலும் எடுத்துக்குங்க. ஆனால் பதில் மட்டும் எனக்கு சாதகமாக இருக்கட்டும்...'

சித்ராவின் ஒவ்வொரு கெஞ்சலாக நினைவிற்கு வர சடாரென்று தலையை உதறிக் கொண்டான் அவன்.

''நோ...முடியாது. உனக்கு சாதகமான பதிலை ஒரு போதும் என்னால் தர முடியாது. இத்தனை வருடம் உயிருக்கு உயிராகப் பழகின சிநேகிதத்திற்கு எப்படி உன்னால் துரோகம் நினைக்க முடிகிறது சித்ரா....? எப்படி அது சாத்தியமாகிறது...? எனக்கு சாத்தியமில்லை. என் னால் அது முடியாது. நீ அழகியாக இருக்கலாம். அறிவு ஜீவியாக பேசலாம். பணத்தில் புரளலாம். ஆனால் எனக்குத் தேவை என் ஷைலஜாதானே தவிர நீ இல்லை. அவளின் கள்ளங்கபடமற்ற குழந்தைத்தனம்தானே தவிர உன் அறிவு பூர்வம் இல்லை. இந்தக் காலத்தில் இப்படிப் பட்ட வெகுளித்தனத்தையும், குழந்தைத் தனத்தையும் ஷைலஜா தவிர வேறு யாரிடம் பார்க்க முடியும்...? எங்கு பார்க்க முடியும்...?''

உடனே ஓடிப்போய் ஷைலஜாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அவள் கையைப் பற்றி முகத்தைத் தன் மார்பில் சரித்துக் கொண்டு, தலையை வருடி மன்னிப்பு கேட்கத் தவித்த மனதை அடக்கிக் கொண்டான். தொலை பேசியிலாவது பேசத் துடித்த நெஞ்சைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

'ராத்திரி பனிரெண்டு மணிக்கு போன் செய்து பேச முடியாது. காலை வரை காத்திருக்க வேண்டியதுதான். வேறு வழி இல்லை. வழக்கப்படி ஒன்பது மணிக்கெல்லாம் கல்லூரி வாசலில் போய் நின்றுவிட வேண்டும். ஷைலஜா வந்ததும் தனியாக அழைத்துப் போய் எதையும் மறைக் காமல் சொல்லி மன்னிப்பு கேட்க வேண்டும்.

'ஐ லவ் யு ஷைலஜா...' சொல்லி அணைத்து உச்சி முகர்ந்து, கன்னங்களில் முத்தமிட்டு கள்வெறி கொண்டு...'

'எப்போது வரும் அந்த ஒன்பது மணி...?'

தூக்கம் வராமல் மது புரண்டு புரண்டு படுத்த அதே நேரத்தில் சித்ராவும் கிட்டத்தட்ட அந்த மனநிலையில் தான் இருந்தாள். சாயந்திரம் மதுவிடம் பேசியதையெல்லாம் மற்றொரு முறை நினைத்துப் பார்த்தாள். அழுத்தமும், ஆழமுமாக 'இன்னமும் ஷைலஜா என் மனசை விட்டு அகலலை. அவள் மீது கொஞ்சம் கோபம் இருக்கே தவிர வெறுப்பு இல்லை!' என்றது அவள் மனதிலும் அழுந்தப் பதிந்து பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அவனை மாற்றுவது என்பது கடினமான விஷயம் என்பது புரிந்தது. தான் ஷைலஜாவிடம் போட்ட சபதத்தில் தோற்றுப் போவதற்கான சாத்தியக் கூறுகளே அதிகம் இருப்பதை முதல் முறையாக உணர ஆரம்பித்தாள்.

'வெறும் சபதத்திற்காக மட்டுமா இத்தனையும் செய்கிறோம்...?' என்ற கேள்வி உள் மனதிலிருந்து எழுந்தது. சபதத்திற்காக மட்டும் இல்லை. மனது மெள்ள மெள்ள மதுவின் பக்கம் திரும்புகிறது என்றாலும் அது நடக்காது. அவன் மனதிற்குள் தன் சுண்டுவிரல் நுழைவது கூட சாத்தியமில்லை. 'ஊசி முனை நிலம் கூட கிடைக்காது' என்று துரியோதனன் சொன்ன மாதிரிதான் இதுவும். சுண்டு விரலே நுழையாத மனதில் நிச்சயம் தன்னால் நுழைய முடியாது. ஆழமான அன்பிற்கு முன் தன் அழகு, அறிவு, பணம் எதுவும் எடுபட மறுப்பது பிடிபட்டபோது அவளது ஈகோ அடி வாங்கிற்று. இல்லை என்பதறியாத மனது முதல் முறையாக இல்லை என்கிற மறுப்பின் வலியையும், வேதனையையும் அறிய ஆரம்பித்தது.

தனக்கே இவ்வளவு வலிக்குமானால் ஷைலஜாவிற்கு எவ்வளவு வலி ஏற்பட்டிருக்கும்...? எத்தகைய வேதனையை அவள் அனுபவித்திருப்பாள் என்பதில்



அவளுக்குள் இருந்த வேதனை மேலும் அதிகமாயிற்று. சட்டென்று ஓர் முடிவிற்கு வந்தாள் அவள்.

'போதும் இந்த நிழல் யுத்தம். இனிமேலும் நாம் போட்டி போடுவதில் அர்த்தமில்லை. இதற்கு அப்புறமும் ஷைலஜாவின் வாழ்க்கையில் குறுக்கிட்டு நாசப்படுத்துவதால் அடையப்போவது ஒன்றுமில்லை. தைரியமாய், தாராளமாய் நாளைக்கே நம் தோல்வியை ஒப்புக்கொண்டு விடவேண்டும். கல்லூரியில் ஷைலஜாவைப் பார்த்து பேச வேண்டும்.

'நான் சொன்னது தப்பு ஷைலஜா. எல்லா ஆண்களும் பலவீனமானவர்கள் இல்லை. இன்னமும் மது மாதிரி சில ராமர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். தங்கள் மனதில் சுவீகரித்த சீதையைத் தவிர வேறு யாரையும் ஏறிட மறுக்கிறார்கள்.' என்பதைத் தெரியப்படுத்தி மன்னிப்பு கேட்டுவிட வேண்டும். அதே மாதிரி மதுவிடமும் தாங்கள் போட்ட சபதத்தைச் சொல்லி அதன் காரணமாகவே தான் அவனிடம் அவ்வாறு நடந்து கொண்டதையும் சொல்லி விடவேண்டும்.'

முடிவு செய்தபோது உள்மனது மெதுவாக 'வெறும் சபதம் மட்டுமா காரணம்' என்று மீண்டும் கேட்டது. அந்தக் கேள்வியைப் புறக்கணித்து புரண்டு படுத்து எப்போது வரும் மறுநாள் காலை...?' எனக் காத்துக் கொண்டிருந்தபோது அவளது மூடிய கண்கள் நிறைந்து கன்னங்களில் வழிந்த கண்ணீர் தலையணையை நனைக்க ஆரம்பித்தது...

மதுவும், சித்ராவும் தூங்க இயலாதவர்களாகப் புரண்டு புரண்டு படுத்த அதே நேரத்தில் ஷைலஜாவும் தூக்கம் வராமல் தான் தவித்துக் கொண்டிருந்தாள். அன்று மட்டும்தானா...? அந்த ஒரு ராத்திரிதானா...? தான் சரியாக சாப்பிட்டு, நன்றாகத் தூங்கி எத்தனை நாட்களாகின்றன என்று நினைத்தபோது மீண்டும் துக்கம் பொங்கி வந்தது. மதுவும், சித்ராவும் நடந்து கொண்ட விதம்

மனதை இன்னமும் வலிக்கச் செய்தது. மதுவின் அம்பு எய்கிற மாதிரி பேசின பேச்சுக்கள் மீண்டும் மீண்டும் ஞாபகத்திற்கு வந்து நெஞ்சை ரணமாக்கிற்று.

'சித்ராவைச் சொன்னால் என்ன, எங்களைச் சொன்னால் என்ன...எல்லாம் ஒண்ணுதான்.'

'ஓ...அந்த அளவுக்கு ஒண்ணாயிட்டீங்களா....?'—தான் கேட்டது நினைவிற்கு வந்தது.'

'ஆமாம், அந்த அளவுக்கு எங்களுக்குள் நெருக்கமாயிடுச்சு. மனசு ஒண்ணாயிடுச்சு.'

'யார் மனசு...? உங்க மனசா...? உங்க பிள்ளையின் மனசா...?'

'ஏன்...என் பிள்ளையின் மனசு கூடத்தான்.'

திரும்பத் திரும்ப அது நினைவிற்கு வந்ததில் இன்னமும் உடைந்து போனாள். மதுவும், சித்ராவும் செய்யும் துரோகத்தைத் தாங்க இனியும் தனக்குள் சக்தி இல்லாததாக உணர்ந்தபோது மேலும் அழுகை வந்தது. இப்படி அழுதழுது கொஞ்சம் கொஞ்சமாக சாவதைவிட ஒரு வழியாக செத்துப் போய்விட்டால் என்ன என்கிற கேள்வி எழுந்தது.

'அது ஒன்றுதான் வழி. இந்த நயவஞ்சக, மோசக்கார, ஏமாற்றுபவர்கள் இருக்கிற உலகை விட்டுப்போய் விடுவது நல்லது. இனி யார் முகத்திலும் விழிக்க வேண்டாம். யாரைப் பார்க்கவும் பிடிக்கவில்லை. ஒட்ட முடியாத உலகத்தை விட்டு ஒரு வழியாகப் போய் விடுவது நல்லது.'

அந்த முடிவிற்கு வந்ததும் உடனே செயலாக்குகிற வெறி ஏற்பட்டது. மெல்ல அம்மா, அப்பாவை எழுப்பாத ஜாக்கிரதை உணர்வுடன் எழுந்து, சத்தப்படுத்தாமல் நடந்து அடுத்த அறைக்குப் போனாள் அவள்...

## 25

அறையைவிட்டு வெளியில் வந்த ஷைலஜாவின் கண்களில் தொலைபேசி பட்டது. உடனே கடைசி முறையாக மதுவிடம் பேசிவிட்டுப் போகவேண்டும் என்று தோன்றியது. மனதில் தைக்கிற மாதிரி கேட்க வேண்டும். மறக்க முடியாததாகக் கேட்க வேண்டும். முள்ளாகக் குத்திக் கொண்டு அவஸ்தை படுத்த வேண்டும். அம்புப் படுக்கையில் படுத்த வலி ஏற்பட வேண்டும். சாகிற வரை மறக்க முடியாத வேதனையில் தவிக்க வேண்டும்...

எப்படி என்ன கேட்கலாம்...?

எப்படி கேட்கலாம்...? எந்தெந்த வார்த்தைகளை உபயோகப் படுத்தலாம்...? யோசித்துப் பேசியோ, வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்தோ பழக்கப்படாதவளுக்கு அப்போதும் எதுவும் தோன்றவில்லை. அதுவும் அந்த நிலைமையில் சாதாரணமாக வரக்கூடிய வார்த்தைகள் கூட வரமறுத்தன. கூடவே ஒரு வேளை ருக்மிணியம்மாள் எடுத்தால் என்ன செய்வது என்று தோன்றிற்று. எடுத்தால் என்ன...? அந்த அம்மாவையும் உறைக்க உறைக்கக் கேட்க வேண்டும். என்னைக் கேட்கவில்லை...? ஊசி குத்தின மாதிரி குத்தவில்லை...? வலி தெரிய வேண்டும், வேதனை புரியவேண்டும். புரியவைக்க வேண்டும்.

எதுவானாலும் முதலில் போன் பண்ணலாம். பிறகு என்னவெல்லாம் தோன்றுகிறதோ பேசலாம். யார் எடுத்தாலும் சரி. அதே மாதிரி சித்ராவுக்கும் பண்ண வேண்டும்; 'என்னை சாகடித்து விட்டு நீ நன்றாக வாழ். நீ எனக்குக் கெட்டது நினைத்தாலும், கெட்டதே செய்தாலும் நான் உனக்கு நல்லதே செய்கிறேன். நான் உயிருடன் இருந்தால் உன்னால் மதுவுடன் நிம்மதியாக சந்தோஷமாகக் குடும்பம் நடத்த முடியாது. உள்ளுக்குள் எனக்கு துரோகம் பண்ணின உறுத்தல் இருந்து கொண்டே

இருக்கும். என்னைப் பார்க்க நேரிடுகிற போதெல்லாம் நெஞ்சுக்குள் குத்தும். அந்தக் குத்தல், உறுத்தல் எதுவும் இல்லாமல் இருக்க வேண்டுமானால்....நான் இல்லாமல் போய் விடுவதுதான் நல்லது...!

'ஒரு வேளை சித்ரா வெறும் போட்டியில் ஜெயிக்கிற எண்ணத்தில்தான் இத்தனையும் செய்கிறாளோ...? இதில் வெற்றி பெற நான் எதுவும் செய்வேன். எந்த எல்லைக்கும் போவேன் என்று சொல்லவில்லை...?'

ஆனால் மதுவைப் பார்த்ததும் இயல்பாக மலருகின்ற அவளது முகம்...உதட்டில் ஓடுகிற சிரிப்பு, கண்களில் எட்டிப் பார்க்கிற பளபளப்பு...

'வெறும் போட்டியில் ஜெயிக்கிற ஆர்வமா அது...?'

சித்ராவை நினைத்தபோது அடி வயிற்றிலிருந்து ஓர் வேகம் புறப்பட்டு வந்தது. முதலில் அவளைக் கூப்பிட வேண்டும் போல் தோன்றியதை அடக்கிக் கொண்டான். மதுவின் தொலைபேசி எண்களையே முதலில் சுழற்றினான். ஒரு முறை மணியடித்த உடனேயே மதுதான் எடுத்தான். 'ஹலோ' சொன்னான்.

அவனது குரல் கேட்டதும் அவனுக்குள் அத்தனை நேரமாக இருந்த ஆத்திரம், கோபம் எல்லாம் சட்டென்று அடங்கிற்று. துக்கம் தொண்டையை அடைத்தது. அடி வயிற்றிலிருந்து பொங்கி பொங்கி வந்தது. குரல் எழும்ப மறுத்தது.

'ஹலோ, ஹலோ' என்று குரல் கொடுத்தான் மது. சில நேரங்களில் அகால வேளைகளில் அவனுக்கு தொலை பேசி வரும்.

'சார்...லாரியில் இரும்பு ஒரு லோடு வந்திருக்கு. இறக்கச் சொல்லட்டுமா...?''

''மணல் ரெண்டு லாரி சார். வெளிலதான் கொட்டு வேன்னு அடம் பண்றான் சார். நான் டிரைவரைக்



கூப்பிடறேன். உள்ள கொண்டு வந்து கொட்டச் சொல்லுங்க சார்...!'

இப்படி கட்டிடம் கட்டுகிற இடத்திலிருந்து வாட்ச் மேன் பேசுவது வழக்கம்தான். ஆனால் போன் பண்ணி விட்டு வாட்ச்மேன் ஒருபோதும் பேசாமல் இருக்க மாட்டான். அதனால் வாட்ச்மேன் இல்லை. வேறு யாராக இருக்கும்...? இந்த நேரத்திற்கெல்லாம் சத்திய மாக ஷைலஜா போன் பண்ண மாட்டாள். அதுவும் இப்போதைய மனநிலையில் பண்ணவேமாட்டாள். அப்படியானால் அது யாராக இருக்கும்...? சித்ராவாக இருக்குமோ...? சித்ராவைத் தவிர வேறு யாருக்கும் இப்படி ராத்திரி இரண்டு மணிக்கு போன் பண்ணுகிற தைரியம் வராது. அதனால் இது சித்ராவேதான். இப்போதே அவளிடம் மனதில் இருப்பதையெல்லாம் கொட்டி விட்டால் என்ன...? தயவு செய்து என்னிடம் அப்படியெல்லாம் பழகாதே. நான் ஷைலஜாவினுடையவன், சாகும்வரை அவளுடையவன்தான் என்பதை எடுத்துச் சொல்லிவிட்டால் என்ன....?

சொல்லிவிடுவதுதான் நல்லது எனப்பட்டதும் உடனே அதை செயலாக்குகிற முயற்சியில் இறங்கினான். வினாடி கூட தாமதிக்காமல் சட்டென்று கேட்டான்.

''சித்ரா...?''

மறுபக்கத்திலிருந்து பெரிதாய் கேவல் சத்தம் கேட்டது. விசும்பலும், அழுகையுமாக ஷைலஜாவின் குரல் வந்தது. கோபமும் ஆத்திரமும் எரிச்சலுமாக வராமல் அமைதியாக வந்தது. ஆனால், ஓர் அழுத்தமும், திடமும், தீர்மானமும் தெரிவதாக அவனுக்குப் பட்டது.

''ஐயம் ஸாரி. நீங்க சித்ராகிட்டே இருந்து போனை எதிர் பார்த்திங்க போல இருக்கு...அது தெரியாமல் நான் பண்ணிட்டேன்.''

சடாரென்று போர்வையை விலக்கி எழுந்து உட்கார்ந்து கொண்டான் அவன்.

''ஷைலஜா....நீயா!''

''நான்தான்னு சொல்லிக்க வேண்டிய நிலைமையில் தான் இப்போ இருக்கேன்.''

கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதை அவனுக்கு ஞாபகம் வந்தது. இது என்ன தர்மசங்கடம் என்று தோன் றிற்று. எப்படியாவது நிலைமையை சமாளித்து தன் உணர்வுகளை எடுத்துச் சொல்கிற தவிப்பில் பேசத் தொடங்கினான் அவன்

''டோண்ட் பி ஸில்லி ஷைலு...நான் இத்தனை நேர மாக உன்னைத்தான் நினைச்சுக்கிட்டிருந்தேன். காலைல உன்னை காலேஜ் வாசல்ல சந்திச்சு நிறைய உண்மைகளை எடுத்துச் சொல்லணும்னு இருந்தேன்.''

''எந்த உண்மைகளை...? நீங்க சித்ராவைக் கல்யாணம் பண்ணிக்கப் போற உண்மையையா...? புதுசா அவளை காதலிக்க ஆரம்பிச்சிருக்கிற உண்மையையா?''

''ஷைலஜா ப்ளீஸ்...புரிஞ்சுக்காமல் உளறாதே. மடத் தனமாகப் பேசாதே. நான் சித்ராவைக் காதலிக்கவும் இல்லை. அவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போறது மில்லை, எனக்கு என் ஷைலஜாதான் வேணும். ஷைலஜா இருந்தால் போதும்...''

''ஆஹல்... என் கிட்டப் பேசறபோது நான். அவ கிட்ட பேசறபோது அவ. அவகிட்ட நடிக்கறீங்களா, என் கிட்ட நடிக்கறீங்களா... இல்லை, ரெண்டு பேர் கிட்டே யுமா...?''

''இதுக்கு மேலேயும் முட்டாள்தனமாகப் பேசினால் எனக்குக் கோபம் வரும் ஷைலஜா. ஒருத்தரைப் புரிஞ்சுக் கிறதுன்னால் மேலோட்டமாகப் பேசறதோ, பழகறதோ இல்லை. அடிமனசு புரியணும், இதை இவன் செய்வானா மாட்டானான்னு யோசிக்கணும்.''



''இதுல யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு? உங்கம்மா கூட சொல்லிட்டாங்க...''

''என்னன்னு...?''

''சித்ராதான் மருமகள்னு...''

''ஏய் மடம்...ஒண்ணும் தெரியாத ஜடம்,''

''ஒண்ணும் தெரியாதவளாக இருக்கிறதால்தான் சுலப மாக உங்களால் ஏமாத்த முடியறது.''

''போதும் ஷைலஜா ப்ளீஸ், நாளைக்குக் காலைல காலேஜ் வாசல்ல பார்த்து விவரமாக எல்லாம் சொல்றேன். என்ன...?''

''நாளைக்கு யார் காலேஜுக்கு வரப் போறாங்க...?''

''வரமாட்டாயா....? ஏன்...?''

''உயிரோட இருந்தால்தானே வர முடியும்?''

''டோண்ட் பி ஸில்லி ஷைலு. என்ன பேசற...?''

''நிஜம். எனக்கு உங்களை மாதிரியெல்லாம் பொய் பேச வராது. தெரியாது.''

அவள் பொய் சொல்ல மாட்டாள் என்பது தெரிந்து பதறினான் அவன்.

''நாளைக்கு உயிரோடு இருக்க மாட்டேன்னால் என்ன அர்த்தம்?''

''தற்கொலை பண்ணிக்கப் போறேன்னு அர்த்தம்.''

அவள் குரலில் உண்மை வெளிப்பட அவன் மேலும் பதறினான்.

''முட்டாள்... எதையாவது உளறாதே...''

''உளறல மது. உங்களுக்கு போன் பண்றதுக்கு முன் னால்தான் ஒரு பாட்டில் டிக்-20 கலந்து மூக்கை இறுக மூடிக்கிட்டு மடமடன்னு குடிச்சிட்டு வந்தேன், சாகிறதுக்கு முன்னால் உங்க கிட்ட கடைசித் தரமாகப் பேசணும்னு தோணித்து, அதான் போன் பண்ணினேன். என்னிக்காவது

நான் இந்த மாதிரி நடுராத்திரிக்கெல்லாம் போன் பண்ணி யிருக்கேனா...? இப்போ என்ன மணி பாருங்க. இந்த நேரத்துக்கு போன் பண்ணிப் பேசறேன்னால் என்ன அர்த்தம்...? சாகத் துணிஞ்சவனுக்கு சமுத்திரம் முழங்கால் ஆழம்னு எங்கம்மா அடிக்கடி சொல்லுவாங்க. இப்போ தான அந்த நிலைமையில் தான் இருக்கேன். எனக்கும் தைரியம் வந்திருச்சு. சமுத்திரம் முழங்கால் ஆழம்கூட இல்லைன்னு தோணறது. கடைசியா உங்க கிட்ட ஒண்ணு கேட்கலாம்னு ஆசை. கேட்கட்டுமா...?''

''ஸ்டுபிட்...பிளடி இடியட்... நிஜமாகவே டிக்-20 குடிச்சியா?''

''சத்தியமா மது. நான் எப்போவாவது பொய் சொல்லி இருக்கேனா...? அதுவும் உங்க கிட்ட சொல் வேனா....?''

''ஓ...காட்! நான் இப்போ என்ன செய்வேன்...? போனை கீழே வை ஷைலு...நான் டாக்டருக்குப் போன் பண்ணி அவரைக் கூட்டிக்கிட்டு உங்க வீட்டுக்கு வரேன்.''

''நோ....வேணாம், என்னை யாரும் காப்பாத்த வேணாம். என்னை ஏமாற்றி துரோகம் பண்ணின யார் மூஞ்சிலேயும் எனக்கு முழிக்கப் பிடிக்கலை. நான் போறேன். நீங்களும சித்ராவும் சவுக்கியமா, சந்தோஷமா இருங்க.''

''ஓ...யு...'' ரிஸிவரை டெலிபோன் மீது போட்டான். பரபரவென்று விளக்கைப் போட்டு கார் சாவி தேடினான். வழக்கமாக டிரஸ்ஸிங் டேபிள் மீதுதான் வைப்பான். ஆனால் அங்கு இல்லை. தலையணையின் அடியில் எழுதுகிற மேஜையில், துணி அலமாரியில் என தேடிவிட்டு நேரமா வதை உணர்ந்து ஒரு ஆட்டோ பிடித்துப் போகலாம் என்று படியிறங்கிய போதுதான் சட்டென்று ஞாபகம் வந்தது.

நேற்றிரவு சித்ராவோடு போனபோது காரைப் பூட்டி சாவியை அம்மாவிடம் கொடுத்தது நினைவிற்கு வர மெது



வாக அம்மாவின் படுக்கையறைக் கதவைத் தட்டினான்? அம்மா எழுந்து வெளியில் வந்தாள்.

''என்னப்பா... செட்லேருந்து போன் வந்ததா...' லோடு எதாச்சும் வந்திருக்கா?''

''இல்லம்மா....கார் சாவி எங்கேம்மா....?''

''லோடு கூட வரலைன்னா எங்கே போறப்பா...?''

''ஐயோ...டாக்டர் வீட்டுக்கும்மா...''

''டாக்டர் வீட்டுக்கா...? இந்த நேரத்துலயா...? என்னப்பா உடம்பு...?'' பதறியது பெற்ற மனம்.

''எனக்கு ஒண்ணுமில்லம்மா... ஆனால் ஷைலஜா மூட்டைப் பூச்சி மருந்தைக் குடிச்சிருக்கா... உன் மனசு பதறுகிற மாதிரித்தானே அவளுடைய அம்மா அப்பா மனசும் பதறும்...?''

''என்...ன...?!'' சாதாரணமாக இருந்தால் அந்த அம்மாள் கலங்கி இருக்க மாட்டாள். ஆனால் கடைசியில் அவன் கேள்வி கேட்ட விதம் அவளது அடிவயிற்றில் கொக்கி மாட்டி சுருட்டி இழுத்தது.

''எல்லாம் உன்னால்தாம்மா...அவகிட்ட போய் நான் சித்ராவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதாக உளறிய தால் வந்த வினை...''

''உளறலா....?''

''பின்ன...? இந்த ஜென்மத்துல நான் ஷைலஜாவைத் தவிர வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். இதெல்லாம் அப்புறம். முதல்ல கார் சாவியை எடும்மா...''

''கார் சாவியை ராத்திரி எங்கே வச்சேன்...?'' என்று தேடத் துவங்க அவன் தலையில் அடித்துக் கொண்டான். ''சரிம்மா....நீ கதவை தாட்பா போட்டுக்க. நான் ஆட்டோவில் போறேன்....'' என்ற போதே சாவி கிடைத்தது.

அவனிடம் சாவியைக் கொடுத்த ருக்மணியம்மாள் கேட்டாள்.

''நானும் வரட்டுமாப்பா...?''

''நிஜமாகவா கேட்கற...?''

அந்த அம்மாளின் பார்வை பலமாக விழுந்த அடி காட்டிற்று' தாங்க இயலாதவனாக சொன்னான் அவன்.

''சரி. வா...''

''இன்னும் ஒரு விஷயம்ப்பா...ஒரு தரம் சித்ராவுக்கு போன் பண்ணிச் சொல்லிட்டு கிளம்பலாம்.''

''ஐயோ...மறுபடியும் சித்ராவா...இந்த நேரத்துல கூடவா...?''

''இல்லைப்பா... அவளுக்குத் தெரியறது ரொம்ப உதவியாக இருக்கும். அவ அப்பாவுக்குத் தெரிந்த ஆஸ்பத்திரியோ, டாக்டருங்களோ இருக்க மாட்டாங்களா.''

'அதுவும் சரிதான்' என்று அவன் தொலைபேசியருகில் போகவும் அதுவே அடிக்கவும் சரியாக இருந்தது.

'என்ன செய்தியோ...?' என்கிற பயம் புரள ரிஸீவரை எடுத்தான் அவன்...

## 26

''ஹலோ...?''

''சித்ரா பேசறேன் மது. ஷைலஜா மூட்டைப் பூச்சி மருந்து...''

''தெரியும்.''

''மைகாட்! ஹௌ ஸில்லி ஷி ஈஸ்.

கொஞ்சம் முன்னால்தான் என்கிட்ட போன்ல பேசினாள்.''

''என்கிட்டேயும் பேசினாள்.''



''எலதயும் பேசிக்கிட்டிருக்க இது நேரமில்லை மது. நான் அப்பாவை எழுப்பி அவர்கிட்ட விஷயத்தைச் சொன்னேன். அவர் நர்ஸிங்ஹோமுக்கு போன் பண்ணி ஆம்புலன்ஸ் ஏற்பாடு பண்ணிட்டார். டாக்டர்கிட்டேயும் பேசிட்டார். போலீஸ் கேசுன்னு ஆகாமல் பார்த்துக்கச் சொல்லியிருக்கார். நானும், அப்பாவும் ஷைலஜா வீட்டுக்குக் கிளம்பிட்டோம். நீங்க வரீங்க இல்ல...?''

''நானும் அம்மாவும் வரோம்,''

''குட், சீக்கிரம் வாங்க...''

அந்த நிலைமையிலும் முன் யோசனையுடன் செயல் பட்ட அவளது சிந்தனைத் தெளிவை நினைத்துக் கொண்டே அவன் திரும்பியபோது அம்மா கேட்டாள்.

''யாருப்பா...?''

''சித்ராம்மா, அவளும், அவளுடைய அப்பாவும் ஷைலஜா வீட்டுக்கு வராங்களாம்.''

ஆம்புலன்ஸ் வந்து, சித்ராவும், அவளுடைய அப்பாவும் வீட்டின் அழைப்பு மணியை அழுத்திய பின்னரே ஷைலஜாவின் பெற்றோர் எழுந்து வந்தனர். பின்னிரவு நேரத்தில் கதவு தட்டப்பட்டதில் பயந்துபோய் கதவைத் திறக்காமலே கேட்டனர்.

''யாரு...?''

''நான்தாம்மா சித்ரா, கொஞ்சம் சீக்கிரமாகக் கதவைத் திறங்க.''

''சித்ரா...வா....?'' என்று ஆச்சரியமாகக் கேட்டுக் கொண்டே கதவைத் திறந்த அந்த அம்மாள் குழல் விளக்கைப் போட்டு அவளைப் பார்த்தாள்.

''என்னம்மா இந்த நேரத்துல.''

''சோபாவில் சரிந்து கிடந்த ஷைலஜாவைக் காட்டியதும்தான் அந்த அம்மாள் பார்த்தாள்.

''ஐயய்யோ...என்ன ஆச்சு ஷைலுவுக்கு?'' என்று பதறியவர்களைச் சித்ராவின் அப்பா அதட்டினார்.

''சத்தம் போடாதீங்க. இது ஃபிளாட். யாருக்கும் எதுவும் தெரியக் கூடாது. விஷயம் வெளில போகக் கூடாது. கண்மூடி திறக்கறதுக்குள் நாம் ஆஸ்பத்திரியில் இருக்கணும்.''

''ஆஸ்பத்திரியிலா...எதுக்கு...?''

''எல்லாம் அப்புறம் சொல்றோம். சித்ரு...கீழ போய் ஸ்ட்ரெச்சரை மேல கொண்டு வரச்சொல்லு. ஒரு சத்தம் கூடாது.''

''சரிப்பா...''

சித்ரா கீழே ஓடி ஸ்ட்ரெச்சருடன் மேலே போகவும் மதுவும், ருக்மிணியம்மாளும் இறங்கி வரவும் சரியாக இருந்தது.

''வாங்க மது. வாங்கம்மா...'' என்று அவர்களைக் கூடவே அழைத்துப் போனாள் சித்ரா. மது பதறியவனாகப் படி ஏறிக்கொண்டே கேட்டான்.

''ஹெவ் ஈஸ் ஷீ....?''

''தெரியலை மது. நினைவு இல்லை. வாயெல்லாம் நுரை தள்ள ஆரம்பிச்சிருக்கு...''

''மைகாட். என் ஷைலு பிழைப்பாளா சித்ரா. எனக்கு என் ஷைலு வேணும் சித்ரா.''

''ஷ்...!'' என்று உதட்டில் விரல் வைத்தாள் சித்ரா.

''என்ன மது இது...? ப்ளீஸ் கலெக்ட் யுவர் செல்ஃப். பீஹெவ் லைக் எ மேன். வாங்க நர்ஸிங்ஹோம் போகலாம். லெட் அஸ் டாக் டு இ டாக்டர்.''

ஷைலஜாவை ஸ்ட்ரெச்சரில் தூக்கிக் கொண்டு வந்த போது கூடவே வந்தான் மது.

அவளது முகத்தை வருடினான். தலை தடவி விட்டான். உதட்டோரம் வழிந்த நுரை துடைத்து



விட்டான். ஆம்புலன்ஸில் அவளது பெற்றோருடன் தானும் ஏறிக் கொண்டான். கார் சாவியை சித்ராவிடம தூக்கிப் போட்டு சொன்னான்.

''அம்மாவைக் கூட்டிக்கிட்டு நீ நர்ஸிங் ஹோமுக்கு வந்துடு சித்ரா...''

ஆம்புலன்ஸில் ஷைலஜாவின் அருகில் அவன் கை பற்றி உட்கார்ந்து கண் கலங்கப் புலம்பினான்.

''ஷைலு...நீ பிழைக்கணும் ஷைலு...உனக்கு ஒண்ணும் ஆகக்கூடாது ஷைலு. உனக்கு ஏதாவது ஆனால் நானும் உன் கூடவே வந்துடுவேன். உயிரோடு இருக்க மாட்டேன். சாவால் கூட நம்மைப் பிரிக்க முடியாது. பிரிக்க விடவும் கூடாது...''

வாய்விட்டு அரற்றிய அவனைப் பார்த்த ஷலஜாவின் பெற்றோர்களுக்கு மெல்ல விஷயம் புரியற மாதிரி இருந்தது. ஏற்கெனவே பிரமை பிடித்தவர்களாக அரண்டு போயிருந்தவர்களுக்கு யாரோ ஓர் இளைஞன் வந்து தங்கள் பெண்ணின் முகம் வருடுதும், தலை தடவுவதும் வாய் துடைத்து விடுவதும் புதிராய் இருக்க அவனது புலம்பலில் அந்தப் புதிர் சட்டென்று விடுபட்டது.

'தங்களுக்குத் தெரியாமல் எத்தனை நடந்திருக்கிறது...' என்று நினைத்தபோது இன்னமும் அடி வயிறு கவ்விற்று.

'பெருமாளே...வெங்கடேசா...'

எதுவானாலும் சரி. அவ யாரை இஷ்டப்பட்டுக் கல்யாணம் பண்ணிண்டாலும் சரி. நாங்க மனஸ் பூர்த்தியா சம்மதிச்சு பண்ணி வைக்கிறோம். திருப்பதிக்கு கூட்டிண்டு வந்து உன் சந்நிதியிலேயே பண்ணி வைக்கிறோம். எங்க பொண்ணைக் காப்பாத்திடு. அவளை உயிரோட எங்களுக்கு மீட்டுத் தந்துடு....''

பெற்ற மனம் பதறி தவித்தபோது நர்ஸிங்ஹோம் வந்தது. பின்னாலேயே சித்ராவின் காரும் வந்தது. அதிலிருந்து இறங்கிய சித்ரா அப்பாவை இழுத்துக் கொண்டு ஸ்ட்ரெச்சரின் பின்னாலேயே ஓடினாள். ஸ்ட்ரெச்சர் தள்ளு வண்டியில் வைக்கப்பட்டு தியேட்டருக்குள் போனதும் டாக்டரைப் பார்க்க அப்பாவை அழைத்துக் கொண்டு போனாள்.

"சொல்லுங்கப்பா...ஷைலஜா நமக்கு எவ்வளவு முக்கியம்னு தெரியப்படுத்துங்கப்பா."

அவர் டாக்டரிடம் பேசினார். நிலைமையை விளக்கினார்.

"என் பொண்ணு சித்ரா வேற அந்தப் பொண்ணு ஷைலஜா வேற இல்லை. அவளை நீ காப்பாத்துறது என் இன்னொரு பொண்ணைக் காப்பாத்தின மாதிரி."

"ஒ.கே...சார், யு டோண்ட் ஒர்ரி சார்...நான் பார்த்துக்கறேன். அனாவசியமா நீங்க ஏன் இங்க இருக்கணும்? வீட்டுக்குப் போங்க சார். நான் போன் பண்ணி தெரியப்படுத்தறேன்."

பணிவாகவும் அவசரமாகவும் சொன்னார் வயதில் இளையவராக இருந்த அந்த டாக்டர்.

"ஐ மஸ்ட் ஹியர் தி குட் நியூஸ்."

யு வில் "சார்," சொல்லிவிட்டுத் தியேட்டரை நோக்கி ஓடினார் டாக்டர்.

அப்பாவை அழைத்துப்போய் காரில் ஏற்றி டிரைவரிடம் சொல்லியனுப்பிய சித்ரா மீண்டும் உள்ளே வந்து ஆபரேஷன் தியேட்டர் வாசலில் நின்றிருந்த மதுவின் பக்கத்தில் நின்றாள். அவளைத் திரும்பிப் பார்த்த மது சடாரென்று அவள் கையைப் பற்றினான்.

"ரொம்ப தாங்க்ஸ் சித்ரா. என்னென்னிக்கும் உனக்கு நன்றி கடன் பட்டிருக்கோம்."



தன்னைச் சட்டென்று பிரித்து வேற்று மனுஷியாக்கி விட்ட மதுவைப் பார்த்து அந்த நேரத்திலும் புன்னகைத்தாள் சித்ரா.

"நன்றியெல்லாம் அப்புறம் சொல்லிக்கலாம். முதல்ல அவ நல்லபடியாகட்டும்."

"ஆயிடுவா இல்ல...?"

"அஃப் கோர்ஸ். உங்க ஷைலு பழைய ஷைலுவாக உங்களுக்குத் திருப்பிக் கிடைச்சுடுவா. கவலைப் படாதீங்க."

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்திற்குப் பின்னர் அரை மயக்க நிலையில் சலைன் தண்ணீர் ஏற ஒரு நர்ஸ் பாட்டிலைப் பிடித்துக் கொண்டு வர சக்கர வண்டியில் ஷைலஜாவை அறைக்குக் கொண்டு வந்தார்கள். பின்னர் சிரித்தவாறு வெளியில் வந்த டாக்டர் சித்ராவையும், மதுவையும் பார்த்துச் சொன்னார்.

"ஷி ஈஸ் ஆல் ரைட். ரொம்ப டயர்டாக இருப்பாங்கள் ஏதனால் அதிகம் பேச வேணாம். நாளைக்கு நல்லா பேசலாம், முதல்ல உங்க அப்பாவுக்குப் போன் பண்ணிச் சொல்லிடறேன், நீங்க போய் பாருங்க."

"தாங்க்ஸ் டாக்டர். ரொம்ப தாங்க்ஸ்."

"வாங்க மது. வாங்கம்மா..." என்று எல்லோரையும் அழைத்துக் கொண்டு ஷைலஜா படுத்திருந்த குளிர்சாதன அறைக்குள் நுழைந்தாள் சித்ரா. ஷைலஜாவின் அருகில் பரபரப்பாகப் போன மதுவின் கையைப்பற்றி சொன்னாள்.

"முதல்ல அவளுடைய அம்மா, அப்பாவும், உங்கம்மாவும் பார்த்துடட்டும் மது அப்புறம் நாம் போகலாம்."

கட்டிலை நெருங்கிய பெற்றோர் கரகரவென்று கண்ணீர் வடித்து ஷைலஜாவின் நெற்றியிலும், கன்னங்களிலும் குனிந்து முத்தமிட்டனர். குரல் நடுங்க விசாரித்தனர்.

''எப்படிம்மா இருக்க···?''

''ம்...''என்று முனகிய ஷைலஜா மெதுவாக அவர்களை ஏறிட்டாள். மிக மெதுவாகப் பேச முயன்றாள்.

''எனக்கு...ஒண்ணுமில்லேம்மா....''

''பெருமாள் எங்க பிரார்த்தனைக்கு மனமிறங்கி உனக்கு ஒண்ணுமில்லாமல் செய்துட்டார்மா...''

அதற்குள் ருக்மிணியம்மாள் அருகில் வந்தாள். அவள் கைகளைப் பற்றி மிருதுவான குரலில் கேட்டாள்.

''என்னைத் தெரியறதா ஷைலஜா...?'' கண்களை மூடிக்கொண்ட ஷைலஜா தெரிகிறதென தலையாட்டினாள்

''யாரு...?''

''ம்...''

''நான் யாரு சொல்லு...?''

''சித்ராவுடைய மாமியார்''

''போடி பைத்தியம். சித்ராவுடைய மாமியார் இல்லை உன்னுடைய மாமியார்.''

''இல்லை...பொய் சொல்றீங்க.''

''பொய்யில்லைம்மா....நிஜம்மா.''

சத்தியமாச் சொல்றேம்மா. நீதான் என் மருமகள்... என் பிள்ளை உன்மேல் உயிரையே வச்சிருக்காம்மா. அது தெரியாத நான் முட்டாள்தனமாக நடந்துக்கிட்டேன். உன் கிட்டேயும் எது எதுவோ பேசிட்டேன். மன்னிச்சுக்கோம்மா...''

'நிஜமா... இதெல்லாம் நிஜம்தானா...! குழம்பினாள், ஷைலஜா, 'மது...மது எங்கே?

அவளது பார்வையின் தேடலைப் புரிந்து கொண்ட ருக்மிணியம்மாள் குனிந்து அவளது நெற்றியில் முத்தமிட்டுச் சொன்னாள்.



''அதிகம் பேசக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கார். அதானல் உன் அம்மா அப்பாவை அழைச்சுக்கிட்டு நான் உன் வீட்டுக்குப் போறேன். காத்துக்கிட்டிருக்காங்க. அவங்ககிட்ட பேசு. நாங்க வரோம்.''

விவரம் புரிந்த பெரியவர்கள் நகர மதுவும் சித்ராவும் அருகில் போனார்கள். அவளைத் திரும்பப் பெற்ற சந்தோஷம் பொங்க குனிந்து அவள் கன்னத்தில் மிருதுவாக முத்தமிட்ட மது கேட்டான்.

''எப்படி இருக்க ஷைலு....?''

ஷைலஜா கண்களை மூடிக்கொண்டாள். விழியோரங்களில் கோடாகக் கண்ணீர் வழியத் துவங்கிற்று. துக்கம் நெஞ்சை முட்டியதில் பொங்கிப் பொங்கி வந்தது. மார்பு ஏறி இறங்கிற்று.

அதுவரை அமைதியாக நின்ற சித்ரா கட்டிலில் அவள் பக்கத்தில் உட்கார்ந்து கை பற்றினாள். ஒன்றுமே நடக்காத குரலில் சிரித்துக் கொண்டே கம்பீரமாகக் குரல் எழுப்பினாள்.

''ஏய்...எப்படி இருக்க...?''

கண்களைத் திறக்காமல் அப்படியே இருந்தாள் ஷைஜலா.

''ஏய்...நான் சித்ரா வந்திருக்கேன். கொஞ்சம் கண்ணைத் திறந்து பாரு.''

ஷைலஜாவிடமிருந்து எந்தவித அசைவுமில்லை.

இன்னும் கூடவாடி கோபம் குறையலை...?இதப்பாருடியம்மா.... உன் வீட்டு ரோஜா என் வீட்டு ஜன்னல் பக்கம் எட்டிகூடபார்க்கலை. எததனை பலமான காற்றடிச்சாலும் செடியோடு சாய்ந்தாலும் சாய்வேனே தவிர என் பக்கம் திரும்ப மாட்டேன்னு அத்தனை பிடிவாதமா இருந்திடுச்சு போட்டியில் நான தோற்றுப் போயிட்டேன் போறுமா?''

கண்களைத் திறந்த ஷைலஜா நீண்ட நாட்களுக்குப் பின்னர் முதல் முறையாக சித்ராவின் முகத்தைக் கோபமின்றி ஏறிட்டாள். உதடுகள் மிக லேசாய்ப் பிரிந்தன.

''நிஜமாகவா சித்ரா சொல்ற...?''

''உன் மேல சத்தியமா சொல்றேன்.''

உலகத்துல சூர்ப்பனகைகளைத் திரும்பிக் கூடப் பார்க்காத ராமர்கள் இப்பவும் இருக்காங்கன்றதை உன் மது நிருபிச்சுட்டார். எந்தப் போட்டியும் நல்லதுக்கு இருக்கணும் நேர்மையானதாக இருக்கணும். கெட்டதுக்கு இருக்கக் கூடாது. இன்னொருத்தருக்குக் கெடுதல் விளைவிக்கிறதாக இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் அதுல ஜெயிக்க முடியாது. எங்கே உண்மையும், நேர்மையும் இருக்கோ அங்கதான் ஜெயிப்பாங்கன்றதைப் புரிஞ்சுக்கிட்டேன். என் வீட்டு ஜன்னல் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்காத உன் வீட்டு ரோஜா உன் கிட்டயே திரும்பி வந்துடுச்சு. ராத்திரி முழுசும் நீ அழகு பார்ப்பாயோ அல்லது வாசனை பார்ப்பாயோ அது உன் இஷ்டம் நான் வரேன். இனி மேலும் உங்களுக்கு இடைஞ்சலாக இருக்க இஷ்டப் படலை. வரேன் மது. உங்க அம்மாவை உங்க வீட்ல இறக்கி விட்டுட்டு நான் போறேன் கவலைப்படாதீங்க குட்நைட்.''

சொல்லிவிட்டு அவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் சரேலென்று எழுந்து வெளியில் வந்தாள் சித்ரா. ஒரு வினாடி ஆள் அரவமற்ற அந்த நீண்ட நெடும் வராந்தாவில் தனியாக நின்றாள். பின்னர் கண்களில் தளும்பி நின்றதைத் துடைத்துக் கொண்டாள். விம்மித் தணிந்த மனதை அடக்கிக் கொண்டாள். ஒரே வினாடிதான் மறுவினாடி கம்பீரமாகப் பழைய சித்ராவாக தலையை உயர்த்தி கால் செருப்பு சப்திக்க நர்ஸிங்ஹோம் வாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தபோது மனது மிக மெதுவாகக் கேட்டது.

'பழைய சித்ராதானா நீ...?'

ஒரு ஆழமான பெருமூச்சுடன் சட்டென்று அந்தக் கேள்வியை அலட்சியப்படுத்த முயன்றவளாக வெளியில் வந்தபோது இருள் நீங்கி வானம் மெல்ல வெளுக்கத் தொடங்கி இருந்தது...

(முற்றும்)

இந்துமதி மிகவும் இதமாக 'என் வீட்டு ரோஜா உன் வீட்டு ஜன்னலில்' தொடர்கதையை முடித்து எண்ணற்ற வாசகர்களின் இதயங்களை கொள்ளை அடித்துவிட்டார்.

—கே. ஆர். சுருதி, வடுவூர்.

நெஞ்சை உருக்கிய தொடர்கதை 26 வாரங்களாக வாசுகியில் வெளிவந்து மனதைத் தொட்டு விட்டது. சித்ராவின் அட்டகாசங்கள் இறுதியிலாவது ஒழிந்து, மதுவையும், ஷைலுவையும் சேர்த்து வைத்தது பாராட்டத்தக்கது.

—ஆ. பெரியசாமி, நெல்லிக்குப்பம்.

20214
3235350